# திராவிட– திராவிடர் இயக்கம்

## வாசிப்பு வழி குறிப்புகள்

ஆர்.பட்டாபிராமன்

# திராவிட- திராவிடர் இயக்கம்

ஆர்.பட்டாபிராமன்

pattabieight@gmail.com

**மின்னூல் வெளியீடு :**

**http://FreeTamilEbooks.com**

உரிமை - CC-BY-SA-NC கிரியேடிவ் காமென்ஸ். எல்லாரும் படிக்கலாம், பகிரலாம்.

பதிவிறக்கம் செய்ய - http://FreeTamilEbooks.com/ebooks/dravida_dravidians_movement

அட்டைப்படம் - லெனின் குருசாமி - guruleninn@gmail.com

மின்னூலாக்கம் - ஐஸ்வர்யா லெனின் - aishushanmugam09@gmail.com

கணியம் அறக்கட்டளை

(kaniyam.com/foundation)

This Book was produced using LaTeX + Pandoc

# மின்னூல் வெளியீடு

மின்னூல் வெளியீட்டாளர்: http://freetamilebooks.com

அட்டைப்படம்: லெனின் குருசாமி - guru-leninn@gmail.com

மின்னூலாக்கம்: ஐஸ்வர்யா லெனின் - aishushanmugam09@gmail.com

மின்னூலாக்க செயற்திட்டம்: கணியம் அறக்கட்டளை - kaniyam.com/foundation

# Ebook Publication

Ebook Publisher: http://freetamilebooks.com

Cover Image: Lenin Gurusamy - guru-leninn@gmail.com

Ebook Creation: Iswarya Lenin - aishushan-mugam09@gmail.com

Ebook Project: Kaniyam Foundation - kaniyam.com/foundation

# பொருளடக்கம்


1. திராவிட இயக்கமும் அதன் மரபும் . . . 26
2. திராவிட ஆய்வு – பேரா சிவத்தம்பி . . . 36
3. திராவிடர் பூர்வீகம் குறித்து.... . . . . . . 47
4. ரிக் வேதகால ஆரியர்கள் . . . . . . . . . 62
5. சூத்திரர் வரலாறு . . . . . . . . . . . 73
6. இந்திய நாகரிகத்தில் திராவிடப் பண்புகள் . . . . . . . . . . . . . . . . 81
7. ஹார்ட்கிரேவின் திராவிட இயக்கம் . . 94
8. ஆரியருக்கு முற்பட்ட தமிழ்ப்பண்பாடு . 100
9. தமிழர் வரலாறும் பண்பாடும் . . . . . . 104
10. திராவிட இயக்கம் பற்றி பேரா க. அன்பழகன் . . . . . . . . . . . . . . . 111
11. ‘வாழ்வில் நான் கண்டதும் கேட்டதும்’ நாவலர் நெடுஞ்செழியன் . . . . . . . . 118
12. தமிழர் தலைவர் பெரியார் . . . . . . . . 136
13. நெ து சுவின் புரட்சியாளர் பெரியார் . . 140
14. பெரியார் அரசியல் வரலாறு . . . . . . . 162

15. என்றும் தமிழர் தலைவர்’ . . . . . . . . . . 171
16. பெரியாரின் அரசியல் நாத்திகம் . . . . 189
17. பெரியார்- பாவலரேறு பெருஞ்சித்திரனார . . . . . . . . . . . 203
18. The Political Carreer of E V Ramasami Naicker 211
19. வ.ரா வாசகத்தில் ராஜாஜியும் பெரியாரும் . . . . . . . . . . . . . . 223
20. பெண் ஏன் அடிமையானாள் . . . . . . . 244
21. ஈரோட்டுப் பாதை சரியா - ப. ஜீவானந்தம் 251
22. திராவிட மாயை- சுப்பு . . . . . . . . . . 262
23. பெதிக் லாரன்சும் பெரியாரும் . . . . . . 271
24. DMK in Power by Philip Spratt . . . . . . . . 310
25. எண்ணித் துணிக கருமம் . . . . . . . . 319
26. திராவிட இன அடையாளமும் வெகுமக்களிய அரசியலும் . . . . . . . . 333
27. என் அண்ணா.- வைகோ . . . . . . . . . . 356
28. காந்தி- ஆர்.கே சண்முகம் செட்டியார் . 360
29. தி மு கழக வரலாறு (1916-1960) . . . . . . 371

30. பெரியார்- அம்பேத்கர் நட்புறவு ஒரு வரலாறு . . . . . . . . . . . . . . . . . . 377
31. பாவேந்தம் மடல் இலக்கியம் . . . . . . . 390
32. Interpreting The Dravidian Movement . . . . 410
33. சுகுணா திவாகரின் திராவிட அரசியலின் எதிர்காலம் . . . . . . . . . . 415
34. தமிழக அரசியலின் எதிர்காலம் . . . . 422
35. ஆட்சிமொழி குறித்து அண்ணாவின் உரையிலிருந்து . . . . . . . . . . . . . . 434
36. ஜெய்பீம் திரைப்படம் . . . . . . . . . . . 441
37. முகநூல் இடுகைகள் சில . . . . . . . . . 449
38. பிராமணர் அல்லாதார் பிரதிநிதித்துவம் குறித்து பிரிட்டன் நாடாளுமன்றம் . . . . . . . . . . . . . . 514
ஆசிரியரின் பிற நூல்கள் . . . . . . . . . . 535
சிறு வெளியீடுகள் . . . . . . . . . . . . . 538
கணியம் அறக்கட்டளை . . . . . . . . . . . 540

## முன்னீடு

திராவிட இயக்கம் குறித்து பல ஆய்வுகள் வந்துள்ளன. இன்னும் விரிவான ஆய்வுகள் தேவையும்படுகின்றன. நூற்றாண்டைக் கண்ட பிராமணர் அல்லாத இயக்கம்- நீதிக்கட்சி- சுயமரியாதை இயக்கம்- திராவிடர் கழகம்- திமுக- அதிமுக இன்னும் பிரிவுகள் எல்லாமே மிக விரிவான ஆய்வுபரப்பை நோக்கி நிற்கின்றன. முற்றிலும் சாய்வுகள் இல்லா முழு ஆய்வு என எதையும் சொல்ல முடியாதென்றாலும், மறைப்புகளை கொண்டிருக்காத, எல்லாவற்றையும் உள்ளடக்கிக்கொண்ட- ஆவணங்கள், பேச்சு, மாநாட்டு நடவடிக்கைகள், கடிதப் போக்குவரத்துகள், விமர்சனங்கள்- விவாதங்கள் என பெருவெளி ஆய்வாக அவை செல்ல வேண்டியுள்ளது.

திராவிடர் இயக்க சாதனைகள்- பலம்

பலவீனங்கள், அதன் உயர்வான பண்புகள்- நெறி சார் வீழ்ச்சிகள் என அனைத்தையும் பேசக்கூடிய ஆய்வுகள் அதிகமாக வரவேண்டும். 50 ஆண்டுகால ஆட்சி என்பது பெரும் சாதனைக்குரிய- அதேநேரத்தில் பலவீன நோய்கள் பற்றக்கூடிய காலமும் கூட. அசோகரையும் அக்பரையும் பேசி வரலாற்றை மூடாமல், சமகால அரசியலின் பெரும் வரலாற்றுப் பரப்பை குறித்த ஒளிவு மறைவற்ற , அச்சமற்ற விவாதங்கள் பெருக வேண்டிய அவசியம் இருக்கிறது.

இங்கு இந்நூலில் 38 இயல்களில் பல்வேறு ஆய்வாளர்களிம் ஆய்வுகள் என் பார்வையில், நான் உணர்ந்த வகையில் எடுத்து கொடுக்கப்பட்டுள்ளன. ஆங்காங்கே ஆய்வாளர்களுடன் என் வாசிப்பின் உணர்வு வெளிப்பாடுகளும் சேர்க்கப்பட்டுள்ளன. பெரியார் வாழ்க்கை குறித்த சில கோணங்கள்

தரப்பட்டுள்ளன. திராவிட இயக்கம் குறித்த சில முக்கிய ஆய்வாளர்களின் கருத்துக்களை ஓரளவிற்கு உள்வாங்கி சொல்ல முயன்றுள்ளேன்.

ஆய்வுகளை துணையாக கொண்டு பேசும் நிலையில் தமிழ் பொது புத்தி இல்லை. 50 ஆண்டுகால ஆட்சி என்கிற பெருமித சோதனை தன்னை ஒரே மாடல் என முன்னிறுத்திக்கொள்ளும் தன்மையை எடுத்துள்ளது. அதன் மீதான புகழ்பாடல்களால் தமிழக அரசியல் நிரம்பி வழிகிற நிலையைத்தான் இன்று உணரமுடிகிறது.

சோவியத் அமெரிக்க கால கெடுபிடி யுத்தம் கொடுத்த சமாதான சகவாழ்வு என்கிற படிப்பினை இரு நாடுகளின் இணக்கத்திற்கே தேவையாக இருந்தது என்பதை எடுத்துக்கொள்ளாத அரசியல் இங்கு ஒரே நாட்டில் மத்திய மாநில அரசாங்க

உறவுகளில் நெருக்கடியாக்கப்படுகிறது. அரசாங்க உறவுகளில் கோட்பாட்டு இச ராஜதந்திரம் (ideological diplomacy) அவசியமா என்கிற கேள்வியை அமெரிக்க சோவியத் உறவுகள் கேட்டுக்கொண்டன என்ற படிப்பினையும் இங்கு கணக்கில் கொள்ளப்பட்டதாக தெரியவில்லை.

II

1975ல் கலைஞர் அவர்கள் காலத்தில் வந்த ஆய்வின் பார்வையையும் இன்றுள்ள இனப்பேச்சாளர்கள் கணக்கில் கொண்டதாக உணரமுடியவில்லை. அவ்வாய்வு இந்தப் பார்வையை முன்வைக்கிறது.

" தமிழகத்தின் இனமரபு வரலாறு மிகவும் சிக்கலானது; குழப்பம் மிக்கது. புத்தம் புதிய ஆராய்ச்சிகளால் பழைய கருத்துகள் எளிதில் பொருத்தமற்றுப் போய்விடுகின்றன. எனவே

மிகவும் கருத்தோடும் விழிப்புணர்ச்சியோடும் இனமரபு வரலாற்றை வரையவேண்டிய பொறுப்பு நம்மைச் சார்கிறது. இனமரபியல் ஆராய்ச்சி திட்டவட்டமானது அன்று. அதில் செய்யப்பெரும் முடிவுகள் நிலையற்றவை; எளிதில் மாறக்கூடியவை..தக்க அடிப்படைச் சான்றுகள் இல்லாத நிலையில் கொள்ளப்பட்ட முடிவுகள் பல இத்துறையில் மிகுந்த செல்வாக்குப் பெற்றுள்ளன. அவை காலப்போக்கில் மாற்றமுறலாம்”

இன்று நாம் பொது புத்தியில் புரிந்தது மாதிரி வைத்திருக்கும் அம்சங்கள் ஆரியர்-திராவிடர் வரலாற்று வெளிச்சத்தில் சரியானவையா என்ற கேள்வி - ராகுல்ஜி அவர்களின் ரிக் வேதகால ஆரியர் படிக்கும்போது வரலாம். வரலாற்றாய்வாளர் ரொமிலா தாப்பர் அது இன வழியானதல்ல, மொழி சார்ந்தது- இனம் எனப் பேசுவது

அரசியலுக்கு உதவலாம் என்று சொல்வதைப் பார்க்கிறோம்.

சூத்திரர் ஆர்யரே- பின்னர் கீழ் இறக்கப்பட்டனர் என்கிற முடிவை அம்பேத்கர் ‘சூத்திரர் யார்’ என்கிற ஆய்வில் எட்டியிருப்பார். அப்போது சூத்திரர் திராவிட இனத்தார் என்கிற கோட்பாடு என்னவாகும் என்கிற கேள்வி எழுகிறது. பெரியாரும் அம்பேத்கரும் மாறுபடுகிற மிக முக்கிய புள்ளி இது என்பது ஆய்வுலகில் பொருட்படுத்தப்படாத ஒன்றாக இருக்கிறது. பெரியார் இதைப் படித்தாரா, என்ன எதிர்வினையாற்றினார் என்பதும் எனக்கு தெரியவில்லை. இப்படிப்பட்ட இடைவெளிகளை நிரப்பும் ஆய்வுகள் தேவைப்படுகின்றன. அம்பேத்கர் மேலும் இதில் ’ஆர்ய இனம் என்பதே ஓர் அனுமானந்தானே தவிர வேறொன்றுமில்லை. ...வேதங்கள் ஆர்யன் என்ற இனம் ஒன்று

உண்டு என்பதையே அறியா . ஆர்யர்கள் இந்தியா மீது படையெடுத்த எவ்வித தடயமும் இல்லை” என்கிறார். இது திராவிட இயக்கத்திற்கு ஏற்புடைய ஆய்வுதானா என்கிற விவாதம் இங்கில்லை.

கில்பர்ட் முடிவுகள் பல , தமிழக பொது புத்தியில் உறைந்து கிடக்கும் எண்ணங்கள் பலவற்றை கேள்விக்கு உட்படுத்தக்கூடியதாக இருக்கும். இன்று நமக்குக் கிட்டியுள்ள வடிவில் இருக்கும் வேதம் உருவான காலத்தில் சமஸ்கிருத மொழி பேசிய மக்களில் கணிசமானவர் திராவிட இனத்தவராக இருந்தனர் என்கிறார் கில்பர்ட். பிராமண சாதியில் உச்சநிலை உயர்வோ, சாதி வேறுபாடோ கூட ஆரிய மரபு எனக்கூறிட ஆதாரமில்லை என்கிறார் மாக்ஸ் முல்லர். பின் சாதிமுறை ஆரிய வழக்கமென இல்லாவிட்டால், அது திராவிட

வழக்கமா என்ற கேள்வி எழுகிறது. இப்படி கில்பர்ட் ஆய்வில் சற்று சிக்கல் வாய்ந்த கேள்விகள் எழ வாய்ப்புள்ளன. வட இந்தியாவைவிடத் தென் இந்தியாவிலேயே சாதி முறைமை வலுப்பெற்றதாகவும் பெருக்கமுடையதாகவும், சமூக வாழ்வில் மிகப்பெரும் பங்குடையதாகவும் இருக்கிறது என்கிற கில்பர்ட் ஆய்வை பொருட்படுத்தாமல் செல்ல முடியுமா எனத் தெரியவில்லை.

இந்திய நாகரிகம் வேதகாலத்திற்கு முற்பட்ட ஒன்று. இந்து மதத்தின் இன்றிமையாத பண்பாட்டுக் கூறுகள் மொகஞ்சதாரோ திராவிடர்களிடமிருந்து பெறப்பட்டவை. சிவனும் காளியும் லிங்க வழிபாடும் இந்து மதத்தின் பிற கூறுபாடுகளும் ஆரியர் வருகைக்கு முன்பே இந்தியாவில் நிலைகொண்டிருந்தவையாகும் எனப் பேராசிரியர் அன்பழகன் அவர்கள்

சொல்லிச்சென்றுள்ளார்.

சாமி சிதம்பரனார் எழுதிய தமிழர் தலைவர் பெரியார் நூலில் பாரதிதாசன் பெயர் இடம் பெற்றுள்ளது. அண்ணாவின் பெயர் ஏன் இடம் பெறவில்லை எனத் தெரிந்துகொள்ள முடியவில்லை. நெதுசு எழுதிய நூலில் ,பெரியார் நீதி கட்சியின் தலைவராவதற்கு முன்னர் நீதிக்கட்சியினர் குடியேற்ற நாட்டு அந்தஸ்து எனப் பேசிவந்தனர். பெரியார் வந்தபின் முழு தன்னாட்சி- திராவிட நாடு திராவிடருக்கே என்ற முழக்கம் உருப்பெற்றது என எழுதியிருப்பதைக் காண்கிறோம்

பெரியார் குறித்து வரும் வரலாற்று குறிப்புகளில் உரிய ஆவணத்தை இணைத்து பேசாமல் செல்கிற குறையிருப்பதாகத் தோன்றுகிறது. வழக்குகள் எனப் பேசும்போது பின் இணைப்பாகவாவது அதன் முழு விவரத்தைத் தருவது , சைமன் கமிஷன்

என்றால் கொடுத்த குறிப்பு என்ன என்பது போன்று எதுவும் பொதுவாக தரப்படாமல் இருப்பதையே பார்க்கிறோம். . முழுமையான திரட்டப்பட்ட முழு ஆவணங்களுடன், (50 ஆண்டுகள் திமுக, அதிமுக ஆட்சிகள் இருந்தும்) அவரது வாழ்க்கை வரலாறு முழுமையாக தொகுக்கப்படாதது ஏனோ?. அப்படி ஒன்று முழு ஆதாரங்களை மட்டுமே வைத்து, அவற்றை வெளிப்படுத்தி, அரசியல் சௌகரியங்களை மட்டும் கணக்கில் கொள்ளாமல் எழுதப்படவேண்டியது மிகவும் அவசியமான ஒன்று. .

காந்தி என்றால் அவரது விமர்சகர்கள் எல்லோரையும் சமமாக வைத்து பார்க்கிறது சிந்தனை உலகு. மார்க்ஸ் குறித்தும் ஆதரவாக எவ்வளவு ஆய்வுகள் உண்டோ, அவ்வளவு விமர்சன ஆய்வுகளும் உண்டு. இந்த அளவு ஆய்வுப் பரப்பை கொண்ட

அம்பேத்கருக்கும், பெரியாருக்கும் அவர்களது கொள்கைகளை இயக்க செயல்பாடுகளை, tactics களை விதந்தோதும் ஆய்வுகள் அளவிற்கு, அவர்கள் குறித்த விமர்சன ஆய்வுப்புள்ளிகள் இன்னும் வரவில்லை. அவர்களை absolute என -விமர்சனத்திற்கு அப்பாற்பட்டவர்கள் , போதாமை ஏதும் இல்லாதவர்கள் , முழு நிறை ஆளுமைகள் என முடிவெடுத்துவிட்டால் , அங்கு எதிர்பார்க்க ஏதும் இல்லை. அவர்களின் வாழ்க்கை தொடர்ச்சிகள் ஆங்காங்கே அறுபட்டது போன்ற உணர்வே என் வாசிப்பில் கிடைக்கிறது

இந்நூலில் கூட அண்ணாவை லெனினுடன் ஒப்பிட்டார் பெரியார் என்பது பேசப்பட்டுள்ளது. திமுக தனது கொள்கை கோட்பாடுகளில் அண்ணாவை முன்வைத்து துவங்கப்பட்டது. 1949-67 கால திக பெரியார் மற்றும் திக தலைவர்களின்

எழுத்துக்கள், திமுக அண்ணா மற்றும் அதன் தலைவர்கள் எழுத்துக்கள் மூடப்பட்டு கடந்து போகப்படுகிறது. அதேபோல் பெரியார் காலத்தில் அவருடன் உறவாடி நல் தோழர்களாகி வேறுபட்டு போன சிங்காரவேலர், ஜீவா, அண்ணா, பாரதிதாசன், கி ஆ பெ, குத்தூசி என பலரின் வேறுபட்ட நிலைப்பாடுகள் ஏன் எங்கு எதனால் , பெரியார் எதிர்வினைகள் என்ன என்பன போதுமான விவாதப் பொருளாகவில்லை. நூற்றாண்டு கால இந்திய மார்க்சியம், காங்கிரஸ் இயக்கம், ஆர் எஸ் எஸ் என்பது போலவே நீதிக் கட்சி-சுயமரியாதை இயக்கம்-திக - திமுக இன்னும் பிற என்கிற நூற்றாண்டு மரபு இருக்கிறது. இந்த தொடர்ச்சிக்குள் நடந்த விவாதங்கள் மாறுபாடுகளை அறிதல் புரிதலை மேம்படுத்தும்.

பாகிஸ்தான் ஏற்பட்டு அதில் திராவிட

நாடும் சேர்க்கப்பட்டுவிட்டாலும் சரி எப்படியாவது ஆரிய அட்டூழியம் திராவிட நாட்டை விட்டு முதலில் அகலவேண்டும்...என்ற கருத்தைக்கூட பெரியார் வெளியிட்டிருந்தார்.

அம்பேத்கர் தன் 'எக்சம்பளரி' தன்மையை புத்தமதம் தழுவுதல் மூலம் தானே முன் உதாரணமாக நின்றார். பிறருக்கு பேசும் ஒன்றில் தான் உதாரணமாக நிற்றல் என்பதில்- மதமாற்ற கருத்தில் பெரியார் அப்படி நிற்கவில்லை. இதை பெரியாரிடம் மதமாற்ற ஆலோசனையில் பார்க்கமுடியவில்லை. பிறருக்கான உபதேசமாகவே பெரியாரின் மதமாற்ற அறிவுரை நிற்கிறது. இந்து மதத்திலிருந்து வெளியேறிவிட்டால் இவ்வளவு சுதந்திரமாக தன்னால் விமர்சிக்கமுடியாது என்பதில் பெரியார் தற்காப்பை தேடவேண்டியிருந்தது.

பெரியார் மற்றவர்களுக்காக

பேசியவற்றில் தான் சொன்னபடி நடக்க முடியாமல் போன அம்சங்கள் குறித்த உரையாடல் தொகுக்கப்பட்டு ஏதேனும் இருக்கிறதா எனத்தெரியவில்லை. தான் சொன்னபடி தானே நடப்பதில்லை என்பதை அறநெறி பிறழ்வாக பார்க்கும் பார்வை காந்தியிடம் தொழிற்பட்டதைப்போல creed ஆக பெரியாரிடம் இருந்ததை உணரமுடியவில்லை.

சாக்ரடீசு, புத்தர், திருவள்ளுவர், ஏசு, நபி, காந்தி போல காலத்தின் எல்லையாக அமர்ந்துவிட்டவர் பெரியார். அவர்கள் செய்த அருஞ்செயல்களைவிட ஒருபடி மேலாகவே செய்தார் பெரியார். அவர்கள் நன்மைகளை செய்தார்கள்; பரப்பினார்கள். ஆனால் பெரியார் தீமைகளையே எதிர்த்துப் போரிட்டார். விதைகளைத் தூவுகிறவர்களைவிட, மண்டிக்கிடக்கும் களைகளை அகற்றுபவனுக்கும், முட்களை

வெட்டியெறிபவனுக்கும், கற்களைப் பொறுக்கி அப்புறப்படுத்துபவனுக்குத்தான் வேலைகள் மிகுதி. முயற்சிகள் மிகுதி. உடலுழைப்பு ஏராளம் எனப் பாவலேறு பெருஞ்சித்திரனார் எழுதியிருப்பார். தமிழ் என வரும்போது அவரைப்பற்றிய கடுமையான விமர்சனங்களையும் அவர் வைத்திருப்பார்.

இந்நூல் முழுமையாக என் வாசிப்பு குறிப்புகள் எனலாம். அதேநேரத்தில் ஆங்காங்கே என் மனதில் தோன்றியவைகளை சொல்லக்கூடிய நூலும் ஆகும். ஏராள விவரங்களை, இந்நூலை பொறுமையாக வாசிப்பவர் பெறக்கூடும். இந்நூல் பதில் தேடவேண்டிய ஏராள கேள்விகளையும் கொண்டதாக அமைந்துள்ளது. நான் வாசித்து சாரம்சமாக கொடுத்திருக்கும் குறிப்புகள்,

ஊடாக எழுப்பியிருக்கும் கேள்விகள் அல்லது அபிப்பிராயங்கள் எவருக்காவது பயனளிக்கும் எனில் இந்நூல் அதன் பிறப்பின் நோக்கத்தை அடையும்.

22-10-2024

ஆர். பட்டாபிராமன்

# 1. திராவிட இயக்கமும் அதன் மரபும்

பல்வேறு தரப்புகளை அறிந்து தெளிதல் என்பது பகுத்தறிவிற்குரிய தன்மைதான் என்றால் ஏ என் சட்டநாதன் அவர்கள் ஆற்றிய மதராஸ் பல்கலைக் கழக 1981 உரைகளை எவரும் தள்ளாமல் பொருட்படுத்தி வாசிக்கவே செய்வர்.

சட்டநாதன் உரைகளை 1982ல் மதராஸ் பல்கலை , The Dravidian Movement in Tamil-Nadu and it's Legacies எனக்கொணர்ந்தது. அளந்த வார்த்தைகளுடன், மிகவும் பொருள் பொதிந்து பேசப்பட்ட கன கச்சிதமான ஆய்வுரையாக அதைக்கொள்ளலாம். சட்டநாதன் அவர்கள் ஆற்றிய உரையின் தமிழ் மொழிபெயர்ப்பும், அதன் முக்கியத்துவம்

கருதி 1984ல் மதராஸ் பல்கலைக் கழகத்தால் கொணரப்பட்டது. பெரியார் அறக்கட்டளை சார்பில் சொற்பொழிவு மேற்கொள்ளப்பட்டது.

திராவிட இயக்கம் அரசியல் சக்தியாக வளர்ந்ததின் பின்னணி, அதன் பல்வேறு அரசியல் கட்டங்கள், அரசியலில் சாதியம் செலுத்தும் தாக்கம் என்கிற மூன்று உரைகளின் தொகுப்புதான் அளவில் சிறிய ஆனால் அடர்த்தி நிறைந்த இந்த புத்தகம்.

மகராஷ்ட்ராவில் ஏற்பட்ட பிராமண எதிர்ப்பு பின்புலம், தமிழகத்தின் பின்புலம் பற்றி சட்டநாதன் பேசுகிறார். முதல் தலைப்பே இப்படித்தான் ஆரம்பிக்கப்பட்டிருக்கும்- இயக்கத்தின் தொடக்கம் திராவிடத்திலிருந்தா? அவர் பதிலில்..

”பார்ப்பனர்களுக்கு எதிரான, பார்ப்பனர்

அல்லாத பிற சாதியினரின் இயக்கம் என்றால், ஆரியர் குடியேறிய நாள் முதலே ஏதாவது வடிவில் இருந்திருக்கலாம். பௌத்தமும் சமணமும் கூட பார்ப்பனர் எதிர்ப்பு இயக்கங்கள் என கூறப்படலாம். ஆனால் இவை எவ்வகையிலும் திராவிட இயக்கங்கள் அல்ல.

வடபுலத்து ஆரியப் பார்ப்பனர் முழுமையான சாதிய அமைப்புடன் ஒட்டுமொத்தமாக தென்னிந்தியாவில் குடியேறவில்லை. மாறாக, வருணாசிரம அமைப்பை, சாதியப் பண்பாட்டினை மறைமுகமாக அறிமுகப்படுத்தினர்...இந்த பண்பாட்டு தழுவலை எதிர்த்து முற்கால தமிழர்கள் போராட்டமோ புரட்சியோ மேற்கொண்டதற்கு எச்சான்றும் இல்லை.

திராவிட இயக்கம் என்னும் பெயரில் அமைந்த பார்ப்பன எதிர்ப்பு / பார்ப்பனர்

அல்லாதார் இயக்கம் ஆங்கிலேயர் ஆட்சியில் 19 ஆம் நூற்றாண்டின் இறுதியில் தலையெடுத்த ஒரு புது அற்புதமாகும்...புது நெறியாகும்."

ருடால்ப் அவர்களின் ஆய்வை மேற்கோள்காட்டி, சட்டநாதன் தென்னிந்தியாவில் தோன்றிய திராவிட இயக்கம் வட இந்தியாவில் தோன்றாதது குறித்து விளக்குகிறார். அங்கு சத்திரியர், வைஸ்யர் போன்றவர்களும் இரு பிறப்பாளராக கருதிக்கொண்டனர். அங்கு உடை, பேச்சு என்பதில் பிராமணர் என தனி மாற்றம் இல்லாமல் இருந்தது.

பார்ப்பனியம் ஆழமாக இருந்த கேரளத்தில் எதிராக திராவிட இயக்கம் எழவில்லை. டாக்டர் நாயரும் சொந்த அனுபவத்தில் தமிழகப் பகுதியில் இயக்கத்தை தீவிரப்படுத்தினார்.

நீதிக்கட்சியின் பிறப்பு அதன் பிராமணர் அல்லாதார் கொள்கை அறிக்கை , இங்கு ‘சூத்திரர்’ ஆட்சிக்கு அடிப்படையை அமைத்துக்கொடுத்தது.

அவ்வியக்கத்தின் முக்கிய மூன்று படிநிலைகள்- 1916-26 நீதிக்கட்சி காலம், 1926-49 பெரியார் தலைமையில் திராவிட சார்பு எழுந்த காலம், 1949 அண்ணா பிரிந்து திமுக உருவாக்கி ஆட்சிக்கு வந்த காலம். பார்ப்பனர் எதிர்ப்பு அல்லது திராவிட இயக்கம் சமூக அரசியல் எதிர்ப்பு இயக்கம் என்ற நிலை 1949ஆம் ஆண்டில் மங்கலாயிற்று.

நீதிக்கட்சி ஆரம்பத்தில் ஆங்கிலேயர்களால் வழிநடத்தப்படும் தன்னாட்சி என்று கோரினர். இயக்கமும் தென்னிந்தியர் விடுதலை கழகம் என்றே பெயரிடப்பட்டது. திராவிடர் விடுதலை எனப்பெயர் இடப்படவில்லை. வகுப்புவாரி

பிரதிநிதித்துவம் முக்கியமாக பேசப்பட்டது. சவுத்பரோ குழு, மெஸ்டன் அவார்ட் என்ற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. பம்பாயில் பிராமணர் அல்லாத இயக்க அனுபவங்களைக்கொண்ட கவர்னர் வெலிங்டன் மதராஸ் வந்து உதவிகரமாக நடந்துகொண்டார்..

1920, 1923, 1926 தேர்தல்களில் முறையே 51,61, 56 பெரும்பான்மை இடங்களை பிராமணர் அல்லாதார் நீதிக்கட்சி சார்பில் பெற்றனர்.

பெரியாரின் நுழைவு பிராமணர் அல்லாதார் இயக்கத்தை திராவிடர் இயக்கமாக அடையாளமாக்கியது. திராவிடர் நாடு கோரிக்கை உருவாக்கப்பட்டது. கிரிப்ஸ் தூதுக்குழுவிடமும் திராவிட நாடு வைக்கப்பட்டது. ஜின்னாவின் இருதேசக் கொள்கையை பெரியார் மூன்று

தேசக்கொள்கையாக மாற்றினார் எனச் சொல்லலாம். பிராமணர் அல்லாதார் என்பதைவிட ‘திராவிடர்’ என்பது இனப்பற்று மொழிப்பற்றை தூக்கிக்காட்டியது.

பெரியாரின் சமூக குறிக்கோளே அண்ணாவின் திமுகவிடமும் இருந்தாலும் , அரசியலில் தேர்தல் பங்கேற்பு என முடிவெடுத்து முன்னேறினர். ஆட்சி பிடித்து அண்ணா முதல்வரும் ஆனார். இந்த மாற்றம் சூத்திரர்களில் தாழ்ந்த வகுப்பாரிடமும், தாழ்த்தப்பட்ட வகுப்பாரிடமும் எவ்வளவு விரைவாக செல்லும் என்பதை பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும் என்று மதிப்பிட்டார் சட்டநாதன்.

சட்டநாதன் அவர்களின் அடுத்த முக்கிய உரை தமிழக அரசியலில் சில முக்கிய சாதிகளின் செல்வாக்கு பற்றியதாக இருக்கிறது. பெரிய சிறிய சாதிகள் எப்படி

பங்கிட்டுக்கொள்ள வாய்ப்பு கிடைத்துள்ளது என்பதை விரிவாக சட்டநாதன் பேசுகிறார். 40 ஆண்டுகளுக்கு முந்திய ஆய்வாக இருந்தாலும், இன்றும் அவர் சொல்லிய நிலைதான் எதார்த்தமாக இருக்கிறது. வன்னியர், கொங்கு வேளாளர், கள்ளர்- மறவர்-அகமுடையார், நாடார், யாதவர் கம்மாளர் உள்ளிட்ட சாதி தொகுப்புகள் செல்வாக்கு எப்படி உள்ளது எனப் பேசுகிறார்.

அரசியலில் செல்வாக்கு மிக்க குழுவாக தீவிரமாக செயல்படுவது ஆதிக்கச் சாதியினருக்கு எளிதாயிருக்கிறது. எந்தக் கட்சி ஆட்சியில் இருந்தாலும் அவர்கள் செல்வாக்கை நடைமுறையில் செயல்படுத்தி வருகின்றனர். சமமற்ற நலம் பெறுவோர் என்பது எதார்த்தமாகியுள்ளது. பிற்பட்டோரில் சில சாதியினர் மட்டுமே கல்வி, அரசுப்பணிகளில் 60 விழுக்காட்டிற்கு மேல்

பெற்றுள்ளனர். சில பிற்பட்ட சாதிகள் பின் தங்கியுள்ளன. மேல் தட்டில் உள்ளவர்களை நீக்குதல் என்பது வரவில்லை.

இப்படித்தான் சட்டநாதன் தன் உரையை முடித்துள்ளார்

தாழ்த்தப்பட்டோர் இயக்கம் பார்ப்பனர் அல்லாதார் இயக்கத்திலிருந்து தன்மானக் கருத்துக்களையும், தொழிலாளர் இயக்கத்திலிருந்து அரசியல் சமூக உரிமைகளை எல்லோரும் சமமாக பெறவேண்டும் என்பதையும் எடுத்துக்கொண்டுள்ளனர். அவர்கள் நீண்ட நாட்களுக்கு பொறுத்துக்கொண்டிருக்க மாட்டார்கள். அரசியல் சமுதாய கட்டமைப்பு காக்கப்பட, மய்ய மாநில அரசுகள் , இந்து சமூகம் - தாழ்த்தப்பட்ட சாதியினருக்கு உரிய இடத்தை அளித்துப் போற்ற வேண்டும்

சமூக நீதி அப்பக்கம் பயணிக்குமா?

( அக் 2023)

# 2. திராவிட ஆய்வு -- பேரா சிவத்தம்பி

Understanding Dravidian Movement : problems and perspectives என்கிற புத்தகம் 1995ல் என் சி பி எச் கொணர்ந்த ஒன்று. கார்த்திகேசு சிவத்தம்பி அவர்கள் ஜாப்னா பல்கலை பேராசிரியராக இருந்த நேரம்- கம்யூனிஸ்ட் கட்சி பாலன் இல்லத்தில் 1981 ல் அவர் ஆற்றிய உரையது.

பேரா சிவத்தம்பியின் ஆய்வுரை மீது 30 தோழர்கள் ஆற்றிய வினையுடன் கேசட் பதிவு செய்யப்பட்டு, அதை செய்தவர்கள் அக்கேசட்டை தவறவிட்ட நிலையில், சிவத்தம்பி அவர்களிடம் இருந்த நகலை வைத்து 1995ல் இந்த சிறிய புத்தகத்தை (65 பக்க ) ஆங்கில மொழியில் கொணர்ந்தனர்.

சாரமான பிழிவாக இந்த புத்தகம் பார்க்கப்பட்டது. மூத்தவர் தோழர் ஆர் பார்த்தசாரதி முன்னுரையும் சிறப்பானதாக அமைந்தது.

நீதிக்கட்சி, சுயமரியாதை இயக்கம், திக, திமுக, திமுக பிளவு என 5 கட்டங்களை குறித்தும், பெரியார் என்கிற ஆளுமையின் பங்களிப்பு குறித்தும் சிவத்தம்பி விவாதிக்கவேண்டும் என்றார்.

சிவத்தம்பியின் இந்த புத்தகத்தில் நான் உணர்ந்த சில முக்கிய புள்ளிகள்..

இந்திய விடுதலையில் எதிர்மறையாக இருந்தார்கள் என்கிற அம்சம், விடுதலைக்கு பின்னரான காலத்தில் பொருத்தமற்று போகலாம் ( losses its relevance in the context of the post independence transformation of society) ( -பார்த்தசாரதி)

அண்ணா தனது அரசியல் வாழ்வின் முதல்படியை நீதி கட்சி பொப்பிலி அரசர் செயலராக துவங்கினாலும், அதன் மிட்டா மிராசு குணம் உதவாது- சாதாரண மக்களின் திரள் கட்சியாக திக மலர பெரியாருக்கு உதவி செய்தார்.

இந்தி எதிர்ப்பின் நியாயம் உணரப்படவேண்டிய -தமிழ் கலாச்சாரம் பேசப்பட வேண்டிய ஒன்றாக இருந்தாலும், ஆங்கில மோகம் சார்ந்த மேற்குமயமாக்கலின் வேகம் ஒரு நாள் அழிவிற்கு இட்டு செல்லலாம்.

இந்தியை எதிர்க்க ஆங்கிலத்துணை என நீண்டகாலம் அழைத்துச் செல்வதால் தமிழ் அடையாளம் என்றாவது ஒருநாள் இல்லாமல் போகும் ஆபத்துள்ளது.

தமிழக அரசியலை திராவிட இயக்கம் தீவிரப்படுத்தியுள்ளது

பிராமணர் அல்லாதார் மானிபெஸ்டோ பிராமணரின் சடங்காச்சார பீடத்தை மறுக்கவில்லை. ஆனால் பெரியாரின் சுயமரியாதை இயக்கம் வர்ணாஸ்ரமம் எதிர்த்து போராடியது. நீதிகட்சி சற்று பத்தாம்பசலித்தனமானது. சுயமரியாதை இயக்கம் தீவிர முற்போக்கானது.

இந்தி எதிர்ப்பு போராட்டத்தின்போது, 1938ல் தனித் த்மிழ்நாடு என பெரியார் பேசினார். ஆனால் 1940 திருவாரூர் நீதிக்கட்சி மாநாட்டில் தனித்திராவிடம், பிரிட்டிஷ் ஆட்சியின் நேரடி நிர்வாகத்தின் கீழ் என்றார்.

” ..திராவிடர்களின் அகமாகிய சென்னை மாகாணம் இந்திய மந்திரியின் நேர்ப்பார்வையின் கீழ் தனி நாடாகப் பிரிக்கப்பட வேண்டும்”

தனித் தமிழ்நாடு இந்தி எதிர்ப்பில் வந்த

முழக்கமாகவும், தனித் திராவிடம் மக்கள் எழுச்சி சார்ந்து வராத தீர்மானமாகவும் இருந்தன.

திராவிட இயக்கத்தின் அடிப்படை கட்டுமான அரசாங்க பதவிகளில் பிராமணர் அல்லாதவர்க்கான இட ஒதுக்கீடு என்பதாக இருந்தது. பிராமண எதிர்ப்பும் இதில் நிலைகொண்டிருந்தது.

திராவிடர் இயக்கம் இந்திய தேசியம் என்பதில் தமிழர்களின் தேசிய உணர்வின் தனி வெளிப்பாடு எனச் சொன்னால், அதை திராவிடநாடு என்கிற கட்டமைப்பில் எப்படி உணர்வது. அங்கு தமிழ் தேசம் என்பதை எப்படி உணர்வது என்கிற கேள்வி எழுகிறது.

இந்த திராவிட உணர்வு என்பது போலி மன உணர்வு. ஆர்யர் என்கிற உயர் பிம்ப கட்டுமானத்திற்கு எதிரான எதிர் கட்டுமான

உணர்வு. ஆர்ய சத்தம் என்பதற்கு எதிராக எழுந்த குரல் எனலாம்.

இப்படி எழுந்த திராவிடக் குரல் கேரளாவிலோ, ஆந்திராவிலோ, கர்நாடகாவிலோ ஒலிக்கவில்லை. அங்கு திராவிட உனர்வு எஅன் ஏதும் கட்டப்படவில்லை. அகராதிப்படி பார்த்தாலும் திராவிட என்கிற சமஸ்கிருத சொல் தமிழைக் குறிக்கிறது.

பெரியாரின் பங்களிப்பு மற்றும் முக்கியத்துவம் அவரின் மதச்சார்பற்ற ஜனநாயக குரலில், பழைய சமூகம் எதிர் போராட்டங்களில் இருக்கிறது. அவரால் முழுமையாக கம்யூனிஸ்ட்களுடன் ஒன்ற முடியாமல் போனதற்கு பிரிட்டிஷாரின் தாக்குதலிலிருந்து தற்காத்துக்கொள்தல் என்கிற காரணம் இருந்தது.

தலித் வாய்ஸ் நடத்திக்கொண்டிருந்த ராஜசேகர் ஷெட்டி போன்றவர் இப்படிக் கருதினர்... பெரியாரின் இயக்கம் பிற்பட்ட சூத்திரர்களை சுற்றி வளர்ந்த இயக்கம். தீண்டப்படாதார் விரோத மனம் அவர்களின் நலனுக்கு தேவை என்கிற உணர்வும் அங்கிருந்தது.

பெரியார் இயக்கவியல் என்றெல்லாம் பேசவில்லை. மதச்சார்பற்ற நிலபிரபுத்துவ எதிர்ப்பு நிலையில் அடித்தட்டு மக்களின் ஜனநாயக குரலாக அவர் இருந்தார். அவரின் போதாமையை உணர்ந்த ஜீவா போன்றவர் தமிழ் பண்பாட்டு போராட்டங்கள் சார்ந்த மேடைகளை அமைத்தனர்.

வர்க்கவுணர்வு என்பது வளர்கிறது என்றாலும், அதை தடுக்கும் வகையில் இணையாக சாதிய உணர்வும் வளர்ந்து வருகிறது.

அண்ணாவின் திமுக திராவிடநாடு கோரிக்கையை கைவிட்டு, மாநில சுயாட்சியை எடுத்தது. எதிரிகளையும் ஏற்கச் செய்யும் ஆற்றலும் பக்குவமும் அண்ணாவின் சிறப்பெனலாம். அண்ணா தமிழ் தேசியம் என்பதை உயர்த்த உதவினார்.

திக என்பது திராவிடர் கழகம் என்றால், திமுக திராவிட என்பதை மட்டும் 'ர்' விட்டுவிட்டு எடுத்துக்கொண்டது. திராவிட என்பது இடம் சார்ந்த ஒன்று.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தடைக்காலமான 1948-52 காலத்தில் திமுக பிறந்து தன் வளர்ச்சிக்கான நல் வாய்ப்புக்களைக் கண்டது என பிலிப் ஸ்பிரட் திமுக ஆட்சியில் புத்தகத்தில் எழுதுகிறார்.

திமுக ஆட்சிக்கு வரும்போது பொருளாதார திட்டம் என , கொள்கை

என தனியாக வெளிப்படுத்தவில்லை. நலத்திட்டங்களை பேசியது. பொருளாதார கொள்கை அறிக்கை எதையும் வைத்துக்கொண்டு ஆட்சிக்கு வரவில்லை.

தமிழ் பண்பாட்டு அம்சங்களை கூர்மையாக அரசியல் படுத்திவதிலும், அதற்கு சமயச் சாயம் ஏதும் கொடுக்காமல் கொண்டு செல்வதிலும் அண்ணா பெரும் வெற்றியைக் கண்டார். ஊடகங்களை சாமர்த்தியமாக சாதுர்யமாக பயன்படுத்திக்கொண்டார்.

அறிஞர் அண்ணா தோழர் ராமமூர்த்தியிடம் சொன்னாராம்

” என்னுடைய கட்சி நான் விரும்பியதற்கு முன்பே ஆட்சிக்கு வந்துவிட்டது..என்னுடைய கட்சியில் லஞ்ச ஊழல் பரவிவிட்டது..இதனைச்சீர்படுத்தும் நிலையில் நான் இல்லை..சேனம் கட்டிய

குதிரைபோல் ஓடி சாகவேண்டியதுதான்”

சிவத்தம்பி ஆய்வு இத்துடன் நின்றது. இரு கேள்விகளை ஆராயவேண்டும் என அவர் சொல்லி நிறுத்துகிறார்.

1972 உடைவு- திராவிட இயக்கம் காரணமாக எழுந்த சமூக பண்பாட்டு எதிர்வினைகள் என்கிற இரண்டும் ஆய்விடப்படவேண்டும்.

சிவத்தம்பி அவர்களின் புத்தகத்தை மீண்டும் படித்த போது , இன்றுள்ள அரசியல் என்னுள் கீழ்கண்ட சிந்தனையை கிளர்த்தியது.

இன்று இவை போன்ற ஆய்வுகளை பேசும் நிலையில் தமிழ் பொது புத்தி இல்லை. 50 ஆண்டுகால ஆட்சி என்கிற பெருமித சோதனை தன்னை ஒரே மாடல் என முன்னிறுத்திக்கொள்ளும் தன்மையை

எடுத்துள்ளது. அதன் மீதான புகழ்பாடல்களால் தமிழக அரசியல் நிரம்பி வழிகிற நிலையைத்தான் இன்று உணரமுடிகிறது.

சோவியத் அமெரிக்க கால கெடுபிடி யுத்தம் கொடுத்த சமாதான சகவாழ்வு என்கிற படிப்பினை இரு நாடுகளின் இணக்கத்திற்கே தேவையாக இருந்தது என்பதை எடுத்துக்கொள்ளாத அரசியல் இங்கு ஒரே நாட்டில் மத்திய மாநில அரசாங்க உறவுகளில் நெருக்கடியாக்கப்படுகிறது. அரசாங்க உறவுகளில் கோட்பாட்டு ராஜதந்திரம் (ideological diplomacy) அவசியமா என்கிற கேள்வியை அமெரிக்க சோவியத் உறவுகள் கேட்டுக்கொண்டன என்ற படிப்பினையும் இங்கு கணக்கில் கொள்ளப்பட்டதாக தெரியவில்லை.

( 14-9-2023)

# 3. திராவிடர் பூர்வீகம் குறித்து....

தமிழ்நாட்டு வரலாறு தொல்பழங்காலம் என்பதிலிருந்து... இனம் திராவிடம் குறித்து

( இந்த வரலாற்று ஆய்வு புத்தகம் அப்போது முதல்வராக இருந்த டாக்டர் கலைஞர் கருணாநிதி அவர்கள் மதிப்புரையுடன் 1975ல் வெளியிடப்பட்ட ஒன்று)

தமிழகத்தின் இனமரபு வரலாறு மிகவும் சிக்கலானது; குழப்பம் மிக்கது. புத்தம் புதிய ஆராய்ச்சிகளால் பழைய கருத்துகள் எளிதில் பொருத்தமற்றுப் போய்விடுகின்றன. எனவே மிகவும் கருத்தோடும் விழிப்புணர்ச்சியோடும் இனமரபு வரலாற்றை வரையவேண்டிய பொறுப்பு நம்மைச் சார்கிறது. இனமரபியல் ஆராய்ச்சி திட்டவட்டமானது அன்று. அதில்

செய்யப்பெரும் முடிவுகள் நிலையற்றவை; எளிதில் மாறக்கூடியவை..தக்க அடிப்படைச் சான்றுகள் இல்லாத நிலையில் கொள்ளப்பட்ட முடிவுகள் பல இத்துறையில் மிகுந்த செல்வாக்குப் பெற்றுள்ளன. அவை காலப்போக்கில் மாற்றமுறலாம்.

'ரேஸ்' என்னும் சொல்லிற்குரிய பல்வேறு பொருள்களுள் " பொதுவான ஒரு மூதாதையரின் கால்வழியில் தோன்றிப் பொதுவான பண்புகளை மரபுவழியாகப் பெற்றுள்ள மக்கள் பகுதி" என்னும் பொருளே சிறப்புடையது. ரேஸ் எனும் சொல்லிற்கு நேரான தமிழ்ச்சொல்லாக இனம் என்னும் சொல் கையாளப்படுகிறது. ஆயினும் இனத்தின் உண்மையான பொருள் மனித இனத்தில் உடலுறுப்புகளினுடைய அமைப்பைப் பொறுத்து அமைவதாகும். உயிரின மரபுரிமை

மூலம் வழிவழியாகக் கொண்டுசெல்லக்கூடிய பொதுவான எளிதில் கண்டறியத்தக்க உடற்கூற்றுப் பண்புகளையுடைய மனிதர்களின் சேர்க்கையை இனம் என்று கூறுவதே அறிவியல் ஆராய்ச்சிக்குப் பொருந்திவரக்கூடிய கருத்தாகும்”

குரோபர் போன்றவர்கள் இனம் என்பதை சமூகப் பண்பாட்டுத்துறைக் கருத்தாகக் கொள்ளக்கூடாது- சமூக பண்பாட்டுத் துறையினர் அச்சொல்லை கையாளாமல் இருப்பது நல்லது- அது உயிரியல் ஆராய்ச்சிக்கு உகந்த கருத்தாகும் என்கிறார்.

உலகின் பல்வேறு பகுதிகளில் நிகழ்ந்ததைப் போன்றே இந்தியாவிலும் கடந்த பல நூற்றாண்டுகளாக இனங்கள் பேரளவில் கலந்துள்ளன. எனவே மொழியையும் இனத்தையும் ஒன்றுபடுத்திக் காட்ட இயலாது

என்ற கருத்தும் இருக்கிறது. இனம் என்பது மொழி என்னும் சொல்லிற்குரிய பொருளை உணர்த்தும் மாற்றுச்சொல் ஆகாது..இனத்திற்கும் மொழிக்கும் நெருங்கிய தொடர்பு உண்டாகலாம். இதனால் மொழியே இனப் பண்புகளை விளக்குவது என்பது பொருந்தாது.

மனித இனம் முழுவதும் ஒன்றே- ஹோமோ சேபியன்ஸ் என்ற ஒரே உயிரினத்தின் பாற்பட்டவர்களே என்னும் கருத்தை ஏற்காதவர்கள் இல்லை.பண்பாட்டின் முன்னேற்றத்தை முடிவுசெய்யும் கூறாக இனம் அமையவில்லை என்பது உண்மையாகும்.

திராவிடர் பெரும்பாலும் குள்ளமான வடிவினர்; கரிய நிறத்தினர், தழைந்த கூந்தலும் சுருண்ட மயிரும் வாய்க்கப்பெற்றவர். கரிய விழியினர். நீண்ட தலையோட்டை உடையவர்..அடியிற்

குழிந்த அகன்ற மூக்கினர். இந்திய மக்களின் பண்டைத்தொகுதியில் முதன்மையாய் இருந்த திராவிட இனத்தவர் பிற்காலத்தில் வந்து குடியேறிய ஆரியர், சித்தியர், மங்கோலியர் பிற இனத்தவரோடு பையப்பையப் கலப்புற நேர்ந்ததை வரலாறு எடுத்துரைக்கின்றது.

திராவிடர் எனும் சொல் வடமொழிச்சொல் என்பது கால்டுவெல் கருத்தாகும். இராகவைய்யங்கார் திராவிடம் தமிழாகாது என இக்கருத்தினை மறுத்துள்ளார். திரு இடம் என்பது திராவிடம் எனும் வடமொழி திரிபாக்கப்பட்டதை பூரணலிங்கம் சொல்கிறார். யஜூர் வேதம் த்ரமிளம் என்கிறது. பழந்தமிழ் இலக்கியத்தில் திராவிடம் என்ற சொல்லாட்சியைக் காண்பது அரிது. தேவாரத்தில் ஆரியன் கண்டாய் தமிழன் கண்டாய் என்றுள்ளது.

தமிழ் என்னும் சொல்லுக்கு நேரான

சொல்லாக வடமொழியில் திராவிட என்னும் சொல் வழங்கி வருகிறது. அதுவும் நேரடி திரிபன்று. கலிங்க மன்னன் கிமு 169ல் பிராகிருத மொழி கல்வெட்டில் அயலார் படையெடுப்பை தமிழக மன்னர்கள் எதிர்க்க அமைத்த கூட்டணி திரமிள தேச சங்காதம் என்பதாக இருக்கிறது. 8 ஆம் நூற்றாண்டு செப்பேடுகளில் திரமிளர் தமிளர் என்னும் சொல்லாட்சி வழக்குகள். கிபி 7 ஆம் நூற்றாண்டின் குமரிலபட்டர் ஆந்திர திரவிட பாஷா எனப் பயன்படுத்தியதில் திராவிட தமிழைக் குறிக்கிறது.

சாணக்கியர் அர்த்த சாத்திரத்தில் பாண்டியர் எனும் சொல் வருகிறது. திராவிடர் இடம்பெறவில்லை. மனுதர்மத்தில் சாதியிலிருந்து வெளியேற்றப்பட்ட பட்டியலில் யவனர், சீனர், பஹ்லவர், பாரதர் என்பதுடன் திராவிடரும் குறிக்கப்பட்டுள்ளனர்.

திராவிடர் என்பது இடைச்செருகல் என்பது புலனாகலாம்.

வராகமிகிரர் பிரகத் சம்மிதை தென்மேற்கு இந்தியப்பகுதியை திரமிடம் என்கிறது.

மேற்காட்டப்பேற்ற சான்றுகள் யாவும் திராவிடம் என்ற வழக்கு காலத்தால் மிகப் பிற்பட்டது என்பதைக் காட்டுவதுடன் திராவிடம் என்ற வடமொழிச்சொல் திரிந்தே தமிழ் சொல் தோன்றியது எனக் கூறும் கால்டுவெல் கருத்தின் பொருத்தமின்மையைப் புலப்படுத்துகின்றன.

தமிழ் என்பதே திராவிடம் எனத் திரிந்தது எனக்கூறலாம்

( மேற்கூறிய செய்திகள் தொல்பழங்காலம் புத்தகத்தில் பக் 51- 69களில் காணப்படுகின்றன. இப்புத்தகம் 420 பக்கங்களைக்கொண்டது)

II

( தமிழ்நாடு அரசு முதல்வர் டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி அமைத்த ஆய்வுக்குழு எழுதிய புத்தகம் 1975)

திராவிடர் வெளிநாட்டிலிருந்து வந்தவர்களா அல்லது இங்கேயிருந்த பழங்குடிகளா என இருவேறு கருத்துக்கள் நிலவுவதாக தொல்பழங்காலம் புத்தக ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

திபேத்திலிருந்து வந்ததாக ‘The Tamils of 1800 years’ என்பதில் திரு கனகசபை தெரிவிக்கிறார். அவர்கள் இங்கிருந்த நாகர்களை வென்று அவர்களுடன் கலந்த மங்கோலியர்கள் எனக் கருதுகிறார்.

அவர்கள் மாறர் என பாண்டிநாட்டில், திரையர் என சோழநாட்டில், வானவர் என சேரநாட்டில், கோசர் என கொங்குநாட்டை

வசமாக்கியவர்கள் என்பது கனகசபை அவர்களின் முடிவாகும்.

எலியட் ஸ்மித் என்பார் கிமு 1800யை அடுத்து எகிப்திலிருந்து வந்து முற்பட்ட பழங்குடிகளுடன் கலந்தவர் திராவிடர் என்கிறார். ஜே டி கார்னீலியஸ் என்பாரும் எகிப்தின் துனீசியா பகுதியிலிருந்து புடைபெயர்ந்தவர்கள் திராவிடர் என்கிறார். நடுநிலக்கடல் மக்கள் உலகம் எங்கும் பரவியதாக அவர் தெரிவிக்கிறார். அவர்கள் மேற்காசியாவில் தோன்றி வந்தவர்கள் என்கிற கருத்து பலராலும் போற்றப்பட்டுவருகிறது..

கென்னடி என்பாரின் ஆய்வும் இந்த நடுக்கடல் பகுதியிலிருந்து வந்தவர் என்பதை ஏற்கிறது. எஃப் ஜே ரிச்சர்ட்ஸ் இந்த நடுக்கடல் பகுதியிலிருந்து என்பது சரிதான் என்கிறார். இந்திய நாகரீகத்தில் திராவிடப் பண்பு

எழுதிய சிலேட்டர் என்பாரும் நடுக்கடல் பகுதி மக்களுடன் தலையோட்டு வடிவம், மயிர் அமைதிப்பண்பு, நிறம், கண் நிறம், உடலமைதிகள் ஆகியவற்றில் திராவிடர் ஒற்றுமை உடையவர்கள் என்கிறார். மொழியியல் வல்லுநர் எஸ் கே சாட்டர்ஜியும் இதை ஏற்கிறார். நடுக்கடல் மக்களின் கிளையினர் தங்கள் பழங்குடி மரபின் பட்டப்பெயர் தர்மிலாய்- திர்மிலாய்- திரிம்மிலி- திரமிழ எனத் திரிந்து தென்னாட்டின் மொழியான தமிழ் பெயராக கிமு 1000த்தின் இடைப்பகுதியில் மாற்றமுற்றிருக்கலாம் என்கிறார் சாட்டர்ஜி.

1952ல் வியன்னாவில் நடைபெற்ற மானுடவியல்- மரபியல் மாநாட்டில் பியூரர் ஹெய்மெண்டார்ப்பு திராவிடர் பற்றி பேசினார். வட இந்தியாவில் காணப்படாத - தென்னிந்தியாவில்

காணப்பட்ட பெருங்கல் இரும்புக்கருவிக்கால பண்பாடு வெளியிலிருந்து திராவிடர்களால் புகுத்தப்பட்டிருக்கலாம். அவர்கள் வட இந்தியாவிலிருந்து வந்திருக்க வாய்ப்பில்லை என்கிறார். இந்த நடுக்கடல் பிரிவினர் கிமு முதலாயிரத்தின் இடைப்பகுதியில் வந்திருக்கலாம். ஈரானிலிருந்து பலூசிஸ்தானம் வழியாக மைசூர் நிலத்தை வந்தடைந்திருக்கலாம் என்கிறார் ஹெய்மெண்டார்ப் . இவரின் கருத்திற்கு பலரிடம் ஏற்பு இருக்கிறது. எதிர்ப்பும் இருக்கிறது.

லகோவரி எனும் ருமேனிய ஆய்வாளர் நடுக்கடல் பகுதியில் மெசபடோமியாவிலிருந்து திராவிடர்களின் மூதாதையர் வெளியேறி பையப்பைய இந்தியா சென்றிருக்கலாம் என்கிறார்.

திராவிட மொழியும், பண்பாடும்

அர்மினாய்ட் உடற்கூற்று அமைப்புடைய மக்களின் வாழ்நிலமான அனதோலியா, அர்மீனியா, ஈரான் நிலப்பகுதிகளுக்கு நம்மை அழைத்துச் செல்வதாக கே ஏ நீலகண்ட சாஸ்திரியார் கருதுகிறார்.

மேற்கூறிய கருத்துக்களை மறுத்து திராவிடர் இங்கிருந்து அந்நாடுகளுக்கு ஏன் சென்றிருக்கக்கூடதெனக் கேட்கின்றவர்களும் உளர். டாக்டர் ஹால் சுமேரியர் திராவிட இனம் சார்ந்தவர் என்கிறார். அதேபோல் டாக்டர் மக்லீன் சிந்துவெளி மக்களான திராவிடர் கிழக்கு பாபிலோனியா சென்றனர் என்கிறார். சுமேரியர் ஆப்ரிக்கா- அய்ரோப்பாவிற்கும் திராவிட நாகரீகத்தை எடுத்துச் சென்றனர் என்பது அவரது கருத்து.

அசோகர் கல்வெட்டுக்கள் கிமு 3 ஆம் நூற்றாண்டில் சேர சோழ பாண்டியரை பேசுகிறது. எனவே அதற்கு முன்னரே

தமிழர் நாகரீகம் வளர்ந்திருக்கவேண்டும். மகாபாரதம், மனு திராவிட குறிப்புகளை பேசுகின்றன. மொகஞ்சதாரோ- ஹாரப்பா பகுதியில் நாகரீக நிலையில் வாழ்ந்த ஒரு பகுதியினர் திராவிடர்களாக இருக்கவேண்டும். ஆரியருக்கு முன்பே வடவிந்தியாவிலும் தென்னிந்தியாவிலும் திராவிடர்கள் வாழ்ந்திருக்க வேண்டும் என டி சி சர்க்கார் சொல்கிறார்.

டாக்டர் எமனோ மொழியியல் ஆய்வில் வட இந்தியாவிலும் நடு இந்தியாவிலும் 14 திராவிட மொழிகள் பெருவழக்காக இருந்துள்ளன என்கிறார். எலியட் ஸ்காட் ஆப்ரிக்கா ஆஸ்திரேலியா விந்தியம் என பரந்த நிலப்பரப்பை லெமூர்- லெமூரியா என்கிறார். மனித இனம் அங்கு தோன்றியிருக்கலாம். ஜான் எவான்ஸ் என்பாரும் லெமூரியாவை பேசி

தென்னிந்தியாதான் மனித இனத்தின் மூலத் தாயகம் என்கிறார்.

திராவிடர் தமிழகத்தின் தெற்கே இருந்த நிலப்பரப்பில் தோன்றியவர். பெரு வெள்ளம் காரணமாக கடலில் மூழ்கிய காரணத்தால் வடக்கில் குடியேறினர். அப்பகுதி இன்றுள்ள தமிழகத்தின் தெற்குப்பகுதியாகும்.

எல்லா கருத்துக்களையும் கோவைப்படுத்தி பார்த்தால் குமரிக்கண்டம்-லெமூரியா திராவிடர் மூலத்தாயகமாகும். கடல்வாய்ப்பட்ட அப்பகுதி லெமூரியாவில் இருந்தது. அங்கு அரும்பிய நாகரீகமே சிந்துவெளி நாகரீகமாக மலர்ந்தது. மொகஞ்சதாரோ திராவிடரின் நாகரீகமே நடுநிலக் கடலை அடுத்த எகிப்திய நாகரீகம் தோன்றக் காரணமாக இருந்திருக்குமென்று தோன்றுகிறது.

இச்செய்திகள் பக் 96-118 ல் காணப்படுகின்றன

(மே 2022)

# 4. ரிக் வேதகால ஆரியர்கள்

ராகுல் சாங்கிருத்தியாயனின் ’ ரிக் வேதகால ஆரியர்கள் ’ என்கிற அவரது ஆய்வு நூல் தமிழில் இருக்கிறது. அலைகள் திரு எத்திராஜூலு மொழிபெயர்ப்பில் கொணர்ந்த நூல். தோழர் சாங்கிருத்தியாயன் விசால வாசிப்பில் சில முக்கிய வரலாற்று செய்திகளை ரிக் வேத 10 மண்டலங்களையும் சார்ந்த பாடல்கள் வழி சேகரித்து தன் ஆய்வை இந்த புத்தகத்தில் தந்துள்ளார்.

இன்று நாம் பொது புத்தியில் புரிந்தது மாதிரி வைத்திருக்கும் அம்சங்கள் ஆரியர்-திராவிடர் வரலாற்று வெளிச்சத்தில் சரியானவையா என்ற கேள்வி இந்த ஆக்கத்தை படிக்கும்போது வரலாம். சில பொது ஏற்புகளையும் பார்க்கலாம். இனி ராகுல் ஆய்வில் கிடைக்கும் சில வரலாற்று

துணிபுகள்..

ஆரியர் இந்தியாவிற்கு வெளியிலிருந்து வந்தவர்கள் என்பதை ஏற்காவிட்டால் வரலாற்று குழப்பம் ஏற்படும்.

சிந்து வெளி மக்கள் ஆரியருக்கு முன்பே நகர நாகரிகங்களில் வியாபார உலகில் சிறந்து வாழ்ந்தவர். அவர்களுடன் ஏற்பட்ட மோதலில் இம்மக்களை தஸ்யூக்கள் கறுப்பர்கள் என அடிமைப்படுத்தினர் ஆரியர். தாசன் என்கிற பதம் இதிலிருந்து தான் வந்தது. இவர்கள் திராவிடர்கள் எனவும் வரலாற்றில் அறியப்பட்டுள்ளனர். இந்த தஸ்யூக்கள் ‘கிருஷ்ணர்கள்’ என்கிற கறுப்பு அடையாளத்தாலும் பார்க்கப்பட்டனர்.

(சிவன் தான் திராவிட ஆதி கடவுள் என்கிற பேச்சுடன், கிருஷ்ணன் என்பதும் தஸ்யூக்கள் என்கிற உரையாடலை சாங்கிருத்தியாயன்

இங்கு தந்துள்ளார்)

ஆரியர் பல இனக்குழுக்களாக தங்களுக்குள் போரிட்டுள்ளனர். எங்க ஏரியா உள்ளே வராதே என்கிற போராட்டம் ரிக் வேத மண்டலங்களில் புகழ் வாய்ந்த 10 மன்னர் யுத்தம் என போற்றப்படுகிறது.

ஆரிய முக்கிய பெரும் இன குழுக்கள் 5.

புரு- இதன் புகழ் வாய்ந்தவர்களாக வத்ர யஷ்வன், திவோதாஸ், சுதாஷ் போன்றவர். இவர்கள்தான் பரதர்கள் என புகழ் அடைந்தனராம். (இதிலிருந்துதான் பரத் பாரத் என்கிற name game அலகிலாவிளையாட்டு). இவர்கள் பிருஷ்ணி ராவி நதிக்கரையில் வாழ்ந்தனராம். இந்த புருக்களிடமிருந்து உருவான ஒன்று பின்னர் குரு வம்சம். பரதர்களுக்கு முக்கியமானவர் பரத்வாஜர்.

யதுக்கள் இனக்குழு- இவர்கள் இன்று

அறியப்படும் யாதவர்களின் முன்னோர்கள். (தமிழகத்தில் முன்பு கோனார்கள்.) . சப்த சிந்து பகுதியில் இவர்கள் புரு குழுவினரோடு மோதி தோற்றனராம். புரு திவோதாஸ்- சுதாஷ் யாதவர் மற்றும் துர்வசுக்களுடன் அடிக்கடி போரிட்ட காட்சிகள் ரிக் பாடல்களில் வருகின்றனவாம். எல்லா வெற்றிகளும் இந்திரனுக்கு சமர்ப்பணம் செய்யப்பட்டுள்ளன. யதுக்கள் கிருஷ்ணன் மதுராவுடன் இணைத்து பேசப்படுகின்றனர். (யதுகுல கிருஷ்ணா)

துர்வசுக்கள் குழு- கண்வர் வத்சர் வழியினராம். இவர்கள் யதுக்களுடன் துணை நின்றாலும் புருக்களிடம் தோற்றனர். இவர்கள் பரதர்களின் பகைவர்களாக இருந்துள்ளனர். ஆரிய சண்டை அவர்களுக்குள் முற்றுகிறது.

திருஹ்யுக்கள் குழு- பிருகு இவர்களின் வழிகாட்டியாம். இவர்களுடன் அணு

என்ற குழுவும் இருந்ததாம். 10 மன்னர் போரிலே வசிஸ்ட்டர் வழியில் சுதாஸ் புருக்கள் இவர்களை வீழ்த்தினராம். இவர்களும் இந்திரன் அக்னியைத்தான் கொண்டாடினர். பசு கவர்தல், செல்வ சண்டை என ரிக் பாடல் சொல்கிறதாம். புரு சுதாஷ் இந்திரனின் உற்ற நண்பனாம். யுத்தம் முடிவில் ஆயிரக்கானவர் நதிகளில் மூழ்கடிக்கப்பட்டனராம். திருஹ்யக்கள் ராவி நதிக்கு மேற்கே இருந்தவர்களாம்.

அணு என்கிற 5 வது குழு- இவர்களை வசிஸ்ட்டர் பொய்யர்கள் என அழைத்தாராம். இந்திரன் ரதம் அமைக்கும் அளவு skilled ஆன அணு குழுவினரை புருக்கள் தோற்கடித்தனராம்.

இதைத்தவிர பக்தூண் ( பட்டாணியரா) , பலான், சிவி ( சிவ) , விஷாணி, ஷிம்யு, க்ரிவி, கவஷ், உசத், மன்யு, போன்ற 24 கிளைகள் கூட

ரிக் வேதகால பாடல்களில் வருகின்றனவாம்.

சுதாஷ் 10 மன்னர்களை வென்ற கதைதான் ( தாஸராக்ஞ யுத்த) புகழ்வாய்ந்த 10 மன்னர் யுத்தமாம். புருவில் திரிஸீக்கள் என்ற பிரிவினரான திரிவோதாசும் சுதாசும் பரதர் கிளைகளை உயர்த்தினராம்.

ரிக் வேதகாலம் என சாங்கிருத்தியான் ஏற்பது கிமு 1200- 1000. அப்போது மொகஞ்சதாரா ஹரப்பா திராவிடர், காஷ்மீர்- அசாம் பகுதியில் கிர் என்கிற கிராத் மக்களுடன் ஆரிய இனக்குழுக்கள் மோதியுள்ளன. திராவிடர் கறுப்பர் எனில் கிராதர் மஞ்சள் நிறத்து மங்கோலியர் - இப்போதான திபேத்தியர்..

மிக முக்கிய செய்தி ஒன்றை சாங்கிருத்தியாயன் தருகிறார். ரிக் முதல் 9 மண்டலங்களில் நான்கு வர்ணங்கள்

பற்றி செய்தி இல்லை. பத்தாவதில் 10-10-12 பாடலில் முகம், கை, தொடை , கால் வழி பிறப்பு சொல்லப்பட்டுள்ளதாக ராகுல் தெரிவிக்கிறார்.

ஆரியர் தம் வேற்றுமைகளை மறந்து ஒன்றாக, ஒரு மனத்துடன், மந்திரத்திலும் ஒன்றாக , சம பணி கொண்டதாக இருங்கள் என அறிவுரையை 10வது மண்டலம் 191வது ஷூக்தம் சொல்கிறதாம்.

பணி என்ற பிரிவு கொண்டவராக இருந்தாலும் ஆரியர் உறவுடன் இருந்தனராம். இவர்கள் பன்யா வியாபாரி வைஸ்யர் என அழைக்கப்பட்டனர்.

ஆரியர் குழுக்களுக்கான முக்கிய ரிஷிகளாக வாமதேவர், பரத்வாஜர், வசிஷ்டர், விசுவாமித்திரர், அஷ்டகர், கஸ்யபர்,வாமகர், அங்கிரா, ஜமதக்னி, பிரிகு என 10 பேர்கள்

சொல்லப்படுகின்றனர். (இன்றும் இவர்கள் கோத்திரங்களாக நிலவுகின்றனர்) . ரிக் ஷூக்தங்களை அதிகம் படைத்தவர் பரத்வாஜராம். விசுவாமித்திரர் காலம் என்பதே 15 தலைமுறைக்கு பிந்திய காலமாம். கிரத்ஸமத், கஷூவான், அகஸ்தியர் (வசிஷ்டர் சகோதரர்) , கோதமர், மேதாத்தி, சியாவாஷ்வ, குத்ஸா, மதுச்சந்தா, பிரஸ்கண்வர், அஜிகர்த என சில பாடல்களை தந்த ரிஷிகளும் உள்ளனராம்.

சிந்து இனத்தவரை கிருஷ்ணர்கள், தஸ்யூக்கள்,தபிஸ்கள் என ஆரிய குழுவினர் அழைத்துள்ளனர். பரத்வாஜர் அக்னி மற்றும் பணி குழுக்களின் செல்வத்தை எடுத்துச் சென்றாராம். மலைவாசிகள் தஸ்யு சம்ரன் தலைமையில் கிராதர்களுடன் சேர்ந்து ஆரியரை எதிர்த்து பெரும் போர்களை 40 ஆண்டுகள் நடத்தியதாக சாங்கிருத்தியாயன்

சொல்கிறார். கிழக்கு நேபாளம் கிராத தேசமாம். கிருஷ்ணன் திராவிடரா என்ற கேள்வி எழுகிறது.

ரிக் வேதகாலத்திற்கு முந்திய மன்னர்களாக மனு, புருரவா, நஹிஷ், யயாதி, மந்தாத என்கிற 5 பேர்கள் புகழுடன் இருந்தனராம். மனு பற்றி ரிக் 31 இடங்களில் சொல்கிறதாம். மனு தஸ்யூக்களை வென்றுதான் புகழ் பெற்றதாகவும் சாங்கிருத்தியாயன் சொல்கிறார். அக்னி மனுவிற்காகவே த்யௌ என்கிற சுவர்க்கம் உருவாக்கினாராம். புரூரவா ஊர்வசி காதல் பாடல்கள் ரிக்கில் வருகின்றன.

வாமதேவர் பாடல்படி 50 ஆயிரம் - கிருஷ்ணர் என்கிற கறுப்பு அசுரர்கள் கொல்லப்பட்ட தகவலையும் ராகுல் தருகிறார்.

பருச்சேப் மலைப்பகுதி தஸ்யூக்களின்

வீரமன்னன் சம்பரன். திவோதாசின் மகன் இவனை வெற்றிகொண்டான். சம்ப்ரான் தஸ்யூக்கள் ‘சிஷ்னதேவர்’ (ஆண்குறி பூஜை செய்பவர்) என வசிஷ்டர் சொன்னாராம். லிங்க வழிபாட்டை சொல்கிறார்களா என சரியாகச் சொல்லமுடியவில்லை. இவர்கள் மனுவின் புத்திரர்கள் என ஏற்கப்படாமல் அமானுஷ்யர்கள் என குறிக்கப்பட்டனராம். தஸ்யூக்களில் பெண்கள் வீரமாக போராடியது சொல்லப்பட்டுள்ளதாம்.

வசிஷ்டர் பேரன் கவுரவீதி மனுவை மன்னர் என்றும் ரிஷியென்றும் புகழ்கிறார். சம்பரனுக்கு முந்திய மலையரசன் நமுசியை இந்திரன் மனுவின் பொருட்டு கொன்றாராம். தலையை தூளாக்கியதாக பாடல் சொல்கிறது.

பரத்வாஜர் எதிர்கொண்ட தஸ்யு வீரர்கள் சுமரி, துனி, சம்பர், சுஷ்ண

வசிஸ்ட்டர்க்கு- தாசன் விருஷஷிப்ரன்

குத்ஸவிற்கு- சுஷ்ண, பிப்ரு, விருத்ர, சம்யம் என்கின்றனர்.

இன்னும் ஆரிய குழுக்கள் உணவு, சோமபானம் என ஏராள செய்திகள் இதில் தரப்பட்டுள்ளன. தஸ்யுக்கள், ஆரிய இனக்குழுக்கள் எப்படி கலந்தன. கலப்பற்ற தூய குருதிக்குழு என்கிற கோரல்கள் செல்லுபடியாகுமா என்கிற பல கேள்விகளையும் இந்த புத்தகம் எழுப்புகிறது.. ஆர்வம் உள்ளவர் படித்து பார்க்கலாம்

(Sep 2023 )

# 5. சூத்திரர் வரலாறு

Who were Sudras – சூத்திரர் யார் என்கிற வரலாற்று நூல் டாக்டர் அம்பேத்கரின் புகழ் வாய்ந்த ஆய்வுகளில் ஒன்று. 1946ல் இந்நூலை அவர் வெளியிட்டார். அவரின் நூல்களை பம்பாயில் வெளியிட்டு வந்த தாக்கர் சன்ஸ் நிறுவனம்தான் இதனையும் வெளியிட்டனர். சூத்திரர் ஆர்யரே- பின்னர் இறக்கப்பட்டனர் என்கிற முடிவை அம்பேத்கர் இதில் எட்டியிருப்பார். இக்கட்டுரையில் சுருக்கமாக , இது குறித்து பேசப்பட்டுள்ளது.

இந்நூலின் 1947 ஆம் பதிப்புதான், அம்பேத்கரின் நூல்தொகைகளில், ஆங்கிலத்தில் 7 வது வால்யூமிலும் ( 1990ல்) , தமிழ் தொகைகளில் வால்யூம் 13லும் (ncbh 1999) அப்படியே இடம் பெற்றது.

நான் இங்கு சொல்ல வரும் நூல் 1994ல் வாங்கிப்படித்த எ. பொன்னுசாமி அவர்களின் மொழிபெயர்ப்பில் வந்த ‘சூத்திரர் வரலாறு’. தி நகர் அ ஆ பதிப்பகம் கொணர்ந்த நூல். இந்த மொழிபெயர்ப்பில் , அம்பேத்கர் எழுதிய நூலில் இருந்த முகவுரைத் தவிர இருக்க வேண்டிய 12 அத்தியாயங்கள் இல்லை. 10 தான் இருக்கிறது. 1946, 1947 மூல நூல் பதிப்புகளிலும், ஆங்கில வால்யூம் 7 லும் 12 அத்தியாயங்கள் இருக்கின்றன. தமிழ் வால்யூம் 13லும் இருக்கிறது.

ஆனால் பொன்னுசாமி மொழிபெயர்ப்பில் இயல் 7 மற்றும் 12 இடம் பெறவில்லை. ஏனோ தெரியவில்லை. மொழிபெயர்ப்பாளர் குறிப்பிலும் ஏன் எனச் சொல்லப்படவில்லை. 1994ல் நான் படித்தபோது இதை உணர வாய்ப்பில்லாமல் போனது. அப்போது ‘இன்டெர்நெட்’ வசதியில்லை. இப்போது

ஒத்துப் பார்த்தபோது, இரு இயல்கள் காணாததை உணரமுடிந்தது. அது போல் அம்பேத்கர் முன்னுரை எழுதிய நாள் என மூல நூலில், ‘வால்யூம்களில்’ அக்டோபர் 10, 1946 என்றிருக்கும். பொன்னுசாமி நூலில் அக்டோபர் 24 என்றுள்ளது. முழு முன்னுரையும்ம் மொழியாக்கம் பெறப்பட்டதாக உணரமுடியவில்லை. மொழிபெயர்ப்பாளர் இப்படியெல்லாம் சுதந்திரம் எடுத்துக்கொள்ள முடியுமா?

சரி இந்நூலில் அம்பேத்கர் வெளிப்படுத்தும் கருத்தாக்கங்கள் சிலவற்றை மட்டும் தொட்டுக்காட்டியுள்ளேன். இனி டாக்டர் அம்பேத்கர் பேசட்டும்...

” லட்சியங்களை அளவுகோல்களாகக் கொள்வது நல்லது. அளவுகோலின்றி ஏதும் செய்யமுடியாது. ஆனால் அந்த அளவுகோல் காலத்தினையும் சூழ்நிலைகளையும்

ஸ்வீகரித்துக் கொண்டு மாறவேண்டும்.

எந்த ஓர் அளவுகோலும் நிரந்தரமானதல்ல. நமது அளவுகோல்களின் மதிப்பினை மறு மதிப்பீடு செய்யக்கூடிய சாத்தியம் எப்போதும் இருக்கவேண்டும். அந்த அளவுகோலுக்கு ஒரு புனித முத்திரை குத்திவிட்டால் அது எக்காலத்திலும் புனிதமாக்கப்பட்டுவிடுகிறது..”

(டாக்டர் அம்பேத்கர் புருஷ சூக்தம் பற்றி எழுதும்போது )

“ஆர்ய இனம் என்பதே ஓர் அனுமானந்தானே தவிர வேறொன்றுமில்லை. ...வேதங்கள் ஆர்யன் என்ற இனம் ஒன்று உண்டு என்பதையே அறியா . ஆர்யர்கள் இந்தியா மீது படையெடுத்தளவ்வித தடயமும் இல்லை. இந்திய மக்களாகிய தசா தஸ்யூக்களை ஆர்யர்

வென்று அடக்கியதற்கான தடயமும் இல்லை. ஆர்யர்கள் நிறத்தில், தசா தஸ்யூக்களிடமிருந்து மாறுபட்டவர்கள் என்பதை வேதங்கள் ஏற்கவில்லை”

” மேற்கத்தியர் ஆர்யர்கள் படையெடுத்தனர் என்றும், தசாக்களையும் தஸ்யூக்களையும் அவர் வெற்றிகொண்டனர் என இட்டுக்கட்டினர்...புதிய விளக்கங்கள் வெளிவரத் துவங்கியதும் மேற்கத்தொயரின் விளக்கங்கள் நீடிக்காது”

“சூத்திரர்கள் ஆர்யர்கள் என்ற முடிவு மண்டையில் ஆனி அடித்ததைப்போல் தெளிந்து நிற்கிறது. அவர்கள் சத்ரியர்கள். ஒரே சந்தேகம் சூத்திரர்கள் இனவழி கூட்டமா என்பதுதான்” ( 200க்கும் மேற்பட்ட பக்க நூலில் அம்பேத்கர் நான் பார்த்த அளவில் இரு இடங்களில் மட்டுமே திராவிட என்கிற பதத்தை பயன்படுத்துகிறார். அதேநேரத்தில்

சூத்திரர் ஆர்யர்தான், பின் இறக்கப்பட்டனர் என விவாதிக்கிறார்)

“ஆரம்பத்தில் மூன்று வர்ணங்களே இருந்துள்ளன. சூத்திரன் தனியான வர்க்கமாக இருக்கவில்லை”

” சூத்திரர்கள் ஏன் தாழ்த்தப்பட்டனர்? பிராமணர்களுக்கும் சூத்திரர்களுக்கும் இடையில் ஏற்பட்ட போராட்டமே சூத்திரர் தாழ்த்தப்பட்டதற்கான காரணம்”

” பிராமணர்கள் சத்ரியர்களைச் சூத்திரர்களாகத் தாழ்த்த பயன்படுத்திய தந்திரம், அவர்களுக்கு பூணூல் போட மறுத்ததே”

” ஆரம்பகால ஆர்ய சமுதாயம் எல்லா பிரிவினர்களையும் உபநயனத்தினைப் பொறுத்தமட்டில் ஒரே விதமாகத்தான் நடத்தியுள்ளது” ( பெண்களுக்கும் உபநயனம்

இருந்தது)

” உபநயனம் இல்லையெனில் அறிவுப்பாதை அடைக்கப்படும். அறிவு, சொத்து உரிமை இருபெரும் தகுதிகளை உபநயனம் தரும். உபநயனம் செய்து வைக்கும் உரிமை பிராமணனுக்கு மட்டுமே உண்டு”

” சூத்திர மன்னர்களுக்கும் பிராமணர்களுக்கும் சச்சரவுகள் இருந்தன. பிராமணர்கள் கொடுமைகளுக்கும் அவமரியாதைக்கும் உள்ளாயினர். வெறுப்பு கொண்ட பிராமணர் உபநயனம் செய்ய மறுத்துவிட்டனர்”

“இந்தோ ஆர்ய சமூக சூத்திரன் ஒரு இனமா, கூட்டமா, குடும்பங்களின் கலவையா நமக்கு தெரியாது.”

டாக்டர் அம்பேத்கர் இந்தோ ஆர்ய சூத்திரர்

குறித்து வந்தடைந்த முக்கிய புள்ளிகள் மேலே சொன்னவைதான். அப்போது இந்து சூத்திரர் யார் என்கிற கேள்வி அம்பேத்கரின் ஆய்வின் தொடர்வினையாக தொக்கி நிற்கிறது.

நூலை வாசிக்க முடியாதவர்க்கு இச்சிறு கட்டுரை உதவக்கூடும். (May 29 2024)

# 6. இந்திய நாகரிகத்தில் திராவிடப் பண்புகள்

கில்பர்ட் ஸ்லேட்டர் திராவிட ஆய்வாளர் மத்தியில் தெரிந்த பெயர். கில்பர்ட் தனது 'The Dravidian Element in Indian Culture' மூலம் இன்றும் இருந்து வருகிறார்.

கில்பர்ட் சிலேட்டர் சென்னை மாகாணத்தில் 1920களில் சென்னை பல்கலை பொருளாதார பேராசிரியராகவும் அதற்கு முன்னரும் பல்வேறு நிலைகளில் பணியாற்றி தென் இந்தியா குறித்து , குறிப்பாக தமிழ் மக்கள் குறித்து அறிந்தவர். தனது நூலில் அவர் நீதி கட்சி தலைவர் டி எம் நாயரை குறிப்பிட்டுச் சொல்கிறார். அவருடன் கில்பட்டிற்கு பழக்கம் இருந்திருக்கக்கூடும்.

கில்பர்ட் சிலேட்டரின் இந்த நூல் 1924ல்

லண்டனில் வெளிவந்தது. தமிழில் மிக நேர்த்தியாக, வாசகர் எளிதாக உணர்ந்து செல்லும் வகையில் பன்மொழிப்புலவர் கா. அப்பாத்துரை மொழிபெயர்த்துள்ளார். சைவசித்தாந்த கழகம் ’ இந்திய நாகரிகத்தில் திராவிடப் பண்புகள்’ என 1955ல் கொணர்ந்தது.

திராவிடர் இயக்கம் பற்றி பேசக்கூடியவர் ஆங்காங்கே காட்டும் குறிப்பாக கில்பர்ட் புத்தகம் வந்தாலும், பரவலான வெளிச்சத்திற்கு செல்லவில்லை. கில்பர்ட் முடிவுகள் பல , தமிழக பொது புத்தியில் உறைந்து கிடக்கும் எண்ணம் பலவற்றை கேள்விக்கு உட்படுத்தக்கூடியதாக இருக்கும். கில்பர்ட்டின் ஆங்கில நூல் இணையத்தில் கிடைக்கிறது. அறிஞர் அப்பாத்துரை மொழிபெயர்ப்பு மிக கச்சிதமான ஒன்று. தமிழ் மொழிபெயர்ப்பும் அப்பாத்துரையம்

தொகுப்பு 20 ல் இருக்கிறது. இதில் அவர்கள் திராவிடப்பண்பு என்கிற தலைப்பில் அப்பாத்துரை அவர்களின் கில்பர்ட் மொழிபெயர்ப்பை , பெயர் மாற்றி வைத்துள்ளனர். இணையத்தில் கிடைக்கிறது.

கில்பர்ட் தனது 7 அத்தியாயங்கள் மூலம் வந்தடைந்த சில ஆய்வுப் புள்ளிகளை இங்கே சுருக்கமாக தர முயல்கிறேன். இவற்றையும் நாம் உத்தேச முன்மொழிவுகளாகவே எடுத்துக்கொள்வது நலம். இனி கில்பர்ட்...அப்பாத்துரை வழியாக..

இன்று நமக்குக் கிட்டியுள்ள வடிவில் இருக்கும் வேதம் உருவான காலத்தில் சமஸ்கிருத மொழி பேசிய மக்களில் கணிசமானவர் திராவிட இனத்தவராக இருந்தனர்.

எல்யட் சுமித் இடப்பெயர்வு நூல்படி புதிய பண்பாட்டு மக்கள் திராவிடர்க்கு முற்பட்ட மக்களுடன் கலப்புற்று திராவிடராயினர். இப்புடை பெயர்ச்சிக் காலத்தில் திராவிடர் வேடர், மீன்படவராக இருந்தனர்.. தமிழ் நாகரிகத்தை தோற்றுவித்து செம்மைப்படுத்திய மனப்பண்பு வேட்டுவ மூதாதையிரிடமிருந்து வந்திருக்க வேண்டும்.

ஆரியர் வருகைக்கு முன்னர் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னராவது, இந்தியா வந்தடைந்த பண்பாட்டுக் கூறுகள் , ஏற்கனவே இந்தியாவில் குடிபுகுந்திருந்தவருடன் கூடி கலப்புற்றன என்றும், திராவிடப் பண்பாடு அக்கலப்பின் வழி ஏற்பட்டது என்றும் கூறுவது பொருத்தமானதாகும்.

இந்தியாவில் ஆரியக் கோட்பாடு மக்களது உணர்ச்சியின் அடிப்படையிலேயே இயங்குகின்றது. ஆரியரில் மூத்த மரபினர்

என்கிற பெருமிதம் , மதிப்புணர்ச்சி கொள்கின்றனர்.

பிராமண சாதியில் உச்சநிலை உயர்வோ, சாதி வேறுபாடோ கூட ஆரிய மரபு எனக்கூறிட ஆதாரமில்லை என்கிறார் மாக்ஸ் முல்லர். பின் சாதிமுறை ஆரிய வழக்கமில்லாவிட்டால், அது திராவிட வழக்கமா என்ற கேள்வி எழுகிறது. சற்று சிக்கல் வாய்ந்த கேள்விதான்.

வட இந்தியாதான் மிகுதியும் ஆரியமயமாயிருக்க முடியும். பல படையெடுப்புகளுக்கு ஆளாகியிருக்கவேண்டும். வட இந்தியா சாதி முறையின் வாழ்வகமாயிருந்திருக்க வேண்டும். ஆனால் நிலைமை இதற்கு நேர்மாறானதென்பது நாற்சந்தியும் அறிந்த உண்மை . வட இந்தியாவைவிடத் தென் இந்தியாவிலேயே சாதி முறைமை வலுப்பெற்றதாகவும்

பெருக்கமுடையதாகவும், சமூக வாழ்வில் மிகப்பெரும் பங்குடையதாகவும் இருக்கிறது.

ஆரியருக்கு முற்பட்ட திராவிட இந்தியாவில் ஆரியரிடமில்லாத , ஆனால் இன்றைய இந்து மதத்தில் உயிர்நிலைப் பண்பாயுள்ள ஒரு மந்திரக் குருமார் வகுப்பு அல்லது சாதி இருந்ததென்று அறியலாம். பிராமண சாதியும் , சத்திரியர் சாதிக்கு மேற்பட்ட அதன் ஆதிக்கமும் திராவிட மரபுகளே. அறிஞர் ஓல்ட்ஹாம் சான்றுகள் இதை வலுப்படுத்துகின்றன.

பிராமணர்கள் தொடக்கத்திலேயே ஆரிய புரோகித வகுப்பாயிருந்து வந்தவர் எனில், இந்து சமூகத்தில் பிராமண ஆதிக்கம் ஏற்பட்டது போல், இந்திரன் போன்ற வேத தெய்வ வணக்கம் சிறப்பு பெற்றிருக்கும். ஆனால் அவை மறைந்து போய்விட்டன.

பிராமணர் தனிக் குறியீடாக பஞ்சு நூல் இருக்கிறது. பருத்தி நூற்பு வேத ஆரியரின் தொழிலாயிருந்திருக்க முடியாது. ஆரியர் திராவிடர் போராட்டத்தில் பல படிகள் இருந்திருக்கலாம். போராட்டங்கள் ஊடே செயல் எதிர் செயல் விளைவுகள் நடந்திருக்கலாம். மொழி சார்ந்தும் இருந்திருக்கலாம். இப்போராட்டத்தில் திராவிடர் சமஸ்கிருதம் கற்க வேண்டியிருந்திருக்கலாம்.

இவ்விதம் திராவிடர் ‘மொழியில் ஆரியமயமாக்கப்பட்ட’ போது, ஆரியர் ‘பண்பாட்டில்’ திராவிடமயமாக்கப்பட்டனர். குருமார் சாதி என தனிப்பயிற்சி இல்லாமலேதான் படையெடுப்பாளர் இந்தியாவில் புகுந்துள்ளனர். பிராமண சாதி குருதிக் கலப்பால் ஆரியமயமாயிற்று.

திராவிட நாகரிகம் ஆரிய நாகரிகத்தை

விட பேரளவு பழமையானது. நாகரிக வளர்ச்சியில் சமய கருத்து செயலாற்றலில் , குருமார் சாதி ஆதிக்கம் என்பதில் திராவிட நாகரிகம் எகிப்து , மெசபட்டோமியா நாகரிகங்களை ஒத்து இருக்கிறது

கள் இறக்கும் தொழில் பனையின் தாய்நாடாகிய மெசமெட்டோமியாவிலிருந்து வந்திருக்கலாம்.

உண்மையில் வேத சூக்தங்களும், இந்து சமயமும் இருவேறு வகைப்பட்ட மனப்பான்மையின் விளைவுகள். நாக வணக்கம் நாடு முழுதும் இருக்கிறது. முனிசாமி தென் இந்தியாவில்.

வேத காலத்திற்கு முன்பே சிவன் திருமால் வழிபாடுகள் திராவிடரிடம் இருந்தன. மீனாட்சி திராவிடரின் ஊரம்மன்.

திராவிட உள்ளத்தின் தனிச் சிறப்புக்குரிய

முனைப்பான பண்பு யாதெனில், அது எல்லாத் துறைகளிலும் தனிச் செய்தியிலிருந்து பொது விதியமைதிக்கு தாவிடும். பொதுவிலிருந்து மற்றவற்றை வருவிக்கும். போதிய சான்றில்லாமலும் பொது விதிக்கு வந்து விடுவர். எளிதில் அதை அவர்கள் கைவிடுவதில்லை.

நெல் விளைவு திராவிட நாகரிகத்தின் பொருளியல் அடிப்படை. ஆரம்பத்தில் அவர்களும் வேளாண்மை தொடர்பில்லாமல் அலைந்து திரிந்தவரே. எகிப்திடன் நேரடி தொடர்பு கொண்ட பகுதி தென் இந்தியா. சீன நாகரிகமும் நெல் பொருளியலே.

குருமார் வகுப்பு உடல் உழைப்பினரிடமிருந்து பிரிந்த அறிவு வகுப்பாயினர். திராவிடர்களில் தாய்வழி மரபு தந்தை வழி மரபு என இரண்டும் இருந்துள்ளது. குழந்தைப் பற்று

அடிப்படையாக இருந்துள்ளது.

சாதி ஒரு திராவிட சமூக முறை . சாதி முறைக்கு காரணம் தொழில் அல்லது இன வேறுபாடு அல்ல . இரண்டும் சேர்ந்தவை. தொழிற்முறை தேர்ச்சி, தனித் தொழில்களில் தந்தை வழியாக பற்று வளர்தல், தொழிற்முறை மாறுபாடுகள் காரணமாக புதிய சாதிப் பிரிவுகள் என உருவாகியிருக்கலாம்,

அயலார் படையெடுப்புகளால் திராவிட நாகரிகம் மிகுதி தாக்கப்படாத பகுதிகளில் தான் சாதி முறை உச்சமாக வளர்ச்சி அடைந்தது. எனினும் வேறு ஆற்றல்களும், இன வேறுபாடுகளும் காரணமாயின.

திராவிட மக்களின் சமூக அமைப்பு முறையில் சாதி முறைக் கருதும் கோட்பாடு மிக முற்பட்ட காலத்திலேயே நிலைப்

பெற்றிருந்தது. ஆரியர் படையெடுப்பு சாதி முறைமைக்கு மூல காரணமல்லாவாயினும், இரண்டு கூறுகளை வலியுறுத்தி உயர்வு தாழ்வு போக்குகளை வகுக்கும் போக்கை, நிற வேறுபாடுகளை தரங்களுடன் இணைக்கும் போக்கை உருவாக்கியது. படிமுறை ஒழுங்கை செய்தது.

நெற்பயிர் விளைவித்த பறையரும் பள்ளரும் தீண்டப்படாதவரானதற்கு காரணம் காண்பது அவ்வளவு எளிதன்று. தீண்டாமை நிலைத்து விட்டபின் இயல்பான வளர்ச்சி காரணம் பெற்று விடுகிறது. பார்ப்பன வகுப்பின் தோற்றம் இன்னும் ஆராய்ச்சிக்குரியதாகும்.

சென்னை நகரம் ( 1920 களில்) 5 லட்சம் மக்களை கொண்டது . அங்கு இந்து, மெயில், எக்ஸ்பிரஸ், நியு இந்தியா, ஜஸ்டிஸ், ஸ்வராஜ்யா என 6 ஆங்கில

பத்திரிகைகள் வருவது ஆச்சர்யமானது. உலகில் அப்போது அயல்மொழியில் இவ்வளவு பத்திரிகைகள் வரும் நகரம் வேறு இருக்க முடியுமா? ஆங்கிலம் தென் இந்தியாவின் மொழியாகியுள்ளது.

திராவிட மொழிகள் தங்களிடம் இணக்கம் கொண்டு வளர பொது எழுத்துமுறை வேண்டும் என்கிற என் (சிலேட்டர்) கோரிக்கை நிராகரிக்கப்பட்டது. அவர் அவர் தங்களின் பழமைப் பற்றில் இருந்தனர்.

மேலை உலகு இந்தியாவிடமிருந்து கற்க வேண்டி வரும். அறிவு வணிகம் எங்கு நடந்தாலும் ஆங்கிலம் பேசும் திராவிடர் அதன் சிறந்த இடையீட்டாளர்களாய் விளங்குவர்.

கில்பர்ட்டின் இந்த நூலை அப்பாத்துரையின் நல்ல தமிழில் எவரும் வாசித்துவிடமுடியும் . 200 பக்கங்களுக்கும்

குறைவான நூல்தான். திராவிடர் ஆய்வில் குறிப்பிடத் தகுந்த நூலும் கூட.

21-6-2024

# 7. ஹார்ட்கிரேவின் திராவிட இயக்கம்

மொழிவாரி மாநிலங்கள் பிரச்னை தீவிரமானபோது தென்பகுதிக்கு தட்சிண பிரதேசம் என்ற சிந்தனை முன்வைக்கப்பட்டது. கடுமையான எதிர்ப்பை கண்டவுடன் அச்சிந்தனை கைவிடப்பட்டு மொழிவாரி மாநிலங்கள் என்பது 1956ல் உறுதியாயின. இது குறித்து The Dravidian Movement எழுதிய Robert L Hardgrave Jr இவ்வாறு அதை திக-பெரியார் எதிர்கொண்டதை குறிப்பிடுகிறார்.

முன்னர் ஒன்றுபட்ட தென் இந்தியா பற்றிப் பேசியதை மறந்துவிட்டு நாயக்கர் (பெரியார்), தட்சிணப் பிரதேசம் என்கிற ஒன்றுபட்ட மொழிவு ஒன்று வந்தபோது எதிர்த்தார். அது வாழ்வா சாவா பிரச்சனை என்றார்.

ஏற்காதீர்கள் தற்கொலை பாதையது என்றார். தமிழர்கள் கடுமையாக போராடுவதாக முடியும். எனவே தமிழ்நாடு என்றே கேட்போம் என்றார்.

மேற்கண்ட ஒன்றுபட்ட தென்னிந்தியா-தட்சிண பிரதேசம் வேண்டாம் அது தமிழர்களை மூழ்கடித்துவிடும் என பெரியார் அவர்கள் விட்ட எச்சரிக்கைக்கு ஆதாரமாக ஹார்ட்கிரேவ் ஹிந்து பிப் 2, 1956யைக் காட்டுகிறார்.

திக சார்பில் வெளியிடப்பட்ட திராவிடஸ்தான் குறித்த அறிக்கையில், கேரளாவும் மைசூரும் வேறுவகையானவை. எனவே தமிழ்நாட்டில் இருப்போர் தமிழ்நாடே திராவிட நாடு என திருப்தி அடையவேண்டும். நாயக்கர் நாம் கதவை திறந்து வைக்கலாம். சேர விரும்புவோர் பிற்காலத்தில் ஒன்றுபட்ட திராவிடஸ்தானை விரும்பினால் அமைத்துக் கொள்ளட்டும் என்றார்.

மேற்கண்ட செய்திக்கு ஹார்ட்கிரேவ் ஹிந்து ஜூன் 22, 1956 யைக் காட்டுகிறார். அய்க்கிய திராவிடஸ்தானுக்கு கதவுகள் திறந்தே உள்ளன என பெரியார் குறிப்பிடுவதைப் பார்க்கிறோம். ‘அகண்ட திராவிடஸ்தான்’ இன்னும் கனவா எனத் தெரியவில்லை.

இதன்படி என்றோ ஒரு நாளுக்கான திட்டமாக தென் இந்திய திராவிடநாடு ஒத்திவைக்கப்பட்டதைக் காண்கிறோம். சாத்தியமில்லா அதன் நிகழ்கால அரசியலை பெரியார் நடைமுறை சார்ந்து சரியாக புரிந்து கொண்டதாகவே நாம் இங்கு எடுத்துக்கொள்ளலாம்.

தோழர் பி ஆர் (ராமமூர்த்தி) அவர்கள் இவ்வாறு தனது எதிர்வினையை வெளிப்படுத்தியிருந்தார்.

“தென்னிந்திய முதலாளிகளின் சுரண்டல் பற்றிய பேச்சை மறைக்கவே இந்த திராவிடஸ்தான் கூப்பாடு”

ஒன்றுபட்ட சிபிஅய் மாநில செயலர் தோழர் எம் ஆர் வெங்கட்ராமன் இவ்வாறு கருத்து தெரிவித்திருந்தார்

“திராவிடஸ்தான் இயக்கம் மக்களின் விருப்பார்வங்களை, ஒன்றுபட்ட இந்தியாவில் மொழிவாரி மாநில விருப்பத்தை புறக்கணிக்கிறது. இந்த வகையில் ஜனநாயக விரோத பிளவு சக்திகளின் இயக்கமாக இருக்கிறது. இந்த மாதிரி முழக்கங்களை இந்திய தமிழ்நாடு நலன் கருதி மக்கள் ஏற்கக்கூடாது”

வடக்கு மார்வாடி முதலாளிகள் ஆட்சியாளர்களுக்கு துணையாக என்று பேசியபோது திராவிட திக திமுகவிற்கு

கோவை மில் முதலாளிகள் துணையாக என்ற பதில் குற்றச் சாட்டு வந்தது. அதற்கு அண்ணா அவர்கள் தெரிவித்த மறுப்புரையை ஹார்ட்கிரேவ் பதிவிட்டுள்ளார்

"It is easy to secure the support of the capitalists and Industrialists to our cause by giving them a blank cheque. They will be only too willing to support us because of their natural desire to step into shoes of their Nort Indian counterparts. But we are not here to oblige Dravidain capitalism of any sort, be it North Indian or Dravidian"

இங்குள்ள முதலாளிகளின் ஆதரவை பெறுவது எளிது- ஆனால் எங்கள் நோக்கம் திராவிட முதலாளித்துவம் அல்ல என அண்ணா அவர்கள் பதில் இருப்பதைப் பார்க்கிறோம். இப்போது இந்திய யூனியன் அரசாங்கம் '5 டிரில்லியன் எகானமி' எனப் பேசினால் தமிழ்நாடு மாநில அரசாங்கம் 'ஒரு

டிரில்லியன் எகானமி' எனப் பேசுவதை எப்படி புரிந்து கொள்வது என்கிற கேள்வி எழுகிறது. (ஏப்ரல் 2022)

# 8. ஆரியருக்கு முற்பட்ட தமிழ்ப்பண்பாடு

ஆரியருக்கு முற்பட்ட தமிழ்ப்பண்பாடு என்கிற ஆய்வு நூல் 1999ல் வந்த ஒன்று. ஆசிரியர் புலவர் கா.கோவிந்தன். சைவ சித்தாந்த கழக வெளியீடு.

இவர் தமிழர் வரலாற்றை படிநிலை சமுதாய மாற்றம் என்கிற பொருள்முதல்வாத வழியில் கொண்டு செல்கிறார்.

குறிஞ்சி வாழ் குறவர்தான் ‘தீமூட்டுதல்’ என்கிற கண்டுபிடிப்பை நிகழ்த்தினராம். ஆதிமனிதன் விரிவான மணச்சடங்குகளால் சிக்கவைக்கப்படவில்லை. தனக்கெனச் சொத்துரிமை வைத்துக்கொள்ளும்முறை வளர்ச்சி பெறாத நிலையையும், நிலையான குடியிருப்பு முறையில் பற்றின்மையும்

, பெண்ணே குடும்பத்தலைவி முறை நீண்டகாலம் நிலைத்திருந்தமை குறித்தும் ஆசிரியர் சொல்கிறார்.

முல்லையில்தான் ‘சொத்துருவாக்கம்’ வருகிறது என்றும் ‘அரசர் முறை’ தோன்றுவதும் நடந்தது என்கிறார்.

ஆயர் வாழ்க்கை முறையில் மேய்ச்சல் நாகரீகம், பழங்குடி வாழ்விலிருந்து குடும்ப வாழ்க்கைமுறை, கால்நடை செல்வப் பெருக்கம் நடந்தது. கற்பு சார் மணமுறை ஏற்பட்டு குடும்பத்தலைமை ஆண் நோக்கி மாறியதாம். பெரிய குடும்பத்தின் தலைவன் ‘ஆயர்கோன்’ அரசனாகிய முறையும் உருவானதாம். ஆய்ச்சி என்பாள் அரசியானாள்.

கால்நடை மேய்ப்பாளர் ஆயரிடைதான் அரசு முறை தோன்றிற்று

என்பது இலக்கியங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளதென்கிறார் புலவர் கா. கோவிந்தன். ‘கோன்’ என்ற சொல் ஆயர்களின் அடையாளச் சின்னமாம் கைத்தடியைக் குறிக்கும் ‘கோல்’ என்ற சொல்லிலிருந்து பிறந்ததாகத் தெரிகிறது. அரச ஆணையின் சின்னமாகிவிட்ட ’செங்கோல் ’ஆடுமாடுகளை மேய்க்க உதவிய வெறும் கோலே ஆகும் என புலவர் தன் ஆய்வாக முன்வைக்கிறார்.

மேலும் தென்னிந்தியா கால்நடை வளர்ப்பு வாழ்க்கை அரைகுறையான நாடோடி வாழ்க்கையில்லையாம். நாகரிக வசதிகளை வளர்த்துக்கொள்ள வல்ல நிரந்தர வாழ்க்கை முறையாக இருந்ததாம். குறும்பர் கம்பளி நெய்யக் கற்று இருந்தனர்.

அடுத்து நெய்தல் வாழ்க்கை கடல் சூழல் பரதவர்களை படகு கட்டுபவராக, மீனவராக

ஆக்கியது. இப்பரதர் குடியிலிருந்தே மேற்கு ஆப்ரிக்கா, அராபிய நாடுகளுக்கும், கிழக்கே மலாய், சீன நாடுகளுக்கும் இந்தியப் பொருள்களைப் படகுகளில் கொண்டு சென்ற பண்டைய மாலுமிகள் தோன்றினராம்.

மிகத்தொன்மைக்காலத்துத் தமிழர் ‘வரலாறு என ஏது ஒன்றும்’ இல்லாமலே, வளர்ச்சி பெற்றனர். உலக இலக்கியங்களில் நனிமிகப் பழைய இலக்கியங்களாம் வேதங்களிலும், உலகின் பழைய வரலாற்று மூலங்களாம் மெசபடோமியாப் பள்ளத்தாக்குக் கல்வெட்டுகளிலும், வட இந்தியாவோடும் அதற்கு அப்பாலும், அவர்கள் மேற்கொண்டிருந்த வாணிகம் அறியப்பட்டதும், அவர்கள் வரலாற்றில் முதன் முதலாகத் தெரிய வந்தனர் என்கிறார் புலவர் கோவிந்தன்.

# 9. தமிழர் வரலாறும் பண்பாடும்

மார்க்சிய மற்றும் தமிழ் அறிஞர் தோழர் நா.வானமாமலை ” தமிழர் வரலாறும் பண்பாடும்” என்ற நூலை எழுதியுள்ளார். 1966ல் வந்த நூல். NCBH வெளியீடு. அதில் 5 ஆம் கட்டுரையாக இருப்பது ‘தமிழக வரலாற்று கண்ணோட்டங்கள்’. அதில் அவர் தந்திருப்பது குறித்த சுருக்கம் இங்கே சொல்லப்படுகிறது.

” தமிழக வரலாற்றுத் துறையில் இருவகையான கண்ணோட்டங்களை நாம் காண்கிறோம். ஒவ்வொரு கண்ணோட்டமும் குறிப்பிட்ட அரசியல் சமூக சூழ்நிலையில் எழுகின்றது. வரலாற்று நிகழ்ச்சிகளுக்குக் குறிப்பிட்ட முறையில் பொருள் அளிக்கின்றது. இவை வரலாற்றின் பொருள், கண்ணோட்டத்தைப் பொறுத்ததாகி விடுகிறது....

“தமிழக வரலாற்றில் சிற்சில பகுதிகளை முதன் முதலில் எழுதியவர்கள் எஸ். கிருஷ்ணசாமி அய்யங்கார், நீலகண்ட சாஸ்திரியார், பி டி ஸ்ரீனிவாச அய்யங்கார். இவர்கள் ஆங்கில ஆட்சிக்காலத்தில் ‘அறிவாளி வர்க்கம்’ என்று கருதப்பட்ட சாதியைச் சேர்ந்தவர்கள். இவ்வர்க்கம் ஆங்கில ஆட்சி உதவியுடன் உயர்ந்து அதன் ஆதிக்கத்தில் பணிபுரிந்தது. ஆரிய உயர்வு ஆங்கில ஆசிரியர்களால் போற்றப்பட்டது கண்டு இவ்வர்க்கம் பெருமை கொண்டது. ஆங்கில நாகரிகம் எவ்வாறு கீழ்நிலையிலுள்ள இந்திய நாகரிகத்தை மாற்றியமைத்ததோ, அது போலவே இந்தியாவின் பழங்காலத்திலுள்ள பல்வேறு நாகரிகங்களையும் ஆரிய நாகரிகம் மாற்றியமைத்தது என்று இவர்கள் எண்ணினர். இந்நாகரிகத்தின் பிரதிநிதிகள்

தமிழ் நாட்டில் பிராமணர் என்று அவர்கள் நினைத்தனர்”

எஸ் கிருஷ்ணசாமி அய்யங்கார் சொற்பொழிவில்

“... இந்தியாவிலுள்ள பெருவாரியான மக்களின் சமுகம் உயர்வதற்கு பிராமணர் முக்கிய காரணியாக இருந்தார்கள். தமிழ் இலக்கியத்தில் புகழ்பெற்ற பெயர்களைப் பார்த்தால், இந்த உண்மை விளங்கும். பிராமண முறை சமுதாய அமைப்பே கல்வி, நாகரிகம் முதலியன தமிழ் நாட்டில் முன்னேறியதற்குக் காரணம்”

இப்படி ஒரு கண்ணோட்டம் கிடைக்கிறது. வேறொரு கண்ணோட்டத்தைப் பார்ப்போம்.

” தமிழ் நாட்டில் பிராமணருக்கு சமமாக தங்களைக் கருதிக் கொண்ட சைவ முதலியார், பிள்ளை, செட்டியார்,

நகரத்தார், கவுண்டர் முதலிய ‘நிலபிரபுத்துவ வர்க்கத்தை’ சார்ந்தவரும் சமூக நிலையில் பிராமணருடைய ஆதிக்கம் தங்களுக்கு வேண்டுமென்று எண்ணினர். ஆங்கில ஆதிக்கத்தில் ’அறிவாளி வர்க்கமாக உயர எண்ணினர். பிராமணர்களின் ஆரியக் கொள்கை இவர்களுக்கு வரப்பிரசாதமாகக் கிடைத்தது. இவர்களும் ஒரு தத்துவத்தை உருவாக்கிக்கொண்டனர். அதற்கு அடிப்படை ஆரிய, திராவிட நாகரிகங்களிலுள்ள முரண்பாடுகள் பற்றி ஆங்கில ஆசிரியர்களுடைய கருத்துக்கள்தாம்.”

”தமிழ் இலக்கியத்தில் இவர்கள் தென்னாட்டு பெருமையைக் கண்டனர். தமிழின் சிறப்பையும், தமிழ் நாட்டின் தொன்மையும் நிறுவ, இவர்கள் வரலாறு காணத் துணிந்தனர்.

இச்சமயமத்தில்தான் மொகஞ்சதாரோ, ஹரப்பா அகழ்வாராய்ச்சிகள் வந்தன. ஹீராஸ் பாதிரியார் கருத்துக்களை விமர்சனம் எதுவுமின்றி அப்படியே ஏற்றுக்கொண்டனர். பிராமணர் ஆரிய உயர்வு பற்றி எழுதினால், இவர்கள் ஆரிய இழிவையும் திராவிட உயர்வையும் பற்றி எழுதினர்.

வரலாற்று நிகழ்ச்சிகளை திராவிட உயர்வு என்ற கண்ணோட்டத்தில் இவர்கள் கண்டனர்.”

”வேதகாலமுறை தமிழ் நாட்டில் மாறாமல் இருக்கிறதென்று, முதல் கண்ணோட்டமுடையவர் கூறினால், இவர்கள் கற்கால முதல் தமிழ் நாடும் திராவிட நாடும் எவ்விதத்திலும் மாறவில்லை என்றனர். தங்கள் போராட்டத்திற்கு ஆதரவு தேட தென்னாட்டு வரலாறே திராவிட ஆரிய முரண்பாடுதான் என்றனர். இராமாயணக் கதையை ஆரிய திராவிட

போராக சித்தரித்தனர். சுக்ரீவனையும், அனுமானையும் ஆரிய அடிவருடிகளாக்கினர். வாலியை திராவிட வீரனாக்கினர்..

இவ்விரண்டு போக்குடையோர் ஆங்கில வரலாற்று ஆசிரியர்கள் தனித்தனியே விரித்து வைத்த இரண்டு வலைகளில் விழுந்து அதனையே வரலாற்று ஆதாரமாக கற்பனை செய்து கொண்டார்கள்...இவையிரண்டுமே விஞ்ஞான கண்ணோட்டங்களல்ல.

..தமிழர் சமுதாய வளர்ச்சி போக்கை உண்மையாக சித்தரிக்கும் வரலாறு எழுதப்படவேண்டும். இனக் கண்ணோட்டமோ சாதிக் கண்ணோட்டமோ உண்மையைக் காண உதவாது. வரலாறு ஒரு சமுக விஞ்ஞானம். ..மானிட இயல், அகழ்வாராய்ச்சி, காசு ஆராய்ச்சி, சமூக இயல், அரசியல், பொருளாதாரம் ஆகிய விஞ்ஞானங்களின்

துணையோடு வரலாறு எழுதப்படவேண்டும். இலக்கியமும்கலைகளும் சமூக வளர்ச்சிக் கண்ணோட்டத்திக் சரித்திரம் எழுதத் துணையாகும்.

(ஜூன் 2023)

# 10. திராவிட இயக்கம் பற்றி

## பேரா க. அன்பழகன்

திமுகவின் உயர் தலைவர் பேரா க. அன்பழகன் அவர்களின் திராவிட இயக்கம் எளிய சுருக்கமான ஆனால் எடுத்துக்கொண்ட தலைப்பில் கவனப்பிசகு இல்லாமல் இருக்கிற புத்தகம்.

பேராசிரியர் கல்வி அமைச்சராக இருந்தபோது சென்னை பல்கலை கருத்தரங்கத்தில் ஏப்ரல் 27, 1978ல் அவர் ஆற்றிய உரையை தருமபுரி நண்பர்கள் செப் 2022ல் நேர்த்தியாகக் கொண்டுவந்துள்ளனர்.

சுவாமி விவேகானந்தர், மகாகவி பாரதியார் மேற்கோள்கள் மற்றும் பாரதியார் இந்து பத்திரிகைக்கு எழுதிய கடிதம் ஆகியவற்றை அன்பழகன்

எடுத்தாண்டுள்ளார்.

இராமசாமி சாஸ்திரியின் The Hindu Culture, தத்துவ அறிஞர் டாக்டர் இராதாகிருஷ்ணன் ஆய்வு முடிவுகளை அன்பழகன் தனது உரையில் தொட்டுக்காட்டுகிறார். கே எம் பணிக்கரின் A Survey of Indian History யை தன் உரைக்கு துணையாக பேராசிரியர் எடுத்துக்கொண்டுள்ளார்.

அதேபோல் Non Brahmin Regeneration in South India என்ற நூலையும் பேராசிரியர் எடுத்தாள்கிறார். இது அநேகமாக காசிநாத் கவ்லேக்கர் எழுதியதாக இருக்கலாம் எனக் கருதுகிறேன். பலராலும் அடிக்கடி பேசப்படும் வாலெடின் சிரோலின் Indian Unrestயையும் அவர் சுட்டிக்காட்டுகிறார். புகழ் வாய்ந்த சர் சி சங்கரன் நாயரின் கருத்துக்களையும் உரையில் பேராசிரியர் கொணர்ந்துள்ளார். சங்கர நாயரின் கருத்தை மறுத்தவரை

விமர்சித்து இந்துவிற்கு பாரதி எழுதிய கடிதத்தை சுட்டிக்காட்டுகிறார்.

வரலாற்று அறிஞர் பி டி சீனிவாச அய்யங்காரின் pre Aryan culture, History of the Tamils இரண்டையும் தனது உரையின் மய்ய கருத்திற்கு பேராசிரியர் பயன்படுத்துகிறார். நாரயண குருவின் சீடர் தரும தீர்த்தா எழுதிய History of Hindu Imperialism என்பதிலிருந்தும் மேற்கோள் உரையில் தரப்பட்டுள்ளது.

பின்னர் தியாகராயர், நாயர், நடேசன் , பெரியார், அண்ணா போன்றவர்களின் செயல்பாடுகளை ஓரளவிற்கு அன்பழகன் தொட்டுக்காட்டுவார். பெரியார் அண்ணா ஒப்பீடு மிக மென்மையாக உள்ளீடாக செய்யப்பட்டிருக்கும். இருவருக்குமான பிணைப்பும், வேறுபாடுகளும் குறிப்பிடப்பட்டிருக்கும். முரண்களை பகையாக காட்டாமல் நட்பு முரண்பாடாக

அண்ணா கையாண்டதை பேராசிரியர் குறிப்பிட்டு சொல்லுகிறார்.

இந்த உரைதனில் பேராசிரியர் பல்வேறு சான்றாதார நூல்களின் துணையுடன் கீழ்கண்ட வைப்புகளை தந்துள்ளதைக் காணமுடிகிறது.

திராவிடர் சமய நெறியின் சிறப்பு 'இறை உருவ வழிபாடு'

திராவிடர் மதத்தன்மையான உருவ வழிபாட்டை ஆரியர் ஏற்றனர்

வேதமதம் கடவுள் நம்பிக்கை மதமாக திராவிடத்தொடர்பால் மாற்றமடைந்துள்ளது.

திராவிடர் அறிவின் சாயல் பலவற்றை ஆரியர் சம்ஸ்கிருதத்தில் எடுத்துக்கொண்டனர்.

ஆரிய வந்தேறிகள் எண்ணிக்கை

அன்றைக்கு 4 லட்சத்தை மிகுந்திருக்காது.

தென்னாட்டை மூல வாழ்விடமாகக் கொண்டிருந்த திராவிடர்களிடமிருந்துதான் ஆரியர் நாகரிக சிந்தனைகளைப் பெற்றனர்.

இந்திய நாகரிகம் வேதகாலத்திற்கு முறபட்ட ஒன்று. இந்து மதத்தின் இன்றிமையாத பண்பாட்டுக் கூறுகள் மொகஞ்சதாரோ திராவிடர்களிடமிருந்து பெறப்பட்டவை.

சிவனும் காளியும் லிங்க வழிபாடும் இந்து மதத்தின் பிற கூறுபாடுகளும் ஆரியர் வருகைக்கு முன்பே இந்தியாவில் நிலைகொண்டிருந்தவையாகும்.

அரக்கரும் பிராம்மணரும் சேர்ந்து உருவான கோத்திரம்தான் பிரம்மராட்சச கோத்திரம்

பிராமணியத்திற்கு பெரும் செல்வாக்கு

ஆதிக்கம் தென்னாட்டில் கிடைத்ததைப் போன்று வேறு எங்கேயும் கிடைக்கவில்லை. அவர்கள் வல்லாண்மையுடன் ஆசார சம்பிரதாயங்களில் மட்டுமல்லாமல், அரசியல் பொருளாதார தலைமையையும் வைத்திருந்தனர்.

பிராமணர்கள் போற்றிய மொழி, மதம், கலாச்சாரம் தனி ஆதிக்கச் சக்தியாக வளர்ந்ததால், தமிழ்மொழி, இசை, கலை, நாகரீகம், பண்பாடு , சமய சிந்தனைகள், சித்தர் வழிபாடு, ஆட்சி முறை மதிப்பிழந்து போயின.

இழந்தவற்றை மீட்க தென்னிந்திய நலவுரிமை சங்கம், நீதிக்கட்சி, சுயமரியாதை இயக்கம், திராவிடர் கழகம், திமுக உருவாகி செயல்பட வேண்டிய சூழல் உருவானது.

எம்ஜிஆர் பிரிந்து போனதை

சொன்னாலும் அது குறித்து தான் ஒரு கட்சிக்காரராக இருப்பதால் பல்கலை உரையில் பேச முடியவில்லை என பேராசிரியர் குறிப்பிட்டுள்ளார். நீதிக்கட்சி இட ஒதுக்கீட்டில் பிராமணர்களுக்கும் இட ஒதுக்கீடு இருந்ததை அவர் சொல்வார். அண்ணாவின் ஆட்சியை தொடர்ந்த திமுகவின் நலத்திட்டங்களை பேச நேரமில்லை என அவர் உரை முடிந்திருக்கும். வாய்ப்புள்ளவர் படித்துப் பார்க்கலாம்.

(மே 2023)

# 11. 'வாழ்வில் நான் கண்டதும் கேட்டதும்' நாவலர் நெடுஞ்செழியன்

நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் எழுதிய தன் வரலாறு ‘வாழ்வில் நான் கண்டதும் கேட்டதும்’. நூல் வந்து 23 ஆண்டுகள் ஆகியிருக்கலாம். 1981 ஆம் ஆண்டுவரையிலான நினைவுகளை பதிவு செய்துள்ளார். 600 பக்கங்களுக்கும் மேலான புத்தகம். குடும்பப் பின்னணி, மாணவப் பருவம், சிதம்பரம் அண்ணாமலைக் கல்லூரி வாழ்க்கை, பெரியார் அண்ணா தொடர்புகள், சக மாணவர்களாக அன்பழகன், மதியழகன், இளவல் செழியன் எனப் பெரும் திராவிட மாணவ மன்றத்தார் -என ஆரம்ப பக்கங்கள், நாவலரின் சுவையான மொழியுடன்

செல்கின்றன.

நாவலர் தனது எம் ஏ கல்வியை முடித்தவுடன், பெற்றோர் எதிர்பார்ப்பிற்கு மாறாக , ஈரோடு செல்கிறார். பெரியார் அவர்களைச் சந்திக்கிறார். திராவிடர் மாணவர் அமைப்பிற்கான கூட்டங்களுக்கு அன்பழகனுடன் செல்லத்துவங்குகிறார்.

அப்படி ஒரு கூட்டம்- திராவிட மாணவர் மாநாடு என சேலத்தில் 1944ல் நடைபெற்றது. சிறப்புரையாக அன்பழகன், ஏபி சனார்த்தனம் பங்கேற்க, நெடுஞ்செழியன் தலைமை தாங்குகிறார். மாணவர்களுக்கு அரசியல் என்பதில் அந்த இளம் 24 வயதிலேயே ( நெடுஞ்செழியன் 1920ல் பிறந்தவர் தாய் ஊர் நன்னிலம் அருகே திருக்கண்ணபுரம்- தந்தை ஊர் நாகை வடகாலத்தூர்) அவர் செம்மார்ந்த கருத்தினை வைத்திருந்தார். தலைமை உரையில் அவர் அதை வெளிப்படுத்தினார்.

” திராவிடர் இயக்கம் மாணவர்களை வலுக்கட்டாயமாக அரசியலுக்கு இழுக்கவும் இல்லை- கெடுக்கவும் இல்லை. மாணவர்கள் தங்களைப் பாழ்படுத்திக்கொள்ளுகிற அளவிற்கு நேரடி அரசியலில் ஈடுபடக்கூடாது என்றும், அதே நேரத்தில் தாம் வாழ்கின்ற காலத்தின் அரசியல் நெறிமுறைகளை அறிந்துவைத்துக் கொள்ளவேண்டும் என்றுதான் இயக்கம் கூறிவருகிறது.

அரசியல் நாடகத்தையும், அதில் பங்குகொள்ளுகின்ற பாத்திரங்களின் பண்புநலன்கள், போக்குகள் ஆகியவற்றையும் கண்டுகொண்டிருக்கும் பார்வையாளர்களாக மாணவர்கள் தங்களை எண்ணிக்கொள்ள வேண்டுமேயல்லாமல், அரசியல் நாடக அரங்கில் ஏறி, நடிக்கும் பாத்திரங்களாக மாணவர்கள் நிலையில் மாறிவிடக்கூடாது..”

தான் கல்லூரியில் தமிழ் பயின்ற காலத்தில் தங்களுக்கு வாய்த்த ஆசிரியர்களான தமிழ் அறிஞர்களைப் பற்றி நெடுஞ்செழியன் பதிவிட்டுள்ளார். ஒவ்வொருவரும் எதில் தேர்ச்சியான பயிற்சியை தருபவர்களாக இருந்தனர் என்பதை நினைவு கூர்ந்துள்ளார்.

கா.சுப்பிரமணியபிள்ளை - திருக்குறள், தேவாரம், திருவாசகம், சைவ சித்தாந்தம்

பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியார்- சங்க இலக்கியம், சிலப்பதிகாரம், சீவக சிந்தாமணி

டாக்டர் ஏ சி செட்டியார்- மொழிநூல், பதிற்றுப்பத்து, புறநானூறு

நாவலர் ந மு வேங்கடசாமி நாட்டார்- சிலப்பதிகாரம், மணிமேகலை, சங்க இலக்கியங்கள்

ஔவை துரைசாமி பிள்ளை- அகநானூறு, குறுந்தொகை, ஐங்குறுநூறு, கலித்தொகை, சிலப்பதிகாரம். பூவராகம் பிள்ளை, கந்தசாமியார்- தொல்காப்பியம், நன்னூல்

கோ. சுப்பிரமணிய பிள்ளை- கம்ப இராமாயணம், சீவக சிந்தாமணி

மு. அருணாசலம் பிள்ளை- பெரியபுராணம், கந்த புராணம்

சதாசிவ பண்டாரத்தார்- தமிழர் வரலாறு, கல்வெட்டுக் குறிப்புகள்

அவருடன் படித்த திராவிட மாணவர்கள் தங்களின் தமிழ்ப் பற்றால் பெயர்களை மாற்றிக்கொண்டனர். அதில் சிலர்

நாராயணசாமி- நெடுஞ்செழியன்
இராமையா- அன்பழகன்

சோமசுந்தரம்- மதியழகன்

திருஞானசம்பந்தம்- நன்னன்

சீனிவாசன்- செழியன் அரங்கசாமி- அரங்கண்ணல்

கோதண்டராமன்- வில்லாளன் ஆனந்தன்- இனியன்

கனகசுந்தரம்- பொன்னழகன் கலியாணசுந்தரம்- மணவழகன்

1944ல் கலைஞர் திருமணம் பற்றி நாவலர் நெடுஞ்செழியன் இந்நூலில் சொல்கிறார்.

”தமிழிசைக் கலைஞர் சி எஸ் ஜெயராமன் அவர்களின் திருமணமும், அவரது தங்கை பத்மா அவர்களின் திருமணமும் செப்டம்பர் 13, 1944ல் திருவாரூரில் நடைபெற்றது. சி எஸ் ஜெயராமன் திருமணம் வைதீக முறையில் நடந்தது. பத்மா அவர்களை கருணாநிதி அவர்கள் மணந்தார். கலைஞர் திரு மு. கருணாநிதியின் திருமணம் எனது

தலைமையில் சுயமரியாதைச் சீர்திருத்த திருமணமாக நடைபெற்றது. திருமண விழாவில் என் இளவல் செழியன், இரெ. இளம்வழுதி, கவிஞர் சுரதா, தென்னன் போன்றோர் கலந்துகொண்டு வாழ்த்துரை வழங்கினார்கள்.

அப்போது நானும், இளவல் செழியனும் திருவாரூரிலிருந்து ஆறு மைல்களுக்கு அப்பாலுள்ள வடகண்டம் என்ற சிற்றூரில் வாழ்ந்துவந்தோம். அந்த நாட்களில் போக்குவரத்து வசதிகள் சரியானபடி அமையாத காரணத்தால், நானும் செழியனும் ஆறு மைல் தொலைவு நடந்து வந்து அந்தத் திருமணத்தில் கலந்துகொண்டோம்.

திருமணத்தையொட்டி மாலையில் நகைச்சுவை மன்னர் என்.எஸ். கிருட்டிணன் அவர்களின் கிந்தனார் கலை நிகழ்ச்சி நடைபெற்றது”

1949ல் திமுக தொடங்கப்பட்ட பின்னர், கழகத்திற்கு தனிக் கட்டிடம் சொந்தத்தில் அமையவேண்டும் என அண்ணா கட்டிடநிதிக்கு வேண்டுகோள் விடுத்தார். நெடுஞ்செழியனும், டபிள்யு கே தேவராசனும் சுற்றி அலைந்து இராயபுரத்தில் சூரியநாராயணச் செட்டித்தெருவில் 24 ஆம் எண் இரண்டு மாடிக் கட்டிடத்தை தேர்வு செய்தனர். அண்ணா பார்வையிட்டு ஒப்புதல் தந்திட, முப்பதாயிரம் ரூபாய்க்கு கழகத்தின் பெயரில் பதிவு செய்தனர். கட்டிடம் வாங்கிய நாள் என நெடுஞ்செழியன் 5-11-1951 நாளை பதிவு செய்துள்ளார். அறிவகம் எனப் பெயர் சூட்டப்பட்ட அக்கட்டிட திறப்பு விழாவை 2-12-1951ல் நடத்தினர். நம்நாடு பத்திரிகை அங்கிருந்து வெளியானது.

திமுகவின் முதல் மாநாடு 1951 டிசம்பர் 13-15 நாட்களில் சென்னையில் நடந்தேறியது.

அதில் அண்ணா பேசியதிலிருந்து

“நான் கட்டளையிடுபவனும் அல்லன், வழிகாட்டுபவனும் அல்லன். அனைவரின் உணர்வையும் மதித்து , அதற்கு ஏற்றபடி பணியாற்றி வரும் ஒரு தொண்டன்…நான் சனநாயகத்தில் நம்பிக்கை கொண்டவன். அரசியலிலே கண்ணியத்தை விரும்புவன். கட்டளையிடுபவன் அல்லன்! சனநாயகம் வளர்ந்துள்ள இந்நாளில் கட்டளையிடும் தலைவர்கள் தோன்ற முடியாது- தோன்றவும் கூடாது. சனநாயகம் இல்லாவிட்டால், அரசியலால் எந்தப் பலனும் ஏற்படுவது இல்லை!..”

” திமுக கண்ணியத்திற்குத் தோழன் - கொள்கைக்கு நண்பன் - திராவிடத்தின் பாசறை. பொதுவுடைமைக்கு ஒரு எல்லை வேண்டும். நமது எல்லைக்குள் பொதுவுடைமையைப் பரப்ப முடியும்

என்கிறேன். அந்த இலட்சியத்தை நோக்கி, அமைதிப்பாதையில் நாம் நடந்து செல்கிறோம்..”

1953-55 மாநில சீரமைப்பு ஆணையம் அமைக்கப்பட்டு அதன் அறிக்கைப் பெறப்பட்டு 1956ல் மொழிவாரி மாநிலங்கள் உருவாக்கப்பட்டன. அந்தக் கமிஷன் மதராஸ் வந்தபோது அண்ணா நெடுஞ்செழியன் மற்றும் மூவருடன் சந்தித்து தங்கள் நிலைப்பாட்டை தெரிவித்தார். அதில் இடம் பெற்ற முக்கிய அம்சம்

”..இந்தியா பல்வேறு தேசிய இனப்பிரிவுகளைக் கொண்டது என்பதை எவரும் புறக்கணித்து விடமுடியாது...

தமிழ்நாடு தன்னாட்சி உரிமை பெறவும், தனக்கே உரிய தேசியப் பண்பாடுகளையும், திறமைகளையும் சிறப்புக்களையும்

வளர்த்துக்கொள்வதற்கான உரிமைகளைப் பெறத் தகுதி படைத்தது..

சென்னை மாகாணம் என்பது, தமிழ்- தெலுங்கு- கன்னடம்- மலையாளம் ஆகிய நான்கு பிரிவுகளைக் கொண்டதாக மைந்திருக்கிறது.இதனை நான்கு மொழி வழி மாநிலங்களாக ஆக்குவதுதான் உடனடியான தேவையாகும்...

மொழிவழி மாநிலங்கள் அனைத்தும் முழு அளவில் தன்னாட்சியிருமை பெற்றுத் திகழ வேண்டும் என்பது திமு கழகத்தின் கொள்கையாகும்”

அண்ணா அவர்கள் சென்னை வந்தால் நெடுஞ்செழியன் வீட்டில் தங்குவார். ஒருமுறை அடுத்த பொதுச் செயலர் பற்றிய பேச்சு எழுந்தது. நெடுஞ்செழியன் ஏற்கலாம் என அண்ணா சொன்னாராம். இது குறித்து

நாவலர் அவர்கள் தன் வாழ்வில் கண்டதும் கேட்டதும் நூலில் இவ்வாறு பதிந்துள்ளார்

” கழக முன்னணியினராக உள்ள எல்லோருடைய தகுதி, திறமை, இயல்பு, பண்பு ஆகியவற்றை நான் நன்கு அறிந்துதான் வைத்துள்ளேன். சிலர் எனக்குக் கட்டுப்படமாட்டார்கள், வேறு சிலர் எதேச்சதிகாரமாக நடக்க முயலுவார்கள், மற்றும் சிலர் கழகத்தை இரண்டாக ஆக்கி விடுவார்கள், வேறு சிலர் கழகத்தை விற்றுவிடுவார்கள், மற்றுஞ்சிலர் கலங்கம் ஏற்படுத்தி ஒழித்துவிடுவார்கள். அப்படிப்பட்ட வல நிலைகள் ஏற்படக்கூடாது என்பதற்குத்தான், நான் உன்னை பொதுச் செயலராகத் தேர்ந்தெடுக்க விரும்புகிறேன். நீ கழகத்திற்கும் எனக்கும் கட்டுப்பட்டு நடப்பாய் என்பதில் எனக்கு நம்பிக்கை உண்டு. உன்னை வழிநடத்திச் செல்வது

எனக்கு எளிதான செயல். எனவே நீ ஆயத்தப்படுத்திக்கொள்” என்கிற அண்ணா விளக்கத்தை நாவலர் பக் 253/632ல் தந்துள்ளார்

1967ல் திமுக அண்ணா தலைமையிலான ஆட்சி ஏற்பட்ட சூழலை நாவலர் விரிவாக பேசியுள்ளார். 6-3-1967ல் 9 பேர்கொண்ட அண்ணா அமைச்சரவை பதவியேற்றது.

1967 தேர்தலை சந்திக்க அண்ணா ராஜாஜி காயிதேமில்லத், ம பொசி , ஆதித்தனார் என்ற பெரும் தலைவர்கள் ஒன்றாக நின்றனர். சனநாயக முற்போக்கு கூட்டணி என்றனர். காங்கிரஸ் சர்வாதிகாரம் வீழ்த்தி நாட்டின் நலன் காக்க இந்தக்கூட்டணி என்றனர்.

சனநாயக முற்போக்கு கூட்டணியில் திமுக 173, சுதந்திரா 27, சிபிஎம் 20, லீக் 4 தமிழரசு 2, நாம் தமிழர் 1 எனப்போட்டியிட்டனர்.

. சட்டமன்றத்தில் திமுக 137, சுதந்திரா 20, சிபிஎம் 3, தமிழரசு 1 இடங்களில் வெற்றிப் பெற்றனர். நாடாளுமன்றத்தில் திமுக 25, சுதந்திரா 5, சிபிஎம் 4, லீக் 1 ல் வென்றனர்.

வென்றவுடன் பெரியாரைப் பார்த்து ஆசி பெறுவது நலம் எனச் சொன்ன நெடுஞ்செழியன் ஆலோசனையை அண்ணா ஏற்றார். அண்ணா, நாவலர், கலைஞர் திருச்சி சென்றனர். அன்பிலுக்கு செய்தி அனுப்பினர். மாலை 6 மணி 29-2-1967 பெரியார் மாளிகையில் மணியம்மை வாயிலில் நின்று அழைத்துச் சென்றார். பெரியார் வணக்கங்கூறி அமரச்சொன்னார்.

அண்ணா பெரியாரிடம் சொன்னதாக தரப்பட்டுள்ள செய்தி

" உங்களால் வளர்க்கப்பட்ட நாங்கள், பொது மக்களின் அன்பையும், ஆதரவையும்,

நம்பிக்கையும் நன் மதிப்பையும் பெற்றுத் தமிழகத்தின் ஆட்சிப் பொறுப்பை ஏற்க இருக்கிறோம். எங்களுக்கு இன்று கிடைத்துள்ள வெற்றியும், பெருமையும், புகழும் முழுக்க முழுக்க உங்களையே சாரும். உங்களுடைய வாழ்த்தும், அன்பும், ஆதரவும், அரவணைப்பும் எங்களுக்கு என்றும் வேண்டும். நாங்கள் எப்படி, எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்பதை நீங்கள்தான் அவ்வப்போது சொல்லித்தரவேண்டும்” என்றார்.

இங்கு நெடுஞ்செழியன் எழுதியிருப்பது..

” பெரியார் அவர்கள் எங்களை நிமிர்ந்துகூடப் பார்க்காமல், கூச்சம் மேலிட்டு கூனிக்குறுகி, தாங்கொணா மகிழ்ச்சிப் பெருக்கோடு உட்கார்ந்திருந்தார். எங்களை முகங்கொடுத்துப் பார்க்கவே வெட்கப்பட்டுக்கொண்டிருந்தார்.

” பின்னர் அண்ணா கையைப் பற்றிக்கொண்டு, அண்ணாதுரை என் பாராட்டும் வாழ்த்தும் என்றென்றும் உண்டு. உங்களைத் தோற்கடிக்க எவ்வளவோ பாடுபட்டேன். ஆனால் நீங்கள் வென்றுவிட்டீர்கள். நான் தான் தோற்றுப்போய்விட்டேன். எனக்கும், என்னுடைய கொள்கைகளுக்கும், குறிக்கோள்களுக்கும் ஆதரவாக இருந்துவரக்கூடிய உங்களுக்கு என் ஆதரவும், ஒத்துழைப்பும் என்றென்றும் உண்டு. நீங்கள் ஆட்சி பொறுப்பை ஏற்க இருப்பதைக் கண்டு நான் பெரிதும் மகிழ்ச்சி அடைகிறேன்” என்றார்.

திமுக சட்டமன்ற உறுப்பினர் கூட்டத்தில் அமைச்சரவை அமைக்க சங்கடங்கள் அண்ணாவிற்கு வந்தது. அதை வெளிப்படுத்தும் வகையில் அண்ணா தன்

உரையில்

” நெடுஞ்செழியன் ஒருவர்தான் தனக்கு அமைச்சர் பதவி வேண்டாம், கழகப்பணி ஆற்றி வருகிறேன் என்று கூறினார். சிலர் தங்களுக்கு அமைச்சர் பதவி அளிக்கவேண்டும் என்று வற்புறுத்தினர். காரசாரமாகக் கூடப் பேசினார்கள். வெளியே போய் கண்டபடி திட்டினார்கள். சிலர் என் வீட்டிற்கு முன்னால் நின்று மண்ணைவாரித் தூற்றினார்கள். சிறிது காலம் பொறுத்து, நாமெல்லாம் பக்குவப்பட்டதற்குப்பிறகு இந்த ஆட்சி நமக்குக் கிடைத்திருக்கலாம். மிகச் சீக்கிரமாகவே இந்த ஆட்சி நமக்குக் கிடைத்திருக்கிறது. எதிர்காலத்தில் நாம் மகிழ்ச்சியைவிடத் தொல்லைகளையும், துயரங்களையும்தான் அதிகமாகத் தாங்கவேண்டிவரும் என்று நான் கருதுகிறேன்…”

ஆதாரம் நாவலர் எழுதிய ‘வாழ்வில் நான் கண்டதும் கேட்டதும்’ பக் 420-23

# 12. தமிழர் தலைவர் பெரியார்

சாமி சிதம்பரனார் ஏராள நூல்களை எழுதியவர். அவரின் ‘தமிழர் தலைவர் பெரியார்’ நூல் தொடர்ந்து பேசப்படுகிற நூல். 1939ல் எழுதப்பட்ட ஒன்று. இணையத்தில் கிடைக்கிறது. 18 அத்தியாயங்களில் பண்டித தமிழ் புலமை எதையும் காட்டாமல் எழுதப்பட்ட நூல். பொதுவாக அதிகாரபூர்வ வரலாறாக இந்நூல் பார்க்கப்படுகிறது.

இந்நூலை சந்தியா பதிப்பகத்தார் கொணர்ந்தனர். 2019க்கு பின்னர் பதிப்பு வந்துள்ளதா எனத்தெரியவில்லை.

சாமி சிதம்பரனார் அவர்கள் பெரியாரைவிட 21 வயது இளையவர். பெரியார் மறைவிற்கு 12 ஆண்டுகள் முன்னரே மறைந்தவர். சாமி அவர்களின் எழுத்துக்கள்

20 க்கும் மேற்பட்டு இணையத்தில் கிடைக்கின்றன.

இந்நூலில் இன்றைக்கு 85 ஆண்டுகளுக்கு முன்னர் பெரியார் அவர்களின் தோற்றம் எப்படியிருந்தது என்கிற விரிவான சித்தரிப்பு கிடைக்கும். அவருடன் பயணித்தவர் என்கிற வகையில் சாமி சிதம்பரமாக எப்படி பெரியாரை ரசித்தார் என்கிற காட்சிகள் கிடைக்கும்.

வத்தலும் தொத்தலுமான குதிரை வண்டிப்பயணம்- இறங்கி நடந்துகொண்டே வண்டியையும் இழுத்துக்கொண்டு 9 கி மீ பயணித்தபோது, தெம்மாங்கு கிண்டல் கேலியுடன் பெரியார் உடன் வந்த சித்திரம், பெரியார் முண்டாசு கட்டிக்கொண்டு, சக தோழர்களுடன் படு தமாஷாக இருந்த காட்சி கிடைக்கும்.

பெரியார் சொல்வதை அப்படியே திரு வி க எழுதவேண்டும். பண்டித புலமையை சேர்க்கக்கூடாது. பாமரனுக்கு நான் எப்படி பேசுவோனோ அப்படியே போகவேண்டும் என்ற நிபந்தனை திருவிக விடம் சொல்லப்படுகிறது. இதன் பொருட்டு கோப தாபம்- சமாதானம் என்கிற காட்சியும் வரும். பெரியார் சுடச்சுட எப்படி பளிச்சென தயக்கமின்றி மனதில் பட்டதை பேசுவார் என்கிற பார்வை வெளிப்படும். இப்படி சுவையான செய்திகளும் நூலில் இருக்கின்றன.

நூலில் எந்த இடத்திலும் அண்ணா பற்றிய செய்தி ஏன் ஏதுமில்லை எனத் தெரியவில்லை. 1935 தொடங்கி அண்ணா பெரியாருடன் பயணிக்கலானார். ஈரோட்டில் தங்கி பத்திரிகை பணியும் ஆற்றியுள்ளார். பாரதிதாசன் பற்றிய செய்தி உள்ளது.

அண்ணா என்கிற பெயர் இந்நூலில் எங்கும் இடம் பெறவில்லை. பின் தொடர்ந்த ஆண்டுகளில் சாமி மற்றும் அண்ணா உறவு எப்படியிருந்தது- திமுக உருவாக்கம் குறித்து அவர் என்ன கருதினார் என எனக்குத் தெரியவில்லை.

பெரியார் குறித்து படிக்க வேண்டியவர்களுக்கு நல்ல ஆரம்ப நூல் என இதைச் சொல்லலாம். ஒருவேளை இந்து தமிழ் திசை 2024ல் கொணர்ந்த பெரும் தொகுப்பிற்கான நூல் தலைப்பை சாமி சிதம்பரனார் நூலிலிருந்து எடுத்துக்கொண்டிருப்பார்களோ என எனக்குத் தோன்றுகிறது.

(மே 28 2024)

# 13. நெ து சுவின் புரட்சியாளர் பெரியார்

நெ து சுந்தரவடிவேலு அவர்கள் ஏப்ரல் 2-4 ஆகிய நாட்களில் 1979ல் ‘ஒரு புரட்சியாளரின் மறுமலர்ச்சி’ எனும் சொற்பொழிவை சென்னை பல்கலையில் ஆற்றினார். அது புத்தகமாக ‘புரட்சியாளர் பெரியார்’ என உருவானது.

செப் 17 - அன்று பெரியார் குறித்து ஏதாவது புதிதாக தெரிந்துகொள்ள வேண்டும் என மனம் நினைத்தது. கார்த்திக் ராம் மனோகரனின் Periyar A study in Political The-ism என் கைக்கு வந்திருந்தால் இதுவரை பார்க்காத நூல் என்ற வகையில் அதை எடுத்திருக்கலாம். ஆனால் அமேசானில் அது எங்கேயோ நிற்கிறது. விஸ்வநாதன்

புத்தகமா, நெதுசு புத்தகமா என மனம் கேட்டது. ஏதோவொரு வால்யூம் பார்க்கலாம் என்றால் ஆத்தாடி அம்மாம் பெரிசா என மன சோம்பேறித்தனம் அதை விலக்கியது. விஸ்வநாதன் ஆங்கிலத்தை விட இலகுவாக நெதுசு உரையாடல் தமிழில் என மனம் எளிதான ஒன்றை முடிவு செய்துவிட்டது. அதை வாசித்த போது பட்டுத் தெறித்தவை.

ஆண்டு 1899. சென்னை காவக்கவுனி ஒற்றவாடைச் சாலை- லெட்சுமி விலாச நாடக சபையில் இந்து விநோத சபையின் அழைப்பு -மார்ச் 1ல் அபிராம சுந்தரி சரித்திர நாடகம். அழைப்பு அறிக்கையில் ‘பஞ்சமர்க்கு இடமில்லை’ என்று போடப்பட்டிருந்தது. சென்னை அப்போதே பெரு நகரம்தான். ஆங்கிலேயர் ஆட்சிதான்.

பள்ளிகளில் தனிப்பானைகள். பிராமணாள் சிற்றுண்டி சாலையில்

காலணா தின்பண்டத்திலும் ஆசாரம். சூத்திராள் என்றோ பின்னர் இதராள் என்றோ தனிப்பிரிவினை. விக்டோரியா மாணவர் விடுதி. அங்கும் பார்ப்பனரல்லாதவர்க்கு தனியாகத்தான் சமையல் கூடம். பிராம்மணர்களுக்கு தனி.

1890ல் சென்னை மாநிலக் கல்லூரிக்கும் பெங்களூர் மையக் கல்லூரிக்கும் இடையில் கிரிக்கெட் மேட்ச். இந்திய பெரிய மனிதர்களும் அழைப்பிதழுடன் போய் அமர்ந்தார்கள். சிம்காணா மண்டபம். ஸ்போர்ட்ஸ் செயலர் சாட்டர்டன் வந்தார். அனைத்து இந்தியர்களையும் வெளியேறச் சொன்னார். பிரிட்டிஷ் பெண்கள் விளையாட்டை பார்க்க வருகிறார்கள் எனவே இந்தியர் எவரும் இருக்கக்கூடாது என்ற ஆணை. மர நிழலில் போய் நின்று பாருங்கள் என தாராள அனுமதி. இதை இந்து பத்திரிகை

குறையாக எழுதியது. இந்த நீதியை இந்தியர் சக இந்தியரான தீண்டப்படாதவர்க்கு தந்தாரா என நெதுசு மட்டுமல்ல நியாயம் உணர்ந்தவர் எவரும் கேட்கவே செய்வர்.

பில்கிஸ் பானு வழக்கில் விடுதலையானவர்களை இன்று காண்கிறோம். கடுமையான விமர்சனங்களை வைத்து வருகிறோம். அன்று பிரிட்டிஷ் ஆட்சி அக்டோபர் 4, 1893 அன்று பிரிட்டிஷ் இராணுவ வீரர்கள் செகந்திராபாத் செல்கையில் குண்டக்கல்லில் தங்கி இளைப்பாறிக்கொண்டிருந்தனர். இரு கிராம பெண்கள் போவதைப் பார்த்து விட்டனர். பிறகு 'நாய் துரத்தல்' நடந்தது. அப்பெண்கள் நடுங்கிப்போய் இரயில்வே வாட்ச்மேன் இடம் போய் ஒண்டிக்கொண்டனர். அவர் அவர்களை காப்பாற்ற அறை ஒன்றில் வைத்து பூட்டினார்.

காவலாளி அம்பண்ணா. வந்தவன்

கார்ப்பரல் ஆஷ்போர்டு. துப்பாக்கியை நீட்டி திற என்றான். மறுத்த அம்பண்ணா அடுத்த நொடிகளில் இரத்த வெள்ளத்தில் குண்டடிப்பட்டு கிடந்தார். அடுத்து என்ன நடந்தது என நெதுசு பதிவிடவில்லை. வழக்கு விசாரணை செய்திக்கு போகிறார். பிப் 9, 1894ல் தீர்ப்பு. ஆஷ்போர்ட் விடுதலை. தற்காப்பிற்கே சுட்டார் - தீர்ப்பு எழுதியாகிவிட்டது. அம்பண்ணா எவர் நினைவிலும் இன்றில்லை. இது தான் நீதிதேவன் மயக்கம் போலும்.

1911 ஜேக்சன் செங்கல்பட்டு குற்றவியல் நடுவர். ஐ சி எஸ் அதிகாரி. அவரைப்பார்த்து 7 வயது பையன் தெருவில் வணக்கம் என வேகமாக சொல்லிவிட்டான். துரைக்கு கடும் கோபம். சிறுவன் நீதிமன்றம் செல்ல நேர்ந்தது. அபராதம் ரூ 5- அல்லது ஒரு வார தண்டனை என தீர்ப்பு. அவன் குடும்பம் என்ன செய்தது

எப்படி ரூ 5 யை சமாளித்தது தெரியவில்லை. நெதுசு அதில் சொல்லவில்லை. எப்படியான பெரும் அதிகார போதை அந்த அதிகாரிக்கு..

அரசாங்கப் பண்ணை - கிறித்துவர் ஒருவர் 'ஹாட்' அணிந்து வேலைப் பார்த்துள்ளார். துறை இயக்குநர் கௌச்மேன் பார்த்துவிட்டார். கிறித்துவராக இருந்தாலும் இந்தியராயிற்றே. தலைப்பாகை அணிந்து வா. இல்லையேல் பதவியை துற என்றார் அதிகாரி. மானமுள்ள அந்த இந்திய கிறித்துவர் வேலையை விட்டார். தென்னாப்பிரிக்காவில் அங்கு காந்தியை தலைப்பாகை அணியவே அவர்கள் விடாத காட்சி மனதில் நிழலாடியது.

1919 ஜனவரியில் முதல் வகுப்பு பெட்டியில் பிராங்கிளேடன் என்கிற பீகார் அரசாங்க செயலர் ஏறினார். அங்கு இந்திய முஸ்லீம் ஒருவர் இருக்கை ஒன்றில் உறங்கிக்கொண்டிருந்தார். ஐ

சி எஸ் மனம் பொங்கிவிட்டது. முஸ்லீம் பயணி மீது இவர் ஏறி அமர அப்பயணி விழித்துக்கொண்டார். அந்தப்பயணியோ கல்கத்தாவில் உயர்நீதிமன்றத்தில் நடுவராக இருந்து ஓய்வு பெற்ற சையத் ஆசன் இமாம். பயணி யார் என அறிந்தபின் அந்த ஆங்கில அதிகாரி வருத்தம் தெரிவித்தது வேறு கதை.

1912ல் உயர் பதவிகளில் பிராம்மணர் பெருமளவில் சில இடங்களில் முற்றிலும் ஆக்கிரமித்து இருந்ததை நெதுசு விளக்குகிறார். நெல்லூரில் இப்படி ஓர் அலுவலகத்தில் தலைமை எழுத்தராக நுழைந்த பார்ப்பனர் ஒருவர் விரைவில் 43 பார்ப்பனர்களை அலுவலகப் பணியில் இழுத்துவிட்டாராம்.

நீதிக் கட்சி தோன்றுவதற்கு முன்பாகவே ஆதி திராவிடர்கள் ஓரளவு விழித்துக்கொண்டதை நெதுசு சொல்வார்.

நீதிக்கட்சி தோற்றம், ஈவெரா அவர்கள் வளர்ந்தவிதம், காங்கிரஸ் பணி, குருகுலப் போராட்டம், வைக்கம் போராட்டம், சிறை வாழ்க்கை, சுயமரியாதை இயக்கம், வகுப்புரிமை போராட்டம், கடவுள் மறுப்பு- தன்மானம்- மத விமர்சனம்- தீண்டாமை எதிர்ப்பு, வகுப்புவாரி உரிமை என பெரியாரின் வாழ்க்கைப் பாதைகளை நெதுசு சுவைபட சொல்லியிருப்பார்.

கானாடு காத்தானில் சிவக்கொழுந்துவின் நாயன கச்சேரி. அழகிரியும் பெரும் இசைப்பிரியர் – அங்கு போயிருந்தார். நாயனக்காரரர் வழியும் வியர்வையை துடைக்க சிறு துண்டை மேலே போட்டிருந்தார். பெரிய சாதி வாலிபன் ஒருவன் துண்டை இடுப்பில் வை என்றார். சிவக்கொழுந்து வியர்வை துடைக்க வைத்துள்ளேன் என்றதை அந்த பெரிய சாதி ஏற்கவில்லை. அழகிரி

பாய்ந்தார். மேலே போட்டுக்கொண்டு வாசியும். கேட்கிறவன் இருக்கட்டும் என்றார். திருமண ஊர்வலத்தில் அல்லோகலம் ஏற்பட்டது.

அழகிரி பெரியார் தொண்டன் என்பதை அக்கூட்டம் உணர்ந்தது. பெரியாரும் புகார் சொன்னவர்களிடம் உங்கள் பணக்கொழுப்பை காட்டி அவமதிக்காதீர். சிவக்கொழுந்து வேண்டாம் எனச் சொல்லி நீங்கள் போகவேண்டியது தானே என்றார். வீட்டு செட்டியார் சிவக்கொழுந்து தொடர்ந்து வாசிக்கட்டும் எனச் சொல்ல மேலே துண்டைப் போட்டுக்கொண்டு சிவக்கொழுந்து தொடர்ந்து வாசித்தார். தன்மானம் காக்க அழகிரி நின்றார். பெரியார் தட்டிக்கொடுத்தார். சிவக்கொழுந்து தன்மானம் சிறக்க நின்றது.

16-9-1927 மாலை தஞ்சையில் காந்தியார் பேசிய பொதுக்கூட்டத்தில் அவரது உரையில்

” ஒரு பிராமணனோ அல்லது வேறு யாரோ, தாம் உயர்ந்தவர் என்று உரிமை கொண்டாடும்போது பிராமணரல்லாதவர் அதை எதிர்த்துப் போரிட்டால் அதை முழுக்க முழுக்க நான் ஆதரிக்கிறேன். நான் உயர்ந்தவன் என்று உரிமை கொண்டாடுபவன் மனிதன் என்று அழைக்கப்படுவதற்கு உரியவன் அல்லன். ஒரு பிராமணன் பணம் சம்பாதிப்பதில் இறங்கிவிட்டால் அவன் பிராமணன் அல்லன்” என்றார். அன்று நீதி கட்சி தலைவர்கள் பன்னீர்செல்வம். உமாமகேசுவரம் பிள்ளை, சின்னையா, சையத் தாஜூதீன் காந்தியை சந்தித்து தங்கள் போராட்டங்கள் குறித்து எடுத்துரைத்தனர். இதை நெதுசு பதிவு செய்துள்ளார்.

1928ல் தாழ்த்தப்பட்டவர் மாநாட்டில் பெரியார் இவ்வாறு பேசினார்

” உங்களை கிராமவாசிகள்

துன்புறுத்தினால், இழிவாய் நடத்தினால், எதிர்த்து நிற்கவேண்டும். முடியாவிட்டால் வேறு பட்டணங்களுக்கு குடியேறவேண்டும். அங்கு ஜீவன மார்க்கத்திற்கு வழியில்லை என்றால் இந்து மதத்தை விட்டு சமத்துவம் உள்ள மதத்திற்கு போய்விடவேண்டும்.. அதுவும் முடியாவிட்டால் வெளிநாடுகளுக்கு கூலிகளாய் போய் உயிரையாவது விடவேண்டும்”

செங்கற்பட்டு பார்ப்பனர் அல்லாத இளைஞர் மாநாடு தீண்டாதாருக்கு சர்க்கார் உத்யோகங்களில் முதல் உரிமை எனத் தீர்மானம் போட்டது.

1931ல் விருதுநகரில் ஆர்.கே சண்முகம் தலைமையில் தீண்டாமை சகல சாதிகளையும் பிடித்த நோய்- தீண்டாமை ஒழிய பிராமணீயம் ஒழியவேண்டும் என தீர்மானம் போட்டனர்.

சென்னை திருவல்லிக்கேணி முரளீஸ் கபே ‘பிராமணாள்’ என்பதை எடுக்கவில்லை. அங்கு வாயிலில் ‘தின மறியல்’ என பெரியார் அறிவித்தார். 600 பேர் இந்தப் போராட்டத்தில் கைதாகினர். பிராமணாள் பெயர் போனது.

பெரியார், நான் சொன்னேன் என்பதற்காக எதையும் ஏற்றுக்கொள்ளாதே என்றவர். சிந்தனைக்கு சரி என்றால் ஏற்றுக்கொள் என்பார். சமுக நலனுக்காக அனைவருக்கும் ஒழுக்க நெறி என்றே அவர் பேசினார். சுயமரியாதையை அலட்சியம் செய்து பேசும் சுதந்திர பேச்சை அவர் கேள்விக்கு உள்ளாக்கினார்- விமர்சித்தார்.

சமதர்ம இலட்சியங்களை அவர் உயர்த்திப்பிடிக்காமல் இல்லை. ஆனால் அதில் சுயமரியாதை என்பதை இணைத்தார். கம்யூனிஸ்ட் மானிபெஸ்டோ, மார்க்ஸ் குறித்து, மீரத் சதி வழக்கு, பகத்சிங் என

அவர் எழுதினார். அவர் சிங்காரவேலர், ஜீவாவுடன் இணைந்து பணியாற்றியவர். சுயமரியாதை சமதர்ம திட்டத்தை 1934 செப்டம்பரில் நீதிக்கட்சிக்கும் ராஜாஜிக்கும் பெரியார் அனுப்பினார். நீதிக்கட்சி அதை ஏற்க முன்வந்தது. 1949 கம்யூனிஸ்ட்கள் மீது அடக்குமுறை வந்தபோது பெரியார் கம்யூனிஸ்ட்களுடன் நின்றார்.

1938ல் நீடாமங்கலம் காங்கிரஸ் மாநாடு. தேவசகாயம், ரத்தினம், ஆறுமுகம் என்கிற ஆதிதிராவிடர்களும் மாநாட்டு சாப்பாட்டு பந்தலில் சமமாக அமர்ந்தனர். உடையார் பண்ணை எஜெண்ட் பொங்கினார். அவர்கள் விரட்டப்பட்டனர். வயலில் அறுவடை நடந்துகொண்டிருந்தது. அந்த மூவரும் பலருடன் வேலைப்பார்த்துக் கொண்டிருக்கின்றனர். பண்ணையார் கிருஷ்ணமூர்த்தி வருகிறார். அந்த பசங்களை

கட்டுங்கடா என்கிறார். மொட்டையடித்து சாணிப்பால் ஊற்றினர். பெரியார் குடி அரசில் இதை வெளிக்கொணர்ந்து நியாயம் கேட்டார்.

பெரியார் நீதி கட்சியின் தலைவராவதற்கு முன்னர் நீதிக்கட்சியினர் குடியேற்ற நாட்டு அந்தஸ்து எனப் பேசிவந்தனர். பெரியார் வந்தபின் முழு தன்னாட்சி- திராவிட நாடு திராவிடருக்கே என்ற முழக்கம் உருப்பெற்றது.

1940ல் பம்பாயில் ஜின்னா- பெரியார்- அம்பேத்கர் சந்திப்பும் நடந்தது. தனிநாடு என்கிற முடிவிற்கு அவர்கள் வந்ததை நாம் அறிவோம். சர் சி பி ராமசாமி அய்யரும் ஜின்னாவிற்கு தனிநாடு கோர உரிமையிருந்தால் பெரியாருக்கும் தமிழ் நாட்டின் தனி ஆட்சி கோர உரிமையுண்டு எனச் சொன்னதாக நெதுசு பதிவிட்டுள்ளார். 1940 நீதிக்கட்சி திருவாரூர் மாநாடு தனி திராவிட நாடு என்பதுடன் ஆதி திராவிடர்

தனித்தொகுதி என்பதையும் தீர்மானமாக போட்டது.

உலகப்போரில் ஹிட்லர் தோற்கவேண்டும் என்ற கருத்தையே பெரியார் வைத்திருந்தார். 1940-42 காலத்தில் சென்னை மாகாண ஆட்சிப் பொறுப்பை பெரியார் ஏற்கட்டும் என பிரிட்டிஷ் கவர்னர் விரும்பினார். ராஜாஜியும் பெரியாரிடம் ஆட்சிப்பொறுப்பை ஏற்கச் சொன்னார். பெரியார் மறுத்துவிட்டார். கிரிப்ஸ் தூதுக்குழுவிடம் பெரியார் தனி திராவிட நாடு கோரிக்கையை முன்வைத்தார். கிரிப்ஸ் ஏற்கவில்லை என்பதை நாம் அறிவோம்.

13-2-1944ல் சென்னை நீதிக்கட்சி கூட்டத்திற்கு அண்ணா தலைமை ஏற்றார். வருகிற சேலம் மாநாட்டில் பெயர் மாற்றம் என தீர்மானித்தனர். அதன்படி சேலத்தில் ஆகஸ்ட் 1944ல் திராவிடர் கழகம் எனப்

பெயர் மாற்றினர். திக தூத்துக்குடி மாநாடு விடுதலைக்குப் பின்னர் 9-5-1948ல் நடந்தது. அதில் சாதிவாரி பிரதிநிதித்துவம் என்ற தீர்மானத்தை நிறைவேற்றினர். திராவிட தனி சுதந்திர நாடு என்றும் தீர்மானம் எழுதப்பட்டது.

சாதி ஆதிக்கம் எதிர்த்துப்போராடியது போலவே மொழி ஆதிக்கம் எதிர்த்தும் பெரியார் போராடினார். இந்தி எதிர்ப்பு போராட்டங்களை அவர் முன் எடுத்ததை அனைவரும் அறிவோம். தமிழ் நாடு தமிழருக்கே என்ற முழக்கம் இப்போராட்டத்தின் ஊடாக பிறந்தது. தேசியக்கொடி எதிர்ப்பு போராட்டமாக 1955 என்கிற முடிவும் வந்தது. நேரு காமராஜர் மூலம் பெரியாரை சமதானப்படுத்தி அப்போராட்டத்தை தவிர்க்கவேண்டியதானது.

பெண்ணுரிமைப் போராளி பெரியார் என்பதை விரிவாக நெதுசு பேசியிருப்பார்.

டாக்டர் முத்து லட்சுமிக்கு ஆதரவாக தேவதாசி ஒழிப்பில் பெரியார் உடன் நின்றார். கற்பு என்பது சுகாதாரம்- சரீரம் - பொது ஒழுக்கம் என்ற வகையில் இருபாலருக்குமானது என்பதை அவர் தெளிவாக்கினார். பெண்களுக்கு ஆண்களால் விடுதலை கிடைக்காது என்பதையும் அவர் கூறிவந்தார். பெண்கள் நகை மாட்டும் ஸ்டேண்டாகாமல் இருக்க கேட்டுக்கொண்டார்.

பெரியார் தனது இங்கிலாந்து சுற்றுப்பயணத்தில் 20-6-1932ல் மேக்ஸ்பரோ லேக்கில் உரையாற்றினார். அதில் எங்களை பரிகசிக்கும் உங்களை நாங்கள் பரிகசிக்கிறோம் என்பதை உரக்கச் சொன்னார். இந்திய வீரர்கள் நடத்தப்படுவது, இந்திய தொழிலாளர் உரிமைகள் நசுக்கப்படுவது, 80 ஆயிரம் பேரை சிறையில் அடைத்தல் போன்றவற்றை அவர் பரிகசித்தார்.

சுரங்கத்தில் பல்லாயிரம் ஆண் பெண் தொழிலாளர் 8 அணா, 4 அணாவிற்கு சுரண்டப்படுவது என்ன நியாயம் எனக் கேட்டார்.. தொழிற்கட்சி இந்த ஆபாசத்தை நிறுத்தாதா என வினவினார்.

1950 கம்யூனல் ஜீ ஓ குறித்த வழக்கு-தீர்ப்பு ,பெரியார் முன்னெடுத்த போராட்டம், அரசியல் சட்ட திருத்தம் என அதன் தொடர்ச்சியை நெதுசு விரிவாக இந்நூலில் சொல்லியிருப்பார்.

1953ல் ராஜாஜி ஆட்சியில் கல்வி சீர்திருத்தம் என்ற பெயரில் வந்த குலக்கல்வி திட்டம் எதிர்த்து பெரியார் கடுமையாக போராடியதை நெதுசு சொல்வார்.

1957 நவம்பரில் சட்ட எரிப்புபோர் போராட்டத்தை பெரியார் கையில் எடுத்தார். 4000 தொண்டர்கள் கைதாகினர். 1953ல்

அவர் புத்தர் விழா கொண்டாடினார். மே 27ல் பிள்ளையார் சிலை உடைப்பு என்றார். 144 தடை எனில் வீட்டிலேயே உடையுங்கள் என போராட்ட உத்திகளை பெரியார் மேற்கொண்டார். வர்ணாசிரம முறை ஒழிப்பிற்கு ஏதாவொரு காரியம் செய்யாமல் என் உயிர்போகக் கூடாதென்ற நம்பிகையுடன் தன் போராட்டங்களை அவர் விரிவுபடுத்திக்கொண்டிருந்தார். 1956ல் ராமன் பட எரிப்பு என்ற போராட்டத்தை நடத்தினார்.

அதேபோல் தமிழ்நாடு நீங்கிய இந்திய படத்தை ஊர்தோறும் கொளுத்துக எனும் இயக்கத்தை அவர் 1960ல் கையில் எடுத்தார். 4-6-1965ல் கம்பராமாயண எதிர்ப்பு, 1971ல் சேலத்தில் இராமன் பட எரிப்பு என்கிற இயக்கங்களை அவர் நடத்தினார். 1964ல் உச்சநீதிமன்றம் நில உச்சவரம்பு சட்டம்

செல்லுபடியாகது எனச் சொன்னது பற்றி கண்டனம் எழுப்பினார். பெரியாரின் தொடர் போராட்டங்களை அவர் 24-12-1973ல் மறைகின்றவரை நெதுசு தொட்டாவது காட்டியுள்ளார்.

பெரியாரின் தோற்றம் பற்றி நெதுசு படம் பிடிப்பார்.

“சிவந்தமேனி, தடித்த உடல், பெருத்த தொந்தி, நல்ல உயரம், வெளுத்த தலை மயிர், நரைத்த மீசை, நடுத்தரமான தாடி, திரண்டு நீண்ட மூக்கு, அகன்ற நெற்றி, உயர்ந்து மயிரடந்த புருவம், ஆழமான கண்கள், ஒளிவிடும் விழிகள், பொதுவான உதடுகள், செயற்கைப் பற்கள், சாதாரண மூக்குக் கண்ணாடி”

என் சிறு வயதில் பள்ளிக்கூடம் அருகில் தஞ்சை கருந்தட்டான்குடி

திருமண மண்டபத்தில் பெரியாரை பார்த்த மனப் பிம்பம் அப்படியே நெதுசு வர்ணிப்பில் உட்கார்ந்துள்ளதை என்னால் சரி பார்த்துக்கொள்ள முடிந்தது. அப்போது அவர் மைக்கில் பேசியதை திருமண இரைச்சலால் சரியாக என் போன்ற கடைசி வரிசையாளர்களுக்கு கேட்கவில்லை. அவர் குரலும் சற்று களைப்புடன் தொய்வாக இருந்த மனப்பதிவு என்னிடம். அன்றைய சிறுவன் இன்று பெரியாரை எழுதுவேன் என நினைத்திருக்க முடியாது.

நெதுசுவின் இந்தப் புத்தகம் பெரியார் குறித்து இதுவரை எதையும் படிக்காதவர்க்கு அவரை நன்கு அறிமுகப்படுத்தும் நூலாக இருக்கும் என்றே தோன்றுகிறது. பெரியார் குறித்து இன்று ஏராள தொகுப்புகள் இருந்தாலும் இப்படிப்பட்ட அவரது வாழ்க்கை குறிப்புகள் கொண்ட புத்தகங்களும்

தேவைப்பட்டுக்கொண்டேயிருக்கின்றன.

நெதுசு இதில் தன் பங்கை செய்துள்ளார்.

17-9-2022

# 14. பெரியார் அரசியல் வரலாறு

பெரியார் வாழ்க்கை வரலாறு குறித்து நிறைய புத்தகங்கள் வந்துவிட்டன. ஆனால் முழுமையாக நிகழ்வுகளை (கிடைத்தவற்றை முடிந்தவரை) ஆவணப்படுத்தும் அவரது political bio வரவில்லையோ எனத்தோன்றுகிறது. சாமி சிதம்பரம், நெதுசு, கருணாநந்தம், நீலமணி, சுப்பு ரெட்டியார் என பலர் எழுதியவை இருக்கின்றன. ஆங்கிலத்திலும் Anita Diehl, Dr E sa Viswanathan போன்றவைகள் உள்ளன. பால ஜெயராமன் இந்த அரசியல் வரலாறு என்று எழுத ஓரளவிற்கு முயன்றுள்ளார். Periyar A political Biography of E V Ramasamy என்பது அந்நூலின் பெயர்.

பால ஜெயராமன் புத்தகத்திலிருந்து சில செய்திகள்..

பெரியார் 1933 டிசம்பரில் ” இந்த ஆட்சி ஏன் ஒழிய வேண்டும்” என எழுதிய தலையங்கத்திற்காக இந்தியன் பீனல் கோடு செக்‌ஷன் 124 படி கைது செய்யப்பட்டார். கோவையில் 6 மாதம் சிறைவாசம். ராஜாஜி உப்பு சத்தியாகிரகத்திற்காக கைதாகி அங்கிருந்தார்.

அடுத்த அடுத்த “செல்” என்பதால் வேறுபாடுகொண்ட நண்பர்கள் பேசிக்கொண்டனர். மீண்டும் காங்கிரசில் ஈ வெ ரா வரவேண்டும் என்கிற முயற்சியை ராஜாஜி எடுத்தார். வகுப்புவாரி பிரச்சனை வேறுபாடு இருந்தபடியால் பலனளிக்கவில்லை. பெரியாரை கைது செய்து அடைத்தது நீதிக் கட்சி ஆட்சி. பொப்பிலி ராஜா அப்போது முதல்வர்.

1934ல் கம்யூனிஸ்ட் கட்சிக்கு தடை வந்தது. சுயமரியாதை இயக்கமும்

கண்காணிப்பிற்குள்ளானது. பெரியார் மீண்டும் 1934ல் கைது செய்யப்பட்டார். நான் ஏன் நாத்திகமானேன் என்கிற பகத்சிங் நூலை ஜீவா மொழிபெயர்ப்பில் வெளியிட்டதற்காக் அக்கைது நடந்தது. அவர் வருத்தம் தெரிவித்துவிட்டு வெளியே வந்தார் என்கிற செய்தியை பால ஜெயராமன் இவ்வாறு தந்துள்ளார்.

" Periyar was arrested again in 1934 for publishing a translation of Bhagat Singh's translation 'why I an atheist'. He had to tender an apology to the government to secure his release..."

To ensure political survival, Periyar decided to move the Self respect movement away from communism" என்று பால ஜெயராமன் எழுதியிருப்பார். ஜீவாவை அவர் விரும்பாவிட்டாலும் அரசாங்கத்திடம் மன்னிப்பு கொடுக்கச் சொன்னதாக பெரியார் சொல்லியிருப்பார்.

பெரியார் மன்னிப்பு கொடுக்கவில்லை என பெரியாரிய நண்பர்கள் சொல்கின்றனர். அந்த வழக்கின் முழு ஆவணமும் எவராவது வைத்திருந்து வெளியிட்டால் , உண்மையான விவரங்கள் கிடைக்கப்பெற்று அவை நம் புரிதலை சரியாக்க உதவும்.

அப்போது தொடங்கப்பட்டிருந்த காங்கிரஸ் சோசலிஸ்ட் கட்சிக்கு வருமாறு பெரியாரை ஜெயப்பிரகாஷ் நாராயணன் அழைத்தார். சுயமரியாதை இயக்கத்தை இணைத்துவிட வேண்டினாராம் ஜேபி. அது நடக்கவில்லை. ஆனால் பெரியாரிடம் திருத்துறைப்பூண்டி மாநாட்டின்போது கருத்துவேறுபாடு கொண்டு வெளியேறிய ஜீவா போன்றவர்கள் self respect socialist party எனத்துவங்கி, பின்னர் ஜேபியின் அறிவுரைப்படி காங்கிரஸ் சோசலிஸ்ட் கட்சியில் இணைந்தனர்.

பெரியார் மணியம்மை திருமணம் ஜூலை

9 1949ல் நடந்தது. இது குறித்து அறிந்த அண்ணா மற்றும் தோழர்கள் கடுமையாக எதிர்வினை ஆற்றினர். ராஜாஜியை சந்தித்த பின்னர் தான், இந்த முடிவை பெரியார் எடுத்தார் என அறிந்து, இரகசிய சந்திப்பு ஏன் என்ற கேள்வியை அண்ணா எழுப்பினார். அது தனிப்பட்ட சந்திப்பு என பெரியார் அக்கேள்வியை கடந்து போனார். இங்கு பால ஜெயராமன் எழுதியிருப்பது கவனிக்க வேண்டிய ஒன்று.. ராஜாஜி திருமணம் வேண்டாம் எனச் சொல்லியதை கூறுவதைக் காண்கிறோம். பாலஜெயராமன் தருகிற வரிகள்

"Rajaji in fact counselled him ( Periyar) against marrying Maniammai. When his ( Periyar's) followers urged him to release his correspondence with Rajaji to silence Anna's criticism, Periyar refused saying that he could not use private letters for party issues"

தன்னை கொலை செய்ய முயற்சிப்பதாக பெரியார் தெரிவித்ததில் மனம் உடைந்த அண்ணா தோழர்கள் சதிகாரர்கள் எனச் சொன்னது குறித்து அவதூறு வழக்கு தொடுத்தனர். பெரியார் தான் அண்ணா சம்பத்தை அப்படி சொல்லவில்லை என சொன்னபிறகு வழக்கு திரும்பப் பெறப்பட்டது. இங்கு பால ஜெயராமன் எழுதியிருப்பது

"Anna and Sampath promptly sued him (Periyar) for libel. They withdrew their cases only when Periyar appeared in court and clarified that he had not referred them( Anna and Sampath)"

இப்படி தன்னை கொலை செய்ய முயற்சி, அம்பேத்கரை கொல்ல முயற்சி என்றெல்லாம், ஆதாரங்களைக் காட்டாமலேயே பெரியார் அவ்வப்போது பேசியதைக் காணமுடியும். தான் பேசியது குறித்து ஆதாரங்களை சொல்லவேண்டும் என்பதையெல்லாம் அவர்

பொருட்படுத்தாமல் சென்றிருப்பார்.

1944ல் தி க என நீதிக்கட்சி பெற்ற பெயர் மாற்றத்தின் போதே, தலைமைக்கு பெரியார் அல்லாத ஒருவர் என மூத்தவர்கள் போராடி தோற்றனர். 1945-49 களில் பெரியார் அண்ணா முரண்பாடும் முற்றத்துவங்கியது.

பிராமணர் ஹோட்டல் பகிஷ்கரிப்பு (அன்றைய சூழலில்) சாத்தியமில்லை என அண்ணா கருதினார். அனைவரும் கருஞ்சட்டையில் வரவேண்டும் என்பதும் தேவையில்லை என்றே அண்ணா நினைத்தார்.. இரண்டாம் உலகப்போர் கால வில்லன்களில் ஒருவரான பாசிஸ்ட் முசோலினியின் அடையாளம் அது என அண்ணா பேசியது எடுபடவில்லை. கருஞ்சட்டை தடை வந்த கண்டனக் கூட்டத்திற்கு பெரியாரை விட்டுக்கொடுக்காமல், நெடுஞ்செழியன்

தொளதொள கருப்பு ஜிப்பாவை அணியவைத்து அண்ணாவை வரச் செய்தார்.

ஆகஸ்ட் 15யை துக்கநாள் என பெரியார் அறிவித்ததை எதிர்த்து இன்பநாள், கொண்டாட்டத்தில் பங்கேற்க அண்ணா வலியுறுத்தினார். இறுதி முரணாக பெரியார் திருமணம் வந்து, திமுக என்கிற அரசியல் உதயம் , திக விலிருந்து வெளியேறி வந்தது.

பெரியார் குறித்து வரும் வரலாற்று குறிப்புகளில் உரிய ஆவணத்தை இணைத்து பேசாமல் செல்கிற குறையிருப்பதாகத் தோன்றுகிறது. வழக்குகள் எனப் பேசும்போது பின் இணைப்பாகவாவது அதன் முழு விவரத்தைத் தருவது , சைமன் கமிஷன் என்றால் கொடுத்த குறிப்பு என்ன என்பது போன்று எதுவும் பொதுவாக தரப்படாமல் இருப்பதையே பார்க்கிறோம். . முழுமையான திரட்டப்பட்ட முழு ஆவணங்களுடன், (50

ஆண்டுகள் திமுக, அதிமுக ஆட்சிகள் இருந்தும்) அவரது வாழ்க்கை வரலாறு தொகுக்கப்படாதது ஏனோ?. அப்படி ஒன்று முழு ஆதாரங்களை மட்டுமே வைத்து, அவற்றை வெளிப்படுத்தி, அரசியல் சௌகரியங்களை மட்டும் கணக்கில் கொள்ளாமல் எழுதப்படவேண்டியது மிகவும் அவசியமான ஒன்று.

(செப் 2023)

# 15. என்றும் தமிழர் தலைவர்'

தி இந்து குழுமம் தமிழ் திசையின் வெளியீடு வந்துள்ளது. பெரியார் குறித்த கட்டுரைத் தொகுப்பாக ‘என்றும் தமிழர் தலைவர்’ எனக் கொணர்ந்துள்ளனர். ஜனவரி 2024 ல் வந்த இந்நூலில் 151 தலைப்புகளில், சிறிதும் பெரிதுமாக பெரியார் விதந்து பேசப்பட்டுள்ளார். பெரியார் குறித்த கவிதைகளும் இதில் அடக்கம்.

இதற்கு முன்னர் இம்மாதிரி தொகுப்புகளாக வந்த அண்ணா, கலைஞர், ராஜாஜி போன்றவைகளின் வடிவ உள்ளடக்க பத்திரிகையாளர் பாங்கிலான சோதனைகள் இப்பெரியார் நூலிலும் செய்யப்பட்டுள்ளன - 860 பக்கங்களுக்கான நூல். ஆசிரியர் அசோகன் உள்ளிட்ட, தமிழ் இந்து இளம் குழுவினர் நன்றாக உழைத்து

இத்தொகுப்பைக் கொணர்ந்துள்ளனர். தமிழ் அரசியல் உலகிற்கு நல்ல தொண்டாக எண்ணி அவர்களை நாம் பாராட்டலாம்.

15 பெருந்தலைப்புகளில் பெரியார் குறித்த கவிதைகள், கட்டுரைகள் என 151 உபதலைப்புகளில் நூலை அடுக்கியுள்ளனர். பெரியார்பாதை, பெரியார் யார், பெரியார் இன்று, ஆய்வுலகப்பார்வை, பெரியார் விரிவும் ஆழமும், அரசியலும் போராட்டங்கள், பெண்ணுரிமைக் குரல், சாதி மத எதிர்ப்பு, மொழி கலை ஊடகம், பெரியாரின் உலகம், உடன் நின்ற உறவுகள், பெரியாரும் ஆளுமைகளும், பெரியாரின் அடிச்சுவட்டில், சுயமரியாதைக் குடும்பங்கள், சுயமரியாதை சமதர்மம் என 15 பகுதிகளாக இந்த 151 தலைப்புகள் அடக்கப்பட்டிருக்கின்றன.

ஒவ்வொரு பகுதியுமே தனித்த புத்தகத்திற்கான தன்மையுடையதுதான்.

சில தலைப்புகளில் தனித்த புத்தகங்கள் வந்துள்ளன.

முதல் பகுதியிலேயே ஆசிரியர் வீரமணி மற்றும் தொல் திருமா அவர்களின் விரிவான , ஆழமான பேட்டி இடம் பெற்றுள்ளது. கலைஞர் மற்றும் முதல்வர் ஸ்டாலின் அவர்களின் எழுத்துக்களும் இடம் பெறுள்ளன. இரண்டாம் பகுதியில் தோழர் எஸ் வி ராஜதுரை, ஏ எஸ் பன்னீர்செல்வன், ப திருமாவேலன், அரசு, செந்தலை கவுதமன், கலி பூங்குன்றன் உள்ளிட்டவர் பார்வை வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

நான்காம் பகுதியில் சுனில் கில்நானி, கார்த்திக் ராம் மனோகரன், கோராவின் பேரன் விகாஸ், அவினாஷ் பாட்டில் போன்றவர் இடம் பெற்றுள்ளனர். எழுதியவர் அனைவரின் பெயரையும் இங்கு குறிப்பிடவில்லை. பிற பகுதிகளிலும் ஏராள ஆளுமைகள், அறிஞர்

பெருமக்கள், களப்போராளிகள் என பலர் எழுதியுள்ளனர்.

சிலரின் எழுத்துக்களிலிருந்து சில வரிகளாவது தரவேண்டும் எனத்தோன்றுகிறது.

ஆசிரியர் வீரமணி அவர்கள் தன் பேட்டியில் பெரியாரை உலகமயமாக்கவேண்டும், உலகம் பெரியார்மயமாக வேண்டியதின் அவசியத்தைச் சொல்கிறார்.

பெரியாருடைய தத்துவம் ஒரு சமூக விஞ்ஞானம்.

பெரியார் அடிப்படையில் ஒரு மனிதநேயர். முதலில் அவருக்கு அடிப்படையானது மனிதம், மனிதத் தன்மை, மனித ஒருமைப்பாடு. அவரின் கொள்கையை உற்று நோக்கினால் அவை மனிதம், சமதர்மம் என அமையும்.

என்னை இன்னொருவர் தாழ்த்தும்போது, கேவலப்படுத்தும்போது எதிர்ப்பதற்கு பெயர்தான் சுயமரியாதை. பெரியார் எந்த இடத்திலும் பொதுவெளிப் பண்பாட்டை விட்டுக்கொடுக்கவில்லை. ஒருபோதும் வன்முறையைக் கையாண்டதில்லை.

பெரியார் ஒருவர் தான் ‘நான் சொன்னாலும் நம்பாதே’ என்று அறிவுக்கு சுதந்திரம் கொடுத்த தலைவர். ‘மானமும் அறிவும் மனிதர்க்கு அழகு’ என்றவர்.

சாதியை ஒழிப்பது என்பதிலே அவர் முழு வெற்றி பெறவில்லை. உடனே இடித்துவிடுவதற்கு அது கட்டிடம் அல்ல. அது மனதில் இருக்கக்கூடியது.

தொல் திருமா அவர்களின் பேட்டியின் சாரமாக :

பெரியார் கடவுள் மறுப்பாளர் அல்லது

பார்ப்பன எதிர்ப்பாளராக மட்டுமின்றி, சமத்துவ புரட்சியாளர் என்றே நான் நம்பினேன்.

சாதி ஒழிய வேண்டும், பெண் விடுதலை, சமூக நீதி வழியில் சமத்துவம்- இதுதான் பெரியாரின் உண்மையான நோக்கம்.

அவர் பார்ப்பனர்களை பார்ப்பனியத்தை மய்யப்படுத்தி பேசினாரே தவிர, அது சமூகத்துக்கு எதிரான துவேஷம் கிடையாது.

இந்து நம்பிக்கை வேறு. சனாதனம் வேறு. பிறப்பின் அடிப்படையிலான பாகுபாடு நிலையானது என்பது சனாதனம்.

அம்பேத்கர் மதமாற்றத்தை ஒரு உத்தியாகக் கண்டார். பெரியார் அது தேவையில்லை- உள்ளேயிருந்து சண்டை போடுவேன் என்றார். இருவருக்கும் சமத்துவம் தான் இலக்கு. இருவரையும் சமமாக

பார்க்கிறேன்.

அம்பேத்கரிய இயக்கம் என்ற வகையில் விடுதலை சிறுத்தைகள்தான் பெரியாரையும் முன்னிறுத்தி பேசிவரும் ஒரே கட்சி.

எனக்கு எப்போதெல்லாம் சோர்வு வருகிறதோ அப்போதெல்லாம், பெரியாரையும் அம்பேத்கரையும் எண்ணிப்பார்ப்பேன்.

பெரியாரிடம் உள்ள சகிப்புத்தன்மை, இடைவிடாத போராட்டம், கொள்கையில் உறுதிப்பாடு எனக்குள் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

பார்ப்பனர்கள் அதிகமாக ஏமாற்றி பிழைப்பது சூத்திரர்களிடம்தான் நிகழ்கிறது என்றுதான் அவர்களை பெரியார் திரட்டினார். பெரியாரை பிற்படுத்தப்பட்ட நலன்களுக்காகவே செயல்பட்டவர் என்றோ,

தலித் மக்களுக்கு எதிரானவர் என்றோ முத்திரை குத்துவது முற்றிலும் தவறான பார்வை.

திராவிடம் என்ற சொல்லைக் காப்பாற்றினால்தான் ஆரிய எதிர்ப்பு என்பதையும் தக்க வைக்க முடியும். திராவிடம் இல்லை என்றாகிவிட்டால், ஆரியம் இல்லையென்றாகிவிடும். எல்லோரும் இந்து என்றாகிவிடும். இந்து என்றாகிவிட்டால் பார்ப்பனர்களுக்கு பெரிய பாதுகாப்பு.

பெரியார் சிந்தனைகள் நூறாண்டுகாலமாக தமிழ் மண்ணில் நிலைப்பெற்றிருக்கின்றன. உழைப்பு பயன் தந்திருக்கிறது.

தோழர் எஸ் வி ராஜதுரை அவர்களின் கட்டுரை இனவாதியா பெரியார்? என்பதான விவாதமாக உள்ளது. அவர் கட்டுரையில்:

நெல்லூர் மாநாட்டில் பார்ப்பனரை உறுப்பினராக ஆக்கமுடியாது என பெரியார் முடிவெடுத்தார். நமது கொள்கைக்கும் நன்மைக்கும் விரோதமில்லா பார்ப்பனர்களுடன் அரசியல் நன்மையான காரியங்களில் ஒத்துழைக்க, ஒத்துழைப்பை ஏற்றுக்கொள்ளவும் தயாராக இருக்கிறோம் என்றார் பெரியார்.

1939ல் எந்த பார்ப்பனரிடமும் தனிப்பட்ட விரோதமோ பகைமையோ கிடையாது. மனிதத் தன்மையுடன் தான் எல்லா பார்ப்பனர்களிடமும் பழகி வருகிறேன் என்றார்.

பார்ப்பனியத்தை அடியோடு ஒழிப்பது என்பது முக்கிய முதன்மையான காரியம். அரசியல் வாழ்வில் மனித தர்மம் தவிர வேறு எந்த தர்மமும் புகுத்தப்படக்கூடாது என்பதுதான் என் ஆசை எனப் பேசினார்.

1962ல் பெரியார் பேசினார் ”பார்ப்பனத் தோழர்களே நான் மனிதத் தன்மையில் பார்ப்பனர்களுக்கு எதிரி அல்ல..சமுதாயத்துறையில் பார்ப்பனர் அனுஷ்டிக்கின்ற உயர்வு, அவர்கள் அனுபவிக்கின்ற அளவுக்கு மேற்பட்ட விகிதம் ஆகியவற்றில்தான் எனக்கு வெறுப்பு இருக்கிறது. பார்ப்பனர்களிடத்தில் மட்டுமல்ல, இந்த நிலையில் உள்ள எல்லோரிடத்திலும் நான் வெறுப்பு கொள்கிறேன். ..மக்கள் யாவரும் ஒரு தாய் பிள்ளைகள் ,தாயின் செல்வத்திற்கு உரிமை உடையவர்கள் என்று கருதுவாராயின் சமுதாய போராட்டமும் வெறுப்பும் ஏற்படவாய்ப்பே இருக்காது.

பத்திரிகையாளர் ஏ எஸ் பன்னீர்செல்வன் பெரியார் முழுமையான தமிழ் தேசியத்தின் அடையாளம் என்பதை விவாதித்துள்ளார். அதேபோல் ப திருமாவேலன் இவர் தமிழர்

இல்லை என்றால் எவர் தமிழர் எனக் கேட்டு தன் பார்வையை சொல்லியுள்ளார்.

.

பெரியாரின் அயரா உழைப்பை, சிந்தனை செல்திசையை, இயக்க பரிமாணங்களை கட்டுரையாளர்கள் பல கோணங்களில் வெளிப்படுத்தியுள்ளனர். பெரியார் குறித்த ‘hagiography’ என இந்நூலை தள்ளிவிடமுடியாது என்றாலும், அவர் குறித்த ஆய்விற்கு முழுமையாக துணை செய்யும் நூல் எனவும் சொல்லிவிடமுடியாது.

காந்தி என்றால் அவரது விமர்சகர்கள் எல்லோரையும் சமமாக வைத்து பார்க்கிறது சிந்தனை உலகு. மார்க்ஸ் குறித்தும் ஆதரவாக எவ்வளவு ஆய்வுகள் உண்டோ, அவ்வளவு விமர்சன ஆய்வுகளும் உண்டு. இந்த அளவு ஆய்வுப் பரப்பை கொண்ட

அம்பேத்கருக்கும், பெரியாருக்கும் அவர்களது கொள்கைகளை இயக்க செயல்பாடுகளை, tactics களை விதந்தோதும் ஆய்வுகள் அளவிற்கு, அவர்கள் குறித்த விமர்சன ஆய்வுப்புள்ளிகள் இன்னும் வரவில்லை. அவர்கள் absolute -விமர்சனத்திற்கு அப்பாற்பட்டவர்கள் , போதாமை ஏதும் இல்லாதவர்கள் , முழு நிறை ஆளுமைகள் என முடிவெடுத்துவிட்டால் , அங்கு எதிர்பார்க்க ஏதும் இல்லை. அவர்களின் வாழ்க்கை தொடர்ச்சிகள் ஆங்காங்கே அறுபட்டது போன்ற உணர்வே என் வாசிப்பில் கிடைக்கிறது.

காந்தி கஸ்தூர் வாழ்க்கையை பற்றிய வாசிப்பை போல் , அம்பேத்கர் ரமாபாய்- அம்பேத்கர்- சவீதா வாசிப்போ, பெரியார் நாகம்மை, பெரியார்- மணியம்மை வாசிப்பு கிடைப்பதில்லை. சக தோழர்களுடன் அவர்களின் உறவியல் , உளவியல்

உரையாடல்களும், காந்திக்கு கிடைப்பது போல் இன்னும் கிடைக்கப்பெறவில்லை என்றே தோன்றுகிறது.

பெரியார் அண்ணா உறவு- விரிசல்- உறவு என்பதற்கான முழுமையான ஆய்வு இருக்கிறதா எனத் தெரியவில்லை. திமுகவின் உதயம் அதன் தொடர் இருப்பு , தனிக் கட்சி என்கிற வகையில் அதன் தாய் கட்சியிலிருந்து எந்த எந்த புள்ளிகளில் (தேர்தல் பங்கேற்பு என்கிற மிக முக்கிய புள்ளியைத் தாண்டி) வேறுபட்டு தனது தனித்தன்மையை கொண்டிருக்கிறது என்கிற ஆய்வுக்கோணம் விவாதமாகியிருக்கிறதா?

மார்க்சியர்கள் , லெனின் சோவியத் சோதனையைத் தொடர்ந்து மார்க்சியம் என்பதுடன் லெனினியம் என்கிற பின்னொட்டை சேர்த்தார்கள். சோவியத் வீழ்ச்சிக்கு பின்னர் அது மார்க்சியத்தின்

தோல்வியல்ல, சோசலிச நிர்மாண மாடல் ஒன்றின் தோல்வி என்கிற புரிதலுக்கு வந்தனர். சீனா தன் பங்கிற்கான பின்னொட்டை மார்க்சியம்- லெனினியம்- மாவோவியம் என்று சொன்னது. ஊர் அடையாளம் ஒன்று மக்களை நெருங்க தேவைப்படுகிறது என நாம் உய்த்து உணரலாம்.

இந்நூலில் கூட அண்ணாவை லெனினுடன் ஒப்பிட்டார் பெரியார் என்பது பேசப்பட்டுள்ளது. திமுக தனது கொள்கை கோட்பாடுகளில் அண்ணாவை முன்வைத்து துவங்கப்பட்டது. 1949-67 கால திக பெரியார் மற்றும் திக தலைவர்களின் எழுத்துக்கள், திமுக அண்ணா மற்றும் அதன் தலைவர்கள் எழுத்துக்கள் மூடப்பட்டு கடந்து போகப்படுகிறது. அதேபோல் பெரியார் காலத்தில் அவருடன் உறவாடி

நல் தோழர்களாகி வேறுபட்டு போன சிங்காரவேலர், ஜீவா, அண்ணா, பாரதிதாசன், கி ஆ பெ, குத்தூசி என பலரின் வேறுபட்ட நிலைப்பாடுகள் ஏன் எங்கு எதனால் , பெரியார் எதிர்வினைகள் என்ன என்பன போதுமான விவாதப் பொருளாகவில்லை. நூற்றாண்டு கால இந்திய மார்க்சியம், காங்கிரஸ் இயக்கம், ஆர் எஸ் எஸ் என்பது போலவே நீதிக் கட்சி-சுயமரியாதை இயக்கம்-திக - திமுக இன்னும் பிற என்கிற நூற்றாண்டு மரபு இருக்கிறது. இந்த தொடர்ச்சிக்குள் நடந்த விவாதங்கள் மாறுபாடுகளை அறிதல் புரிதலை மேம்படுத்தும்.

மார்க்சிடமிருந்து எதிர்த்துக்கொண்டு லெனின் என்கிற நிலை ஏற்படவில்லை. எனவே அங்கு மார்க்சுடன் லெனின் என்கிற நிலைப்பாடு உருவானது. ஸ்டாலின் வேண்டாம் என்ற நிலைப்பாட்டை தன்

இறுதி நாட்களில் லெனின் எடுத்தும், சோவியத்தில் ஸ்டாலின் வளர்ச்சியை எவராலும் தடுக்கமுடியவில்லை. லெனினிய ஆட்சி என்ற பெயரில் ஸ்டாலின் ஆட்சியை விதந்தோதியவர்களும் உண்டு. கடுமையாக விமர்சிக்கும் மார்க்சியர்களும் உண்டு.

இங்கும் அண்ணா வேண்டாம் என்ற நிலைப்பாட்டை பெரியார் எடுத்தும் அண்ணாவின் வளர்ச்சியை அவரால் தடுக்க முடியவில்லை. அண்ணா தன் பெரியார் புறக்கணிப்பு அரசியலை செய்யாமல் matured ஆக நடந்து அரசாங்கத்தை பெரியாருக்கு காணிக்கையாக்கி உறவை சீர் செய்திட முன்கையெடுத்தார். அடுத்து 7 ஆண்டுகள் மட்டுமே பெரியார் திமுகவிற்கு முழு ஆதரவை தர வாழ்நாள் அனுமதித்தது. காமராஜருக்கு 10 ஆண்டுகள் ஆதரவு தந்திருந்தாலும் அது பெரியாரின் தனித் தோழமையாக முடிந்ததே

தவிர , திக காங்கிரஸ் உறவாக மலரவில்லை. மலரவும் வாய்ப்பில்லை.

பெரியார் அண்ணா கருணாநிதி,ஸ்டாலின் என்கிற தொடர்ச்சிக்கும் , பெரியார் அண்ணா கருணாநிதி , எம்ஜிஆர், ஜெயலலிதா, எடப்பாடி என்கிற கிளை பிரிந்த தொடர்ச்சிக்கும் உள்ள ஒற்றுமை வேறுபாடுகள் இன்னும் விரிவான ஆய்வுகளாக கிடைக்கப்பெறவேண்டும்.

திராவிடத்தின் மீது ஆழ்ந்த பற்று கொண்டவர்களிடமிருந்து , எந்த பக்கங்களும் மூடப்படாமல், ஆய்வுகளின் மேசைக்கு வைக்கப்படுதல் அவசியமாகிறது.

ஆய்வும் விரிவும் என்கிற தலைப்பில் இந்து தமிழ் திசை பேச முற்பட்டிருந்தாலும், மேற்கூறிய இடைவெளிகளை இந்நூலில் என்னால் உணரமுடிகிறது. பார்க்கலாம்

ஆய்வுலகம் எப்படி அழைத்துச் செல்கிறது என்று...

நடுவில் கொஞ்சம் பக்கங்களைக் காணோம்- இம்முறையும் இந்து தமிழ் திசை பெரியார் புத்தகம், எனக்கு வந்த காப்பியில் மூன்று கட்டுரைகளுக்கான பக்கங்களைக் காணோம். ராஜாஜி தொகுப்பில் , ஒரே கட்டுரை இரு இடத்தில் போட்டதை சுட்டிக் காட்டினேன்.

பெரியார் தொகுப்பில் நடுவில் கொஞ்சம் பக்கங்களைக் காணோம். எல்லா காப்பிகளும் அப்படித்தான் தைத்து பவுண்ட் ஆனது எனத் தெரிய வந்தால் அது ஆரோக்கியமானதல்ல. இந்து தமிழ் திசை இளம் குழுவினர், இது போன்ற சிறு குறைகளில் தங்களை கவனப்படுத்திக்கொள்ள வேண்டுகிறேன்

# 16. பெரியாரின் அரசியல் நாத்திகம்

கார்த்திக் ராம் மனோகரன் எழுதிய 'Periyar A study in Political Athesim' சமீபத்தில் வெளியான புத்தகம். 130 பக்க அளவிலான சிறிய ஆங்கில புத்தகம் என்றாலும், பெரியார் ஆய்வுலகிற்கு கிடைத்துள்ள தேர்ந்த ஆக்கமாகும்.

முழுமையான பகுத்தறிவாளர் - எதிர் தத்துவவாதி என்கிற வகையில் பெரியாரின் வாழ்க்கை குறிப்புகள் மிகச் சுருக்கமாக அறிமுகப்படுத்தப்படுகிறது. சாமி சிதம்பரனாரின் பெரியார் இதற்கு ஆதாரமாக எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. பெரியார் சோவியத் போய்வந்தவரையிலான வாழ்க்கை செய்திகள் பேசப்படுகின்றன. அதற்குப் பின்னர் அவரின் அரசியல், சுயமரியாதை

போராட்டத்தன்மை பேசப்படுகிறது.

காந்தியைப்போலவே பெரியாரும் தன் கருத்துக்களை உருத்திரண்ட கோட்பாட்டுவடிவமாகவோ, அதில் ஒரு ‘consistency’ கண்டிப்பாக இருக்கவேண்டும் என்றோ நினைக்கவில்லை என்பதும் பேசப்படுகிறது. சக மனிதனுடன் அவனது சுயமரியாதைக்கு எதிரானவையாக அவர் கருதிய மதம் சாதி அதை கட்டிக்காக்கும் பிராமணியம்-பிராமணியத்திற்கு துணை நிற்கும் புனித இலக்கியங்கள், அரசியல் அரசாங்கம் எதிர்த்த உரையாடல்களை எழுத்துக்களை பெரியார் தந்தார்.

ஆய்வாளர்கள் அதில் ஏதாவது கோட்பாட்டாக்கம் செய்ய முடியுமா எனத் தேடுகிறார்கள். சில consistent அம்சங்களை கண்டறிந்து பெரியாரியம் எனத் தருகிறார்கள்.

பெரியார் பிராமணிய எதிர்ப்பு என்பதை மதம் சார்ந்த ஒன்றுடன் நிறுத்தாமல் சாதி மேலாதிக்கம், இனவாதம், அரசியல் அதிகாரம், மொழி மேலாதிக்கம், அசமத்துவம் என பல்வேறு வடிவங்களில் ஒன்றினைத்து பேசினார். இன்றளவும் பல சாதிகளை கடந்து அவரை போற்றக்கூடியவர் இவற்றை முன்னெடுத்து பேசுவதைக் காண்கிறோம்.

கார்த்திக் மனோகரன் இவ்வாறு எழுதுகிறார்

Periyar’s deceptively simple anti brahminism contained in it a critique of not just brahminical religion, but also political power, nationalism, caste hierarchies, linguistic chauvinism, gender inequalities, economic disparities and racial supremacy. It appealed to diverse audiences in his time and retains relevance even today- his followers till date cut across caste and party lines. Further he conveyed his message in simple, direct and

often coarse Tamil..

நூலாசிரியர் பெரியாரை சாக்ரடிஸ், ரூசோ, வால்டேர் என பல சிந்தனையாளர்களுடன் ஒப்பிட்டு பெரியார் எங்கு மாறுபடுகிறார் எனப் பேசுகிறார். சிலர் தத்துவ கட்டுமானங்களை செய்பவர்கள், வேறு சிலர் அக்கட்டுமானங்களை உடைப்பவர்கள் அதாவது எதிர் தத்துவவாதி (anti philosopher) வரிசையில் வருபவர்கள். மார்கஸ் இதில் வருகிறார் என டெரி ஈகிள்டன் சொல்வதை ஆசிரியர் விளக்கிவிட்டு பெரியாரையும் இந்த வரிசையில் வைக்கிறார்.

இந்த புத்தகத்தின் தலைப்பை ஒட்டிய மய்ய பொருளாய்வு இரண்டாம் அத்தியாயத்தில் அரசியல் நாத்திகம் (political Atheism) என்பதில் இருக்கிறது. அடுத்தப்பகுதி ராமசாமியும் ராமாயணமும் என்று செல்கிறது. பாவ்லா ரிச்மேன் ஆய்வில் ராமாயணம் பெரியாரின்

வாசிப்பு என்ற கட்டுரையை துணையாகக் கொண்டு இந்தப்பகுதி செல்கிறது. அடுத்த இரு பகுதிகளில் பெரியாரின் மதமாற்றம் குறித்த, அவரின் புத்தம், இஸ்லாம் குறித்த பேச்சுக்கள் சொல்லப்படுகின்றன. இறுதிஅத்தியாயம் நம் காலத்தில் பெரியார் என்ற பார்வையுடன் எழுதப்பட்டுள்ளது.

‘political Atheism’ என்கிற கட்டுரைதான் இந்த நூலின் மய்யச் சரடாக நீள்கிறது. சோவியத் செல்தல், கம்யூனிச இலக்கியங்களை வெளியிடல், மார்க்ஸ் குறித்து பேசுதல் இவையெல்லாம் நடந்தாலும், பெரியார் மார்க்சைவிட அனார்க்கிஸ்ட் ஆசான் பகுனினிடம் கூடுதலாக நெருங்கியிருப்பதாக கார்த்திக் ராம் மனோகரன் இந்த புத்தகத்தில் தன் வாதத்தை நகர்த்துகிறார்.

பெரியார் தனது பேச்சிலோ, எழுத்திலோ ஒருதடவையாவது பகுனின் குறித்து ஏதாவது

சொன்னாரா என்பது இந்நூலில் எங்கும் சுட்டிக்காட்டப்படவில்லை. பகுனின் எழுதிய 'God and State' முக்கியமான ஆக்கம். பகுனின் சிந்தனையின் அற்புத தெறிப்பான ஆக்கம். கடவுளுக்கும் அதை ஏதோவொருவகையில் காத்து நிற்கும் அதிகாரத்திற்குமான உறவு குறித்த பேச்சில் பெரியார் பகுனின் அவர்களின் இந்த ஆக்கத்திற்கு நெருக்கமாக வருகிறார் என்ற புரிதலை இந்நூல் தருகிறது. மதம் குறித்து மார்க்ஸ், லெனின் பேசியமைக்கும் பகுனின் பார்வைக்கும் ஆன புரிதல்களை சொல்லிவிட்டு, பெரியார் பகுனின் பார்வையுடன் நெருக்கமாக இருப்பதாக மனோகரன் முடிவிற்கு வருகிறார். இதையும் மனோகரன் இவ்வாறு தருகிறார்.

While Periyar hopes that the state will be abolished in the future, unlike the Bakuninists, he does not take any immediate steps to try to abolish the same. His

organizational strategy was to hold politics accountable to society... subaltern communities’ power to change things than a vanguard capturing power over society

மேற்கூறிய வேன்கார்டிசம் என்பது லெனினிய வகைப்பட்ட கருத்து என்பதை அறிவோம். அகில் பில்கிரேமி இதை காந்தி குறித்த ஆய்வில் வெளிப்படுத்துவார். ஆனால் சற்று மாறுபட்டு வெளிப்படுத்துவார். ‘வேன்கார்டிசம்’ என்பதற்கு மாறாக ‘ex-emplariness’ தானே முன் நின்று ஒன்றை செய்துகாட்டுவதன் மூலம், சரி என மற்றவர் நினைத்தால் அவர்களும் துணை நிற்பர் என்கிற முறை. இதை பெரியார் செய்தாரா என்பதை மதமாற்ற ஆலோசனையில் பார்க்கமுடியவில்லை. பிறருக்கான உபதேசமாகவே பெரியாரின் மதமாற்ற அறிவுரை நிற்கிறது.

அம்பேத்கர் இதில் தன் ‘எக்சம்பளரி’

தன்மையை புத்தமதம் தழுவுதல் மூலம் தானே முன் உதாரணமாக நின்றார். பிறருக்கு பேசும் ஒன்றில் தான் உதாரணமாக நிற்றல் என்பதில்- மதமாற்ற கருத்தில் பெரியார் அப்படி நிற்கவில்லை. இந்து மதத்திலிருந்து வெளியேறிவிட்டால் இவ்வளவு சுதந்திரமாக தன்னால் விமர்சிக்கமுடியாது என்பதில் பெரியார் தற்காப்பை தேடவேண்டியிருந்தது.

பெரியார் மற்றவர்களுக்காக பேசியவற்றில் தான் சொன்னபடி நடக்க முடியாமல் போன அம்சங்கள் குறித்த உரையாடல் தொகுக்கப்பட்டு ஏதேனும் இருக்கிறதா எனத்தெரியவில்லை. தான் சொன்னபடி தானே நடப்பதில்லை என்பதை அறநெறியாக பார்க்கும் பார்வை அவரிடம் காந்தியிடம் தொழிற்பட்டதைப்போல 'creed' ஆக இருந்ததை உணரமுடியவில்லை.

தோழர்கள் எஸ்விஆர் கீதா வந்தடைந்த

பெரியாரும் மார்க்சும் நெருக்கமானவர்கள் என்பதிலிருந்து மனோகரன் மாறுபடுவதைக் சுட்டிக்காட்டியுள்ளார். பெரியார் கம்யூனிசம் மற்றும் சோசலிசத்திற்கு எதிரானவர் அல்ல என தன்னை பலமுறை அறிவித்துக்கொண்டுள்ளார். அதேநேரத்தில் இந்திய கம்யூனிச தலைவர்களில் பலர் பிராம்மணர்களாக இருப்பதை சுட்டிக்காட்டி தன் விமர்சனங்களை வைத்துள்ளார். பிராம்மணியத்தை வைத்துக்கொண்டு கம்யூனிசம் பேசமுடியாது என்பதில் பெரியார் உறுதிபட நின்றார்.

மார்க்சியத்தின் சர்வதேசியத்தன்மை என்பதை அப்படியே பொருத்துவதை பெரியார் ஏற்க மறுத்தார். அது இந்திய சாதி- பிராம்மண மேலாண்மையை புரிந்துகொள்ளத்தவறுகிறது என அவர் விமர்சித்தார். பெரியாரின் முதலாளித்து

எதிர்ப்பில் பிராம்மணிய முதலாளித்துவ ஒழிப்பு என்ற நிகழ்ச்சிநிரல் இருந்தது. வெறும் முதலாளித்துவ ஒழிப்பு என்பதை அவர் ஏற்க மறுத்தார்.

பிராம்மண இறையியல் அரசியல் (Political Brahmin Theology) என்பதற்கு மாற்றான நாத்திக அரசியல் (political Atheism) என்பதை பெரியாரின் சாரமாக இந்த நூல் முன்வைக்கிறது. திராவிடர்கள் அனைவரும், ஆதிதிராவிடர்கள் இஸ்லாமியராக மதம் மாறவேண்டும் என பெரியார் பேசியிருப்பார். ஆனால் அவை பெரியாரின் அடிப்படை சாரமல்ல- ‘moments and context based not essence of Periyar’ என இந்நூல் வாதாடுகிறது.

அனைவரும் இஸ்லாமியராக மாறிவிட்டால் பிராம்மணியம் இருக்காது- ஏற்றத்தாழ்வு போய்விடும் என பெரியார் பேசியதன் மீது மனோகரன் விமர்சன

பார்வைகொள்ளாமல் இல்லை. அது 'வாயடிப்பு' எனச் சொல்லாமல் இல்லை. அங்கு ஏற்றத்தாழ்வுகள் இருப்பதைக் குறித்தும், கோல்வால்கர் பேசுவதுபோலவே சையத் குதுப் போன்ற ராடிகல் இஸ்லாமியர் பேசுவதையும் மனோகரன் சுட்டிக்காட்டாமல் இல்லை.

மனோகரன் இந்நூலின் வாதங்களை இப்படி தொகுத்து முன்வைப்பதாக புரிந்து கொள்ளலாம்.

பெரியாரின் பிராம்மண எதிர்ப்பு என்பது அரசியல் நாத்திகமாகும். அது பிராம்மண அரசியல் இறையியலை துவம்சம் செய்கிறது.

கடவுள்- மதம் குறிப்பாக இந்து சார்ந்தவற்றை- அதன் அரசியல் அதிகாரத்தை விமர்சிக்க பெரியார் தனது பரிபூர்ண சுதந்திரத்தை உணர்ந்தது. அதே நேரத்தில்

குன்றக்குடி அடிகளார் போன்றவர்களுடன் இணைந்து பணியாற்றுவதை தவிர்க்காதது.

அவரது அரசியல் நாத்திகம் சமத்துவத்தை முன்வைப்பதாக இருக்கிறது.

பெரியார் வறட்டுக்கோட்பாட்டுக்குள் தன்னை தாழிட்டுக்கொள்ளது – ‘anti philosopher-critically examining political theology’ என்ற வகையில் செயல்பட்டது.

பெரியாரியம் என்பது உலகளாவிய விவாதப்பொருள் கொண்டவை. அவர் மார்க்சியத்தைவிட அனார்க்கிசம்-மார்க்சைவிட பகுனினிடம் நெருக்கமாக வருகிறார்.

இந்தியாவில் பிராம்மணியம் தான் ஆளும் அரசியல் இறையியல் (ruling political theology)

கார்த்திக் ராம் மனோகரனின் இந்த நூல் தமிழ் உலகில் விரிவாக

வாசிக்கப்படவேண்டும் என வேண்டுகிறேன். காந்தியையும் அனார்க்கிஸ்ட் என வகைப்படுத்துவோர் உண்டு. அவரை அப்படி வசவுப்பொருளில் சங்கரன் நாயர் விமர்சித்து எழுதியதும் உண்டு.

சிகாகோ தியாகிகளை அவர்களது கிடைத்த எழுத்துக்கள் உரைகள் முலம் நாம் அவர்கள் அனார்க்கிசத்திற்கு நெருக்கமாக வந்தார்கள் என பார்க்கமுடியும். பகத்சிங்கும் மார்க்ஸ்- லெனின் வாசிப்பை கொண்டிருந்தாலும் அனார்க்கிசம் செல்வாக்கில் இருந்தார் என்பதையும் பார்க்கமுடிகிறது. அரசாங்க அதிகாரம் என்பதுடன் நெருங்காமல் அதை கேள்விக்கு உட்படுத்தும் பலர் அனார்க்கிசத்துடன் நெருக்கமாக இருப்பதை உணரலாம். மனோகரனுக்கு பெரியார் வாசிப்பு அப்படியொரு உணர்வை கொடுத்துள்ளதை

இந்த நூல் விதந்து பேசுகிறது. 24-9-2022

# 17. பெரியார்- பாவலரேறு பெருஞ்சித்திரனார

அக் 2023

பாவலரேறு பெருஞ்சித்திரனார் தமிழ் புலமையை பலரும் அறிந்திருக்கக்கூடும். பாவாணருடன் பயணித்தவர். அவருடன் முரண்பட்டவரும் கூட. மொழிஞாயிறு பாவாணர் என்கிற நல்ல அறிமுக நூலையும் அவர் எழுதியவர். திருக்குறள் மெய்ப்பொருளுரை மற்றும் ஆரியர் கொட்டங்கள் உள்ளிட்ட 20க்கும் மேற்பட்ட நூல்களை தனித்தமிழில் தந்தவர். தனித்தமிழ் இயக்கத்தை இதழ்கள் வழி உயர்த்தியவர்.

பாவலரேறு அவர்கள் தென்மொழியில் அவ்வப்போது எழுதிய பெரியார் குறித்த

கட்டுரைகளை தொகுத்து , அவர் மறைவிற்கு பின்னர் வெளியிட்டுள்ளனர். முதல் பதிப்பு 2005லும், அடுத்த பதிப்பு 2015லும் வந்தது. பெரியார் குறித்து மிக உயர்ந்த மதிப்பீடுகளையும், போற்றுதல் செய்யும் ‘நலங்கூர் நாவினர்’ என்கிற பாவையும் பெருஞ்சித்திரனார் எழுதியுள்ளார். அதேபோல பெரியாரிடம் அவர் வேறுபட்டு செய்திருக்கிற விமர்சனங்களையும் இந்த நூலில் பார்க்கமுடியும்.

நலங்கூர் நாவினர்- நுரைப்பஞ்சின் நரைதாங்கி, நெறியாற்றின் நெஞ்சு படர, வெய்யினும் மழையினும் விதிர்க்கும் பனியினும், தொல்குடிமை கட்டழித்த ஆரியத்தை அடிதுமித்து என்று அப்பாடல் செல்கிறது. இப்பாடலில் பெரியாரின் இறைமைக்கொள்கையை பாவலரேறு ஏற்காமையைக் காட்டுகிறார். எனினும்

பிறர்க்கு அருமையானவற்றை செய்கின்ற தன்மையாலேயே இவர் பெரியார்-முதுமையான் வந்தன்று எனவும் மொழிவார். இப்பா தென்மொழி 1970 இதழ் ஒன்றில் வந்தது.

…“தமிழகம் வள்ளுவர் பலரைக் கண்டிருக்கலாம். கம்பர் பலரைப் பார்த்திருக்கலாம். இளங்கோவடிகள், மாணிக்கவாசகர் போலும் சமயத் துறவியர் பலரப் பெற்றிருக்கலாம். ஆனால் ஒரே ஒரு பெரியாரைத்தான் அது பெற்றுத் தந்திருக்கிறது”..” அவரால் தொண்டு என்னும் சொல்லுக்குரிய முழுப்பொருளையும் உருவாக்கிக் காட்டமுடிந்தது” தென்மொழி 1971 இதழ் ஒன்றில் எழுதியதைக் காண்கிறோம்.

” ..சாக்ரடீசு, புத்தர், திருவள்ளுவர், ஏசு, நபி, காந்தி போலும் காலத்தின் எல்லையாக அமர்ந்துவிட்டவர் பெரியார். அவர்கள்

செய்த அருஞ்செயல்களைவிட ஒருபடி மேலாகவே செய்தார் பெரியார். அவர்கள் நன்மைகளை செய்தார்கள்; பரப்பினார்கள். ஆனால் பெரியார் தீமைகளையே எதிர்த்துப் போரிட்டார். விதைகளைத் தூவுகிறவர்களைவிட, மண்டிக்கிடக்கும் களைகளை அகற்றுபவனுக்கும், முட்களை வெட்டியெறிபவனுக்கும், கற்களைப் பொறுக்கி அப்புறப்படுத்துபவனுக்குத்தான் வேலைகள் மிகுதி. முயற்சிகள் மிகுதி. உடலுழைப்பு ஏராளம்" (தென்மொழி செப் 1978)

இனி பாவலரேறு பெரியார் குறித்து எழுதிய விமர்சனங்களை சிறிதளவு பார்ப்போம்.

..பெரியாரின் வரலாற்றை பெரியார் எழுதிக்கொண்டிருக்க போவதில்லை. அவர் இறுதி நாட் செயல்கள் வரலாற்றில்

படியப்போகும் கறையாகும் (காமராஜருக்காக திமுக எதிர்ப்பில் காங்கிரசை ஆதரித்தபோது) -தென்மொழி 1966 இதழ் சுவடி 4 ஓலை 2

” திரு வி க இவரிடம் (பெரியாரிடம்) ஏன் ஐயா திராவிட நாடு திராவிடருக்கே என்று கூறுகின்றீர்கள். தமிழ்நாடு தமிழர்களுக்கே என்று கூறினால் நாங்களும் உங்களுடன் இணைந்து கொள்வோமே என்று கூறினாராம். பா வே மாணிக்கம் நாயக்கர் அவர்களும் திரு வி க கருத்து சரியே என்றாராம். திரு வி க எழுந்து போய் வந்தாராம். அவர் வருவதற்குள் ஈ வே ரா, மாணிக்கம் நாயக்கர் அவர்களிடம் ஏன் ஐயா, நீங்களும் அவரோடு சேர்ந்துகொண்டு, தமிழ் நாடு தமிழருக்கே என்று கூப்பாடு போடச் சொல்கிறீர்களே, அப்படியே தமிழ்நாடு கிடைத்தால் அதில் உங்களுக்கும் எனக்கும் எப்படி ஐயா இடமிருக்கும்? முதலில் நம்மையன்றோ

தெலுங்கு நாட்டிற்கும் கன்னட நாட்டிற்கும் ஓடச் சொல்லுவார்கள். இது தெரியாமல் பேசுகின்றீர்களே என்று கூறினாராம் பெரியார்..”

” பாவாணர் ஒருகால் தாம் எழுதிய ஓர் அரிய ஆராய்ச்சி நூலை அச்சிட இவர் உதவி கேட்டார். இவரோ (பெரியார்) பண உதவி செய்யமுடியாது. அதை அச்சிட்டுக் கொண்டு வாருங்கள், நான் விற்றுத்தருகிறேன் என்று கூறினாராம். பாவாணர் அவர்களும் அதை மெய்யென்று நம்பி தம் துணைவியார் கழுத்தில் கிடந்த பொன் தொடரியை விற்று அதை அச்சிட்டுக்கொண்டு போய், விற்றுக்கொடுக்கக் கேட்டாராம். பெரியார் இரண்டு மூணு உருபா மதிக்கப்பெறும் அந்நூலை நான்கணா மேனி விலைக்குக் கேட்டாராம். இது போன்ற நிகழ்ச்சிகள் நிறைய உள ”

” தமிழில் என்ன இருக்கின்றது என்று கேட்கும் வெறுப்புக்கொள்கை தான் இவர் காணும் பகுத்தறிவு என்றால் அப்பகுத்தறிவு நமக்கு வேண்டுவதில்லை…பொது மக்களின் அறியாமைகளை இவர் நன்கு உணர்ந்தவர் என்பதாலேயே, அறிஞர்களின் அறிவை இவர் நன்கு உணர்ந்தவர் ஆகிவிடார்…இற்றைத் தமிழகத்தில் நிலவியிருக்கும் பண்பாட்டுத் தாழ்விற்கு இவரும் இவரின் மட்டையடி செய்கைகளும் கூட ஓரளவு காரணம் என்று கூறலாம்”

” பெரியார் ஈ வே இரா ஒரு குமுகாயச் சீர்திருக்காரர், பகுத்தறிவு வழிகாட்டி. அவர் பேராசிரியரோ அறிவியல் அறிஞனோ அல்ல..”. தென்மொழி 1967 சுவடி 5 ஓலை 3

பாவலரேறு தன் மதிப்பீட்டு சமனை வேறு ஒரு கட்டுரையில் இவ்வாறு தருகிறார்.

” நம்மை பொறுத்த மட்டில் பெரியார் குமுகாய சீர்திருத்தத்தில், பிராமண சூத்திர பெரும் போராட்டத்தில் பெரியார் தாம். அதில் ஐயமில்லை. ஆனால் மொழி பற்றியோ, தமிழர் வரலாறுபற்றியோ, பிற அறிவியல் செய்திகளைப் பற்றியோ பேசுவதில் அவர் சிறியாரே. அவர் முதியவர், தலைவர் சீர்திருத்தக்காரர் என்பதற்காக அவரை எவ்வளவு போற்றுகிறோமோ, அவ்வளவு பிற துறைகளில் தலையிட்டுக் கருத்தறிவிப்பதற்காக அவரைக் கண்டிக்கிறோம்”

அளவில் சிறிய 120 பக்கங்களைக் கொண்ட நூல்தான். ஆர்வமுள்ளவர் படித்தறியலாம்

# 18. The Political Carreer of E V Ramasami Naicker

டாக்டர் விஸ்வநாதன் (E Sa visswanathan) அவர்கள் எழுதிய ‘The Political Carreer of E V Ramasami Naicker’ புத்தகத்தின் 40 ஆம் ஆண்டை நாம் கடந்து கொண்டிருக்கிறோம். இந்த 40 ஆண்டுகளில் இந்த புத்தகம் பெரியார் குறித்த பொது புத்திக்கு பெரிதாக ஏன் எடுத்துச் செல்லப்படவில்லை எனத் தெரியவில்லை. பெரியார் குறித்த ஆய்வுலகில், குறிப்பாக ஆங்கில மொழி ஆய்வில் இப்புத்தகம் பேசப்பட்டுக்கொண்டிருக்கிறது. ஆனால் தமிழில் பேசக்கூடியவர், எழுதக்கூடியவர் அதிகமாக இதை எடுத்துச்சொல்லி பேசாமல் விடுவதைக் காணமுடிகிறது.

விஸ்வநாதன் தனது ஆஸ்திரேலியா

பல்கலை டாக்டர் பட்டத்திற்காக மேற்கொண்ட ஆய்வுதான் (1968-72) 1983 ல் இந்த நூலாக்கமாக வெளிவந்தது. விஸ்வநாதன் சென்னையில் பிறந்து , சென்னை பல்கலையில் 1959 ல் எம் ஏ பட்டம் பெற்றவர். பின் மலேசியா, ஆஸ்திரேலியா, கானா, நைஜீரியா என பல்வேறு நாடுகளில் பேராசிரியப்பணியை செய்தவர் என்கிற விவரம் கிடைக்கிறது.

இந்த புத்தகம் பெரியாரின் -தமிழக அரசியலில் பெரியாரின் வருகை பங்களிப்பு என்கிற அவரது அரசியல் வாழ்க்கையை 1920-1949 கால எல்லைக்குள் நின்று செய்துள்ளது. இதில் பெரியார் என்கிற ஆளுமை மீதான வசைப்பாடல்கள் என்கிற சார்புச் சாய்வு (bias) இருக்காது. அதேபோல் அவருக்கு பீடம் எழுப்பி ஆரத்தி காட்டும் துதிகளும் இருக்காது. தனக்கு கிடைத்த, தான் கடுமையாக

தேடித்தேடிப் பெற்ற ஆவணங்களின்வழியாக, பல்வேறு பிரமுகர்களின் உரையாடல் வழியாக பெரியாரின் அரசியல் வாழ்வை தொகுத்து கட்டமைக்கிறார் விஸ்வநாதன்.

இப்படி இயன்றவரை நேர்மையான பதிவு என்பதால் கூட, விஸ்வநாதனுக்கு ஆசிரியர் எனச் சொல்லப்பட்ட புகழ் வாய்ந்த ஏ எல் பாஷம் மிகச் சிறிய முன்னுரையை இதற்கு தந்துள்ளார். முன்னர் இணையத்தில் இந்த புத்தகத்தை புரட்டியபோது, எப்படி பாஷம் எழுதியதை தவற்விட்டேன் எனத் தெரியவில்லை. இப்போது மீண்டும் வாசிக்க ஆரம்பிக்கையில், பாஷம் தலையிட்டு இருப்பதை பார்த்தப் பின்னர், இந்த புத்தகம் மீது மரியாதை கூடியதை உணர்கிறேன். இதை மேற்கின் பாசம் பக்தி எனக் கருதவேண்டாம். முறையியல் ஆய்விற்கு (Methodology) கொடுக்கும் மரியாதை எனக்

கருதலாம்.

400 பக்க அளவிலான இந்த புத்தகம் இணையத்தில் கிடைக்கிறது. காலச்சுவடில் எழுதிவரும், நெல்லை சீனிவாசன் எனக்கு கொடுத்த புத்தகம். அவருக்கு நன்றி. பாஷம் 1982ல் , அமெரிக்க பேராசிரியராக இருந்தபோது இந்த புத்தகத்திற்கான இரு பக்க முன்னுரை எழுதியிருக்கிறார். பாஷம் எழுதியதிலிருந்து சில வரிகளை சாரமாக இந்த பதிவில் தந்துள்ளேன்.

” மறைந்த ராமசாமி நாயக்கர் இந்திய வரலாற்றில் தனித்த மனிதர். மற்ற சீர்திருத்தக்காரர்கள் போல் இல்லாமல், இந்து மதம் குறித்த தாக்குதலை அதன் வேரிலேயே செய்தவர். அது கடுமையான, தகாத வார்த்தை தாக்குதலாகவும் அமைந்தது.

அரசியல் உலகிலிருந்து

அப்புறப்படுத்தப்பட முடியாத அவர், சாதி- இந்து மதம் குறித்த விமர்சனங்களுக்காக நினைவு கூறப்படுவார். அவரின் தென்னிந்திய அரசியலுக்கான பங்களிப்பு இன்னும் போதுமான அளவு பேசப்படாமல் இருக்கிறது. அவரது அரசியல் கம்யூனிச வடிகட்டல் என்கிற பார்வையில் வலது நோக்கி கொஞ்சம் நகர்ந்தாலும், அவரது சமூக மதம் குறித்த பார்வை மாற்றமின்றி தொடர்ந்தது.

ராஜாஜியுடனான அவரது உறவு ஆர்வமூட்டக்கூடிய ஒன்று. அண்ணா கருணாநிதி என்பவர்களுடன் இணைந்து செல்லக்கூடிய தமிழ் தேசிய இயக்கம் அவர்களின் தலைவர் இவர் என்ற அளவில் இவருக்கு கடமைப்பட்டுள்ளது. பாஷம் தன் வரிகளை இந்நூல் குறித்து கீழ்கண்ட மதிப்பீட்டுடன் முடித்திருப்பார். அவ்வரிகள்:.

The author ( visswanathan) to my knowledge does

not support Ramasami Naicker’s philosophy by any means, any more than I do myself. He is a believing Hindu and hence it is the more to his credit that he has given the world so sympathetic an account of the life of a very earnest, good and sincere man, who with burning faith ( perhaps anti faith) unceasingly struggled against something which he considered harmful to his fellow men.

பாஷம் எவ்வளவு கச்சிதமாக தனது மொழியை பயன்படுத்தியுள்ளார் - காய்தல் உவத்தல் இல்லாமல், மிகைப்படுத்தாமல், தான் உணர்ந்த ஒரு மனிதரை, மனித நடமாட்ட நிலையில் வைத்து எடை போட்டுப்பார்க்கும் எழுத்தை தருகிறார். வரலாற்றாய்வாளர் என வருகிற எவருக்கும் பாஷம் எழுத்து முறை நல்ல மாதிரியைத் தரும் .

முடிந்தவரை உள்ளது உள்ளபடி, வரலாற்றில் பெரும் உயரம் சென்றவர்களின்

வாழ்க்கைச் சுவடுகள் நமக்கு கைமாற்றித் தரப்படவேண்டும். அப்படித் தரப்படும்போது, தேர்ந்த வாசகன் மேம்பட்ட புரிதலை நோக்கி நகர்வான். அவனும் தன் பங்களிப்பை கைமாற்றித் தந்து செல்வான்.

இந்த புத்தகத்தின் 40 ஆம் ஆண்டில் , ஆர்வமுள்ள பலரால் வாசிக்கப்படலாம் எனக் கருதுகிறேன்...

The political career of E V Ramasami Naicker by Dr E Sa visswanathan, ஏராள தகவல்களுடன் பின்னப்பட்டுள்ள புத்தகம். அதிகம் சொல்லப்படாத ஒரு செய்தி இதில் விஸ்வநாதனால் தரப்பட்டுள்ளது. நீதிக் கட்சி தலைவர்களும் அனைத்திந்திய அளவில் ஒத்தக் கருத்துக்கொண்டவர்களை அணுகி கட்சி ஒன்றை அமைக்கலாம் என 1920 களில் முயற்சி எடுக்காமல் இல்லை. அவை பலனைத் தரவில்லை. மீண்டும் சைமன் கமிஷன்

வந்து போன பின்னர், வட்டமேஜை மாநாட்டில் பெடரல் சிந்தனை தீவிரமாக விவாதிக்கப்பட்ட தருணத்தில், ராமசாமி முதலியார் ‘formation of federal party’ என்பதை வலியுறுத்தினார். சரிந்து வரும் ஜஸ்டிஸ் கட்சி செல்வாக்கை தடுக்க இது உதவலாம் என்பது அவரது தரப்பாக இருந்தது.

அடுத்து எழுந்த பிரச்சனை நீதிக் கட்சி அமைப்பு விதிகளில் பிராமணர்களை சேர்ப்பது குறித்த சர்ச்சை. பெரும் விவாதத்திற்கு பிறகு பெரியாரும் தனது தோழர்களிடம் சுய மரியாதை குழுவினர் இதில் பிடிவாதம் காட்டவேண்டாம் எனத்தெரிவித்ததாக விஸ்வநாதன் எழுதுகிறார்.

1935 சட்டப்படியிலான மாகாணத்தேர்தலில் காங்கிரசும் பங்கேற்பது என்ற முடிவு எடுத்தவுடன், பெரியார் தனது பத்தம்ச கோரிக்கைகளை

காங்கிரஸ்- நீதிக்கட்சி இரண்டில் எவர் ஏற்கிறார்களோ அவருக்கு ஆதரவு எனச் சொல்லத்துவங்குகிறார். இந்த பத்தமச திட்டத்தை நீதிக்கட்சியின் செயற்குழு நவம்பர் 1935ல் சென்னையில் கூடி விவாதித்தது. பொப்பிலி ராஜா போன்றவர், காங்கிரசின் செல்வாக்கை எதிர்கொள்ள பெரியார் தங்களுடன் இருப்பதை விரும்பினர்.

பொப்பிலி மற்றும் ராமசாமி நாயக்கர் இருவரும் இணைந்து திட்டத்தை இறுதிப்படுத்துவது, ஜனவரி 1936ல் சந்திப்பது என நீதிக்கட்சி செயற்குழு முடிவெடுத்தது. இதில் ராமநாதன் போன்றவர் அதிருப்தி அடைந்து எதிர்ப்பு தெரிவித்தனர். சத்தியமூர்த்தி, காங்கிரசின் கராச்சி தீர்மானத்தின் சாயலில் ஒன்றை எழுதி பெரியார் தனது திட்டம் என்கிறார் என நவம்பர் 19, 1935ல் விமர்சித்தாராம். பெரியாரின்

ஆதரவைப்பெற்ற போதும், நீதிக்கட்சியால் வெற்றி பெற இயலவில்லை. காங்கிரஸ் அமோக வெற்றி பெற்றது.

இப்புத்தகத்தில் பக் 360ல் appendix 5 ‘Ramasami Naicker’s Ten point programme’ கொடுக்கப்பட்டுள்ளது.

ஆலைகள் தேசியமயம், கந்துவட்டி ஏஜெண்ட்களிடமிருந்து காப்பற்ற கூட்டுறவு முறை, விவசாயிகளை கடனிலிருந்து காப்பாற்றுதல், அனைத்து குழந்தைகளுக்கும் குறைந்தபட்சக் கல்வி, குடி பழக்கத்திலிருந்து மக்களை விடுவித்தல், லோக்கல் போர்ட்-நகராட்சி- கூட்டுறவு துறைகளுக்கு அதிக அதிகாரம், வருவாய் அற்றவர்களிடம் எந்த வரியும் செய்யாமை போன்ற பல அம்சங்கள் அத்திட்டத்தில் இடம் பெற்றுள்ளன. அவர் சோவியத் சுற்றுப்பயண செல்வாக்கிலிருந்து முற்றிலும் விடுபடாமையை இதில்

காணமுடிகிறது.

வேறு இரண்டு சுவையான அம்சங்கள் அரசு ஊழியர் சம்பளம், மதம் குறித்து அதில் இருக்கின்றன. விஸ்வநாதன் கொடுத்த வரிகளை தந்துள்ளேன். அரசாங்க ஊழியர்க்கு அதிகமாக கொடுக்கப்படும் சம்பளத்தால் ஏற்படும் விளைவுகள் பற்றிய எச்சரிக்கையாக அதை எடுத்துக்கொள்ளலாம்.

In as much as the salaries paid to Govt servants are likely to spoil the purity of minds of the people by making them greedily aspire for them, and in as much as they are unbearably heavy for the economic conditions of India, they should be reduced as to barely meet the necessaries of life..

மதத் தலையீடு பற்றியுள்ள அம்சம் குறித்த வரிகள் மதம் தனிப்பட்ட விவகாரம், அவை அரசியலில் தலையிடக்கூடாது என்பதைப்

பேசுகிறது.

”6. Religion should be treated as a personal affair and religious institutions should be treated as private ones. They should have no connection or significance whatsoever with the politics and administration of the State. The State should incur no expense whatsoever or show any partiality or give preference or privilege or make special provisions on account of any caste or religion ”

விஸ்வநாதன் அவர்களின் நூல் பெரியார் குறித்த நல்ல ஆய்வு நூல்களில் ஒன்றாக இன்றளவும் இருப்பதை படிப்பவர் உணரலாம்.

(அக்டோபர் 2023)

# 19. வ.ரா வாசகத்தில் ராஜாஜியும் பெரியாரும்

வ.ராமசாமி என்கிற வ.ரா அவர்கள் எழுதிய ‘தமிழ்ப் பெரியார்கள்’ என்பதில் 12 பெரியவர்களைப் பற்றிய பதிவிருக்கிறது. ராஜாஜி, பெரியார், திருவிக, வரதராஜூலு நாயுடு, டிஎஸ் எஸ் ராஜன், ஜார்ஜ் ஜோசப், சத்தியமூர்த்தி, வ.உ.சி, எஸ் எஸ் வாசன், கேபி சுந்தராம்பாள், என் எஸ் கே, ராமலிங்கம் பிள்ளை என அவரது பட்டியல் அதில் இடம்பெற்றுள்ளது.

வ.ராவை அக்கிரகாரத்து அதிசய மனிதர் என அண்ணா போற்றியதை அறிவோம். 1933-34ல் சொக்கலிங்கம் அவர்கள் நடத்திய காந்தி இதழில் இந்தப் பதிவுகள் வந்தன. 1943ல் நூல்வடிவம் பெற்றதாக அறிகிறோம்.

வரா தான் பெரியார்கள் என்பவர்களை எப்படி மதிப்பிட்டு பொறுக்கினேன் என்பதை விளக்குவார்.

” ஜனசமூகத்தை தங்கள் வாழ்க்கையின் மூலமாக மாறச் செய்பவர்கள் பெரியார்கள். இதை அவர்கள் அறிந்தும் செய்யலாம். அறியாமலும் செய்யலாம். என்றாலும் அவர்களுடைய வாழ்க்கையினால் , ஜனசமூகத்தில் கண்ணால் பார்க்கக் கூடிய மாறுதல்கள் ஏற்பட்டுவிடுகின்றன...அனுகூலம் எதுவும் இல்லாமல் பிரதிகூலங்களுக்கு மத்தியில் வாழ்ந்தும், வீறுகொண்டு எழும் பேர்வழிகள் பெரியார்கள் என்பதில் சந்தேகமே இல்லை. அவர்கள் சொந்த முயற்சியால் முன்னுக்கு வந்தவர்கள். ஒவ்வோர் அளவில் மேதாவிகள். சரித்திரத்தில் இடம்பெறக்கூடிய காரியங்களைச் செய்தவர்கள்”

வராவிற்கு இந்தப் பெரியவர்கள் பட்டியலில் இன்னும் எழுதக்கூடியவர்கள் இருந்திருக்கிறார்கள் . இந்த வரையறையில் வ.ரா வும் சேர்க்கப்படக்கூடியவரே. வ.ரா வின் இந்த 12 பதிவுகளிலிருந்து ராஜாஜி மற்றும் பெரியார் எனும் இரண்டு பதிவுகளை மட்டும் இக்கட்டுரையில் அறிமுகமாக வைத்துள்ளேன். வ.ரா வின் துலாக்கோல் நெறிக்கு நேர்மைக்கு இவை மாதிரிகளாக எனக்குப்பட்டன.

ஆரம்பத்தில் ராஜாஜி இருந்தது பற்றி வரா எழுதுகிறார். கன்னடம் ஒட்டிய பகுதி சார்ந்த ‘ஆபாசத் தமிழ்’ (கொச்சை) பேசி சத்தியமூர்த்திக்காக அன்னிபெசண்ட், சரோஜினி எதிர்ப்பைக் காட்டியவர். இதன் மூலம் சர்க்காரை திரும்பி பார்க்க வைத்தவர். பின்னர் பார்த்தால் ராஜாஜியின் சுத்த தமிழ் ஆளை வெருட்டியது என்றார் வரா. அவரிடம் எப்படி மாற்றம் உருவானது என்பதை வ.ரா

சொல்வார்.

அன்னிபெசண்ட், வாடியா விடுதலையாகின்றனர். சேலம் வழி சென்னை போகிறார்கள் என்ற தகவலால் சகத் தோழர்களுடன் தடையை உடைத்துக்கொண்டு ராஜாஜி பிளாட்பாரம் செல்கிறார். வாடியாவை பார்த்து கைகுலுக்கிவிட்டு சந்தோஷம் என்று திரும்பிவிட்டார். வெள்ளைத்தோல் மீது அன்று துவேஷமா ? இருந்திருக்கலாம். அன்று அப்படியிருந்தார். இன்று உலக சகோதரத்துவம்தான் என ஆச்சாரியார் பேசுகிறார் என வரா சொல்வார். ஆச்சாரியார் காலத்தோடு வளர்ந்தவர். பெரிய தன்னம்பிக்கை அவரிடத்து இயற்கையாக கிடையாதென்கிறார் வ.ரா.

விஜயராகாவச்சாரி எனும் கிழச்சிங்கம் ராஜாஜிக்கு கொடுத்த நம்பிக்கையை வ ரா விவரிக்கிறார். ராஜாஜிக்கு

கடுஞ்சுரம். ஜென்னி கண்டது. படுத்த படுக்கை. கிழச்சிங்கம் பார்த்துவிட்டு பேசியது “ராஜகோபாலாச்சாரி- இது என்ன முட்டாள்தனம்! ஜன்னி வந்து சாவதற்கு யாருக்கும் புத்தியும் தைரியமும் வேண்டியதில்லை. பிழைத்திருக்கத்தான் திடசங்கல்பம் தைரியம் வேண்டும். சந்தர்ப்பத்தை கைவிட்டுவிடாதேயும். சங்கற்பம் செய்துகொள்ளும். சரிப்பட்டு போய்விடும்” இதைச்சொல்லிவிட்டு வரா சொல்கிறார் சரியான நோயாளி. சரியான மருந்து சரியான வைத்தியர் என்று.

ஆச்சாரியர் உள்ளன்பு ஊற்று ஓட்டமில்லாத இயந்திரம் என்பது புனைவு. அவர் தொட்டால் சுருங்கி பச்சிலை போன்ற சுபாவம் கொண்டவர். அது அவரின் பழக்கமாகிய ஒன்று. அது ஒட்டிக்கொள்ளும் குணத்தையும் கொண்டிருக்கும்.

நாயுடு வழக்கு மதுரையில் என்பதை அறிவோம். அதற்கு ராஜாஜிதான் வாதாடுவதற்கான கடமையை ஏற்றுக்கொண்டவர். நாயுடு நன்றாக தூங்கிவிடுவார். வக்கீல் ராஜாஜிக்கு தூக்கம் வராது. பாரிஸ்டர் ஜோசப்புடன் விழித்துக்கொண்டு வழக்குப் பற்றியே பேசிக்கொண்டிருப்பார். நீதிபதியின் நற்குணம் நாயுடுவிற்கு 15 மாத காவல் என்றது. என்ன இது இப்படி நாயுடு இல்லாமல் திரும்புகிறோம் என ராஜாஜி கண்ணீர் விடுகிறார். சமாளித்துவிட்டு நாயுடுவிற்கும் பாக்கியம் என்கிறார். ஜோசப் சரிசரி நடவுங்கள் என்று பேச்சை மாற்றி அழைத்துச் செல்கிறார் என வ.ரா அற்புதமாக இந்தக் காட்சிதனை வர்ணித்துள்ளார்.

இனி வக்கீல் தொழில் வேண்டாம். தேசத்தொண்டே குறி என முடிவெடுத்த

சூழலில் கட்சிக்காரர் ரூ 3000 பணத்துடன் வந்து நின்று வாதாட வா என்கிறார். மூவாயிரம் என்பதெல்லாம் அப்போது பெரும் பணமல்லவா? ராஜாஜியின் உறுதியைக் காணமுடிந்தது. தேசத்துக்காக இவ்வளவு பணத்தியாகத்தை முதன் முதலாகப் பார்த்தது அப்போதுதான் என வ.ரா இந்நிகழ்வைச் சொல்வார்.

காந்தி காலத்தில் 4 ராஜதந்திரிகள் என்று மோதிலால், விட்டல்பாய் படேல், ராஜாஜி, பனகல் ராஜா நால்வரையும் வ.ரா குறிப்பிடுவார். சென்னை சட்டசபையை பனகல் ராஜா ஆண்டுவந்ததை உயர்வாக வ.ரா மதிப்பிடுவார்.

அயர்லாந்தின் சார்லச் ஸ்டீவர்ட் பார்னல் எனும் பிரிட்டிஷ் எம்.பிக்கு நிகரானவர் ராஜாஜி என்று ‘பார்னால் - ராஜாஜி’ ஒப்பீட்டை வ.ரா செய்வார். தெளிந்த

அறிவு, தர்க்கவாதம், முட்டுக்கட்டை உபாயம் என்பதில் இந்தியாவிலேயே ஆச்சாரியாருக்கு இணையாகச் சொல்ல எவருமில்லை என வ.ரா எழுதியுள்ளதைக் காணலாம்.

ராஜாஜி மேற்கொண்ட வேதாரண்யம் உப்பு சத்தியாக்கிரகத்தை புராணம் போல ஒன்றாக வ.ரா பாவித்து எழுதுவார். தஞ்சை கலெக்டர் தார்ன் அடவாடிக்கு ராஜாஜி கொடுத்த பதிலடிகளைச் சொல்வார். அச்சத்தை ஜனங்களிடமிருந்து ஓட்டிய ஜாலவித்தை என்பார் வ.ரா. எவ்வளவு அமரிக்கை- தைரியம் , சாதுர்யம் , அழகான கிராமிய பேச்சு ! என்ன நகைச்சுவை! எத்தகைய உருக்கம் - என்ன ரம்மியமான உபமானங்கள், உபகதைகள் இவை யாவும் ராஜாஜி பிரசங்கங்களுக்கு வ.ரா கொடுத்த பாராட்டுச் சொற்கள்தான்.

வட இந்திய தலைவர்கள் பற்றிய

எள்ளல் வ.ராவிடம் இழையோடும். வட இந்தியாவிலே, அறிவிலே யாருக்கேனும் அஜீரணம் ஏற்பட்டால் மலர்ச்சியை சோதிக்க தமிழ்நாட்டுக்கு உபதேச யாத்திரை புறப்பட்டுவிடுவார்கள். தமிழர் செய்த பாவம் என்னவோ- இந்த நிரந்தர தண்டனையை அனுபவிக்க வேண்டியுள்ளது. இது ஏதோ பாகபத்திர மாமூல் ஷரத்தாக ஆட்சேபனையின்றி வெகுகாலம் நடைபெற்று வந்தது. இதை அடியோடு ரத்து செய்தவர் ஆச்சாரியார் என பெருமிதம் பொங்க தமிழ்ப் பெரியவரை அவர் முன் வைப்பார்.

ஆச்சாரியாரை ‘சின்ன காந்தி’ எனச் சொல்வது அநியாயம் என்பார் வ.ரா. காந்தி மேதாவி. ராஜாஜி புத்திசாலி. மேதை வேறு. புத்தி வேறு. காந்திக்கு சொந்த சக்தியில் மலையை நகரச்செய்யும் நம்பிக்கை உண்டு. பிறர் சக்தியிலும் அளவற்ற நம்பிக்கை

காந்திக்குண்டு. ஆச்சாரியாருக்கோ தம்மிடத்தில் சிறு சந்தேகம்; பிறரிடத்தில் எல்லையற்ற சந்தேகம்.

காந்தி தம்மை தாம் மூன்று தரம் சுற்றி வந்து , தெய்வ யானையை இந்திரனிடமிருந்து அதிகாரத்துடன் கேட்ட கணபதி போன்ற மேதாவி என்றால் ஆச்சாரியார் வியர்க்க வியர்க்க வாகனத்தில் ஏறி களைத்து அலுத்து தெய்வ யானையைப் பெறாத தேவதை.

காந்தி சாஸ்திரம் என்றால், ஆச்சாரியார் சாஸ்திரி. சாஸ்திரம் காலத்துக்கு கட்டுப்பட்டதல்ல- வளரும். சாஸ்திரியோ சாஸ்திரத்துக்குக் கட்டுப்பட்டவர். சாஸ்திரிக்கு சாஸ்திரம்தான் பிரதானம். காந்தி உலகின் மனசாட்சி. ஆச்சாரியார் அந்த மனச்சாட்சியின் மெய்க்காப்பாளர்"

அற்புதமான சித்திரத்தை , மறுக்க முடியாத

ஒப்பீட்டை வரா தந்துள்ளார். காந்தியுடன் அவர் முரண்பட்ட நிலையில் ராஜாஜிக்கு நேர்ந்தவற்றை வ.ரா சொல்கிறார்.

" காந்தியின் வலது கை என்ற கீர்த்தியில் மிதந்து கிடந்த ஆச்சாரியாரின் ஜிப்பாவைக் கிழிப்பது, கல் எரிவது - தார் ஊற்றுவது என்ற நிலைமை அவருக்கு ஏற்பட்டது மிகவும் துக்ககரமானது. ஆனால் கொண்ட கருத்துக்களுக்காக எதையும் அவதூறையும் மேற்கொள்ளமுடியும் என ஆச்சாரியார் தெளிவாக காண்பித்துவிட்டார்"

ஆச்சாரியாருடன் கருத்துவேறுபாடுகள் இருக்கலாம். சில விஷயங்களில் அவர் பிற்போக்குவாதிதான். ஆனாலும் அவர் முதல் தமிழன் - உயர்ந்த மனிதர் - தீர்க்காலோசனைக்காரர் என்ற வகைகளில் அவருக்கு மரியாதைக் காண்பிக்க கடமைப்பட்டிருக்கிறோம் என வ.ரா ராஜாஜி

குறித்து எழுதியதை முடித்திருப்பார். அவர் மலிவுப் பிறவியல்ல எனச் சொல்லியிருப்பார்.

II

ஈ.வெ.ராமசாமி நாயக்கர் எனும் பதிவொன்றை வ.ரா செய்துள்ளார். ராமசாமி நாயக்கர் அபூர்வ பிறவி. ராஜாஜியை அயர்லாந்தின் சாதுர்யர் பார்னால் என்பாருடன் ஒப்பிட்டால் பெரியாரை வ.ரா இங்கிலாந்தின் மாஜி முதல்வர் லாய்ட் ஜார்ஜ் உடன் ஒப்பிட்டுக் காட்டுவார். பிற்போக்காளர் சபிக்க, தாராள நோக்குள்ளவர் வாழ்த்த வளர்ந்தும் வீழ்ந்து விடாமல் முண்டியடிப்பதால்தான் இந்த ஒப்பீட்டை அவர் லாயிட் உடன் செய்திருப்பார்.

‘பள்ளிக்கணக்கு புள்ளிக்கு உதவாது’ போல் நாயக்கர் பள்ளிக்கு ‘டிமிக்கி’ அடிக்காமல் போய் இருந்தால் பத்தோடு

பதினொன்று சங்கதியாகிக்கூட இருக்கும். ஆனால் நாயக்கருக்கு பெயரைக்கொடுத்து ஸ்தாபித்தது குருவில்லாத வித்தையாகும். பள்ளிப்படிப்புக்கும் நாயக்கரின் மேதைக்கும் துளிக்கூட சம்பந்தம் கிடையாது (ஸ்னானபிராப்தி என புரட்சிக்காரர் நாயக்கருக்கு எழுத பேனா மக்கர் செய்துவிட்டது) என்று எழுதியிருப்பார் வ.ரா.

தமிழர்கள் அனைவரும் இடித்த புளிகளாக-அநீதி எதிர்க்க தைரியமற்றவர்களாக இருந்தனர் என்பதில் சந்தேகமில்லை. இப்படி ஸ்மரணையற்றுக் கிடந்த தமிழர்களின் உள்ளத்தை அடிதெரியும்படி கலக்கிய பிரம்மாண்ட பாக்கியம் நாய்க்கரைப் பெரிதும் சேரும் என்று எழுதினார் வ.ரா.

நாயக்கருக்கு அரசியலில் முதல் குரு வரதராஜூலு நாயுடு. பின்னர் ஆச்சாரியாரின் மோகவலையில் சிறிதுகாலம் கட்டுண்டு

இருந்தார். ‘நல்லாரின் கண்’ நட்பை விருத்தி செய்திருக்கும். பொல்லாதார் பார்வை ‘திருஷ்டிதோஷத்தை’ உண்டாக்கியது போலும். ஆச்சாரியர்- நாயக்கர் பிரிவு நாட்டுக்கு நஷ்டமானது என்றார் வ.ரா. நாயக்கரின் உள்ளத்தின் தியாகத்தையும் தைரியத்தையும் தூண்டி மணக்கச் செய்தவர் ஆச்சாரியார் என தன் அபிப்பிராயத்தை வ.ரா முன்வைப்பார்.

’ நாயக்கரின் அழகு பிரசங்கம்’ பற்றி வ.ரா வர்ணிப்பார். ஆணித்தர சொற்கள், அணியணியாய் உபமானங்கள், கொச்சைத் தமிழ் உச்சரிப்பு, உடல் துடிதுடிப்பு இவை பார்க்க கேட்க ஜனங்கள் வண்டுபோல் மொய்ப்பார்கள். இலக்கணம், சந்தி, கால்புள்ளி, அரைப்புள்ளி, முற்றுப்புள்ளி முதலியன நாய்க்கர் கண்டு நடுங்கவேண்டுமே ஒழிய அவைகளை லட்சியம் செய்பவர் அல்ல நாயக்கர்.

பெரியார் அவர்களை இயற்கையின் புதல்வன் மண்ணை மணந்த மணாளன் என்றார் வ.ரா. மண்ணோடு மண்ணாய் உழலும் மாந்தர்களுக்கு நாயக்கரின் பிரசங்கம் ஆகாய கங்கையின் பிரவாகம் போன்றது என எழுதினார் வ.ரா.

சமுதாய ஓட்டைகளை பெரியார் புரிந்து போராடியதை வ.ரா இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். ஜாதிக்கொடுமை, மூடபக்தி, தீண்டாமை, வலியார் மெலியாரை வருத்தும் அசட்டுத்தன பரம்பரை அவலட்சணம், மனச்சாட்சியை ரப்பரைபோல் அமைத்துக்கொள்ளும் சாமர்த்தியம், எதற்கும் சமாதானம் சொல்லும் விசித்திர ஜாலவித்தை, பெண்களின் முன்னேயும் பின்னேயும் பக்கத்திலும் படுதா, கிளிப்பிள்ளை வேதாந்தம், திண்ணை தத்துவம், போலிமதம், பிடுங்கல் புரோகிதம் எனும் ஓட்டைகளை

நாயக்கர் கண்டதாக வ.ரா அழகுத்தமிழில் கேலி மிளிர அடுக்கியிருப்பார்.

செய்யவேண்டும் என்று தோன்றியதை தயங்காமல் செய்பவர் நாயக்கர். லாப நஷ்டக்கணக்கு அதில் பார்ப்பதில்லை என்பார் வ.ரா. சிலர் அவர் அந்த ஓட்டைகளை அடைக்கும் காரியத்தில் ஈடுபட்டதால் ‘பதர்’ என அவரை அழைத்தனர். அதனாலேயே அவர் பெரியார் எனவும் மதிக்கப்பட்டு வருகிறார். அந்திமாலைக்கொண்டவர் நாய்க்கரை தூஷிக்கலாம். ஆனால் நிகழ்காலமும் வருங்காலமும் நாயக்கருக்குத்தான் என்பதில் சந்தேகமில்லை என 90 ஆண்டுகளுக்கு முன்னரே கணித்து எழுதியவர் வ.ரா.

பெரியாரின் ரசனை பற்றி எழுதும்போது வ.ரா சொல்கிறார். நாயக்கர் மகா ஸரசி; பரம ரசிகர்; ஆனால் சண்டி. உறக்கத்தில் இருப்பதுபோல் பாவனைச் செய்யும் அவரது

முகம், உயிர்ச்சத்து பொருந்திய பிரச்னை வரும்பொழுது பொலிவு கூடிவிடும்.

படு நாஸ்திகன் பாதகன் என சிலர் அவரை பேசுவர். சலாம் செய்து மார்பால் ஊர்ந்து செல்லாதே சுயமரியாதையுடன் வாழ் எனும் உணர்ச்சி ஊட்டினால் நாயக்கரை பாவி என்கிறார்கள். தொண்டுக்கும் மனச்சாட்சிக்கும் பக்தனான நாயக்கரை நாஸ்திகம் என்றால் என்னவென அறியாதவர்கள் பேசுகிறார்கள் என எதிர்வினையாற்றிருப்பார் வ.ரா.

தீண்டாமையால் ஹிந்து சமாஜம் இறுமாப்புக்கொண்டு செயல்படுவதை சுட்டிக்காட்டிய வ.ரா அது சமாஜத்தை சீர்குலைத்துவிடும் என எச்சரித்தார். தமிழ்நாட்டின் வருங்காலப் பெருமைக்கு நாயக்கர் ‘முன்னோடும் பிள்ளை’ என அற்புதமாக வரையறுத்தார் வ.ரா.

மலைகளையும் மரங்களையும் வேரோடு பிடுங்கி யுத்தம் செய்யும் மாருதியைபோல தமிழ்நாட்டின் தேக்கமுற்ற வாழ்வோடு போர்புரியும் வகையைக் கண்டு நாம் வியப்படையவே வேண்டும் என்பார் வ.ரா.

வியாதியை வரவழைத்துக்கொண்டபின் கசப்புக்கும் பத்தியத்துக்கும் பயப்பட்டால் வியாதி குணமாகாது, பெரியார் கசப்பு மருந்து என உதாரணப்படுத்துகிறார் வ.ரா.

அதே நேரத்தில் தனக்கான வருத்தம் ஒன்றையும் வ.ரா பதிவு செய்யாமலில்லை. அதில் விமர்சன இழை ஓடும்.

” பெருநெறியான விடுதலைப்போரைப் புறக்கணித்து, வைதிக கோட்டையை மட்டும் முற்றுகை போடும் நாயக்கரின் அளவுக் கண் சிறிது மங்கியிருக்கிறதென்றே சொல்லவேண்டும். உடலையும் உயிரையும்

வாடச்செய்யும் அரசியல் அடிமைத்தனத்தைப் போக்கும் வேலையில் சாதகமாக, சமூகச் சீர்திருத்தத்தை அழைத்துக்கொண்டால் பெரும்பயன் விளையும். நாயக்கரின் ஆற்றலோ பெரிது. அவரது தற்போதைய லட்சியம் சிறிது”

” வைதீகத்தை எதிர்க்கத்தான் வேண்டும்- சமயம் நேரும்பொழுது அதற்கு சரியான புத்தி புகட்டத்தான் வேண்டும். வைதீகத்தின் கொடிய சேஷ்டைகளையும் பொல்லாங்கான விளவுகளையும் பொறுக்க முடியாதுதான். என்றாலும் உள்நாட்டு வைதீகத்தை அடக்கி ஒடுக்குவதற்காக அயல்நாட்டு ஏகாதிபத்தியத்தோடு நாயக்கர் உறவாடுவதைக் கண்டு நான் மிகுதியும் வருந்துகிறேன்”

” மருமகளின் கொட்டத்தை அடக்குவதற்காக மகன் சாகவேண்டும் என்று

எண்ணும் அசட்டுத்தாயின் மனோபாவத்தைக் கொண்டு, நாயக்கர் சமூகத்தொண்டு ஆற்றப் பார்ப்பது, கானல் நீர் வேட்டையாக முடியும் என்று சொல்லவும் வேண்டுமா? உயர்ந்த சமூகத் தொண்டரான நாயக்கர் வழிதப்பிக் காரியம் செய்வது காலத்தின் விளைவு போலும்!”

வ.ரா தனது பெரியார் குறித்த பதிவை மேற்கண்ட வருத்தத்துடன் நிறைவு செய்திருப்பார். அதேநேரத்தில் balance தடுமாறாமல் விமர்சனத்தை மிகப் பொறுப்புடன் பெரியாரின் கண்ணியத்தை குறைத்துவிடாமல் வ.ரா வைத்துள்ளதைக் காணலாம். வ.ரா விற்கு பெரியார் 90 ஆண்டுகளுக்கு முன்னரே பெரியவர்தான் என்பதை இந்தப் பதிவில் நாம் உணர்ந்துகொள்ள முடியும்.

வ.ரா வின் அற்புத தெறிப்புகள்- சரியான

துலாக்கோல் மதிப்பீடுகள் தமிழ் எழுத்து சமூகத்திற்கு மிக அவசியமானவை என்றே தோன்றுகிறது.

4-6-2022

# 20. பெண் ஏன் அடிமையானாள்

‘பெண் ஏன் அடிமையானாள்’ - பெரியார் அவர்களின் செவ்வியல் எனலாம். தற்போது அமேசானில் பல விலைகளில் (ரூ 50 துவங்கி கிடைக்கிற புத்தகம்).

பெரியார் அவர்களால் குடிஅரசில் 1926-31 ஆண்டுகளில் எழுதப்பட்ட 10 கட்டுரைகளின் ‘தொகுப்பு’ நூலானது. ஜனவரி 1942ல் பெரியார் எழுதிய முன்னுரையில் :

” இப்புத்தகக் கருத்துகள் இன்றைய நிலையில், எந்த மதத்திற்கும், எந்த தேச மக்களுக்கும், எந்தச் சமூகத்தாருக்கும் பயன்பட்டாக வேண்டும் என்பதே நமது கருத்தாகும். இப்புத்தகத்தை பெண்கள் மாத்திரம் அல்லாமல், பெண்களிடம் ஜீவகாருண்யமும், சமத்துவ உணர்ச்சியும்

கொண்ட எல்லா ஆண் மக்களும் வாங்கிப் படித்துப் பார்த்துத் திருந்தவேண்டியது அவசியம் என்றே கருதுகிறோம்”

கற்பு, வள்ளுவர் கற்பு, காதல், கல்யாண விடுதலை, மறுமணம், விதவைகள் நிலை, விபச்சாரம், சொத்துரிமை கர்ப்பத்தடை, பெண் விடுதலைக்கு ஆண்மை அழிய வேண்டும் என 10 தலைப்புகளில் சுருக்கமாக , மனதில் புத்தியில் பட்டவகையில் பெரியார் தனது அனைத்து தீவிரத்துடன் விவாதித்திருப்பார்.

இந்த ஆண்டு மகளிர் தினத்தில் மூத்த தொழிற்சங்க, பென்சனர் இயக்கத் தலைவர் தோழர் முத்தியாலு இந்நூலின் 50 காப்பிகளை பெண்கள் மத்தியில் வாங்கி கொடுத்த தகவலைச் சொன்னார். நல்ல முன்னுதாரணத்தை தோழர் முத்தியாலு ஏற்படுத்தியுள்ளார்.

ஆயிரக்கணக்கான ஆண்களும் பெண்களும் இந்த சிறிய நூலை படித்திருப்பர். பெரியார் விரும்பிய சில மாற்றங்களாவது சமூகத்தில் உருவாகி வருவதைக் காணமுடிகிறது. நூற்றாண்டை தொடப்போகும் எழுத்துக்கள், எழுதப்பட்ட அந்த சூழலில் தீவிரமாக ( radical) ஆக பார்க்கப்பட்டிருக்கும். இப்போதும் கூட இவ்வெழுத்துக்கள் சிலருக்கு cultural shock தரக்கூடியவையாக இருக்கலாம்.

பெண் கல்வியும், வேலை வாய்ப்பும் பெருகும் சூழல் , ஆண்களைப் போல தாங்களும் சுதந்திர உணர்ச்சியில் ( in-dependent) சற்றும் குறைந்தவர்களில்லை என்ற மனப்பாங்கை ஆழமாக வேறூன்ற வைத்துள்ளது. இனி வரும் காலத்தில், இந்த சுதந்திர உணர்ச்சி மேலும் மேலும் கூடி பலப்படும் பாதையே தெரிகிறது. இளம் ஆண்,

பெண் என்பதில் எவ்வித வேறுபாடும் இனித் தெரியலாகாது, பாரபட்சமாக நடத்துதல் ஆகாது என்ற உணர்வும் கெட்டிப்பட்டுள்ளது.

சில ஆண்டுகளுக்கு முன்னர், திலகவதி அவர்கள் போலீஸ் துறையில் gender sensitisation முகாம்களை அவர் பொறுப்பில் இருந்த காலத்தில் நடத்தினார். நாகை எஸ் பி அப்பகுதியில் இன்ஸ்பெக்டர்-சப் இன்ஸ்பெக்டர்களுக்கு நடந்த பயிற்சிக்கு உரையாளராக என்னையும் அனுப்பியிருந்தார். திருச்சியில் இப்படி உரையாளர்களிடம் எதிர்பார்க்கப்படுவது என்ன என்பதற்கும் தனி முகாம் நடந்த நினைவு வருகிறது.

என் காலத்து ‘conservative’ சிந்தனைகளிலிருந்து , இன்றைய ஆண் இளைஞர்களும் விடுபட்டு வருவதைப் பார்க்க முடிகிறது. ஆணுக்கான சிறப்பு சலுகை

கோரல்கள் சற்று மட்டுப்பட்டு வருகின்றன. அடுப்பங்கரையிலிருந்து விடுதலை என்பது பெரும் சமூக பிரச்சனைதான். 'Kitchen less Home' என்பது நனவாகிவிட்டால், அது மாபெரும் விடுதலையாகலாம். காலம் எப்படி குடும்பமுறைகளை மறுகட்டுமானம் செய்து சமநிலையாக்கும் என ஊகிக்க முடியவில்லை.

குடும்பம் என்கிற institution பெரும் சமூக பழக்கமாகியுள்ளது. அதுதான் சாதி, மதம், கம்யூனிட்டி பழக்கம் , சடங்கு முறைகள், சொத்து பத்து நிர்வாகம் என அனைத்திற்கும் அடிப்படையாக நிற்கிறது. கூட்டு குடும்பங்கள் சாத்தியமில்லை என்கிற பொது புத்தியும், உணர்வும் நன்றாகவே நடைமுறைக்கு வந்துவிட்டன. ஆனாலும் குடும்பங்கள் கிளைகளாகப் பிரிந்து இன்னும் நியுக்ளியர் குடும்பமாக இருக்கின்றன.

மேற்கின் பழக்கங்களும், இந்திய

சமூக பழக்கங்களுமான கலவையாக புதிய தலைமுறை வளர்ந்து வருகிறது. வேர் அறிந்தவையாகவும் radical ஆகவும், கேள்விகளால் துளைக்கக்கூடியதாகவும் இளம் தலைமுறையினர் வளர்ந்து வருகின்றனர். அவர்களின் புரிந்துகொள்ளும் ஆற்றல் அபாரமாக இருக்கிறது.

பிரிட்டிஷாரிடமிருந்து தேச விடுதலை என்ற போராட்டம் தீவிரம் கொண்ட சூழலில், காந்தி அம்பேத்கர் பெரியார் ஆகியோர் சமூக மாற்றம் என்பதிலும் தீவிர செயலூக்கப் பார்வையை செலுத்தினர். அந்நேர பெரியாரின் பெண் விடுதலையை முன்வைக்கும் இவ்வெழுத்தை Manifesto for the liberation and empowerment of women என புரிந்துகொள்ளலாம்.

இவ்வுலகில் இயற்கையின் கருணையால் மனிதர்களிடம் unisex என்பதில்லை. சமூகம்

உருவாக்கி வளர்த்தெடுத்த second sex என்கிற பார்வை மறையும் திசைக்கான மாற்றம் வேகமெடுத்துள்ளது.

( May 4 2024)

# 21. ஈரோட்டுப் பாதை சரியா - ப. ஜீவானந்தம்

செப் 2023

தோழர் ஜீவாவின் முழு திரட்டை என் சி பி எச் 2007 ல் கொணர்ந்தார்கள். இரு பாகங்களாக 1938 பக்கங்களில் கொணரப்பட்ட அத்தொகுப்புகளுக்கு பேரா அரசு பதிப்பாசிரியர்.

2002ல் சந்தியா பதிப்பகம் ஜீவாவின் கட்டுரையான ‘ஈரோட்டுப் பாதை சரியா’ என்பதை சிறு வெளியீடாக பேரா அரசின் முன்னுரையுடன் கொணர்ந்தனர். சுயமரியாதை இயக்கத்திலிருந்து , காங்கிரஸ் சோசலிஸ்ட், கம்யூனிஸ்ட் கட்சி என பயணித்த ஜீவா, சுயமரியாதை இயக்கம்-

பெரியாரின் கருத்துக்களை முன்வைத்து இதில் எதிர்வினையாற்றிருப்பார். அதில் உப்பு சத்தியாகிரகத்தை பெரியார் ஏற்காததை ஜீவா சுட்டிக்காட்டியிருப்பார்.

பிரிட்டிஷ் அரசின் அடக்குமுறையை கண்டித்து தீர்மானம் போடவேண்டும் என சில சுய மரியாதை இயக்க இளைஞர்கள் கோரியபோது, ஆர்.கே சண்முகம் அவர்கள் தலைவராக தனது தீர்ப்பைச் சொன்னார். சுயமரியாதை இயக்கம் 'அரசியலில் கலக்கலாமா' என்ற முடிவு இருந்தால்தான் தீர்மானத்தையே எடுத்துக்கொள்ள முடியும் என்றார். பெரியார் உடனே சு.ம.இ 'அரசியலில் கலக்கக்கூடாது' எனச் சொன்னதால் , தீர்மானத்திற்கு இடமில்லாமல் போனதை ஜீவா இதில் சுட்டிக்காட்டியிருப்பார்.

அரசியலில் பங்கேற்பதில்லையானால், நீதிக்கட்சி வெற்றிக்கு (காங்கிரஸ் தேர்தலில்

பங்கேற்கும் முன்னர்) பெரியார் காரணம் எனச் சொல்வது சரியாகுமா என்கிற தொனியிலான கேள்வியை ஜீவா இதில் எழுப்பியிருப்பார்.

1932 தஞ்சை மாநாட்டில் வருத்தமுற்ற முனுசாமி நாயுடு விலக நேர்ந்தது. பொப்பிலி அரசரை நீதிக்கட்சி தலைவராக்கியதுடன், முதலமைச்சரும் ஆக்கினர். இவருக்கு சுயமரியாதைக்காரர்கள் தஞ்சையில் ஆதரவு தந்ததை கேள்விக்குள்ளாக்குவார் ஜீவா.

குடியரசுப் பதிப்பகம் சோசலிசம், உழைப்பாளிகளுக்கு ஏன் உலகமில்லை என்ற சிறு நூல்களை நரசிம்மன், சிவசாமி ஆகியோர் எழுதி வெளியிட்டது. இருவரும் ஆரியர்கள் . இது ஆரிய சூழ்ச்சி எனப் பெரியார் அப்போது நல்லவேளை சொல்லவில்லை என்கிறார் ஜீவா.

பொப்பிலி நீதிக் கட்சி ஆட்சியில்தான்

பெரியார் எழுதிய ‘இன்றைய ஆட்சி ஏன் ஒழியவேண்டும்’ என்பதற்கு பெரியார் தண்டிக்கப்பட்டார் என்கிற செய்தியையும் ஜீவா இதில் சொல்கிறார்.

ஈரோட்டில் பெரியாரை சந்தித்த ஜெயப்பிரகாஷ் நாராயணனிடம், சுயமரியாதை இயக்கத்தை காங்கிரஸ் சோசலிஸ்ட் கட்சியுடன் இணைக்க ஒப்புக்கொண்டார் என்ற செய்தியை (என்றைய தேதி எழுத்து பூர்வ ஆதாரம் என ஜீவா இதில் தரவில்லை) ஜீவா இந்த நூலின் 23 ஆம் பக்கத்தில் தந்துள்ளார். ஜெயப்பிரகாஷ் அவர்களை சந்திக்கும்படி ஜோலார்பேட்டையில் இருந்த ஜீவாவிற்கு தந்தியும் அனுப்பினாராம் பெரியார்.

பெரியார் ஏற்ற இணைப்பு நடை பெறவில்லை. இரண்டே நாட்களில் பெரியார் மாற்றிக்கொண்டுவிட்டார்.

‘காங்கிரஸ் மேனியா’ வில் சில வாலிபவர்கள் இருக்கிறார்கள் என விமர்சிக்கலானார். இவ்விடத்தில் ஜீவா “ஷனச்சித்தம் ஷனப் பித்தம்” ’பெரியார்’களிடம் உண்டு என எழுதியுள்ளார்.

காங்கிரஸ் எதிர்ப்பில் நின்று சோசலிசம் எதிர்த்த ஆர் கே ஷண்முகத்தையும், சுயமரியாதை இயக்கத்தை கேலி பேசிய நாயுடுவையும் பெரியார் ஆதரித்தார். இதை ஜீவா விமர்சித்தார்.

பகத்சிங் ‘நான் ஏன் நாத்திகன் ஆனேன்’ எழுத்தை ஜீவா மொழிபெயர்க்க, ஈ வெ கிருஷ்ணசாமி வெளியிட இருவரும் கைது செய்யப்பட்டனர். பொப்பிலி ஆட்சிதான்.

இங்கு ஜீவா எழுதுவது

” சர்க்கார் ( பிரிட்டிஷ்) அழிவு நடவடிக்கையைக் கண்டு ஈவெரா மிரண்டார்.

ஆர் கே சண்முகம் போன்றவர் தருணத்தைத் தவறவிடாமல் செயல்பட்டனர். உள்நாட்டு மந்திரி பன்னீர்செல்வம், சி டி நாயுடு மூலம் நாஸ்திக பொதுவுடைமை பிரச்சாரத்தை நிறுத்திவிட வேண்டும், இல்லாவிட்டால் கட்சியை சர்க்கார் அழித்துவிட முடிவு கட்டிவிட்டதென்றும் ஈவெராவை மிரட்டிய கதையும் நமக்குத் தெரியும்”

” என்னை (ஜீவாவை) மானங்கெட்டத்தனமாக மன்னிப்பு கொடுத்துவிட்டு வெளியே வரும்படி ஈவெரா , கே எம் பாலசுப்பிரமணியம் மூலம் கடிதத்தை சிறைச்சாலைக்கு அனுப்பி கட்டாயப்படுத்தினார் (அக்கடித ஆவணம் இந்த நூலில் ஜீவாவால் இணைக்கப்படவில்லை) . ‘பெரிய நாயக்கர்’ வேண்டுமானால் மன்னிப்புக் கொடுத்துவிட்டு போகட்டும், நான் முடியாதென்றும் பிடிவாதமாக கூறினேன்.

நான் மன்னிப்பு கொடுக்காவிட்டால் இயக்கம் அழிக்கப்பட்டுவிடும் என்றும், இது சர்க்கார் சட்டத்தை நன்கு அறிந்த ஆர் கே ஷண்முகம் கருத்து என்றும், தானே மன்னிப்பும் கோரி பொறுப்பும் ஏற்பதாகவும் குடியரசில் எழுதிவிடுவதாக ஈவெரா பாலசுப்பிரமணியம் மூலம் கட்டாயப்படுத்தினார்”

” இந்த நிலையில் சு.ம.இயக்கம் ‘நாட்டில் குழப்பத்தை உண்டாக்கும் கொள்கையுடைய பொது உடைமை இயக்கமல்ல’ என்று அரசாங்கம் நம்பும்படி ஏதாவது செய்ய வேண்டியதாயிற்று ” என ஜீவா இதை முடித்திருப்பார். இந்த செய்தி பக் 26ல் இந்த சிறு நூலில் இருக்கிறது. இங்கு ஜீவா - நேரிடையாக மன்னிப்பு எழுதிக் கொடுத்தாரா, என்ன எழுதிக்கொடுத்தார் என்பதை சொல்லவில்லை . ‘ஏதாவது செய்யவேண்டியிருந்தது’ என்கிற பதிவை

அவர் செய்திருப்பார்.

பெரியார் ‘மத்திய சர்க்கார் தலையில் பழியைப்போட்டு’, மாகாண ஜஸ்டிஸ் கட்சியின் குற்றவாளித்தனத்தை மறைத்ததாக ஜீவா எழுதியிருப்பார். இங்கு கடுமையான விமர்சனங்களை ஜீவா வைப்பதைக் காணலாம்.

1935 மார்ச் 10 ல் பெரியார் விட்ட அறிக்கைப்பற்றியும் ஜீவா கடுஞ்சொற்களால் பேசியிருப்பார். காங்கிரஸ் ஆட்சியைவிட பிரிட்டிஷ் ஆட்சியே மேலானது என்பது என்னுடைய வெகுநாளைய அபிப்பிராயம் என இதில் பெரியார் தெரிவித்திருந்தார்.

பக் 28ல் ஜீவா எழுதுகிறார் ” ஈவெரா மன்னிப்புக் கொடுத்த பிறகு , உண்மையான சுயமரியாதை தர்மிகள் ஈவெரா தலைமையை வெறுத்தனர்…”

திருத்துறைப்பூண்டி மாநாட்டில் ஜீவா பெரியாரை விமர்சித்து வெளியேறினார். சுயமரியாதை சமதர்ம கட்சியை தொடங்கினார். இக்கட்சியின் திருச்சி மாநாட்டிற்கு 1936 நவம்பரில் டாங்கே வந்து உரையாற்றியுள்ளார். பின் அது காங்கிரஸ் சோசலிஸ்ட் கட்சியில் இணைந்தது. இங்கு ஜீவா 'பெரியார் மன்னிப்பு கொடுத்த பிறகு' என எழுதுவதைப் பார்க்கிறோம். (பெரியாரிய தோழர்கள் பெரியார் மன்னிப்புக் கேட்டதற்கு ஆதாரம் இருக்கிறதா எனக் கேட்டு வருகின்றனர்).

இந்த கையேட்டில் பெரியார் தமிழ் நாட்டின் ஜின்னா ஆனார் என்ற விமர்சனத்தையும், அம்பேத்கர் ஜின்னா தயவை நாடி காங்கிரசை எதிர்க்க வட நாட்டிற்கு காவடி எடுத்தார் எனவும் ஜீவா விமர்சிக்கிறார். 'துரோகி எம் என் ராயுடன்' ஈவெரா ஆருயிர்த் தோழனானதைச்

சொல்கிறார். ஈவெரா 'தமிழ் நாட்டின் எம் என் ராய்' ஆகிவிட்டார். ஏகாதிபத்திய பரம்பரை பக்தர்களின் ஜஸ்டிஸ் கட்சி தலைவரான பின் அதைத்தான் செய்யமுடியும் என கடுமையாக விமர்சனம் செல்கிறது.

மேலும் சென்னை கவர்னர் சர் ஆர்தர்ஹோப்பின் அந்தரங்க நண்பரும் ஊழியரும் ஆனார் ஈவெரா. கவர்னரை தலைக்கு மேல் தூக்கி வைத்துக்கொண்டு ஆடினார்கள் என ஜீவா எழுதியுள்ளார்.

இறுதியாக ஜீவா இக்கட்டுரையை இப்படி முடித்திருப்பார் : " ஈரோட்டுப் பாதையின் இருபது வருட சரித்திரத்தை எனது கட்டுரையில் குறிப்பிட்டு வந்துள்ளேன். அந்தச் சரித்திரம் எடுத்துக் காட்டுவதென்பது ஈவெரா என்றும் சமூகப் புரட்சிக்கு விஞ்ஞானியாக பாதை காட்டியதில்லை..புரட்சி கட்சிகளின் நடவடிக்கைகளை எதிர்த்து வந்திருக்கிறார்.

ஜனநாயக ஸ்தாபனங்களைத் திருத்துவதற்குப் பதில் அழிக்க முற்பட்டிருக்கிறார்..இந்நாட்டில் பிற்போக்கு சக்திகளான ஜமீந்தாரி நிலச்சுவான்தார்-முதலாளி வர்க்கங்களின் கையாளாக கடனாற்றி வந்துள்ளார்..பிற்போக்கு பணமூட்டைகளின் பாதை ஈரோட்டுப்பாதை..”

செப் 2023

# 22. திராவிட மாயை- சுப்பு

அறிஞர் அண்ணாவின் ஆரியமாயை, வர்ணாஸ்ரமம், பணத்தோட்டம், இன்பத் திராவிடம் போன்ற புத்தகங்களை அடுத்தடுத்து முன்னர் படித்த நினைவுண்டு.

பணத்தோட்டத்தை எடுத்துக்கொண்டு தோழர் பி ராமமூர்த்தி அவர்கள் தனது ஆரிய மாயையா திராவிட மாயையாவில் விரிவாக விமர்சனத்துடன் விவாதித்திருந்தார்.

அண்ணாவின் ஆரிய மாயையை மீண்டும் கிண்டில் வழி சென்ற வாரம் வாசித்தேன். ஏனெனில் சுப்புவின் மூன்று வால்யூம் ’திராவிட மாயை ஒரு பார்வை’யை படிப்பதற்கு முன்னால் அண்ணாவின் பார்வையை நினைவூட்டிக்கொள்ளவேண்டும் என்பதற்காக. அண்ணா அதில்

மேற்கு - குறிப்பாக ஆங்கில பிரஞ்சு ஆய்வாளர்களை மேற்கோள்காட்டி வந்தேறி ஆரியர்களின் சூது நயவஞ்சகம் அவர்களை வெளியேற்றி திராவிடம் கொணரவேண்டிய அவசியத்தின் கருத்துப் போராட்டத்தை முன்னெடுத்திருப்பார்.

சுப்புவின் திராவிட மாயை புத்தகத்தை நான்காவது பதிப்பாக கடந்த 2022ல் மூன்று பகுதிகளாக rare books என்கிற பதிப்பகத்தார் கொணர்ந்துள்ளனர். ஆர் எஸ் எஸ் சங்க் குடும்பம் சார்ந்த தமிழக அறிவுஜீவிகள் அரவிந்தன் நீலகண்டன், வெங்கடேசன் போன்றவர்கள் ஒத்துழைப்பில் எழுதியதை சுப்பு ஏற்றுள்ளார். தான் எழுதும் விவரங்களுக்கு முதல் பாகத்தில் 51 துணை நூல்களை தந்து ஆதாரங்களை சொல்லியுள்ளார்.

அண்ணா நூலில் ஆங்காங்கே

எந்த ஆய்வாளர் என்ன எழுதினார் என்பது தரப்பட்டிருக்கும். சுப்புவும் இந்த முறையை கையாண்டுள்ளார். ஆர் எஸ் எஸ் நண்பர்களின் உதவி என்றாலே அதில் அவர்களுக்கான அரசியல் தேவை அமராமல் இருக்காது. வரலாறு என்பது அவரவர் தேவைக்கான கட்டுமானமாகவே இருப்பதைத்தான் நான் படித்த இந்த புத்தகங்கள் எனக்கு உணர்த்தின. எவர் எழுதியதையும் அதுவே முற்றானது என எடுத்துக்கொள்ள வேண்டியதில்லை என்கிற பாலபாடம் மீண்டும் என்னுள்.. இனி சுப்புவின் எழுத்தை பார்க்கலாம்...

அண்ணாவின் ஆரிய மாயை பற்றி சுப்பு எழுதியது ..

" திராவிட நாடு இதழில் சி என் அண்ணாதுரை எழுதிய கட்டுரைகளைத் தொகுத்து 1943ல் 'ஆரிய மாயை' என்ற

பெயரில் புத்தகமாக வெளிவந்தது. கிறித்துவ பாதிரிமார்கள் ஹிந்து மதம் குறித்து வெளியிட்ட கருத்துக்களை அண்ணாதுரையின் அடுக்கு மொழியால் ஜோடித்ததுதான் இந்நூல். பிராமணர்கள் ஆரியர்கள் என்று அண்ணாதுரை எழுதியிருந்தார். 1949ல் பி எஸ் குமாரசாமி ராஜா முதலமைச்சராக இருந்தார். காங்கிரஸ் ஆட்சி பீடத்தில் இருந்தது. ஆரிய மாயை தடை செய்யப்பட்டது. பின்னர் 1967ல் அண்ணாதுரை தமிழக முதல்வரானார். அவருடைய ஆட்சிக் காலத்தில் இந்தத் தடை நீக்கப்படவில்லை…அண்ணாதுரை அரசியல் சட்டத்திற்கு மட்டுமல்ல, அரசியல் நெறிகளுக்கும் உட்பட்டே செயல்பட்டார் என்பதற்கான சான்று இது”

நீதிக்கட்சியின் தலைவர்கள் ராஜாக்களும் ஜமீன்களுமாக இருந்த நீண்ட பட்டியல்

ஒன்றை சுப்பு இதில் தந்திருப்பார். 1937 தேர்தல் குறித்த வேறு ஒரு தகவலைத் தருகிறார்.

இராமநாதபுர தொகுதிக்கு நீதிக்கட்சி சார்பில் மன்னர் பாஸ்கர சேதுபதி அவர்களும், காங்கிரஸ் சார்பில் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களும் போட்டியிட்டனர். பிரிட்டிஷ் அரசாங்கம் தேவருக்கு வாய்ப்பூட்டு போட்டது. தேவர் பேசமுடியாது போய் இருகரம் கூப்பி சென்றதுடன் வெற்றியும் பெற்றார்.

மலையாள கவிஞர் கே சச்சிதானந்தன் எழுதினாராம்

” தென்னிந்தியர்கள் முழுவதும் ஒரே இனத்தவரோ, வம்சத்தவரோ அல்ல. தமிழர்களும் அப்படித்தான். இன்று ஆரியர் குடியேற்றம் என்ற கருதுகோள் கூட

மறுவிசாரணை செய்யப்பட்டு வருகிறது..”

திராவிட இயக்கம் ஒரு மார்க்சிய ஆய்வில் தோழர் அருணன் எழுதியதை சுப்பு காட்டுகிறார். அருணன் எழுதியதாவது

” சொல்லளவில் மட்டுமல்ல, செயலளவிலும் ஏகாதிபத்திய தாசனாகவே இயங்கி வந்தது நீதிக்கட்சி..அதுவும் எந்த அளவிற்கு என்றால் ஜாலியன்வாலாபாக் படுகொலையை ஆதரித்து அறிக்கைவிடும் அளவிற்கு..அதிலும் அறிக்கைவிட்டவர்கள் யார் தெரியுமா? இன்றைக்கும் திராவிட இயக்கத்தின் தனிப்பெரும் தலைவர்கள் என்று எவரை திராவிட இயக்கத்தவர்கள் புகழ்ந்துரைத்துக் கொண்டிருக்கிறார்களோ அந்த தியாகராாசச் செட்டியாரும், டி எம் நாயரும்தான்”

தோழர் பி ஆர் எழுதியதை சுப்பு

காட்டுகிறார்

” நீதிக்கட்சி அது தோன்றிய காலத்திலிருந்து அதன் அந்திம காலம்வரை பிரிட்டிஷ் ஏகாதிபத்திய ஆட்சியை ஆதரித்து நின்றது. அது ஜமீந்தார்கள் மற்றும் தரகு வியாபாரிகளின் கட்சியாக இருந்தது”

1918ல் பெரியார் எப்படி பேசினார் என்ற மேற்கோள் ஒன்றையும் சுப்பு தந்துள்ளார்

” நாம் பிராமணன் மீது எவ்வெக் குற்றங்களைச் சுமத்துகிறோமோ அவ்வக் குற்றங்களைப் பஞ்சமர் முதலியோர் நம்மீது சுமத்துகின்றனர்”

கோவை அய்யாமுத்துவின் ‘எனது நினைவுகள்’ புத்தகத்திலிருந்து சுப்பு காட்டுவது

” வைக்கத்துப் போர்க் காலத்தில் நாயக்கரும் நானும் மோட்டாரிலும் படகுகளில்

திருவாங்கூர் முழுவதும் பிரயாணம் செய்தோம். நாயக்கர் கையில் எப்போதும் பாரதியாரின் பாட்டுப் புத்தகம் இருக்கும். மோட்டாரில் போய்க்கொண்டே வந்தே மாதரம், வாழ்க செந்தமிழ், மறவன் பாட்டு, முரசுப்பாட்டு ஆகியவைகளை அவர் உரக்கப்பாடுவார்”

இந்தச் செய்தியை இவர்கள் ஏன் தரவில்லை என சுப்பு வினவுவார்.

” நெடுஞ்செழியன் திராவிட வரலாறில் பாரதி பாடல்கள் என்கிற செய்தியில்லை

வீரமணியின் புத்தகத்தில் இந்த செய்தியில்லை

சாமி சிதம்பரனார் தமிழர் தலைவரில் இல்லை

கவிஞர் கருணாநந்தம் எழுதிய தந்தை பெரியார் வாழ்க்கை வரலாறு என்ற நூலிலும் இந்தச் செய்தி இல்லை.

சின்னக் குத்தூசி எழுதிய காந்தியடிகள் கட்டளைப்படி நடந்ததா வைக்கம் என்பதிலும் இந்தச் செய்தி இல்லை

சுப வீரபாண்டியன் எழுதிய பெரியாரின் இடதுசாரித் தமிழ்த் தேசியம் என்ற நூலிலும் இந்தச் செய்தி இல்லை

ஞாநி எழுதிய அவர்தாம் பெரியார் என்பதிலும் இல்லை

மங்கள முருகேசன் என்ற ஆய்வாளர் மட்டும் இந்தச் செய்தியை பதிவு செய்தியைப் பதிவு செய்துள்ளார்

 சுப்பு எழுதியவை குறித்து இங்கு தரப்பட்டவை அனைத்தும் முதல் 90 பக்கங்களுக்குள் பகுதி 1 திராவிட மாயை ஒரு பார்வையில் கிடைத்தவை.

# 23. பெதிக் லாரன்சும் பெரியாரும்

மார்ச் 2022

விடுதலைக்கு முன்பாக பெதிக் லாரன்ஸ் கமிட்டி எனும் தூதுக்குழு அதிகார மாற்றம் பற்றி கருத்தறியவும் தன் மொழிவுகளை வெளியிடவும் இந்தியா வந்தது. பெதிக்லாரன்ஸ்- கிரிப்ஸ்- அலெக்சாண்டர் என்கிற மூவரும் அதில் இடம் பெற்றனர். மூன்று மாதங்கள் அக்குழு இந்தியாவில் இருந்தது . இந்தியா வந்து இறங்கியவுடன் ‘objects of cabinet Mission’ குறித்து அக்குழுவினர் பேசினர் .

அந்த தூதுக்குழு மார்ச் 23 1946 முதல் ஏப்ரல் 17 1946 வரை பல கட்சித்தலைவர்களை சந்தித்தது.. தூதுக்குழுவை சந்தித்து காங்கிரஸ், முஸ்லீம்லீக், சீக்கிய, இந்து

மகாசபா பிரதிநிதிகள் தங்களது வாதங்களை வைத்து மெமோவைத் தந்தனர். கம்யூனிஸ்ட் கட்சி சார்பிலும் மெமொரண்டம் தரப்பட்டுள்ளது.

திராவிடர் கழகம் சார்பில் பெரியார் மற்றும் பிரதிநிதிகள் சந்தித்து கொடுத்தனரா- அக்குறிப்பின் நகல் என்ன என்பதை அறியத் தேடினேன். நகல் ஏதும் எனக்கு கிடைக்கவில்லை. அது குறித்து குடிஅரசில் அவர் எழுதிய சில தலையங்கங்கங்கள் இருக்கின்றன. இந்தியன் ரிஜிஸ்டர் 1946 வால்யூம் 1லும் திராவிடர் கழகம்/ ஜஸ்டிஸ் சார்பில் ஏதும் காணப்படவில்லை. முன்னர் ஜஸ்டிஸ் கட்சித் தலைமையில் பெரியார் இருந்தபோது கிரிப்ஸ் தூதுக்குழுவை 1942ல் சந்தித்துள்ளார். அச்சந்திப்பும் அதிகாரபூர்வமாக அக்கட்சியினரால் ஆவணப்படுத்தப்பட்டதாக தெரியவில்லை.

குடிஅரசு தொகுப்பு 1946ல் (திவிக-DVK கட்சி பதிப்பில்) பாராளுமன்ற தூதுக்கோஷ்டி என்கிற துணை தலையங்கம் தீட்டப்பட்டுள்ளது. நாம் ஒரு கட்சி கூட்டம் இருக்கிறோம் என அதற்குத் தெரியுமா என்கிற வகையில் பெரியார் கேள்வி எழுப்பியதை (19-1-1946) பார்க்கமுடிகிறது. அதில் பயன் ஏதுமில்லை- அவர்கள் போடும் பிச்சை நமக்கு அவமானம் என பெரியார் அதில் எழுதியதுடன் ஜஸ்டிஸ் பார்ட்டி என்ற பெயரில் கம்பெனி ஒன்று (பி டி ராஜன் - சண்முகம் செட்டியார்) துரோகம் செய்வதை விமர்சித்தும் இருப்பதைக் காண்கிறோம்.

13-4-1946 தலையங்கம் தூதுக்குழு பற்றி பேசுகிறது. அது நீண்டதோர் தலையங்கம். தூதுக்குழு 20 நாட்களாக பேசிக்கொண்டிருப்பதை சொல்லிவிட்டு கீழ்கண்ட வரிகளை பெரியார் தருகிறார்.

“திராவிட இந்தியா, முஸ்லீம் இந்தியா, ஆரிய இந்தியா என்று பிரித்துத்தான் தீரவேண்டும். இந்தப்படி பிரிக்காதவரை இந்தியாவின் சுதந்திர விஷயம் ஒரு முடிவுக்கு வரப்போவதில்லை என்பது உறுதியாகிவிட்டது.”

பாகிஸ்தான் இனி தடுக்கமுடியாது என்ற சூழலில் எல்லைப்புற காந்தியை பாதுகாப்பிற்காக காந்தியும் காங்கிரசும் பயன்படுத்துவதை அவர் விமர்சிக்கிறார். “ஒரு பைத்தியக்கார முஸ்லீமை எல்லைப்புற காந்தி என்று அழைத்து சங்கராச்சாரிக்கு மேற்பட்ட மரியாதை” என அவரது விமர்சனம் சென்றது.

முஸ்லீம்களை மிலேச்சர் என்றும் திராவிடர்களை சூத்திரர் சண்டாளர் என்றும் இழிவு படுத்திய ஆர்யர்களுக்கு நாம் துணைபோக முடியாது என்பதை

பெரியார் விளங்க சொல்லிவிட்டு இதையும் எழுதுகிறார்.

”திராவிடர்கள் நிலை இந்த சந்தர்ப்பத்தில் மிகவும் தெளிவாக இருக்கிறது.. வெள்ளையன் நிஜமாக போனாலும் சரி பொய்யாகவே போனாலும் சரி முஸ்லீம் ராஜ்யம் ஏற்பட்டாலும் சரி, பாகிஸ்தான் ஏற்பட்டு அதில் திராவிட நாடும் சேர்க்கப்பட்டுவிட்டாலும் சரி எப்படியாவது ஆரிய அட்டூழியம் திராவிட நாட்டை விட்டு முதலில் அகலவேண்டும்...

அகம்பாவம் ஆணவம் பிடித்த ஆரியத்தின் அட்டூழியத்தை அழிக்க திராவிடன் ஏதாவது செய்ய வேண்டியதும் என்ன ஆனாலும் சரி எப்படியாவது ஆரியம் ஒழிந்தால் போதும் என்று நினைத்து அதற்கேற்ற தொண்டாற்ற வேண்டியதுமே தன்மான திராவிடனின் கடமையாகும்.”

குடியரசு 20-4-1946ல் எழுதிய தலையங்கங்கத்தில் காங்கிரசுடன் பிரிட்டிஷார் அதிகாரத்தை ஒப்புவிக்க ஒப்பந்தம் செய்துகொண்டுவிட்டார்கள் என்பதை தெரிவித்து கீழ்கண்ட வரிகளை எழுதுகிறார் பெரியார்.

” உண்மையில் திராவிட நாடும் பாகிஸ்தானமும் இந்தியாவை விட்டு பிரிக்கப்பட்ட தனி நாடுகளாக ஏற்படாதவரை பிரிட்டிஷார் வெளியேறிவிட்டார்கள் என்பதோ வெளியேறத் தயாராய் இருக்கிறார்கள் என்பதோ வெறும் வேஷப் பேச்சாகுமே தவிர உண்மை பேச்சாக ஆகவே ஆகாது…

இந்த சந்தர்ப்பத்தில்தான் திராவிட மக்களும் முஸ்லீம் மக்களும் விழிப்புடன் இருந்து இந்த ஆரிய- ஆங்கில ஒப்பந்தம் ஏற்படாமல் பார்த்துக்கொள்ளவேண்டும் என்பதோடு எந்தக் காரியம் செய்தாவது

அதை தடுத்தாக வேண்டியது திராவிட மக்கள் கடமையாகும்.”

அடுத்து ஒரு தலையங்கம் பார்லிமெண்டரி மந்திரிகள் திட்டம் என்ற தலைப்பில் எழுதப்பட்டுள்ளது. காந்தியை இந்து தலைவராகவும், ஜின்னாவை முஸ்லீம் தலைவராகவும் தூது கோஷ்டியார் கருதிவிட்டதை எழுதிவிட்டு பெரியார் சொல்கிறார்.

”ஜின்னா சாயபு கேட்கும் மாகாணங்கள் முஸ்லீம் பெடரேஷனாகச் சேர்க்கப்பட்டிருக்கிறது. மற்றவைகள் முஸ்லீம் அல்லாதவர் மாகாணங்களாக சேர்க்கப்பட்டிருக்கிறது. முஸ்லீம் அல்லாதார் மாகாணங்கள் தனியாக ஆனவுடன் திராவிடர் மாகாணம், மராட்டி மாகாணம் முதலாகிய மாகாண பெடரேஷன்கள் பிரிய வேண்டியதே-பிரிந்து தான் தீரும்...

மத்திய அரசாங்கம் என்றோ கான்பெடெரேஷன் என்றோ ஒன்று ஏன் இருக்க வேண்டும் என்பதற்கு சரியான காரணம் ஒருவரும் சொல்லவில்லை. இந்தியா துண்டாடப்படக்கூடாது என்பது எந்த விதத்திலாவது முஸ்லீம்களை திராவிடர்களை ஆர்யர் பனியாக்கள் ஏமாற்ற வேண்டுமென்பதல்லாமல் வேறு அறிவுடைமையோ தேவையோ இத்திட்டத்தில் இருப்பதாகத் தெரியவில்லை”. இத்தலையங்கம் 4-5-1946 தேதியிலானது.

திராவிட பெடரேஷன், பாகிஸ்தான் பெடரேஷன், மராத்தி பெடெரேஷன், ஆர்யர் பெடெரேஷன் என்றெல்லாம் பெரியார் பேசியிருப்பதைப் பார்க்கலாம். அப்படி ஏற்பட்டிருக்குமெனில் இந்த ஃபெடெரேஷன்களில் மத்திய அரசு என ஒன்று இருக்காதா? பிரிந்து போன பாகிஸ்தானில்

மத்திய அரசு என ஏதுமில்லையா- அங்கு இந்தியா மாநிலங்களை விட கூடுதல் அதிகாரம் கொடுக்கப்பட்டுள்ளதா என்ற கேள்விகள் எழுகின்றன. பெரியார் யூனிட்டரி திராவிடஸ்தான் எனப் புரிந்துகொண்டாரா என்பதும் கேள்வியாக இருக்கிறது.

அடுத்து வந்த தலையங்கம் மும்மூர்த்திகள் ஒப்பந்தம் முறிவு என்பதாக இருக்கிறது. வெள்ளையர் ஆரியர் முஸ்லீம்களை மும்மூர்த்திகள் என இதில் பெரியார் குறிப்பிடுகிறார். அவர்களின் குணங்களை சொல்கிறார். “வெள்ளையர் முதிர்ந்த புத்திசாலிகள். ஆரியர் ஊரார் உழைப்பில் வாழும் பேராசை சூழ்ச்சிக்காரர்கள், முஸ்லீம்கள் ஒரே போக்கான முரட்டு பிடிவாதக்காரர்கள். இந்த மூவரும் ஒருவரை ஒருவர் ஏமாற்றுவது என்றால் அது சாதாரண காரியமல்ல” என்பதையும் அவர்

கவனப்படுத்துகிறார்.

மேலும் எழுதுகையில் “வெள்ளையர் ஆர்யர் உள் உளவு ஒப்பந்த சூழ்ச்சி ஆட்சி மாறியே ஆகவேண்டும்..இதை வலியுறுத்த நாட்டில் கட்சி இல்லை. திராவிட கழகத்தவர்கள் இருக்கிறார்கள்- ஆனால் கட்டுப்பாடு வலிவு இல்லை” என்பதை சுட்டிக்காட்டுகிறார் ...

“மடத்தை விட்டுப் போகும் ஆண்டிக்கு நந்தவனத்தைப்பற்றிய கவலை இல்லாததுபோல் பிரிட்டிஷார் எனும் அய்ரோப்பிய ஆர்யர் நடந்துகொள்கின்றனர். திராவிடர்கள் வெள்ளையர் சம்பந்தமும் ஆரிய சூழ்ச்சி ஆதிக்கமும் இல்லாத இந்தியா - அது வேறு எப்படிப்பட்ட இந்தியாவானாலும் அதைக் காண வேண்டியது தங்கள் கடமை என்று நினைக்க வேண்டியவர்களாவார்கள். ஆதலால் மும்மூர்த்தி ஒப்பந்த மந்திரிசபை

முறிவைப்பற்றியோ முறியாமை பற்றியோ நமக்குக் கவலை இல்லை” என்றெழுதுகிறார் பெரியார். இது 11-5-1946 குடிஅரசில் போடப்பட்டுள்ளது.

அடுத்து தூதுக்குழு பற்றி எழுதியதில் ‘முரட்டு பெண்டாட்டியும் சுருட்டுப்பாயும்’ என்கிற உதாரணத்தைச் சொல்லி விளக்குவார். காங்கிரசும் முஸ்லீம் லீகும் தூது கோஷ்டிக்கு முரட்டுப்பெண்டாட்டியும் சுருட்டைபாயுமாக இருந்து உருப்படியான விஷயம் நடைபெறாமல் போனதாக பெரியார் இதில் சொல்கிறார். இப்படி பெரிய விஷயங்களை எளிய உதாரணம் மூலம் சொல்வதில் பெரியார் நிகரற்றவர் .

தூதுகோஷ்டி தங்களிடம் பேசாததில் வருத்தமில்லை என்ற பெரியார் “தூதுகோஷ்டியார் மாறுதல் கொள்கைக்காரர்களாகிய திராவிட

கழகத்தாரையும் தாழ்த்தப்பட்ட வகுப்பாரையும் கூப்பிடாததால்- மரியாதை செய்யாததால் இவர்களுக்கு நட்டமோ மோசமோ அவமானமோ சிறிதும் ஏற்படவில்லை...லீக் தோல்வி பெற்றிருந்தால் இந்த இருவர் கொள்கையும் தோல்வி அடைந்தது என்பதுதான் அர்த்தமாகும்.” எனவும் எழுதுகிறார்.

“ஆகவே திராவிட கழகமும் செட்யூல் வகுப்பும் தூது கோஷ்டியார் காரியம் பற்றி சங்கடப்படாமல், ஏமாற்றம் அடைந்துவிட்டதாகக் கருதாமல், இன்றைய நிலையில் நட்டம் ஏற்பட்டதாகக் கருதாமல் ஆச்சாரியார் (ராஜாஜி) சொன்னபடி ஓரளவாவது நம் கொள்கைகாரர்களாகிய முஸ்லீம்களுடன் கூட இருந்து தோளோடு தோள் கொடுத்து நின்று வர்ணாச்சிரம காந்திய கோஷ்டி வெற்றிபெறாமல்

பார்த்துக்கொள்ள வேண்டியதுதான் கடமையாகும் என்பதை உணரவேண்டும்." என அவர் எழுதுவதைப் பார்க்கலாம்.

இக்கட்டுரையில் அரசியல் நிர்ணயசபைக்கு வென்றோர் தோற்றவர் பற்றி பேசிவிட்டு அம்பேத்கர் செய்யவேண்டியதைச் சொல்கிறார் பெரியார்.

"அம்பேத்கர் தாழ்த்தப்பட்ட சமுதாயத்திற்கு உண்மையான பிரதிநிதியாய் காப்பாளராய் இருப்பாரானால், துணிவும் வீரமும் உடையவராயிருப்பாரானால் இந்தியாவை ஆரிய பிரிட்டிஷ் சூழ்ச்சியிலிருந்தும் கொடுங்கோன்மை ஆட்சி முறையிலிருந்தும் மீட்க அவர் 1930ல் செய்துகொண்ட முடிவை அதாவது தீண்டப்படாதவர்களாய் கொடுமை செய்யப்பட்டிருக்கும் மக்களும் , தானும் இந்து மதத்தைவிட்டு முஸ்லீம் சமயத்தைத் தழுவுவது என்கின்ற காரியத்தை உடனே

துவக்க வேண்டியவராவார். அதைத்தவிர பிரிட்டிஷ் ஆதிக்கம் சுரண்டல்- ஆரிய ஆதிக்கம் கொடுமை அட்டூழியம் அழிக்க வேறு மார்க்கம் இல்லை என்றே சொல்லுவோம்.” இந்த ஆலோசனை குடிஅரசு 27-7-1946 தலையங்கத்தில் காணப்படுகிறது.

இந்த ஆலோசனையை பெரியார் தாழ்த்தப்பட்டவர் அல்லாத இந்துக்களிடம் (திராவிடர்களிடம்) 4 கோடியினரிடம் ஏன் அழுத்தமாக தெரிவிக்கவில்லை. அதற்கான முயற்சிகள் எதுவும் ஏன் எடுக்கவில்லை என்ற கேள்விகள் எழுகின்றன.

குடியரசு 27-7-1946ல் அம்பேத்கர் போராட்ட அழைப்பிற்கு ஆதரவு என பெரியார் தெரிவிக்கிறார். “காங்கிரஸ் பிரிட்டிஷ் ஒப்பந்தம் எதிர்த்து பம்பாய் மாகாணத்தில் அம்பேத்கர் அழைத்த கிளர்ச்சியில் 500 பேர்களுக்கு மேல்

சிறை சென்று இருக்கிறார்கள்.. இந்த மதராஸ் மாகாண ஷெட்யூல் வகுப்புத் தலைவர்கள் என்பவர்கள் நடத்தை எப்படி இருந்தாலும் பற்றுள்ள பொதுமக்கள் யாவரும் கிளர்ச்சியை ஆதரிக்கவேண்டும் என்பதாக விரும்புகிறோம்" என குடிஅரசு அறிக்கை செல்கிறது.

3-8-1946 குடியரசில் முஸ்லீம் லீக் முடிவான நேரடி நடவடிக்கைப்பற்றி பெரியார் விளக்குகிறார். "காங்கிரசாரும் ஆங்கிலேயர்களும் சேர்த்து நடித்த கபட நாடகத்தின் விளைவது. லீக் முடிவை பெரிதும் பாராட்டுவதாக பெரியார் தெரிவித்தார். பெரியாரின் திராவிட நாடு திராவிடர்களுக்காக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கையை கேட்ட பின்னர்தான் ஜனாப் ஜின்னா அவர்கள் முஸ்லீம்களின் நலம் காப்பாற்றப்படுவதற்கு பாகிஸ்தான்

தேவை என்ற பிரச்சனையை எழுப்பினார். ஆனால் திராவிடர்களிடையே ஒற்றுமை, ஊக்கம், மானம் இனவுணர்ச்சி முதலியன இல்லாத காரணத்தால் பெரியார் இராமசாமி அவர்களின் வேண்டுகோள் இன்னும் தக்க உருவாகவில்லை.”

“திராவிடர் கழகத்தில் சுமார் 50 ஆயிரம் உறுப்பினர்கள் இருந்தபோதிலும் அவர்களிடத்தில் ஓர் கட்டுப்பாடான உணர்ச்சி, இல்லையென்பதையும் தன் நலம் விடுத்து இயக்கதிற்காக வாழ்பவர் இன்னார்தான் என்று சொல்லப்படுவதற்கு ஒருவர் கூட இல்லை என்பதையும் மிக வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம்.” என அத்தலையங்கம் பேசுகிறது.

பெரியாரின் உரிமைக்கோரலை ஜனாப் ஜின்னாவோ முஸ்லீம் லீகோ ஏற்று பெரியாரைப் பார்த்துதான் தாங்கள்

பாகிஸ்தான் கோரிக்கையை வைத்ததாக ஏதாவது சொல்லியிருக்கிறார்களா? அப்படி சொல்லியிருந்தால் அதை திக நண்பர்கள் பலமுறை வெளிப்படுத்தியிருக்கக்கூடும். அதேபோல் இயக்கத்திற்காக வாழ்பவர் இன்னார்தான் என ஒருவர் கூட இல்லை என்பது சொந்த தொண்டர்கள் அண்ணா உட்பட பலர் மீதான விமர்சனமாக ஏன் எவரும் எடுத்துக்கொள்ளவில்லை எனத் தெரியவில்லை. இந்த அவநம்பிக்கையை ஏன் பெரியார் அவர்தம் தொண்டர்களிடம் வைத்திருந்தார். தனது தனிநாடு அடைய முடியாத தோல்வியை இப்படி இடம் மாற்றி அவர் சாட்டுதல் குறித்து ஏதாவது அங்கு பரிசீலனை நடந்திருக்கிறதா? கோரிக்கையை முன்வைத்த தலைவருக்கு அதன் தோல்விக்கான பொறுப்பேற்பு என ஏதும் இல்லையா? அடையமுடியாத

ஒன்றை தொண்டர்களிடம் சொல்லி சொல்லி அதை அடையமுடியாமல் போனபின்னர் அவர்களுக்கு உணர்வில்லை - ஆகையால் அடையமுடியவில்லை என்று சொல்வது என்னவகை வாதம் என்ற கேள்விகள் எழாமல் இல்லை. இந்தக் கேள்விகள் கேட்கப்படாத கூடாதவை என்கிற சூழல்தான் இன்று தமிழக ஜனநாயக வெளியில் பெரிதாக இருப்பதையும் காணமுடிகிறது.

சோசலிசம் குறித்து இந்தியாவில் பேசுபவர்களுக்கும் இக்கேள்வி பொருந்தாதா என மறுகேள்வி எழுப்பப்படலாம். பொருந்தும் என்பதே சரியான பதிலாக தோன்றுகிறது. ஆனால் அக்கட்சிகளில் தங்கள் தவறு குறித்த பரிசீலனைகளாவது இருக்கும்.

பெரியார் ஜின்னா தொடர்புகள் குறித்து புரிதலை செய்துகொண்டு அடுத்து செல்லலாம்.

இந்து ஆங்கில இதழ் மார்ச் 19, 2018ல் பெரியாரின் ஜின்னா தொடர்பு குறித்து சிறிய கட்டுரை ஒன்றை வெளியிட்டிருந்தது. அதில் பாகிஸ்தான் கோரிக்கை எழுந்தவுடன் அதைப் பார்த்து பெரியாரும் திராவிடஸ்தான் எழுப்பினார் என சொல்லப்பட்டுள்ளது. திரு கண்ணன் எழுதிய புத்தகத்திலிருந்து கீழ்கண்ட வரிகளை அந்த நிருபர் எடுத்தாண்டுள்ளார். அவ்வரிகள்

He had gone to Bombay on an invitation from the non-Brahmins there and was accompanied by his lieutenants P. Balasubramaniam, T.A.V. Nathan, Thiruvasagamani K.M. Balasubramaniam, T.P.S. Ponnappa, C. Panjatcharam and C.N. Annadurai.

“On 7 January 1940, at a public meeting in Dharavi, Bombay, Periyar maintained that Tamil Nadu was as populous as England and as large as Germany, and that with Jinnah’s and Ambedkar’s help, he would es-

tablish its freedom," Mr. Kannan said in his book.

ஆய்வாளர் ராமகிருஷ்ணா ஜின்னா-அம்பேத்கர்-பெரியார் வரலாற்று சந்திப்பு எனும் கட்டுரையில் எழுதுகிறார்.

EVR made the demand for Dravidanadu in his presidential address at the 14th Confederation of S.I.L.F on December 1938. He met Sir Stafford Cripps and put forward the demand of Dravidanad in 1939. The persons met Cripps included Sir Muthaiah Chettiar, N. S. Samiappa Mudaliar and W. P. A. Soundara Nadar. Resolution was passed to that effect in 1940. Ironically, Muslim League refused the Cripps offer in 1942.

...After the passing of Lahore resolution, the relationship between the Justice Party and Muslim League became more intimate. At a joint meeting of Justice Party and Muslim League at Madurai in March 1940,

a proposal was made to seek the help of Jinnah for the creation of Dravidastan and Jinnah assured EVR to that effect. In fact, both continued to have good relations.

ராவ் இங்கு ஜின்னா- அம்பேத்கர் சந்திப்பில் இடம் பெற்றவர்கள், லாகூர் பாகிஸ்தான் தீர்மானத்திற்கு பின்னர் லீகுடன் பெரியார் உறவு பலமானதையும், திராவிடஸ்தான் கோரிக்கைக்கும் ஜின்னாவின் உதவியை நாடுவது என்பதைப் பற்றியும் குறிப்பிடுவதைக் காண்கிறோம்.

1942ல் கிரிப்ஸ் தூதுக்குழுசந்திப்பு குறித்து விஸ்வநாதன் (The political Career of E V Ramasami Naicker by Dr. E.Sa. Visswanathan) அவர்கள் எழுதியதும் இங்கு கணக்கில் கொள்ளவேண்டிய ஒன்றாகும்.

கிரிப்ஸ் தூதுக்குழு வரப்போகிறது என

அறிந்தவுடன் பெரியார் தன் நண்பர்களுடன் திராவிட நாடு அரசியல் அமைப்பு வரையறை செய்தல்- கிரிப்ஸை சந்தித்தல் போன்ற முடிவுகளை எடுக்கிறார். பெரியார், சௌந்திரபாண்டியன், சாமியப்பா, முத்தையா ஆகியவர்கள் மார்ச் 30 1942ல் கிரிப்ஸை சந்தித்து திராவிடநாடு கோரிக்கையை வலியுறுத்துகின்றனர்.

கிரிப்ஸ் குறிப்பிடுவதாக விஸ்வநாதன் கீழ்கண்ட அம்சங்களை எழுதியுள்ளார்.

ஜஸ்டிஸ் கட்சி பிரதிநிதிகள் மதராஸ் மாகாணம் இந்திய ஒன்றியத்திலிருந்து பிரிக்கப்படுவது குறித்து impress செய்தார்கள். இதன் மூலம் சிறுபான்மை பணக்கார பிராம்மணர்களின் ஆதிக்கத்திலிருந்து பெரும்பான்மை பிராமணர் அல்லாதவர்கள் தங்களை பாதுகாத்துக்கொள்ளமுடியும் என்றனர். ஆனால் இந்த மொழிவை

பொதுவாக்கெடுப்பு மூலமாகவோ அல்லது அசெம்பிளி தீர்மானம் வழியாகவோ கொணரமுடியும் என்கிற நம்பிக்கை அவர்களிடத்தில் இல்லை. மாற்றாக தங்களுக்கு தனி வாக்காளர் (separate electorates) முறையை தரவேண்டினார்கள். தீர்வு தனி வாக்காளர் என்பதில் இல்லை- மாற்றாக அமைப்பு தலைமை சார்ந்த விஷயமாக இருக்கிறதென்றார் கிரிப்ஸ். மதராஸ் மக்களை இந்திய யூனியனிலிருந்து பிரிந்து செல்வதற்கு ஏற்கச் செய்வீர் (persuade the people of Madras to vote for seceding from the Indian Union) என்கிற ஆலோசனையயும் அவர்களுக்கான வேலையையும் நல்கினார் கிரிப்ஸ்.

விஸ்வநாதன் எழுதுகையில் கிரிப்ஸ் சந்திப்பு குறித்து கட்சி ஆவணங்கள் ஏதுமில்லை என்கிறார். கட்சிக்குள் கிரிப்ஸ் சந்திப்பு குறித்தோ- ஜின்னா, அம்பேத்கர்,

பெரியார் முத்தரப்பு உடன்பாடு பற்றியோ ஏதும் பேசப்படவில்லை- தெரிவிக்கப்படவில்லை. நீதிகட்சியின் கடலூர்மாவட்ட மாநாட்டில் சௌந்திரபாண்டியனார் அவர்கள் தூதுக்குழு தங்கள் கோரிக்கைகளை பரிவுடன் பரிசீலிப்பதாக சொல்லியுள்ளனர் என்பதை குறிப்பிட்டு உரையாற்றியுள்ளார். தனி வாக்காளர் தொகுதி சாத்தியமில்லை என கிரிப்ஸ் சொல்லியதை விஸ்வநாதன் எழுதுகிறார்.

" But on the question of separate electorates for non Brahmans Sir Stafford Cripps seemed to have expressed the view that it was not easy of realisation."

ஆகஸ்ட் 4, 1944ல் பெரியார் ஈரோட்டிலிருந்து ஜின்னாவிற்கு தங்கள் பேச்சுவார்த்தைதனை நினைவுகூர்ந்து கடிதம் எழுதியுள்ளார். கிரிப்ஸ் மொழிவுகள், ஜின்னா காந்தி சந்திப்பு- காங்கிரசின் குணம்

ஆகியவற்றில் கவனமாக இருக்கவேண்டியது பற்றி தெரிவிக்கிறார். பாகிஸ்தான் திராவிடஸ்தான் ஆதரவு பற்றியும் குறிப்பிடுகிறார். அக்கடிதத்தில் இறுதி வரிகள் இப்படித்தான் எழுதப்பட்டுள்ளது.

Yourself know very well that there could be no Pakistan and independence of Muslims in India and until and unless independence was achieved for the rest of the nations. அதாவது மற்ற தேச விடுதலையில்லாமல் பாகிஸ்தானோ முஸ்லீம்களுக்கான சுதந்திரமோ இல்லை என்பதை தாங்கள் அறிவீர்கள் என பெரியார் எழுதியுள்ளதைக் காண்கிறோம்.

ஆனால் ஆகஸ்ட் 17,1944ல் ஜின்னா தனது நிலையை தெளிவு படுத்திவிடுகிறார். Dear Mr Ramasamy என்ற அழைப்புடன் அக்கடிதம் ஜின்னாவால் எழுதப்பட்டுள்ளது.

”I have always had much sympathy for the people of Madras, 90 percent of whom are non-Brahmans and if they desire to establish their Dravidastan, it is entirely for your people to decide on the matter. I can say no more. I cannot speak on your behalf. I have made my position clear to you when I was in Madras more than once, but hitherto I have noticed that in your activities you have been undecisive. If the people of your province really desire Dravidasthan, then it is for them to assert themselves

I hope you understand my position that I can only speak for Muslim India butyou have my assurance and whenever I have a say in the matter, you will find me supporting any just and fair claim or demand of any section of the peoples of India and particularly the non Brahmins of south India என்று ஜின்னா தெரிவிப்பதைக் காண்கிறோம்.

இதில் பெரியாரின் கடிதத்தில் கோரப்படும்

பிற தேச விடுதலையில்லாமல் பாகிஸ்தான் இல்லை என்பது குறித்து ஜின்னா ஏதும் பதில் பேசாமல் கடந்து போய்விடுவதுடன் திராவிடஸ்தான் வேண்டுமெனில் அதற்காக நீங்கள்தான் உறுதியாக நிற்கவேண்டும். நான் முஸ்லீம்களுக்காகத்தான் பேசமுடியும். உங்களுக்கானதை நீங்கள்தான் பேசவேண்டும் என ஜின்னா அவர்கள் தெளிவுபடுத்தியதைக் காண்கிறோம்.

அவ்வாண்டு செப்டம்பரில் மதராசில் அம்பேத்கரும் திராவிட இயக்கம் குறித்த விமர்சனப்பார்வையை வெளிப்படுத்தி பேசியிருப்பதைக் காண்கிறோம். அம்பேத்கர் ஆரியன் திராவிடன் கோட்பாட்டில் நின்று தனது எழுத்துக்களை அமைத்துக்கொள்ளவில்லை என்பதும் அவரைப் படிப்பவர்களால் உணரமுடியும்.

ஜின்னா- அம்பேத்கர்- பெரியார்

சந்திப்பின்படி தொடர்ந்து அவர்களால் சேர்ந்திசை செய்ய இயலாமல் போனது. அவரவர் தம் மக்கள் எவர் என உணர்ந்தாரோ அதற்கான தனித்த நடவடிக்கைகள் என அவர்களின் அரசியல் பயணத்தை நாம் காண்கிறோம். ஒருவருக்கு துணை என பயன்படுத்திக்கொள்ள நினைத்திருந்தாலும் பிரிட்டிஷாருடன் காங்கிரசுடன் பேச்சுவார்த்தைக்கு சென்ற ஜின்னாவால் தனது பாகிஸ்தான் கோரிக்கையை வெல்ல முடிந்தது. அம்பேத்கரும் வைஸ்ராய் கவுன்சில், அரசியல் நிர்ணயசபை (காங் ஆதரவுடன் ஆரம்பத்தில் இல்லாவிட்டாலும்) , அரசியல் அமைப்பு உருவாக்கம் என பயணித்து தீண்டாமை , இட ஒதுக்கீடு அம்சங்களில் சட்டப்பாதுகாப்பை உருவாக்கிய நிலையை பார்த்தோம்.

காங்கிரசும் பொதுமக்கள் கடமையும்

எனும் தலையங்கத்தில் பெரியார் சட்டசபைத் தேர்தலில் முஸ்லீம் தொகுதி, கிருஸ்துவர் தொகுதி, திராவிடர் தொகுதி என்று தனித்தனியே இருக்குமானால் அதில் காங்கிரஸ் தொகுதியிலும் மற்ற தொகுதிகள் போல் பெரும்பான்மையினர் தோல்வி அடைந்தே தீருவார்கள் என எழுதினார்.

“சமீபத்தில் நடந்த அரசியல் நிர்ணயசபை எவ்வளவு பித்தலாட்டமான முறையில் செய்யப்பட்டது என்பதைப் பார்த்தால் நாகரீக மக்கள் காரி உமிழ்வார்கள். காங்கிரசைத் தவிர மற்றவர்களுக்குப் பிரதிநிதித்துவம் கிடைப்பதற்கு வழி இல்லாமலே செய்துவிட்டார்கள்... 40 கோடி மக்களில் சிறு கூட்டமான 4 அல்லது 5 கோடி மக்களுக்குக்கூட யோக்கியமும் உண்மையுமான சரியானபடி பிரநிதித்துவம் இல்லாத காங்கிரசுக்கே தவிர வேறு

யாருக்கும் பிரதிநிதித்துவம் இல்லாமல் இருக்கச் செய்திருக்கிறது என்றால் இது பிரிட்டிஷாரின் எவ்வளவு பெரிய பித்தலாட்டமான காரியம்” என பெரியார் எழுதியதை வாசிக்கலாம். இந்த தலையங்கள் 3-8-1946 குடிஅரசில் காணப்படுகிறது.

வங்கத்தில் ஏற்பட்ட வகுப்புக் கலவரம் கொலை சொத்து நாசம் பற்றி விளக்கிய பெரியார் ஒன்றை தெளிவுப்படுத்துகிறார். “முஸ்லீம்களோ திராவிடக் கழகத்தார்களோ வெள்ளையனை வினாடி நேரம் கூட இங்கு இருக்க விரும்புகிறவர்கள் அல்ல. நம்மை பொறுத்தவரையில் வெள்ளையன் இருந்த இடத்தில் திராவிடர்கள் தான் அமரவேண்டும். ஆரியர்கள் ஆத்மார்த்தத்தில் இருந்துகொண்டு மோட்சத்திற்கு வழிகாட்டட்டும் என எழுதினார். இதில் கம்யூனிஸ்களை பட்சியுமில்லாதா

மிருகமுமில்லாத வௌவால் என குறிப்பிட்டு அவர்களும் சிந்திப்பார்களாக” என அத்தலையங்கத்தை முடிக்கிறார். குடியரசு 24-8-1946ல் இது இடம் பெற்றுள்ளது.

கும்பகோணத்தில் சொற்பொழிவாற்றிய பெரியாரிடம் சில கேள்விகள் கேட்கப்படுகிறது. வடநாட்டு ஜின்னா ஆதரவு ஏன்? பெரியார் தனது பதிலாக அவருக்கு நாடு பிரிந்தால் நமக்கும் நாடு பிரியும் . அவருடைய வழியை பின்பற்றுங்கள் என்றுதான் சொல்வதாக கூறினார். அவர் நமக்கு தலைவரல்ல- மகாத்மா ஆக்கவேண்டாம். ஆதரவாளர் என்றார் பெரியார்.

அடுத்து முஸ்லீம் மதத்தை ஆதரிப்பதேன் என்பதற்கு பதில் தருகிறார். ஜாதிபேதம் பார்க்கும்- மக்களை இழிவு படுத்தும் மூடநம்பிக்கை நிறைந்த மதம் ஒழியவேண்டும். இத்தகைய கொடுமைகள் இல்லாத மதம்

ஒழியவேண்டும் என திக சொல்லவில்லை என்கிறார். இப்பதில்கள் குடிஅரசு 19-10-1946ல் வெளியாகியுள்ளன.

இடைக்கால சர்க்கார் அதில் முஸ்லீம் லீக் பங்கேற்பு குறித்து பெரியார் எழுதுகிறார். வேவல் துரை பேச்சுவார்த்தைக்கு பின்னர் லீக் சார்பில் தலித் பிரதிநிதி இடம் பெறுதல் பற்றி விளக்குகிறார். லீக் செய்தது சரியானதே என ஆதரிக்கிறார். அதேநேரத்தில் காங்கிரசில் செயல்படும் தேசிய முஸ்லீம்களை ‘குலத்தைக் கெடுக்கவந்த கோடாலிக் காம்புகள்’ என விமர்சிக்கிறார்.

“பாகிஸ்தானைப் பெறுவதற்கு வெள்ளையனிடத்தில் நேரடி நடவடிக்கை என லீகர் கூறியதை காங்கிரஸ்காரர்கள் இந்துக்களிடம் போர் தொடுக்கத்தான் என தப்புப் பிரச்சாரம் செய்கின்றனர். அதனால் வங்காளத்தில் பெருங்குழப்பம்” ஏற்பட்டதாக

பெரியார் எழுதுகிறார்.

" தாழ்த்தப்பட்டவர்களை லீக் ஆதரிப்பதால் அவர்கள் நன்மை பெறுவர் என்பது திண்ணம். ஒருவேளை 6 கோடி தாழ்த்தப்பட்டவர்களும் கூட முஸ்லீம்களாக மாறிவிடுவார்களோ என்று நினைக்கவேண்டியிருக்கிறது. மாறிவிட்டால் ஒன்றும் குடிமுழுகிவிடாது. கருப்ப சாம்பான் காதர்வுசேன் ஆக மாறினால் 'டேய் கருப்பா எட்டி நில்' என்று கூறுவதை விடுத்து 'வாங்க சாகிப் சௌக்கியமா' என கனக சுப்பிரமணிய அய்யர் கேட்பார்" என அதை புரிய வைக்க பெரியார் முயற்சித்தார். இந்த செய்தியை 26-10-1946 குடிஅரசில் காணலாம்.

பெரியார் எதிர்பார்த்தது போல் அல்லது விழைந்தது போல் மதமாற்றத்தை தலித்கள் செய்துவிடவில்லை. இது ஏன் என்ற கேள்வியை விசாரித்து பெரியார் முடிவிற்கு

வந்ததாகவும் தெரியவில்லை.

“அந்தந்த ஜாதி வகுப்புக்கு எண்ணிக்கைக்கு தகுந்தபடி அதிகாரம் பதவி, உத்தியோகம் கல்வி வருவாய் முதலியவைகளைப் பிரித்து விடுவதால் எப்படி தேசியம் கெட்டுப்போகும்” என்ற கேள்வியை பெரியார் எழுப்பினார். இக்கேள்வி நவம்பர் 30, 1946 குடிஅரசில் இடம் பெற்றது.

“ஆரியர் தங்கள் கையில் ஏகபோக ஆதிக்கம் இருப்பதைத்தான் சுதந்திரம் எனக் கருதுகிறார்களே ஒழிய பொதுமக்கள் கையில் சுதந்திரம் இருப்பதைச் சுதந்திரமாக கருதுவதில்லை. காங்கிரஸ் சிறு சுயநல கோஷ்டியாரின் ஸ்தாபனமாகும். அரசியல் நிர்ணய சபைக்கு தேர்ந்தெடுத்ததில் அவர்களின் உண்மையான நிலைமை நன்கு தெரிகிறது. காங்கிரசால் 4 கோடி திராவிடர்களையும் 6 கோடி

ஷெட்யூல்டு வகுப்பாரையும் அலட்சியம் செய்ததுபோல் 9 கோடி முஸ்லீம்களை அலட்சியம் செய்ய முடியவில்லை. அதாவது குறைந்த அளவாவது முஸ்லீம்களைச் சரிப்படுத்திக்கொண்டுதான் சுதந்திரம் அளிக்கப்பட்டதாகச் சொல்லவேண்டி ஏற்பட்டுவிட்டது.” இதை டிசம்பர் 7, 1946 தலையங்கத்தில் பெரியார் எழுதியுள்ளார்.

பெதிக் லாரன்ஸ் குழு காலம்- வேவல் சமரசம்- இடைக்கால அரசாங்கம்- அரசியல் நிர்ணயசபை தேர்வு என அனைத்து பிரச்சனைகளையும் 1946ஆம் ஆண்டு பெரியார் அவரது சிந்தைப்படி அலசியுள்ளார். தமிழ்நாடுதான் தனது களம் என்றாலும் அனைத்திந்திய அரசியல் போக்குகள் பற்றி அவர் தொடர்ந்து தன் கருத்துக்களை வெளிப்படுத்திவந்தார். பிரிட்டிஷ் போகும்போது அதிகார மாற்றத்தை

தருவதற்கு இரு பெரும் சக்திகளான காங்கிரஸ்- லீக் உடன் மட்டும் விவாதிக்கத் துவங்கியதைப் பற்றி பெரியார் விரிவாகவே அலசியுள்ளார்.

பெரியார் முழுமையாக காங்கிரஸ்- காந்தி என்ன நிலை எடுத்தாலும் காலிகள், அறிவற்றவர் என்கிற வசைகளை தாராளமாக பயன்படுத்தியுள்ளார். ஆங்காங்கே காங்கிரஸ் திராவிடர் கம்யூனிஸ்ட்களுக்கு அறிவுரையை விமர்சனத்துடன் நல்கியுள்ளார்.

முஸ்லீம் லீக் எதை செய்தாலும் அதை விமர்சனம் ஏதுமில்லாமல் ஆதரிக்கிறார். காங்கிரஸ் காலித்தனத்திற்கான எதிர்வினை என்ற அளவிலேயே அவர்களின் அனைத்து செயல்களையும் பார்த்துள்ளார்.

பாகிஸ்தான் கோரிக்கையுடன் திராவிடஸ்தான் நகர்ந்துவிடும் என்று

ஜின்னாவிடம் வைத்த எதிர்பார்ப்பில் அவர் ஏமாற்றம் அடைந்தாலும் லீக் மீது வசையேதுமில்லாமல் அவர்களைப் பார்த்து இனவுணர்ச்சி கொள்ளவேண்டும் என்ற நிலையையே எடுக்கிறார்.

பெரியாரிடம் தான் வைத்த திராவிடநாடு கோரிக்கையை அடைய முடியாமல் போனதற்கோ- பிரிட்டிஷார் காங்கிரஸ் லீக் போன்றவர்களுடன் பேச்சு வார்த்தை மேஜைக்கு செல்லமுடியாமை குறித்தோ எந்த சுயவிமர்சனமும் இல்லை. தொண்டர்கள், திராவிடர்களையே அதற்கு குறை சொல்கிறார். அக்கோரிக்கையை முன்னெடுத்தவர் என்ற வகையில் அதை அடைவதற்கான எத்தனிப்புகள் எவை- அவை போதுமானதாக இருந்ததா என்ற எந்த பரிசீலனையும் வேறு ஜனநாயக இயக்கமாக இருந்தால் நடந்திருக்கும். பெரியார் அப்படி

எதையும் செய்துகொள்ளவில்லை.

எப்போதுமே அவரது உரையாடலில் எல்லா குறைகளும் பிறர் மீதானதாக இருக்கிறது. தவறே செய்யாத ஆக உயர்ந்த விழிப்புணர்வின் அடையாளமாக அவர் தன்னை முன்னிறுத்திக்கொள்வதை பார்க்கமுடிகிறது. கிரிப்ஸ், பெதிக், வேவல், மௌண்ட்பாட்டன், காந்தி, காங்கிரஸ் அனைவருமே ஏதோவொருவகையில் ஜின்னாவிற்கு இணங்கியுள்ளார்கள் என எடுத்துக்கொண்டால் அவர்கள் ஏன் பெரியாருக்கு இணங்கவில்லை. பெரியாரிடம் இருக்கும் ஒரே பதில் ஆங்கில ஆர்யர்களும் இந்திய ஆர்யர்களும் செய்த கூட்டுகளவாணித்தன ஒப்பந்தம்தான் என்பதாகவே இருக்கிறது. அவரின் கோரிக்கை தோல்விக்கு பெரியார் எள்ளவு கூட தான் காரணமில்லை என்பதையே

அவர் எழுத்துக்கள் பேச்சுக்கள் மூலம் நிறுவ விரும்புவதையும் பார்க்க முடிகிறது.

20-3-2022

# 24. DMK in Power by Philip Spratt

பிப் 2022

DMK in Power என்கிற புத்தகத்தை 1969ல் இந்தியாவின் ஆதி மார்க்சியர்களில் ஒருவரான பிலிப் ஸ்ப்ராட் எழுதியுள்ளார். அவரின் எழுத்துக்களை எடுத்து சொல்வார் இல்லாமல் அவை வெளித்தெரியாமல் போயின. இந்த புத்தகத்தின் முன்னுரையை மார்ச் 1 1969ல் பிலிப் ஸ்ப்ராட் எழுதியிருக்கிறார். புத்தகம் 1970ல் வந்துள்ளது.

அண்ணா அவர்கள் பிப்ரவரியிலேயே மறைந்துவிடுகிறார். புத்தகம் அதற்கு முன்பு எழுதப்பட்ட ஒன்று. ஆனால் அண்ணா

மறைவையடுத்து ஸ்ப்ராட் இப்புத்தகத்தில் post script பகுதியை சேர்த்துள்ளார். திரு கருணாநிதி அவர்கள் தன் 44 ஆம் வயதில் முதல்வராகிறார் என்பதுவரை பிலிப் ஸ்ப்ராட் கழக வரலாற்றை தனது மார்க்சிய அனுபவ அடிப்படையில் இப்புத்தகத்தில் பேசுகிறார். இப்புத்தகம் 160 பக்கங்களை மட்டுமே கொண்டது என்றாலும் ஆதி மார்க்சியர் அதுவும் இங்கிலாந்திலிருந்து இங்கு வந்து கம்யூனிஸ்ட்களுடன் வாழ்ந்து இந்த நாட்டின் விடுதலை அரசியலைப் பேசி அதற்காக வதைப்பட்ட ஒருவரின் எழுத்து- அதுவும் தமிழக மாற்று அரசியலின் வரலாற்றை அவரின் புரிதலுடன் பேசும் புத்தகம் என்பதால் அதன் முக்கியத்துவத்தை உணர்ந்தேன். 50 ஆண்டுகளுக்கு முன்பாக நீதிகட்சி- திக திமுக குறித்து பேசிய மார்க்சிய ஆய்வெழுத்து என்ற வகையில் இவ்வளவு

காலம் தவறவிட்டுவிட்டோமே என்ற உணர்வு படிக்கும்போது எழுந்தது.

இப்புத்தகத்தின் ஆரம்ப பக்கங்களில் (45 வரை/162) காணப்படும் அவரின் எழுத்துக்களிலிருந்து நான் தேர்ந்தெடுத்துக்கொண்ட சில பகுதியை தந்துள்ளேன். இதில் பிலிப் அவர்கள் பெரியார்- அண்ணா இருவரின்அணுகுமுறையில் காணப்படும் அம்சங்களைப்பற்றி சற்று பேசுகிறார்.. இனி பிலிப் அவர்களின் ஆங்கில வரிகள் அதன் ஆய்வு முக்கியத்துவம் கருதி அப்படியே தந்துள்ளேன்.

Indeed , unlike his leader( Periyar), Mr Annadurai seems from the beginning to have shown an understanding of other’s views and a preparedness for reconciliation. a speaker of a remarkable effectiveness, he is said always to refrain from harsh expres-

sions. Since the Kazhagam split nearly twenty years ago, he has never replied to Mr. Naickers's frequent strong words against him. When leading the opposition in the Madras assembly from 1957-62, he behaved in a decorous way and urged his followers to do the same the relations between the Congress and the opposition before the election of 1967 were said to be more friendly than in any other state.This does not deny a certain militancy, of a gandhian type. He has been imprisioned on 5 occassions 1938, 53, 60,62 and 1965 and in all has spent some 18 months in jail. Leadership of such aparty probably demands a record of this kind. Beyond that, his leadership depends on a manifestly superior capacity and on conciliation applied within the party...Mr Annadurai is no disciplinarian...

அண்ணா பெரியார் ஒப்பீட்டை ஆசிரியர் தந்திருப்பார். கடமை கண்ணியம் கட்டுப்பாடு எனப் பேசிய அண்ணாவைப்பற்றிய ஒரு

மதிப்பீடாக அவர் கட்டுப்பாடில்லாதவர் என ஸ்ப்ராட் சொல்லுவதைப் பார்க்கிறோம். இன்று இப்படி சொல்லியிருந்தால், அவர் என்னவாகியிருப்பாரோ?

அண்ணா நாவலாசிரியர், நாடகம் எழுதுபவர், சினிமா வசனம் எழுதுபவர். அவரின் உரைநடையில் ’புதிய ஸ்டைலும் இருந்தது- செக்சும் இருந்தது; என பிலிப் சொல்லியிருப்பார். நல்ல தமிழ் ஆனாலும் நவீன தமிழாக அவரது எழுத்து இருந்து பலரையும் ஈர்த்தது.

நாயக்கரோ சட்டமன்றம் போவதை ஏற்காதவராக இருந்தார். காந்தியை பார்த்து காப்பி அடிக்காதே என்றார். திமுக உருவாக்கிய அண்ணா நாயக்கரின் கருத்தை ஏற்கவில்லை. நவீன நம்பிக்கையுடன் கடுமையான தந்திரபோயங்களை கையாளமல் அவர் இருந்தார். பிராம்மணர்

மீதான உடல் தாக்குதலை அவர் கண்டிக்கவும் செய்தார். அவர்களை உறுப்பினராக ஏற்கவும் முடிவெடுத்தார்.

டாக்டர் சரஸ்வதி ஆய்வில் திக பிராம்மணரல்லாத பிற்பட்ட வகுப்பினர் என்றால், ஜஸ்டிஸ் கட்சி போல திமுக பிராம்மணரல்லாத முற்போக்கு வகுப்பினர். ஹார்ட்கிராவ் கருத்தில் இது மாற்றிச் சொல்லப்பட்டுள்ளதாக பிலிப் ஸ்பிராட் தெரிவிக்கிறார்.

அமைப்புரீதியாகக் கூட திக திமுக இரண்டும் வேறுபட்டவை. திக நாயக்கர் தலைவரை , அவர் எடுக்கும் முடிவுகளை கேள்வி ஏதுமின்றி பின் செல்லக்கூடியதென்றால், திமுக ஜனநாயக அமைப்பு விதிகளுடன் 5 லட்சம் உறுப்பினர்களுடன் இயங்கக்கூடிய அமைப்பாக இருக்கிறது. இங்கும்

தலைவர் வழிபாடு உண்டென்றாலும், அமைப்புவிதிகளை நடைமுறையில் பின்பற்றும் அமைப்பாக இருக்கிறது. மாறுபட்ட கருத்தும் அங்கு எதிரொலிக்க இடமுண்டு.

நாயக்கரின் திகவைவிட திமுகவிற்கு மாணவர் மத்தியில் பெரிய செல்வாக்கு இருக்கிறது. நாயக்கர் அண்ணா இருவருமே திராவிடஸ்தான் என்கிற பிரிவினைக் கோரியவர்களே. அண்ணா பெரியார்போல கடவுள் மறுப்பிற்கு அழுத்தம் தரவில்லை. கடவுளை புராணங்களில் ஆபாசமாக் சித்தரிப்பதை அவர் எடுத்துக்காட்டினார்.

கம்யூனிசம் பற்றி இருவரும் பேசுபவர்களாக இருந்தனர். நாயக்கர் ருஷ்யா போன அனுபவத்தை பெற்றவர். அண்ணாவும் மார்க்சை மேற்கோள் காட்டினார். முதலாளி தொழிலாளி சமரசம் அவசியம்

எனக் கருதினார். அதை தொழிலாளர் பக்கமிருந்து செய்வோம் என்றார். வடக்கு முதலாளிகள் குறித்த விமர்சனத்தை அவர் தீவிரப்படுத்தினார்.

காமராஜர் தவிர பிராம்மணர் ஆதிக்கத்தை நீக்க வந்த பெரியார், அண்ணா உட்பட பிராம்மணரல்லாத உயர் சாதியிலிருந்தே வந்தனர். நீதிகட்சியில் நிலச்சுவான் பலர் இருந்தனர் என பிலிப் அறிந்த செய்தியை உறுதிப்படுத்தி எழுதுகிறார்.

காமராஜரை பச்சைத்தமிழர் எனச் சொல்லி நாயக்கர் ஆதரவை நல்கினார். ஆனால் அவரது ஆதரவு துணையாக சிலநேரமும் தொந்தரவாக வேறு சில நேரமும் உணரப்பட்டது. நாயக்கர் காங்கிரஸ் அரசால் கைது செய்யப்பட்டபோதும், அவரை சிறையில் வைக்காமல் மருத்துவமனையில் வைத்ததற்கு காரணங்களில் ஒன்றாக நாயக்கரின் திமுக

எதிர்ப்பும் ஒன்று என ஸ்பிராட் எழுதியுள்ளார்

ஆய்வாளராக தான் பார்த்த உணர்ந்தவற்றை இந்நூலில் ஸ்பிராட் தந்திருப்பதை படிப்பவர் உணரலாம்.

# 25. எண்ணித் துணிக கருமம்

அண்ணாவின் எண்ணித்துணிக கருமம் சொல்லித்தரும் அமைப்புப் பாடம்

திராவிட முன்னேற்ற கழகம் 17-9-1949 அன்று உதயமானது. அக்கட்சி தனது 75 ஆண்டுகளை நோக்கி பயணிக்கிறது. திமுக 60 ஆண்டுகள் சட்டமன்ற, நாடாளுமன்ற பங்கேற்பில் மாபெரும் அனுபவத்தை பெற்றுள்ளது. 55ஆண்டுகள் ஆட்சி அனுபவத்தை அதிமுகவுடன் சேர்த்தால் அண்ணா வழி திராவிட கட்சிகள் பெற்றுள்ளன. தமிழக வரலாற்றில் இப்படிப்பட்ட பெரும் மாறுதலை அண்ணாவின் tactics மட்டுமே உருவாக்கியது என்றால் அது மிகையாகாது. அண்ணாவின் 317 பக்க அளவிலான எண்ணித் துணிக கருமம் கைப்பிரதியை ஒரு முறையாவது தமிழர்

வாசித்து பார்ப்பது அரசியல் உலகிற்கு நலமானது. அது தமிழகத்தில் அரசியல் திசை மாற்றத்தை உருவாக்கிய செவ்வியல் ஆவணம்.

1951ல் திமுகவின் அமைப்பு விதிகள் முதல் மாநாட்டில் ஏற்கப்பட்டன. அதன் அமைப்புவிதியில் காணப்பட்ட முக்கிய விதி 2, 3 1963-64 காலத்தில் திருத்தப்பட்டது. அமைப்பு விதிகள் கால இடைவெளியில் பல மாற்றங்களைச் சந்தித்து 2003ல் கலைஞர், பேராசிரியர் ஒப்பத்துடன் விதிகள் இன்று நமக்கு கிடைக்கின்றன. இந்த விதிகள் தான் தேர்தல் கமிஷனர் அலுவலகத்தில் கொடுக்கப்பட்டுள்ளன.

அந்த அமைப்பு விதிகளில் விதி 2 குறிக்கோள் Aims பற்றிப் பேசுகிறது. ஆங்கில வரிகளாக

In conformity with the aims as laid down by Arignar Anna, the aim of the Kazhagam is to strive and forge Dravidian Cultural cooperation among the four linguistic states of Tamilnadu, Andhra Pradesh, Kerala and Karnataka, within the frame work of the sovereignty, unity and integrity of India and within the ambit of the Constitution of India. The Dravida Munnetra Kazhagam bears true faith and allegiance to the constitution of India, as by law established and the principles of socialism, secularism and democracy and would uphold the sovereignty, unity and integrity of India.

கலைஞர் அவர்கள் அண்ணாவின் ‘எண்ணித் துணிக கருமம்’ எழுத்தை வெளியிட்ட 2003 மே 1 அன்று வெளி உலகிற்கு தந்தார். முன்னுரையில்- குறிக்கோளின்- தமிழாக்கத்தை இவ்வாறு தந்துள்ளார்

” அண்ணா வகுத்த குறிக்கோளுக்கு ஏற்ப தமிழகம், ஆந்திரம், கேரளம்,

கருநாடகம் ஆகிய நான்கு மொழி வழி மாநிலங்களிலும் இந்திய அரசுரிமை ஒருமைத்தன்மை, அரசியல் அமைப்புச் சட்டம் ஆகியவற்றுக்கு உட்பட்டு நெருங்கிய திராவிட கலாச்சார கூட்டுறவு நிலவப் பாடுபடுவது, அரசியல் நிர்ணய சட்டத்தில் முழு நம்பிக்கையும், பற்றுறுதியும் கொண்டு சமதர்மம், சமயச் சார்பின்மை, ஜனநாயகம் ஆகிய லட்சியங்களில் முழு ஈடுபாடும் பற்றும் கொண்டு இந்திய நாட்டின் இறையாண்மை, ஒற்றுமை, ஒருமைப்பாடு ஆகியவற்றைக் கட்டிக் காப்பது”

அடுத்து விதி 3 கோட்பாடு Ideals

” Having strict adherence to the principles of duty, dignity and discipline stressed by Arignar Anna as the basis, the party will strive to safeguard the democratic rights in politics, to establish a society free from any kind of exploitation, to effect reforms in society in order

to bring about a renaissance based on rationalism, to eradicate poverty in the economic field, to find out ways and means, to secure the welfare of all on the basis of socialism, to promote the state language without giving room for domination by other languages in order to secure them due place of importance, to decentralise the powers concentrated in the centre and to secure state autonomy for the states and genuine Federation at the centre”

இதை கலைஞர் தமிழில் இவ்வாறு தந்துள்ளார்

“அறிஞர் அண்ணா அறிவுறுத்திய கடமை- கண்ணியம்- கட்டுப்பாடு அடிப்படையில், அரசியலில் ஜனநாயக உரிமைகளைப் பாதுகாத்து, ஆதிக்கமற்ற சமுதாயத்தை அமைத்திடவும், பகுத்தறிவு அடிப்படையில் மறுமலர்ச்சிக்கான சீர்திருத்தப்பணி ஆற்றிடவும், பொருளாதாரத்துறையில்

வறுமையை வென்று, சமதர்ம அடிப்படையில் எல்லோரும் நல்வாழ்வு பெற வழிவகை கண்டிடவும், பிறமொழி ஆதிக்கத்திற்கு இடங்கொடாமல் அந்தந்த மாநில மொழிகளை வளர்த்திடவும் அவைகளுக்கான உரிய இடத்தைப் பெற்றுத் தரவும், மத்திய அரசில் குவிந்து கிடக்கும் அதிகாரங்கள் பரவலாக்கப்பட்டு, மாநிலங்களில் சுயாட்சியும்-மத்தியில் கூட்டாட்சியும் உருவாகிடவும் தொண்டாற்றுவது”

மேற்கண்ட மாற்றங்களை செய்ய வேண்டியதன் அவசிய பின்னணியை விளக்கி அண்ணா அவர்கள் கையெழுத்துப் பிரதியாக 300 பக்கங்களுக்கு மேல் எழுதி வைத்திருந்தார். அந்த உயர்தர கிளாசிக்கல் ஆவணத்தை 40 ஆண்டுகள் பத்திரமாக பாதுகாத்து வைத்திருந்து கலைஞர் அவர்கள் அப்படியே அண்ணாவின் கையெழுத்து

பிரதியை ‘எண்ணித் துணிக கருமம்’ என்கிற புத்தகமாக வெளி உலகிற்கு பகிரங்கப்படுத்தினார். வெளியிடமுடியாத பல தன்னிடம் இருப்பதாகவும் முன்னுரையில் கலைஞர் குறிப்பிட்டிருப்பார். அவைகளும் கால சூழலில் வெளியானால் வரலாற்று மாணவர்களுக்கு பயனுள்ளதாக அமையும்.

அண்ணாவின் இந்த கையெழுத்து பிரதி Tamil digital library ல் கிடைக்கிறது. எவரும் படித்துவிட முடியும். அந்த ஆவணம் அண்ணாவின் தலைமை பொறுப்பை, ஓர் அமைப்பை எப்படி அடிப்படை கொள்கைக்கே நெருக்கடி ஏற்படும் காலத்தில் கொண்டு செல்ல வேண்டியிருக்கும் என்பன குறித்த செவ்வியல் பாடமாக இருக்கிறது. தமிழ் படிக்கக் தெரிந்த அனைத்து அமைப்பில் வேலை செய்வோரும் அதில் கற்க ஏராளம் இருக்கிறது. திமுக கட்சி அமைப்பினர்

மட்டுமல்ல , வேறு அமைப்பினர் கூட கூட்டாக பொருட்படுத்தி வாசிக்கும் அளவிலான மிக மிக பொறுப்பான அண்ணாவின் ஆவணமது. நாடாளுமன்றத்தில் 1963 ஜனவரி, மே, டிசம்பரில் அண்ணா ஆற்றிய உரைகளுடன் அண்ணாவின் கையெழுத்துப் பிரதியை சேர்த்து வாசித்தல் புரிதலை கூட்டும்.

60 ஆண்டுகளுக்கு முன்னர் அண்ணா எடுத்த இந்த ‘பிரிவினை கொள்கை நிலைப்பாட்டில் மாற்றம்-திமுகழகத்தை அரசாங்க சட்ட வேட்டைகளிலிருந்து காத்து பிரம்மாண்டமாக வளர்த்தல்’ என்கிற ‘பாசறை காப்பு- படை காப்பு, விதைநெல் காப்பு- பயிர் காப்பு’ என்கிற tactics இன்றளவும் அக்கட்சியை காத்து நிற்கிறது. இதனால் தான் அக்கட்சியின் அமைப்பு விதிகளில் அண்ணா வழி என்கிற invocative clause இன்றளவும் மாற்றப்படாமல் இருக்கிறது என்கிற புரிதலும்

தேவைப்படுகிறது.

" பலகாலமாக கூறி வந்ததை மீண்டும் கூறுகிறேன். நான் பத்து, பதினொன்று (கழகத்தில்) ஆவதை விரும்புவன். பத்து, எட்டாக ஆக்கப்படுவதை விரும்புவன் அல்ல. இது எனது சொந்த விருப்பு வெறுப்பு பிரச்சனையல்ல. கழகம் வளர இது முறை என்று நம்புகிறேன். கழகத்தை நடத்திச் செல்லும் பொறுப்பு என்னிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள வரையில் இந்த முறை இருக்கும்."

" சிறைபுகும் உயர் ஜாதி, சிறை புகாத மட்ட ஜாதி என்ற நிலை கழகத்தில் ஏற்பட்டுவிடக்கூடாது. ஒரு குறிப்பிட்ட கட்டத்தின்போது சிறை செல்ல இயலாதவராக ஒருவர் இருப்பதை நிரந்தர பலகீனமன்றோ, மாறவே முடியாத இயல்பு என்றோ எண்ணிக்கொண்டு அவரால் கிடைக்கக்கூடிய

வேறு பல துணைகளை, பயன்களை, இழந்திடும் முறையில் , அவரை விரட்டுவது, யூகம் ஆகாது; நியாயமும் அல்ல”

” திமுக தடைச்சட்டம் (பிரிவினை பேசினால்) காரணமாக அழிக்கப்பட்டு போனால், அதன் அளவுக்கு காங்கிரஸ் எதேச்சதிகாரத்தை எதிர்த்து நிற்கும் வேறு ஒரு கட்சி இன்று இல்லை. இன்னும் இருபது ஆண்டுகளுக்கு ஏற்படவும் முடியாது..சென்ற தேர்தலில் காங்கிரஸ் ஆளும் கட்சிக்கு 50 லட்சம் வாக்குகள் (200 தொகுதிகள் மூலம்), கழகத்திற்கு 34 லட்சம் வாக்குகள்( 140 தொகுதிகள்) . இந்த அளவு வாக்குகள் பெறத்தக்க கட்சிகள் எதுவும் இல்லை. ..கம்யூனிஸ்ட் கட்சி சீனப் பிரச்சனை காரணமாக மக்கள் ஆதரவை பெறமுடியா நிலையை தேடிக்கொண்டுவிட்டது. வாய்ப்பு சுதந்திரா கட்சிக்கு என்றாகிறது. இது

பாட்டாளி நடுத்தர வகுப்பினருக்கு நலன் தராது. தென்னாட்டு உரிமைக்கு பலனும் தராது.”

” தடையை மீறுவதால், கொள்கை வளர வழி கிடைக்கப் போவதில்லை. . மீறுகிறவர்களின் பேரும் புகழும் வளரும். மீறுகின்றவர்களின் இதயத்தில் பெருமிதம் , வரலாற்றில் பொறிக்கப்படத்தக்க வீரச்செயலில் ஈடுபட்டோம் என்ற திருப்தி ஏற்படும்..கொள்கை வளர்ச்சி தொடர்ந்து நடத்தப்படுகிற பிரச்சாரத்தால் மட்டுமே ஏற்படும். தடைச்சட்டம் மீறுவது வீரச்செயல், தியாகத்துக்கான வாய்ப்பு என்று ஆகுமே தவிர கொள்கை வளர்ச்சி ஆகாது. தடை மீறுவதன் மூலம் கொள்கை தானே வளரும் என எண்ணுவது தவறு”

” என் பிணத்தின் மீது நின்றுகொண்டுதான் பாகிஸ்தான்

பிரிக்கப்பட முடியும் என பேசியவர்களை நான் அறிவேன்.

பெரியாரின் பொதுவுடைமை பிரச்சாரம் என்ன ஆயிற்று என்பதும், அக்ரகாரத்தைக் கொளுத்த தீவட்டியை பெட் ரோல் டின்னுடன் வைத்திருக்கச் சொன்னது என்ன ஆயிற்று என்பதும் எனக்குத் தெரியும்..தூற்றுதலுக்காக நான் துளியும் அஞ்சவில்லை. அஞ்சப்போவதும் இல்லை....கொள்கையை விட்டுவிடவும் கூடாது. அதேபோது நாம் கட்டி வளர்த்துள்ள கழகம் அழிந்து போகவும் விடக்கூடாது என்று எண்ணுகிறேன்”

” கொள்கையை காத்திட கழகம் அழிந்துபடட்டும் என்று கூறுவதும் சரி, கழகம் காத்திட கொள்கை அழியட்டும் என்று சொல்லுவதும் வேதனைத்தரகூடியது...பரிகாரம்

தேடும்போது, பிரச்சனையின் சகல கோணங்களையும் கவனிக்க வேண்டும். நமது விருப்பு வெறுப்பு மட்டும், நமது அளவுகோலாகி விடக்கூடாது”

” எந்த கட்சிக்கும் அதன் மூலாதாரம் கொள்கையை அழிக்கக்கூடிய சட்டத்தை சந்திக்க வேண்டிய நிலை ஏற்பட்டதில்லை..எனக்கு , சட்டத்தால் அழிக்கமுடியாத பாதுகாப்புடன் பாசறை வேண்டும்...

ஒன்று தெளிவாக திட்டவட்டமாக கூறிவிடுகிறேன். எவருடைய தீவிரத்திற்கும் மட்டமானதாக என்னுடையது இருக்காது. என்னுடைய தீவிரம் திட்டமிடப்பட்டதாக, நீண்டநாள் நிலைத்திருக்கத் தக்கதாக, கோலிடும் பலனைப் பெற்றுத்தர தக்கதாக இருக்கவேண்டும் என்பதிலேயே நான் மிகுந்த கவலை கொண்டவன். என் முறை இதுவரை

உங்களை தலைகுனிய வைத்ததில்லை. இனியும் அந்த நிலை ஏற்படாது.  கழகம் நிலைத்திடவும், கொள்கை உலவிடமும், போர் நடந்திடவும் ஏற்ற சூழ்நிலை உருவாக்கும் பணியில் என்னுடன் ஒத்துழைக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.”

” பிரிவினை பேசாதே என்று சட்டம் கட்டளையிட்டது.  மூச்சு பேச்சு இல்லை. பிரிவினை பேச்சே இல்லை என்ற அவச்சொல்லும் ஏற்படாமல், ஒரு நிலை ஏற்பட, வழிகாண வேண்டும்...எண்ணித் துணிக கருமம்..

என அண்ணாவின் எழுத்து திமுகவிற்கு தொடர் ஏற்றத்தை அதிகாரத்தை தரக் காரணமாயிற்று என்றால் மிகையாகாது.

dec 2023

# 26. திராவிட இன அடையாளமும் வெகுமக்களிய அரசியலும்

(Ethinicity and Populist Mobilisation- Political Parties, Citizens and Democracy in South India)

July 10

டாக்டர் பேரா நரேந்திர சுப்பிரமணியன் கனடா மெக்ஹில் பல்கலை ஆய்வாளர். அவர் எழுதி 1999ல் வெளியான நூல் Ethinicity and Populist Mobilisation- Political Parties, Citizens and Democracy in South India.

கடந்த அக்டோபர் 2023ல் இந்நூலை திராவிட இன அடையாளமும் வெகுமக்களிய அரசியலும் என்கிற பெயரில் காலச்சுவடு , திருநாவுக்கரசு மொழிபெயர்ப்பில் கொணர்ந்துள்ளனர். தமிழில் 600

பக்கத்திற்கான பெரிய நூல். கோட்பாட்டு அடர்த்தி கொண்ட நூல்.

வெகுமக்களியம் என்கிற பாப்புலிஸ்ட் இயக்கங்கள் உலகளாவிய அனுபவங்களை கோட்பாட்டாளர்கள் எப்படி புரிந்து வரையறுத்தனர், அதில் ஏற்பு ஏற்பின்மை என்கிற பின்புலத்தில் தன் நூலை ஆசிரியர் எழுதியுள்ளார். பிராமணரல்லார் இயக்கம்- தமிழ் தேசியம், திமுக கட்டுமானம்- ஆட்சி அதிகாரம், அதிமுக கட்டுமானம்-ஆட்சி என்கிற 1920-90 என்கிற 70 ஆண்டுகால வெகுமகளிய கட்சிப் பரிமாணங்களை நூலசிரியர் தன் ஆங்கில நூலில் 400 பக்க அளவில் எழுதியிருக்கிறார். இந்நூல் தமிழாக்கம் பெற்றுள்ளது சிறப்பு.

நூலின் தமிழ் பதிப்பிற்காக விரிவான முன்னுரையை 2020 காலம் வரையிலான நிகழ்வுகளுடன் ஆசிரியர் விரிவுபடுத்தி

வைத்துள்ளார். இந்த முன்னுரையே 85 பக்கங்களை எடுத்துக்கொண்டதால், தமிழ்நூல் அதிக பக்கங்களை கொண்ட ஒன்றாக அமைந்துள்ளதை உணரமுடிகிறது.

அறிமுகம் என்கிற பகுதியை கோட்பாட்டு சலிப்பு என நினைப்பவர்கள் , தோன்றும்போது படிப்பது நலம். கம்யூனிஸ்ட் மானிபெஸ்டோ முன்னுரைகள் குறித்து அப்படி சொல்வதுண்டு. நேரிடையாக அத்தியாயங்களுக்கு போவது நூலை சற்று எளிமையாக உள்வாங்க உதவும்.

Arguments என்பது வாதங்கள் என்கிற இயலாக மொழிபெயர்த்துள்ளனர். நூலின் subject matter 220 பக்கங்களுக்கு பின்னர்தான் தொடங்கும். அதுவரை கோட்பாட்டு சுற்றல் கொண்ட பிரதியாக இந்நூல் நகர்கிறது. இப்பக்கங்களை இன்னும் வாசகருக்கு உதவக்கூடிய வகையில் எழுதியிருந்தால் (இதனால் தமிழ் பெயர்ப்பிலும் இப்படிப்பட்ட

கோட்பாடு பிரதி பின்னல் ) இன்னும் அதிக தமிழ் வாசகர்களை எட்டியிருக்க முடியும்.

நூலாசிரியர் , திருவாரூர் தோழர்கள் பலரும் நன்கறிந்த மறைந்த பேரா பிறை அறிவழகனையும் தன் நன்றிப் பட்டியலில் இணைத்திருக்கிறார். அவர் திக செயல்பாட்டாளர் என்பதால் நூலாசிரியர் அவரைத்தான் குறிப்பிடுவதாக நான் எடுத்துக்கொண்டுள்ளேன். நரேந்திர சுப்பிரமணியன் அவர்களின் தமிழ் பூர்வீகம் பற்றி அவர் ஆங்கில நூலுக்கு எழுதியிருந்த 1997 முன்னுரையில் தெரியப்படுத்தியுள்ளார். இவரது கொள்ளு தாத்தா சக்கரை செட்டியார். மற்றொருவர் நீதிக் கட்சி பொன்னுசாமி நாயுடு.

இனி நூலில் இடம்பெற்றுள்ள சில புள்ளிகள் (நூலை இது முழுமையாக காட்டாது. கோட்பாட்டு சிக்கவிழ்த்து முடிந்தவரை

கொடுத்துள்ளேன்.

 வெகுமக்களிய சக்திகள் ‘உயர் குழாமிடமிருந்து’ சாதாரண மக்களை வேறுபடுத்தும் செங்குத்தான அச்சில் செயல்படுகிறது

 வெகுமக்களிய கட்சி என்று வகைப்படுத்துவதற்கு முரணான வகையில் பாஜக தொடர்ந்து உயர், இடைநிலை சாதி நெறிகளின் அடிப்படையான இந்து மேலாதிக்கத்தை ஊக்குவித்து வருகிறது.

 1980 களிலிருந்து காங்கிரஸ் கட்சியின் முக்கிய அம்சமாக வெகுமக்களியம் இல்லை

 இடைநிலைச் சாதிகளை அடித்தளமாகக் கொண்ட ஜனதா தளம், ராஷ்ட்ரிய ஜனதா தளம், சமாஜ்வாடி, திமுக போன்றவை தலித் பிரிவினருக்கான மறுவிநியோகத்தை குறைத்ததுடன்

தங்களது ஆதரவாளர்களுக்கும் தலித் சாதியினருக்குமான மோதலில் தங்கள் ஆதரவாளர்களுக்கு உதவினர் (பக் 41/614)

 திராவிட கட்சிகளின் சமூக சித்தரிப்புகள் மொழி, சாதி, மதம் என்பதிலிருந்து பெறப்பட்டன என்றாலும் அவற்றை கடந்ததாகவும் இருந்தன. இது தமிழ்நாட்டில் வெகுமக்கள் கட்சி சார்பையும் வடிவமைத்தது.

 தொடக்கக் கால தலித் தலைவர்களான எம் சி ராஜா, ரெட்டைமலை சீனிவாசன் சுயேட்சையாக தலித்களை திரட்டினர். திகவின் சில முயற்சிகளுக்கு ஆதரவாகவும் நின்றனர். தலித் பிரச்சனைகள் பற்றி பெரியார் குறைவாக பேசியதானது பிற்காலத்தில் அரசியலில் அரசாங்கப் பணிகளில் இடைநிலை சாதிகளின் ஆதிக்கத்தை, செல்வம் நிறைந்த தனியார் துறையில் உயர் சாதிகளின் ஆதிக்கத்தையும்

திராவிடக் கட்சிகள் ஊக்குவித்ததில் முக்கிய பங்காற்றின.

- திராவிடக் கட்சிகள் மாறிமாறி ஆட்சிக்கு வரத்துவங்கியவுடன் ஆதிக்கச் சாதிகளுடனான அவற்றின் கூட்டு அதிகரித்தது. திராவிட சொல்லாடல்கள், அணிதிரட்டல், சாதியை இலக்காக வைத்து உருவாக்கப்பட்ட கொள்கை திட்டங்களால் வசதியான இடைநிலைச் சாதிகளே அதிகம் பலனடைந்தன. தலித்துகள், பழங்குடிகள், மிகவும் பிற்பட்டவரில் சிலர் பலனடைந்தனர்.

- திராவிடக் கட்சிகள் வர்க்க சாதியச் சமத்துவமின்மைக்கு எதிரான சவால்களைக் கட்டுபடுத்தியதுடன், புதிய கட்சிகளால் தங்களுக்கு எதிரான தேர்தல் சவால்களையும் கட்டுப்படுத்தின.

- திராவிட இயக்க அணிதிரட்டலானது

எந்தவொரு குறிப்பிட்ட சாதி அல்லது மொழிக்கும் எதிராக வன்முறையை தூண்டவில்லை. பிராமணர் மீதான திக தாக்குதல் வரம்பிற்குட்பட்டதாகவே இருந்தது.

 கேரளா அரசியல் சொல்லாடல்களில் வர்க்கமும் சாதியும் இருந்தன. தமிழ்நாட்டில் சாதியும் மொழியும் இருந்தன.

 தமிழ் நாட்டில் அரசியல்மயப்படுத்தப்பட்ட இனத்தன்மையானது ஆபத்தற்ற வகையில் வெளிப்படுத்தப்பட்டது. அதன் ஆரம்பகால பிரிவினை கோரிக்கையையும், தற்கால அதிக தன்னாட்சி கோரிக்கையையும் மத்திய அரசு ஏற்கவில்லை.

 சமூகத்தைப் பல துண்டுகளாகப் பிளக்கும் சமூக மோதலைத் தூண்டுவதற்கான இனத்தன்மையின் உள்ளார்ந்த ஆற்றலை எந்தச் சூழலில் வெகுமக்களியம்

கட்டுப்படுத்துகிறது என்பது ஆய்விற்குரிய ஒன்று

-  பிரிவினைக்கான கோரிக்கை தமிழ்நாட்டில்தான் முதலில் எழுந்தது. ‘பிராமணல்லாதாரியம்’ என்ற சொல் பிராமணர் அல்லாத சமூகம் அரசியல்மயப்பட்டதை குறிக்கிறது. இடைநிலை சாதிகளுடன் தங்களை நெருக்கமாக இணைத்துக்கொண்டவை திராவிடக் கட்சிகள். சாதி அடிப்படையில் ஒதுக்கீடு என்கிற நீண்ட வரலாறு தமிழ்நாட்டிற்கு இருக்கிறது. மொழி சாதி வழி பலமான அணிதிரட்டல் காரணமாக, மதவழி அணிதிரட்டல் பலவீனமாக இருந்தது. செயலூக்கமுள்ள குடிமை வாழ்வு இருக்கிறது

-  அரசியல் அமைப்புகளில் நிலவும் பன்மைத்துவமானது சமூக பன்மைத்துவத்திற்கு உதவியாக இருக்கிறது,

 அமைப்புரீதியான பன்மைத்துவம் தலைமை நெகிழ்வுத்தன்மை, தொண்டர்களின் தன்னிச்சையான தன்மை, ஆதரவாளர்களின் தன்னிச்சையான தன்மை என்ற கூறுகளைக் கொண்டது

 நீண்ட கால திட்டத்தில் திமுக , அதிமுக தலைமை காட்டிய நெகிழ்வுத்தன்மை கடந்த கால வெற்றி தோல்விகளிலிருந்து கற்றுக்கொண்டதாகும்

 கம்யூனிஸ்ட் கட்சிகளும் தேர்தல் பங்கேற்பு, தனிச் சொத்துரிமைபாற் நெகிழ்வான அணுகுமுறை மேற்கொண்ட வகையில் சமூக பன்மைத்துவம் கட்டப்பட பங்காற்றினர்

 அமைப்பு விதிகள் எவ்வாறாயினும் கட்சிக் குழுக்கள், கட்சி சார்புள்ள குழுக்கள் சுதந்திரமாக முடிவெடுக்கின்றனவா

என்பதும், கட்சித்தலைமை எடுக்கும் முடிவில் மாறுபாடு இருந்தால் விமர்சன உரிமை பெற்றுள்ளார்களா என்பதும் முக்கியமானது

- மக்களை அணிதிரட்டுவதிலும் கொள்கை விஷயங்களை கொண்டு செல்வதிலும் திராவிடம் இரண்டு விஷயங்கள் நடக்கக் காட்டியது. 1960களிலேயே காங்கிரசை கம்யூனிஸ்டை விஞ்சியது. 1970களில் அகில இந்திய கட்சிகளை திமுக அதிமுக விளிம்புநிலைக்கு தள்ளின.

- தமிழ் அடையாளம் வரவேற்பைப் பெற்றதற்குக் காரணம், அது அடித்தட்டு மக்களின், தமிழ் நடுத்தர அடுக்கு சமூக பழக்க வழக்கங்களுடன் இணைப்பைக்கொண்டதால் தான்.

- பிராமணர்களைக் கூட ஒருவகை தனிப்பட்ட தமிழர்கள்தான் என்கிற புரிதல்

இருந்தது.

 அடுத்தவர்களைத் தன்னை பின்பற்றவைக்கும், தனக்காக அர்ப்பணிக்கவைக்கும் கவர்ச்சியை கொண்ட தலைவர் என்பது பரப்பிய அமைப்புகளின் அம்சம். திராவிடத்தில் பெரியார், அண்ணா, கலைஞர், எம்ஜி ஆர், ஜெயலலிதா என அய்ந்து பேர் இப்படியான தலைவர்களாக இருந்தனர்.

பேரா நரேந்திர சுப்பிரமணியனின் பெரியார் அவர்கள் குறித்து தன் ஆய்வு மதிப்பீடுகளாக சொல்பவற்றில் சில அம்சங்களை இங்கு தொகுத்து தந்துள்ளேன்

அத்தியாயம் மூன்றில் இடம் பெற்றவை மட்டும் இங்கு தரப்பட்டுள்ளன.

-காலனியாட்சியின்போது திராவிட இயக்கத்தின் மாபெரும் தலைவராக இருந்த ஈ வெ ராமசாமி நாயக்கரின் அரசியல்

இந்து மத நூல்களின் சடங்குகளைத் தலைகீழாக்கம் செய்வதாக இருந்தது. சமூகத்தை அதிர்ச்சிக்கு உள்ளாக்குவதன் மூலம் மதத்திற்கும் சமூக ஆதிக்கத்திற்கும் இடையிலுள்ளதொடர்புகளை உணர்த்த இவ்வாறு மதமறுப்பு அரசியல் செய்யப்பட்டது.

 காலனியாட்சிக்கு முந்தைய தமிழ்நாட்டில் சமூக பொருளாதார அதிகாரத்தை அனுபவித்துவந்த பல சாதிகளில் ஒன்றுமட்டுமே பிராமண சாதி. தகுதி நிலையானது வர்ணத்தை சார்ந்திருப்பது இங்கு குறைவாகவே இருந்தது. சமவெளி பகுதிகளில் பிராமணரல்லாத சாதிகள் உயர் தகுதி நிலையுடன் மேலாதிக்க திட்டங்களுக்கு இளைய பங்குதாரர்களாக இருக்க முடிந்தது.

 இடைநிலை சமூகப் பிரிவில் கீழ்நிலை சமூகங்களின் மனக்குறைகளும் கூட

பிராமணர்கள் மீது குவிக்கப்படுவதை காலனியாட்சி மாற்றங்கள் சாத்தியமாக்கின.

- பிராமணர்களின் ஆதிக்கத்தையும் வட இந்தியர்களின் ஆதிக்கத்தையும் நீட்டிப்பதற்கான மேலாதிக்க திட்டமே காந்திய தேசியம் என்று காங்கிரசிலிருந்து வெளியேறிய பெரியார் பேசினார்.

- சூத்திரர்களின் முதன்மை பற்றிய பெரியாரது தொலை நோக்கு பார்வையே பணக்கார விவசாயிகள், வர்த்தகர், தொழில் அதிபர்கள் போன்ற பிராமணரல்லாத உயர்குழாமினரின் ஆதிக்கத்தை நிலைநிறுத்த சித்தாந்த அடிப்படையை நல்கியது.. பெரியார் திக வை சூத்திரர் கழகம் என்றே அழைக்கலாம் எனச் சொன்னார்.

- அதேநேரத்தில் பெரியார் தமிழர் என பிறரையும் உள்ளக்கிய வகையில்

பேசினார். அதில் முஸ்லிம், கிறித்துவர், தாழ்த்தப்பட்டவர்களையும் கூட்டாளிகளாக பாவித்தார். ( பக் 248/614)

 ஆனால் சமூக அடையாளத்தை கட்டமைப்பதில் இந்துயிசத்திற்கு பங்கு இருக்கிறது. சாதி அநீதிகளுக்கு அடிப்படை மதம்தான் என காங்கிரசிலிருந்து வெளியேறிய பெரியார் நாத்திகம் பரப்பியது குழப்பத்தையும் ஏற்படுத்தியது. தமிழ்ச் சமூகம் பற்றிய அவரது விமர்சனம் தாராளவாத தாக்கம் என்பதைவிட செமிட்டிக் மத தாக்கம் கொண்டதாக இருந்தது.

 பிள்ளையார் சிலை உடைப்பு தவறு என முஸ்லிம் மதத் தலைவர்கள் சொன்னபோது, ஆட்சேபணைகளை அவர்கள் திரும்ப பெறாவிட்டால் , மசூதி முன் இசைக்கருவிகளை இசைப்போம் என்றார். இந்து அடிப்படைவாதிகள் தந்திரங்களில்

ஒன்றை கையில் எடுத்தார். திராவிட மற்றும் இந்து மீட்புவாதத்தின் வெளிப்படையான வேறுபாடுகள் காரணமாக , இரண்டுக்கும் இடையே இருந்த நுட்பமான ஒற்றுமைகள் அதிகம் பேசப்படவில்லை. ( பக் 253)

-  திராவிட சித்தாந்தம் இந்து மீட்புவாதத்தின் வளர்ச்சியை தமிழ்நாட்டில் தடுத்துவிட்டது.

-  தாழ்த்தப்பட்டவர்கள் குறித்த பெரியார் பேச்சுகள் முஸ்லீம், கிறித்துவர் பற்றிய பேச்சுகள் போலவே இரட்டைத்தன்மை கொண்டவையாக இருந்தன. திராவிடர் குறித்த பல அடுக்குகளைக் கொண்ட தனது கருத்தாக்கத்தின் மய்யத்தில் தாழ்த்தப்பட்டவர்களை மிக அரிதாகவே பெரியார் வைத்திருந்தார். சாதி இந்துக்கள் மத்தியில் தாழ்த்தப்பட்டவர் பற்றி பேசும்போது ‘நாம்- அவர்கள், நீங்கள்- நாங்கள்’ என

இருக்கும்.

 தனது சொல்லாடலில் தாழ்த்தப்பட்டவர்களைவிட பிற்படுத்தப்பட்டவர்களுக்கு பெரியார் அளித்த முதன்மையானது பிற்படுத்தப்பட்டவர்களின் மேலாதிக்கத்திற்கு உகந்ததாக இருந்தது (பக் 256)

 காலனியாதிக்கத்தின் பிற்பகுதியில் காலனியாட்சியை அகற்றுவதே வெகுமக்கள் அரசியல் குவிமய்யமான நிலையில், 1934 முதல் காலனியாட்சியை பெரியார் ஆதரிக்கத் துவங்கியது அகில இந்திய தேசியத்தின் ஆதிக்கத்தை எதிர்க்கவிடாமல் திகவை தடுத்துவிட்டது.

 பெரியார் முன்வைத்த 5 ஒழிப்பு கொள்கைகள்: கடவுளை ஒழிப்போம், மதத்தை ஒழிப்போம், காங்கிரசை ஒழிப்போம்,

காந்தியை ஒழிப்போம், பிராமணரை ஒழிப்போம்

 தனது அமைப்புகளை பெரியார் பரம்பரை சொத்தாகவே பாவித்தார். சொந்த சொத்தையும் கட்சி நிதியையும் வேறுபடுத்தி பார்க்கவில்லை. தன்னை பின்பற்றுபவர்கள் பண உதவி எதிர்பார்க்கக்கூடாது எனக் கருதினார். வீட்டு வேலைக்காரர்களை நடத்துவது போல்தான் நடத்தினார். எஜமான் சேவகன் உறவாகவே பார்த்தார்.

 பெரியாரை பின்பற்றிய பலர் 1949 ல் திமுக உருவாக்கி அவரது மதமறுப்பில் சிலவற்றை எடுத்துக்கொண்டு மாற்று வைதீகத்தை உருவாக்கி அவரை அதில் தந்தைக்குரிய இடத்தில் வைத்தனர் ( பக் 262)

 பிராமணர் அல்லாத சித்தாந்தத்தை

சிலர் அய்ரோப்பிய பாசிசத்துடன் ஒப்பிடுகின்றனர். முசோலினி ஹிட்லர் மீது பெரியார் கொண்டிருந்த மதிப்பு பிராமணரல்லார் சித்தாந்தத்திற்கும் பாசிசத்திற்கும் இடையிலான நெருக்கத்தை காட்டியது. ஆனால் அவை மக்களை அணிதிரட்டுவதில் வேறுபட்டிருந்தன. தனிப்பட்ட வகையில் பிராமணர் சிலருடன் பெரியார் நட்புடன் இருந்தார். தனது வீடுகளை அவர்களுக்கு வாடகைக்கு கொடுத்திருந்தார். பிராமணர்களுக்கு எதிர்ப்பானது என்பதால் தாக்குதலை தூண்டி விடுவதாக இல்லை.

 திராவிட நாடு கோரிக்கையை பெரியார் வைத்த போதிலும் அவரிடம் அரசு அதிகாரம் பற்றிய தெளிவான கருத்து இல்லை. அரசு என்பது நன்மை செய்வதற்கான மூல ஆதாரம், அதிலிருந்து எவ்வளவு பெறமுடியுமோ அவ்வளவு பெறவேண்டும் என்கிற பார்வை

இருந்தது.

 பெரியாருக்கு அண்ணாவிற்கும் இருந்த வேறுபாட்டில்- பெரியார் பணக்கார வர்த்தக சாதியிலும், அண்ணா நெசவு விவசாய இடைநிலை சாதியிலும் பிறந்தவர்கள் என்ற தொடர்பிருக்கிறது

 1947 விடுதலை தினத்தை துக்கநாளாக அனுஷ்டிக்க பெரியார் சொன்னதை அண்ணா எதிர்த்தார். அவரது அழைப்பை ஏற்று திகவினர் சிலர் சுதந்திரத்தைக் கொண்டாடினர்.

 வெளியாட்களுடன் அதிகத் தொடர்பற்ற, கலாச்சாரரீதியாக ஒருபடித்தான தன்மைகொண்ட சமூகக் குழுக்களை மட்டும் ஒன்றிணைக்கும் கண்டிப்பான பண்பாட்டு பழக்க வழக்கங்களின் அடிப்படையில்லாமல் அண்ணாதுரை நிர்ணயித்த நெறிகள்

நெகிழ்வானவையாக இருந்தன.

 முழுமையான பரப்பியத் திட்டத்தை நோக்கித் திராவிடத்தை திமுகவை திருப்பியதில் மொழிப் போராட்டங்கள் முக்கிய பங்காற்றின. பிராமணரல்லாதார் சித்தாந்தமும் தமிழ்த் தேசியமும் இந்த பரப்பிய திட்டத்தில் இழுக்கப்பட்டன. நெகிழ்வான உத்தியை கையாண்ட திமுக வால் வளரவும், தமிழ் அரசியல் கலாச்சாரத்தில் பிராமணரல்லாதார் சித்தாந்தம் முக்கியமான பகுதியானது.

நரேந்திர சுப்பிரமணியன் இந்தப் பகுதி இயலில் காந்தி பெரியார் எதிரையும் சற்று பேசுகிறார். காந்தி குறித்து அவர் வைக்கும் புரிதல்களில் ஆழமான வாசிப்பு அவருக்கு இருப்பதாக தெரியவில்லை.

திராவிடர் இயக்கம் பற்றிய ஆய்வு

புத்தகங்களில் இந்நூலும் முக்கிய இடத்தை பெறுவதாகவே உணர்கிறேன்.

மார்க்ஸ் காந்தி அம்பேத்கர் பெரியார் வேறு எவரானாலும் அவர்கள் குறித்த hagiographic study என்பதைவிட critical appreciation என்பது உகந்த ஒன்று. முடிந்தவரை bias இல்லாமல் சொல்வதற்கான methodology ஆக அது அமையலாம். மார்க்ஸ் மற்றும் காந்தி குறித்து ஏராள critical studies வந்துள்ளன. அம்பேத்கர், பெரியார் குறித்து அவை போதுமானவையாக எனக்குப்படவில்லை. பேரா நரேந்திர சுப்பிரமணியன் ஆய்வு பெரியார் குறித்த critical appreciation என எடுத்துக்கொள்ளலாம்.

இந்நூலசிரியர் வெகுமக்களிய அரசியலில் திராவிட கட்சிகள் என்கிற ஆய்வில் ஆழங்கால் பட்டுள்ளதை உணரலாம். காந்தியின் வெகுமக்களியம் குறித்து பேச

அவர் பாரபட்சமின்றி ஆழமாக கற்கவேண்டும் என்றே தோன்றுகிறது. ஆசிரியர் தொடர்ந்து திமுகவின் வளர்ச்சி, அதிமுகவளர்ச்சி என்கிற ஆய்வைத் தொடர்கிறார்.

14-7-2024

# 27. என் அண்ணா.- வைகோ

ஜூலை 2023

திரு வைகோ 10 ஆண்டுகளுக்கு முன்னர் எழுதிய புத்தகம் என் அண்ணா. விகடன் பிரசுரம். அவர் பொடா தண்டனையில் சிறையில் இருந்தபோது அண்ணாவின் எழுத்துக்களை பொறுக்கி எடுத்து கோர்த்து இளைஞர்களுக்கு அளித்த 200 பக்க அளவிலான புத்தகம். அதில் இடம் பெற்றுள்ள அண்ணாவின் கடிதம் ஒன்றான 'குற்றம் பார்க்கில் சுற்றம் இல்லை' என்பதிலிருந்து வைகோ தந்திருப்பது..

"வரலாறைப் புரட்டிப் பார்க்கும்போது வெள்ளையன் வருவதற்கு முன் இந்தியா என்ற அரசியல் அங்கம் பொலிட்டிகல் யூனிட் இருந்ததாகவே தெரியவில்லை.

ஒரு சர்க்காரின் கீழ் இந்தியா என்ற நாடு இருந்ததாக இல்லை. இந்தியா என்பது ஒரு பூகோளப் பெயராக திகழ்ந்து வந்திருக்கிறது. அய்ரோப்பாவின் பிரதேசம் பால்கன் தீபகற்பம் என்று பெயரோ, ஸ்வீடன் - நார்வேயை ஸ்காண்டிநேவியா என்று அழைக்கிறோமோ, அதேபோல் இந்தியத் தீபகற்பம் பூகோளப் பெயரே தவிர அது ஒரு சர்க்காரின் கீழ் இருந்த ஒரு நாட்டின் பெயராக விளங்கியதில்லை”

(கடிதம் 130)

இது தமிழ் நாட்டிற்கும் பொருந்தாதா- வரலாற்றின் நீள் திசையில் ஒரே சர்க்காரின் கீழ் அப்படி தமிழ்நாடு என இருந்தோமா என்ற கேள்வியும் வருகிறதே..அதையும் சேர்த்துத்தானே பார்க்கவேண்டும்.

அண்ணாவின் வேறு ஒரு கடிதத்தின் வரிகள்

“அரசியல் உலகு அற்புதங்கள், உற்பாதங்கள், அதிர்ச்சிகள், அகமகிழ்ச்சி தரும் நிகழ்ச்சிகள், எக்களிப்புகள், எரிச்சலூட்டும் சம்பவங்கள், வெற்றிகள் தோல்விகள் நிறைந்த இடம்..மற்ற எந்தத் துறையினையும்விட அரசியல் துறையிலே எதிர்பாராத நிகழ்ழ்சிகள், ஏமாற்றங்கள், எரிச்சல்கள் நிரம்ப ஏற்படும் விசித்திரமான உலகு” கடிதம் 11-3-1962

தேர்தலில் அண்ணா தோல்வியடைய மற்ற தம்பிமார்கள் வென்றனர். அண்ணா மேலே எழுதியதை சொல்லிவிட்டு இப்படியும் எழுதுகிறார்

“நடத்திச் செல்பவனை இழந்தும் அணிவகுப்பு பணிபுரிய இயலும்-தமக்குள்ளாகவே நடத்திச் செல்பவரைப் பெறமுடியும். ஆனால் அணிவகுப்பின்றி, நடத்திச் செல்பவன் மட்டும் தட்டுத் தடுமாறி

உள்ளே நுழைகிறான் என்று வைத்துக்கொள் தம்பி! எப்படி இருக்கும் அந்தக் காட்சி ? கண்றாவியாக இருக்கும்!”

ஆனால் இந்தக் காட்சி வரலாற்றில் வந்தது. கலைஞர் கருணாநிதி அவர்கள் வென்று தம்பிமார் பலர் வெற்றிபெறாமல் போனபோது ஏற்பட்டதல்லவா..

# 28. காந்தி- ஆர்.கே சண்முகம் செட்டியார்

ஆர்.கே சண்முகம் செட்டியார் பற்றி பலரும் அறிவர். முதல் நிதியமைச்சர் என்ற பெருமை உண்டு. நீதிக்கட்சி வழி பயணித்த பொருளாதார அறிஞர். கோயமுத்தூரரார். தமிழிசைக் காவலர். சட்டமன்ற நாடாளுமன்ற அனுபவங்கள் கொண்டவர். அவர் காந்தியை எப்படிப் பார்த்தார் என்பது குறித்து சிறு கட்டுரை ஒன்றை எழுதியுள்ளார். மாணவர் எனும் நிலையிலிருந்து நிதி அமைச்சர்வரை அந்தப்பதிவு மிகச் சுருக்கமாகச் செல்கிறது

காந்தி சென்னையில் நடேசன் அவர்கள் வீட்டிற்கு வருகிறார் என அறிந்த சர்வகலாசாலை மாணவர் சண்முகம், அவரைப் பார்க்கலாம் எனப் போகிறார்.

சுங்குராம செட்டித்தெருவில் ஜி ஏ நடேசன் இருந்தார். மாணவர் சகிதமாக சண்முகம் காந்தியைக் காண்கிறார். வெள்ளைத் தலைப்பாகை, வெள்ளைச் சட்டை, ஓர் அங்கவஸ்திரம், தரையில் விரிக்கப்பட்ட ஜமக்காளத்தின்மேல் காந்தி உட்கார்ந்திருந்தார். சண்முகம் மாணவர்கள் சூழ அவரைச் சுற்றி அமர்கின்றனர். தென்னாப்பிரிக்கா இந்தியர்கள் பற்றி மெல்லிய குரலில் சொல்லத்துவங்கினார். அவதார புருஷர் என எங்களுக்கு தோன்றவில்லை என முதல் பார்வையில் சண்முகத்திற்கு படுகிறது.

மீண்டும் 10 ஆண்டுகளுக்கு பின்னர் அவர் கோயமுத்தூர் வருகிறார் என அறிந்து நகரசபை வரவேற்பு தரலாமா கூடாதா என ஆவேசமாக இருதரப்பு விவாதம் போய்க்கொண்டிருந்தது. அரசாங்கத்திற்கு

எதிராக ஒத்துழையாமை என வரும் அவரை நகரசபை வரவேற்கக்கூடாது என்பது சிலரின் வாதம். மதுவிலக்கு, தீண்டாமை எதிர்ப்பு, கதர் ஆகியவற்றிற்காக வரவேற்கலாமே எனச் சிலர். சண்முகம் அவர்களும் நகரசபை உறுப்பினர். அவர் சமரசம் ஒன்றை வைக்கிறார். பாராட்டுப் பத்திரத்தில் ஒத்துழையாமையைக் கண்டிக்கிறோம் எனச் சொல்வோமே என்கிறார்.

சண்முகம் சொன்னது " மகாத்மா உண்மைவாதி. நம் மனத்தில் உள்ளதை ஒளிக்காமல் எடுத்துச் சொன்னால் அவர் மகிழ்ச்சியடைவார்". சண்முகம் கருத்து ஏற்கப்பட்டது.

சண்முகமே அதை இவ்வாறு எழுதினார்

" தங்களுடைய ஒத்துழையாமை இயக்கத்தில் எங்களுக்குச் சிறிதேனும்

நம்பிக்கை இல்லை. ஒத்துழைப்பின் மூலமாகத்தான் நாடு விடுதலை அடையக்கூடும். ஆனால், நீங்கள் எடுத்துக்கொண்ட சீர்திருத்த வேலைகளை நாங்கள் முழுமனதோடு வரவேற்கின்றோம். தீண்டாமையை ஒழித்தல், மதுவிலக்கு, கதர் முன்னேற்றம், கிராமமுன்னேற்றம் இவை போன்ற காரியங்களில் நாங்கள் தங்களுக்கு முழு ஆதரவையும் கொடுக்கத் தயாராக இருக்கின்றோம்"

காந்தி என்ன சொல்லப்போகிறார் என ஆவலுடன் அனைவரும் காத்திருந்தனர். காந்தி சொன்னதாக சண்முகம் செட்டியார் சொல்லியிருப்பது:

" வரவேற்புப் பத்திரத்தில் வெறும் புகழுரைகளைச் சொல்லாமல் உண்மையான கருத்துக்களை விளக்கியிருப்பது அளவிலா மகிழ்ச்சியைக் கொடுக்கிறது.

என்னுடைய ஒத்துழையாமை இயக்கத்தில் நம்பிக்கை இல்லையானால் அதை முற்றிலும் மறந்து விடுங்கள். அதற்காக நான் வருந்தப்போவதில்லை. எனது சீர்திருத்தவேலைகளில் நம்பிக்கை உண்டு என்று காட்டியிருப்பதே எனக்குப் போதுமானது. அவ்வேலைகளில் ஈடுபடுங்கள்”

1936ல் மீண்டும் கோயமுத்தூர் மகாத்மா வந்தபோது சண்முகம் வீட்டில் ஒருவாரம் இருந்தார். காலை உலாவச் செல்வர். ஒருநாள் சண்முகம் போகவில்லை. நடைப்பயிற்சி முடித்து வந்த காந்தி இவ்வூர் போலீஸ் அதிகாரியை தெரியுமா எனக்கேட்டார். ஏன் என்றேன். அவர் விளக்கினார்.

தோளில் மூங்கிலில் இரு பக்கமும் கட்டிய எண்ணெய் டின்னுடன் போன தெரு வியாபாரியை போலீஸ் கூட்டம் ஒன்று இடித்து

எண்ணெய் கொட்டியதுடன் அந்த மனிதரும் கீழே விழுந்துவிட்டார். போலீஸ்காரர்கள் கேலி செய்துவிட்டு உதவாமல் போய்விட்டனர். அந்த எண்ணெய்க்காரரை கூட்டிக்கொண்டு வந்துவிட்டார் காந்தி.

விழுந்தது தமிழர்.தள்ளியவரும் தமிழர். புகழ்வாய்ந்த வேறு ஒரு தமிழர் காப்பாற்றுவார் என காந்தி அவரிடம் அழைத்து வந்துள்ளார். சண்முகம் வழக்கு போடவேண்டுமா என்கிறார். இல்லை. உயர் அதிகாரியிடம் சாந்தமாக சென்று எடுத்துச்சொல்லி, நியாயம் கேட்டால் போது. தள்ளிவிட்ட போலீஸ் வருத்தம் தெரிவித்துவிட்டு கொட்டிய எண்ணெய்க்கு நட்ட ஈடு தரவேண்டும் என்றார் காந்தி.

வெள்ளை அதிகாரி முரட்டு பிடிவாதக்காரர் என்பதை சண்முகம் அறிவார். அவர் அந்த அதிகாரியைப்பார்த்து மகாத்மா

இப்படி கருதுகிறார் என்றார். வந்து காந்தியை பார்க்க இயலுமா எனவும் வேண்டினார். முணுமுணுத்துக்கொண்டே வந்த அதிகாரியிடம் காந்தியின் உரையாடல் 10 நிமிடம் நடந்திருக்கலாம். அந்த அதிகாரி தவறுதான் என்றார். ஈடான பணத்தை தானே தர சம்மதித்தார். காந்தியாருடைய அன்பு மார்க்கத்தின் பலனை நான் நேரில் கண்டேன் என்று இதைப்பார்த்த சண்முகம் எழுதுகிறார்.

அன்று மாலை காந்தியின் போட்டோ ஒன்றில் கையெழுத்து போட்டுத்தாருங்கள் என சண்முகம் கேட்கிறார். காந்தி சும்மா கையெழுத்து போடமாட்டார். எவ்வளவு என சண்முகம் கேட்கிறார். அதெல்லாம் வேண்டாம். அரைமணி ராட்டை நூல் நூற்பாய் என்றால் போடுகிறேன் என்றார் காந்தி. அது என்னால் இயலாது என நேர்மையாக சண்முகம் சொல்கிறார். சரி

நாம் இருவரும் வியாபாரிகள். ஆனால் ஒளிவுமறைவில்லாமல் பேசியதால் நான் போட்டுவிடுகிறேன் என காந்தி கையெழுத்திட்டதை சண்முகம் சொல்கிறார்.

சண்முகம் அவர்கள் கொச்சி திவான். காந்திக்கு அரிஜனங்களின் ஆலய பிரவேச போராட்ட அழைப்பு கொச்சியிலிருந்து வருகிறது. காந்தி சண்முகத்திற்கு தந்தி அடிக்கிறார். எனது நண்பராகிய நீ திவானாகவும் இருக்கிறாய்- நான் வரலாமா? சண்முகம் பதில் தந்தி தருகிறார். கொச்சி வந்தால் பெரும் மகிழ்ச்சி. ஆனால் வயதான மகராஜா ‘போராட்ட வெம்மையை’ தாங்களே நேரில் வந்தால் தாங்கமாட்டார் என்கிறார். காந்தி மறு தந்தியில் உன் சங்கடம் புரிந்துகொண்டேன். வரவில்லை எனச் சொல்கிறார்.

டெல்லியில் நிதியமைச்சரான நிலையில்

சண்முகம் , காந்தி பிர்லா மாளிகை வந்துவிட்டார் என அறிந்து போகிறார். காந்தி தமிழில் 'வாருங்கள் ஐயா ஷேமம்தானா' என்கிறார். பின்னர் உரையாடல் ஆங்கிலத்தில் தொடர்கிறது. நீ டெல்லி வந்துவிட்டாய் ஒன்று அவர்களுக்கு தமிழ் சொல்லித்தா- இல்லையெனில் இந்துஸ்தானி கற்றுக்கொள் என்கிறார் காந்தி. ராஜாஜியே இன்னும் கற்றுக்கொள்ளவில்லை. நான் எப்படி கஷ்டம் எனக்கு என்றார் சண்முகம். காந்தி பலமாக சிரித்தாராம்.

பாகிஸ்தானுக்கு கொடுக்கவேண்டிய 55 கோடி உள்ளிட்ட பிரச்னைகளுக்காக காந்தி உண்ணாவிரதம் ஆரம்பித்தார். சண்முகமும் படேலும் சென்று பேசிப்பார்த்தனர்.

காந்தி கட்டிலில் படுத்திருந்தார். காலை 9 மணி. பிர்லா மாளிகை. மூன்று மணிநேரம் நேரு, படேல், ஜான் மத்தாய் ஆகியோரை

காந்தி சமாதானப்படுத்தினார். பாகிஸ்தான் என்ன தவறுகள் செய்தாலும் நீங்கள் அகிம்சையை விடாதீர்கள் என்றார். மறுநாள் காபினட் 55 கோடி கொடுக்க முடிவெடுத்தது.

இந்த பேச்சுவார்த்தையின்போது வெய்யிலில் நின்ற சண்முகம் தனது கைக்குட்டையை தலையில் போட்டபடி பேசியதை கண்ணுற்ற காந்தி நேருவிடம் ஏதோ சொன்னார். உடன் பர்மா தொப்பி வந்தது. மகாத்மாவிற்கு வருகிறது என சண்முகம் நினைத்தார். காந்தியோ அவரிடம் நீட்டி அணிந்துகொள் என்றார்.

ஜனவரி 30 காந்தி கொலையுண்டார் என்ற செய்தி சண்முகம் அலுவலகத்திற்கு எட்டுகிறது. செக்ரட்டரி ஒடிவந்து சொல்கிறார். வேலையை அப்படியே போட்டுவிட்டு பதறியபடி சண்முகம் செல்கிறார். நேருவும் படேலும் நிற்கின்றனர். சண்முகம்

அழுகிறார். தான் தன் வாழ்வில் மூன்றாவது முறையாக அப்போது அழுததாக சண்முகம் பதிவிட்டுள்ளார்.

மறுநாள் அவரின் தகனம். சண்முக எழுதினார்

" சந்தனக் கட்டையின் தீ ஓங்கி எரிந்து ஒளிவிட்டது. ஆனால் அந்த வெளிச்சத்தோடு உலக சோதியும் மறைந்தது"

# 29. தி மு கழக வரலாறு (1916-1960)

ஜூன் 2023

T M பார்த்தசாரதி அவர்கள் எழுதிய தி மு கழக வரலாறு (1916-1960) புத்தகம் வந்து 62 ஆண்டுகள் ஆகிறது. 1961க்குப் பின்னர் ஏதாவது பதிப்பு வந்ததா எனத் தெரியவில்லை.

பெரியார்- மணியம்மை திருமண முடிவையொட்டி எழுந்த முரண்கள் இதில் பதிவிடப்பட்டிருக்கும். மனம் கசந்த, ஏமாற்றமடைந்த அன்றைய இளம் திக தலைவர்கள், திமுக உருவாக்க முடிவெடுத்த நிகழ்வுத் தடங்கள் இதில் பேசப்பட்டிருக்கும். திமுக உருவாக்கம்,

அதன் செயற்குழு முடிவுகள், அமைப்பு விதிகள், மாநாடுகள், போராட்டங்கள், அவர்கள் புத்தகங்கள் எழுத்துக்களுக்கு தடை, நீதிமன்ற போராட்டங்கள், தனி திராவிட நாடு வற்புறுத்தல் போன்றவை இந்த 530 பக்க வரலாற்று புத்தகத்தில் இடம் பெற்று இருக்கும்.

முதலில் தேர்தலில் நிற்கவேண்டாம் என்று தான் முடிவெடுத்தனர். 1951 நவம்பர் மதுரை பொதுக்குழுவில் தேர்தல் குறித்து விவாதம் வந்தது. காங்கிரசை வீழ்த்தவேண்டும் என 50 கழகத் தலைவர்கள் பேசியிருந்தனர். அண்ணா அவர்கள் கம்யூனிஸ்ட்கள் தன்னை சந்தித்து ஆதரவு கேட்டதை பதிவு செய்தார்.

ஒரு தீர்மானம் இப்படிச் சென்றது

" திராவிடர்களின் கருத்தை அறியாமலும், திராவிடர்களின் ஜீவாதார உரிமைக்கு ஊறு செய்யும் வகையிலும் ஒரே கட்சியாரின்

எதேச்சதிகார முறைப்படியும் தயாரிக்கப்பட்ட இந்திய அரசியல் சட்டத்தைத் திராவிட முன்னேற்றக் கழகம் கண்டிப்பதின் அறிகுறியாக, அந்த சட்டத்தின்படி நடைபெறும் முதல் பொதுத் தேர்தலில் தி மு கழகம் அபேட்சகர்களை நிறுத்தி கலந்துகொள்வதில்லை”

கம்யூனிஸ்ட்கள், சுயேட்சை வேட்பாளர்களுக்கு ஆதரவு தரத்தயார்-அதற்கு நிபந்தனையாக கீழ்கண்ட உறுதிமொழிப் பத்திரத்தில் ஆதரவு கோருபவர் கையெழுத்திட்டு தரவேண்டும். அவை

1. திராவிடத் தனியரசுப் பிரச்சினையை ஆதரிக்கிறேன்
2. சட்டசபை - பார்லிமெண்டில் உறுப்பினர் ஆனால் மேற்கண்ட பிரச்சினை

சம்பந்தமாகவும், தி மு கழக கொள்கைக்கு ஆதரவு தேடும் வகையில் பணியாற்றி வருவேன்

3. சுரண்டலையும் எதேச்சதிகாரத்தையும் ஒழிக்க, தி மு கழகம் வெளியிடும் திட்டங்களுக்கு ஆதரவு கிடைக்கும் விதமாகவும் சட்டசபையிலும் பார்லிமெண்டிலும் பணியாற்றுவதாக உறுதி கூறுகிறேன்

கம்யூனிஸ்ட்கள் இதற்கு என்ன பதில் சொன்னார்கள் என்பதோ, தேர்தல் என்னவானது என்பதோ இந்தப் பகுதியில் வரலாற்று தொடர் செய்தியாக பார்த்தசாரதியால் தரப்பட்டிருக்காது. இந்த நிபந்தனை செய்தி 193 ஆம் பக்கத்தில் இடம் பெற்றிருக்கும். மேலும் இது தொடர்பான செய்தியை உன்னிப்பாக தேடினால் அதற்கு பதிலை 269 ஆம் பக்கத்தில் ஒரு வரி

செய்தியாக காணமுடியும்.

1956 மே மாத திருச்சி மாநாட்டில் ‘தம்பி வா தலைமையேற்க வா’ என அண்ணா அழைத்து நெடுஞ்செழியன் ஆற்றிய தலைமையுரையில் அந்த ஒரு வரி கிடைக்கிறது.

1951 மதுரை பொதுக்குழு தீர்மானம் ,தேர்தல் நிபந்தனைகளைச் சொல்லிவிட்டு இந்த வரியுடன் நெடுஞ்செழியன் இந்நிகழ்வை கடந்து போவார். அவ்வரி

“கம்யூனிஸ்ட்கள் மதுரை தீர்மானத்தைக் கண்டு அஞ்சி விலகி நின்றனர். கழகம் அவர்களுக்கு ஆதரவு கொடுக்காதநிலையில் வேறு 45 பேர்களுக்கு ஆதரவு தந்தது. திமுக ஆதரவு பெற்ற 40 பேர்கள் சட்டமன்றம், நாடாளுமன்றம் சென்றனர்”

1957 தேர்தலில் இனி ஏணியாக இருக்க வேண்டாம், தேர்தலில் பங்கேற்கலாம் என

திமுக முடிவெடுத்தது. இதற்கு திருச்சி மாநாட்டில் 60 ஆயிரம் பேர் பங்கேற்று வாக்கெடுப்பு நடந்தது. சிவப்பு பெட்டி தேர்தலில் பங்கேற்க வேண்டும் என்பாருக்கும், கருப்பு பெட்டி வேண்டாம் என்பாருக்கும் வைக்கப்பட்டது. வேண்டும் என்பார் 56942 பேர், வேண்டாம் என்றோர் 4203 பேர் என முடிவு வந்தது. அதிலிருந்து திமுக தேர்தலில் பங்கேற்க துவங்கியது.

வரலாற்றில் இடைவெளியே இல்லாமல் முழுமையாக ஆவணப்படுத்தப்பட்ட நூல் இல்லை என்றாலும், ‘தி மு கழக வரலாறு’ இன்று அரசியலில் பணியாற்றுவோர், நவீன தமிழக அரசியல் வரலாறு அறிய விரும்புவோர் படிக்கவேண்டிய நூல்தான்.

# 30. பெரியார்- அம்பேத்கர் நட்புறவு ஒரு வரலாறு

மே 2023

பெரியார்- அம்பேத்கர் நட்புறவு ஒரு வரலாறு என்ற பெயரில் தொகுப்பு நூல் திராவிடர் கழகம் சார்பில் 2020ல் வந்தது.

குடியரசு, விடுதலை ஏடுகளில் வந்த அம்பேத்கர் பற்றிய செய்திகளின் தொகுப்பாக இதைக் காணலாம். ஆசிரியர் திரு வீரமணி தொகுத்துள்ளார். இதில் 58 செய்திகள் அத்தியாய வரிசையில் தொகுக்கப்பட்டுள்ளன. அம்பேத்கர் பெரியார் சந்திப்பு கூட்ட செய்திகள், அம்பேத்கர் கூட்டம், அறிக்கை குறித்த செய்திகள், அவரின் கருத்துக்கள் என பத்திரிகையில்

வெளியானவை இந்த தொகுப்பில் காணக்கிடைக்கும்.

சவீதா அம்பேத்கர் நூலைப் படித்துக்கொண்டிருந்த வேளையில் இந்த ஆசிரியர் வீரமணி தொகுப்பிலும் அம்பேத்கர் திருமணம் குறித்த செய்தி இடம் பெற்றிருப்பதை பார்க்கமுடிந்தது. அதேபோல் அம்பேத்கருக்கு விஷம் கொடுத்தாரா சவீதா என்கிற செய்தி ஒன்றும் இந்தப் புத்தகத்தில் இடம் பெற்றுள்ளது.

'அம்பேத்கர் கலப்பு மணம்' என்கிற செய்தியை விடுதலை 10-4-1948 என தேதியிட்டு இந்த தொகுப்பில் பக் 106ல் தந்துள்ளனர்.

" பம்பாயிலுள்ள டாக்டர் லட்சுமி என்ற பார்ப்பனப் பெண்ணை இந்திய சட்ட மந்திரி டாக்டர் அம்பேத்கர் வாழ்க்கை ஒப்பந்தம்

செய்ய முடிவு செய்துள்ளார்.

இச்செய்தியை ஒப்பந்தங்களை பதிவு செய்யும் ரிஷிஸ்திராருக்கு தோழர் அம்பேத்கர் தெரிவித்துள்ளார். இருவருக்கும் ஏப்ரல் 15 ஆம் தேதி அன்று வாழ்க்கை ஒப்பந்தம் நடைபெறும். ஏப்ரல் 14 அம்பேத்கரின் பிறந்த நாளாகும்.

டாக்டர் லட்சுமி பம்பாயிலிருக்கும் கபீரின் மகள். பார்ப்பனிய வகுப்பைச் சேர்ந்தவர். டாக்டர் லட்சுமி சொந்த முறையில் நடத்தப்பெறும் நர்சிங் ஹோமைச் சேர்ந்தவர். சமீபத்தில் டாக்டர் அம்பேத்கர் இந்த நர்சிங் ஹோமில் சிகிட்சை பெற்று வந்தார் என்பதைக் குறிப்பிட விரும்புகிறோம். அம்பேத்கருக்கு வயது 56 ஆகிறது. டாக்டர் லட்சுமிக்கு வயது 40. டாக்டர் அம்பேத்கர் மனைவி இறந்து 12 ஆண்டுகள் ஆகின்றன”

அடுத்து வேறு ஒரு செய்தி. “அம்பேத்கரைக் கொல்ல ஆரியப் பார்ப்பன முயற்சி- உத்தமர் காந்தி உயிரை குடித்த ஆரியத்தின் அடுத்த இலக்கு அம்பேத்கரா” என்ற பெரிய தலைப்பிலும் அதற்கு கீழே ” பெண்ணுருவில் வந்து பேடிச்செயல் புரிந்தது பார்ப்பனிய மாயப்பிசாசு- அடுத்துக்கெடுக்க முயன்ற ஆரியப்பெண் கைது”

இந்தச் செய்தி விடுதலை 18-5-1948ல் வந்துள்ளது. 10.4.1948ல் விடுதலை திருமண செய்தியைக் கொடுத்ததை மேலே பார்த்தோம். இது இந்த தொகுப்பில் பக் 109ல் இடம் பெற்றுள்ளது.

” இந்திய சர்க்கார் சட்ட மந்திரியும் தாழ்த்தப்பட்டவர் தலைவருமாகிய டாக்டர் பி ஆர் அம்பேத்கர் அவர்களைக் கொல்ல வஞ்சக முயற்சி ஒன்று நடைபெற்றதாகவும் டாக்டர் அவர்கள் சற்று விழிப்புடன்

நடந்துகொண்டதால் இப்பேராபத்தினின்றும் தப்பினார் என்றும் இங்கு செய்தியறிந்த தாழ்த்தப்பட்டோர் சம்மேளன வட்டாரங்களில் பேச்சு அடிபடுவதாக வெகு உறுதியான செய்தி ஒன்று நமக்குக் கிடைத்துள்ளது.

டாக்டர் அம்பேத்கர் அவர்கள் அண்மையில் காதற்கிழத்தியாகத் திருமணம் செய்துகொண்ட இலக்குமி என்ற பார்ப்பன மாதே இக்கொலை முயற்சிக்குக் கருவியாக இருந்தாரென்றும், அம்மாது அம்பேத்கருக்கு அளித்த பானத்தில் விஷமிட்டுக் கொடுத்தார் என்றும், பானத்தின் வாசனை ஒரு மாதிரியாக இருப்பதைக் கண்டுணர்ந்த அம்பேத்கர், டாக்டரை கொண்டு அதைச் சோதித்தார் என்றும், சோதித்ததில் பானத்தில் விஷம் கலந்திருந்தது தெரிய வந்தது என்றும், இவ்விதமாக டாக்டர் அம்பேத்கர் உயிர் தப்பினாரென்றும் இங்கு பேச்சு

உலவுகிறது. இது சம்பந்தமாக மேற்படி பார்ப்பன மாது இலக்குமியம்மாள் கைது செய்யப்பட்டிருப்பதாகவும் அறியப்படுகிறது....

இது சம்பந்தமாக கோட்டை சித்தார்த்தா கல்லூரியிலும் விஷயமறிந்தவர்கள் கூறுகின்றார்கள். தாதர், சென் பகுதிகளில் பார்ப்பனர்களுக்கும் பழங்குடி மக்கட்கும் இடையில் சிறிது கைகலப்பு ஏற்பட்டதாகவும் கூறப்படுகிறது."

இதற்குப்பிறகு பக் 175ல் "டாக்டர் அம்பேத்கர் மறைவு பற்றி பெரியார் ஈ வெ ரா" என்கிற விடுதலை 8-12-1956 செய்தியும் காணப்படுகிறது. இச்செய்தியின் கடைசி பத்தி

" அம்பேத்கரின் மறைவு என்னும் செய்தி திடீரென்று மொட்டையாக வெளியானதிலிருந்து அவருடைய

மரணத்திற்குப் பின்னால் சில இரகசியங்கள் இருக்கலாமென்று கருதுகிறேன். அதாவது காந்தியார் மரணத்துக்கு உண்டான காரணங்களும், அதற்கு ஆதாரமான பல சங்கதிகளும் டாக்டர் அம்பேத்கர் மரணத்துக்கும் இருக்கக்கூடும் என்பதே ஆகும்”

விடுதலை 20-12- 1956ல் “அம்பேத்கர் மரணத்துக்கு மறைமுக சதி நடந்தே இருக்கவேண்டும்” என்ற செய்தி வெளியானது. காந்தியார் மரணம் போலவே அம்பேத்கர் மரணமும் சந்தேகப்படத்தக்க நிலையில் உள்ளதாக பெரியார் கருதியுள்ளார். மூன்று இலட்சம் பெயரை அம்பேத்கர் இந்து மதத்திலிருந்து மாற்றியதை எந்த பார்ப்பான் எந்த இந்து மகாசபைக்காரன் பொறுத்துக்கொண்டு இருப்பான் என்ற கேள்வியை பெரியார் எழுப்பியதை

இச்செய்தியில் காண்கிறோம். பெரியார் எழுப்பிய கேள்விகள்

” எவ்வளவு பெரிய மனிதர். ஏதோ ஓர் அநாதைச் சாக்காடு போலச் செய்துவிட்டார்களே? கவர்மெண்டில் இதைப்பற்றி விசாரித்து எழுதவேண்டாமா? எப்படி செத்தார்? என்ன வியாதி? யார் யார் கூட இருந்தார்கள்? மனைவி எங்கு இருந்தார்? இதெல்லாம் தெரியவேண்டாமா? டாக்டர் 12 மணிக்கு முன்னால் செத்திருக்கவேண்டுமென்று சொல்கிறார். கடைசியாக யார் கூடவே இருந்தார்கள்? யார் ஆகாரம் கொடுத்தார்கள்? இதெல்லாம் தெரிய வேண்டாமா? ஏதோ ஒரு அனாதைச் சாக்காடு போலவா ஆவது? இது பற்றி நன்றாக சிந்திக்கவேண்டும்.”

பெரியார் மிகுந்த கவலையுடன் அக்கறையுடன் ஏராள கேள்விகளை

எழுப்பியதைக் காண்கிறோம். இந்த தொகுப்பு இதற்கு பின்னரும் மேலும் 100 பக்கங்கள் செல்கிறது. மேற்கண்ட கேள்விகளுக்கு விடுதலைக்கு பதில் கிடைத்ததா- பெரியார் சமாதானம் அடைந்தாரா என ஏதும் இத்தொகுப்பில் கிடைக்கவில்லை. இத்தொகுப்பு சந்தேகங்களை கிளப்பிய அளவு அதே பொறுப்புடன் பதிலை தேடியும் இருந்திருக்கலாம் எனத்தோன்றுகிறது. ஆனால் விடுதலையில் ஏதாவது பதிவாயிருந்தால், இத்தொகுப்பில் அதை அவர்கள் சேர்த்திருக்கக்கூடும்.

அரசாங்கம் அம்பேத்கர் மரணம் குறித்து என்ன தெரிவித்தது என்பதை அன்றைய விடுதலை வாசகர்கள் மட்டுமல்ல, இன்றைய ‘விடுதலை’ ஏடு வழி வரலாற்றை அறிய விழையும் மாணவரும் பெறமுடியாமல் போனது வருத்தமான செய்தியே

அன்று வியாழக்கிழமை- 4-6-1970 தொட்டியம் கூட்டம் பெரியார் பேசினார்.

அம்பேத்கர் இயக்கங்களின் சார்பில் அவரது பிறந்த நாள் கூட்டமது. அம்பேத்கரின் சிறப்பை, தன்னுடன் ஆன நட்பை பெரியார் பெருமையுடன் பகிர்ந்து கொள்கிறார். இந்து மதம் , சாதி மீதான அம்பேத்கரின் கூர்மையான விமர்சனங்களையும் பெரியார் சொல்கிறார்.

வட்டமேஜை மாநாடு - தனித் தொகுதி- காந்தி உண்ணாவிரதம் , சமரசம் பற்றி அவர் பேசும்போது , அவரது உரையில் கீழ்கண்ட வாசகங்களும் இடம் பெற்றுள்ளது. அவரது இந்த அம்பேத்கர் பிறந்த நாள் தொட்டியம் உரையை விடுதலை 19-6-1970 ல் வெளியிட்டது.

” நான் அம்பேத்கரைக் கேட்டேன்- ஏன் தனித் தொகுதி கோரிக்கையினை

விட்டுவிட்டீர்கள், இன்னும் கொஞ்ச நாள் இருந்தால் கொடுத்திருப்பானே என்று. அதற்கு அவர் ” என்னைக் கொலை செய்வதற்கு எல்லா ஏற்பாடுகளும் செய்துவிட்டார்கள். நான் இந்த விகிதாச்சாரத்திற்கு ஒப்புக்கொள்ளாமல் தனித்தொகுதிதான் வேண்டுமென்று சொல்லியிருந்தால், நிச்சயம் என்னைக் கொலை செய்திருப்பார்கள். நான் சாவைக் கண்டு அஞ்சவில்லை. என்றாலும் பிறகு இந்த விகிதாசார உரிமையும் கிடைக்காமல் போய்விடும் என்று பயந்துதான் ஒப்புக்கொண்டேன்” என்றார். அதன் பயனாக அந்த சமுதாயம் முன்னுக்கு வந்து கொண்டிருக்கிறது”

மேற்கண்ட அவரது உரையில் காணப்படும் இந்த பத்தி ஆசிரியர் வீரமணி அவர்கள் தொகுத்துள்ள ” பெரியார் - அம்பேத்கர்

நட்புறவு ஒரு வரலாறு” என்பதில் பக் 242ல் இடம் பெற்றுள்ளது.

நான் ‘புனே உடன்பாடு’ குறித்து ஓரளவு அறிந்துகொண்டவற்றில் இப்படி ” என்னைக் கொலை செய்வதற்கு எல்லா ஏற்பாடுகளும் செய்துவிட்டார்கள்” என்பதை எவர் சொல்லியும் கேள்விப்படவில்லை. பெரியார் எந்த நாளில் எவ்விடத்தில் - நேரிலா அல்லது வேறு வகையிலா- இக்கேள்வியை அம்பேத்கரிடம் கேட்டு அவ்வகையான பதிலைப் பெற்றார் என்பது ‘வரலாறு’ என்பதாக தொகுக்கப்பட்ட இந்தப் புத்தகத்தில் தொகுப்பு ஆசிரியர் திரு வீரமணி அவர்களால் சொல்லப்படவில்லை. பெரியார் பேசினால் அது உண்மையாகத்தான் இருக்கும் என ஏராளமானவர் இன்றும் நினைக்கக்கூடும். அப்படியிருக்கையில் ’கொலை புகாரை ’பேசும் போது, அதை மறு பிரசுரமாக அடுத்த

தலைமுறையினருக்கு 2020ல் தொகுப்பாக கைமாற்றி தரும்போது, மேலும் பொறுப்பாக ஆதாரங்களுடன் பேசாதது சரியா என்கிற கேள்வி எழுகிறது.

# 31. பாவேந்தம் மடல் இலக்கியம்

பாவேந்தர் மடல் இலக்கியம் எனும் தொகுப்பை காணநேர்ந்தது. இளங்கணி பதிப்பகத்தார் பாவேந்தம் தொகுதிகளில் இதுவும் ஒன்றாகயிருக்கிறது.

பாவேந்தம் மடல் இலக்கியம் என்னும் இத்தொகுப்பில் 89 கடிதங்கள் உள்ளன. இவை 1933 முதல் 1964வரை உள்ள காலங்களில் பாவேந்தரால் எழுதப்பட்டவை. நண்பர்கள், தலைவர்கள், மாணவர்கள், உறவினர் எனும் நால் வகையினர்க்கு எழுதப்பட்ட மடல்கள் இவை. அவர் கையெழுத்தை அறியவைக்கும் முகத்தான் 4 கடிதங்களை அப்படியே நகலெடுத்து தந்துள்ளனர். ஆரம்பத்தில் கனக சுப்புரத்தினம் பின்னர் பாரதிதாஸன், பாரதிதாசன் என ஒப்பமிட்டுள்ளார். ‘பா’ எனக் கூட ஒப்பம் இருக்கிறது.

கடிதங்களில் ‘சௌபாக்கியவதி, ஷேமம், நமஸ்காரம்’ போன்ற சொற்களையும் ’பிளே, பப்ளிசிட்டி, லீவு , டிக்கட் ’போன்ற ஆங்கில சொற்களை அப்படியேயும் பயன்படுத்தியிருக்கிறார். தனது பிறந்த நாள் குழப்பத்தை தீர்க்கும் வகையில் கர ஆண்டு சித்திரைத் திங்கள் 17 ஆம் நாள் 1891ஆம் ஆண்டு ஏப்ரல் 29 ஆம் நாள் என நினைவு படுத்தியுள்ளார்.

பாவேந்தர் வ. ரா அவர்களுக்கு எழுதிய இரு கடிதங்களும் சுவையானவை. முதல் கடிதம் 11-11-1933ல் எழுதப்பட்டுள்ளது. “தோழர் வ.ரா அவர்கட்கு நமஸ்காரம் என விளித்து நான், மனைவி, 4 பிள்ளை 50 ரூபாய் சம்பளம் பழைய குள்ள வேலை ஆக ஷேமந்தான். ஆதி முதல் பெரிய மேடையில் ஆட்டம். சம்ஸாரத்தில் மாட்டிக்கொண்டதுண்டா தாங்கள்” என எழுதிச்

செல்கிறார். இக்கடிதம் கனக. சுப்புரத்தினம் 12, செங்குந்தர் தென்னண்டை வீதி, புதுச்சேரி விலாசத்திலிருந்து போயுள்ளது.

அடுத்தக் கடிதம் ஸ்ரீ வ.ரா அவர்கட்கு நமஸ்காரம் என துவங்குகிறது. ஜனவரி 15, 1938ல் எழுதப்பட்டுள்ளது. இதில் தோழர் என விளித்தல் இல்லை. ராமாநுஜர் கம்பெனி குறித்த விசனமாக கடிதம் செல்கிறது. கோபம் வெளிப்படுகிறது. ”நான் சென்னையில் உங்களை நம்பி கால்வைத்த தேதியிலிருந்து கடைசிவரை எங்குச் சாப்பிடுகிறாய்- வசதி எப்படி என்று நீங்கள் விசாரித்ததே கிடையாது.

மனித வாழ்க்கைக்கு இன்றியமையாத தர்மங்களில் சில தங்களிடமிருந்து நீங்கி வருவதை, நான் கண்டு வருந்துகிறேன்.”

வ ரா கொடுக்கவேண்டிய பணத்தை வாங்கித்தான் அட்டிகை அடகு ரூ 75,

மவுண்ட்ரோட் மார்வாரியிடம் காப்பு அடகு ரூ25யை மீட்கவேண்டும் என குறிப்பிடுகிறார் பாரதிதாசன்.

ஜனவரி 1ல் ரூ 40- 20 ஆம் தேதி 100 தருவதாக வ ரா சொன்னதை நம்பியதை பெருங்குற்றம் எனச் சொல்லி அதனால் இம்சைகள் அவமானங்கள் நேர்ந்தது எனக் குறிப்பிடுகிறார்.

“… உங்கள் பெரிய பீடம் என் நிலையை நான் இரண்டு வார்த்தையில் சொல்லிக்காட்டுவதைக் கூடக் கேட்கக் காது கொடுப்பதில்லை. ஆனால் உங்களுடைய இந்தக் கொடூரமான செய்கைகள் என்னிடமுள்ள எனது சினேக தர்மத்தை ஓர் அணுக்கூட மாற்றிவிட மாட்டா.. பணம் தயாரித்து வைக்கவும். நீங்கள் தவறினால் எனக்குக் கஷ்டம்” என அக்கடிதத்தை பாவேந்தர் முடித்துள்ளார்.

இக்கடிதம் பாரதிதாஸன், 28 அம்பலதாடு, ஐயர்மடம் வீதி, புதுச்சேரி என்கிற விலாசத்திலிருந்து சென்றுள்ளது.

சௌபாக்கியவதி பழநி அம்மாளுக்கு, ஆசிர்வாதம் செய்து எழுதும் சேதியாவது என தன் துணைவியாருக்கு பெங்களூரிலிருந்து 3-4-1936ல் கடிதம் எழுதியுள்ளார்.

” இன்னும் நாலு நாளில் , வந்த காரியம் முடிந்துவிடும்..பத்திரமாக இருங்கள். சிப்பாயிடம் ரூ 10 கொடுத்தனுப்பினேன். வந்து சேர்ந்ததா? உன் தகப்பனார் வந்து விட்டாரா? திரேக்தேர் சம்பளம் கொடுத்தாரா? தெரிவிக்கவும்.... நான் பெங்களூரில் இருப்பதை யாரிடமும் சொல்லவேண்டாம்” என எழுதி தங்கியிருக்கும் விலாசத்தை தந்துள்ளார். பெங்களூர் அல்சூர் பஜார் ரோடில் யாசின் என்பவர் மே/பாவில் அவர் தங்கியிருந்துள்ளார்.

குருசாமி (குஞ்சிதம்) அவர்களை அத்தான் என அழைப்பது பாரதிதாசன் பழக்கம். அப்படி விளித்து எழுதிய கடிதம் 24-5-1939 தேதியிட்ட ஒன்று. அதில் பெரியார் விடுதலைக்கு எனது மகிழ்ச்சி என்பதை தெரிவித்து புத்தகங்களை கொடுத்து அனுப்ப வேண்டியுள்ளார். இதிலும் பாரதிதாஸன் என ஒப்பமிட்டுள்ளார்.

திரைப்பாடல் சௌமியன் என்கிற படத்திற்கு எழுதுவது குறித்து ‘தோழர் நடேச சுவாமிகளுக்கு’ கடிதம் ஒன்றை எழுதியுள்ளார். அதில் ‘படம் அரிசிப்பானைக்கு அடிப்பானையிலா’ என வினவி விட்டு ‘பிச்சைக்காரன் பாட்டு கம்பெனி கேட்கவேண்டுமே தவிர ஆக்டர்கள் கேட்டதற்கு எழுதுவது பிழையல்லவா’ எனவும் கேட்டுள்ளார். டைலாக் இருந்தால் தெரியவேண்டும் எனவும் சொல்கிறார். இக்கடிதம் 23-8-1939ல் எழுதப்பட்டுள்ளது.

ஆங்கிலத்தில் பாரதி எனப்போட்டு பிராக்கட்டில் தாசன் என ஆங்கிலத்தில் போட்டு 18-8-1942ல் சங்கீத டைரக்டர் தோழர் ஞானமணியை விளித்து கடிதம் ஒன்றை எழுதியுள்ளார்.

16-1-1943ல் கோவிந்தன் அவர்கட்கு என எழுதியுள்ள கடிதத்தில் ‘குடியானவன்’ வந்தது. “ரஷ்யாவையும், அங்குள்ள குடியானவர்களின் நிலையையும் கேட்ட இங்குள்ள குடியானவன் நிலை இப்படித்தான் இருக்கும் என்று கருதுகிறேன்... அறம் என்பது தற்காலிகம் முதலிய தார்க்கிகத்துக்கு உட்பட்டதன்று- ஒரு நன்மையை எதிர்பார்த்ததும் அன்று” என அற்புத தெறிப்பொன்றை அதில் தந்துள்ளார். 1943 கடிதங்களிலேயே பாரதிதாசன் எனப் போடத்துவங்கிவிடுகிறார். ‘ஸ’ எனப் போடுவதில்லை.

பாவேந்தர் பெரியார் அவர்களுக்கு 26-6-

1944ல் அஞ்சல் ஒன்றை எழுதியுள்ளார். அதில் எழுதியிருப்பதாவது:

" கடந்த 27-5-1944ல் திருவாரூர் சுயமரியாதை சங்க இரண்டாவது ஆண்டு விழாவில் நான் தலைமை வகித்தேன். அந்த நிகழ்ச்சியைக் குடிஅரசு போட மறுத்தது. அன்றிரவு திருவாரூரிலேயே பேசினேன். அதன் நிலையும் அவ்வாறே. சேலத்தில் 19-6-1944ல் நடைபெற்ற திராவிடர் மாநாட்டில் பாவலர் பாலசுந்தரம், பாரதிதாசன் வாழ்க்கை வரலாறு பற்றிச் சுமார் இரண்டுமணிநேரம் பேசியுள்ளார். அதை மட்டும் மறைத்துப் பாவலர் பெரியார் வாழ்க்கையைப்பற்றிப் பேசியதாகத் திரித்து வெளியிட்டுள்ளது.

24-6-44ல் வெளிவந்த குடிஅரசில் திருச்சி மாவட்ட மாநாட்டிற்குப் பெரியார் தலைமை வகிப்பார் என்று இருக்கிறது. ஆனால் 17-6-1944ல் பாரதிதாசன் தலைமை வகிப்பார்

என்று வெளியிட்டிருந்தது. இதன் மூலம் குடிஅரசு என்னை அவமானப்படுத்துகின்றது. இரண்டு தடவை திருச்சி வேதாசலம் இரண்டு கடிதம் எழுதித் தலைமை வகிக்கக் கேட்டுக் கொண்டதாலும் அந்த முடிவு தங்கட்கும் சம்மதம் என்று எழுதியதாலும்தான் ஒப்புக்கொண்டேன். மற்றபடி நானே ஓரிடம் சென்று பேசவேண்டும் என்றோ தலைமை வகிக்க வேண்டும் என்றோ எப்போதும் நினைப்பது கிடையாது..

நான் தங்கள் பத்திரிகைக்கு எழுதிய பாட்டு ஒன்றைப் புதுவையில் ஒரு கெட்ட நடத்தை உள்ளவரிடம் படித்துக்காட்டி, நான் இந்தப் பாட்டை விடுதலையில் போடாமல் செய்தேன் என்றான் உங்கள் ஆதரவு அயோக்கியன் ஒருவன்....

சுயமரியாதை இயக்கத்தில் என்பேர் முன்னுக்கு வருவதில் உங்களுக்கு ஏதேனும்

ஆட்சேபம் இருந்தால் அதை மீறி நடக்க நான் எண்ணவே மாட்டேன். ஏனென்றால் , நீங்கள் பல அயோக்கியர்களை முன்னே தள்ளி, அவர்களாலேயே இப்போது எதிர்க்கப்பட்டு வருகிறீர்கள் உள்ளுக்குள்ளே.

என் குறைகட்குத் தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்வீர்கள் என்று நான் எதிர்பார்க்கிறேன். என்பால் கெட்ட எண்ணமுடிய கூட்டத்தின் நண்பர்கள் உங்கள் ஆபீஸில் இருப்பதும் எனக்குத் தெரியும்." என அக்கடிதத்தை வருத்தம் தோய பாவேந்தர் முடித்துள்ளார்.

தோழர் சி.பா ஆதித்தன் அவர்கட்கு என 18-8-1944ல் எழுதியுள்ளார். அதில் "தமிழச்சியின் கத்தி திருத்தமாகப் பெயர்த்தெழுதுவித்துத் தங்கள் பார்வைக்கு அனுப்பியுள்ளேன். ஓய்விருக்குமோ என்னமோ தங்கட்கு... நன்று என்று தோன்றினால்,

கொள்கை பிடித்தால், பதில் எழுத வேண்டுகிறேன். இல்லையானால் திருப்பி அனுப்பிவிடவேண்டுகிறேன். அனுப்பும் செலவை நான் ஏற்றுக்கொள்கிறேன். நிற்க” எனக் கடிதம் செல்கிறது.

அள. லட்சுமணனுக்கு எழுதிய கடிதம் 4-10-1944 தேதியிட்ட ஒன்று. அதில் “சாதி மதம் சடங்குகள் கடவுள் நம்பிக்கை, சாதிகள் இல்லை. மதம் மக்கட்கு அபின். கடவுள் நம்பிக்கை, தன்னம்பிக்கை எதிர்ப்பு. சாதிப் பற்று, சமயப் பற்று, கடவுள் நம்பிக்கை இவை ஒழிதல் வேண்டும். ஒழியாதவரை, மக்கள் முன்னேற்றமில்லை. நீ புரட்சியைத் தூண்டு-புரட்சி செய்” என எழுதியுள்ளார்.

1-4-1946ல் கனக சுப்புரத்தினம் (பாரதிதாசன்) எனப்போட்டுக்கொண்டு மூவருக்கு அதாவது தோழர் கருப்பண்ணக் கவுண்டர், கிருஷ்ணராாஜ் ரெட்டியார், செல்லப்ப

ரெட்டியார் ஆகியவர்களுக்கு எழுதியுள்ளார். “மூவரில் ஒருவர் போய் தங்கள் வசமுள்ள நிதி முழுவதையும் CNA அவர்களிடம் ஒப்படைத்துவிடக்கோருகிறேன். மற்றும் நம் தோழர் முதலியார்களுக்கு என் வாழ்த்து” என எழுதியுள்ளார். அண்ணாவிடம் நிதியை கொடுக்கச் சொல்வதைப் பார்க்கிறோம்.

ம பொ சிக்கு எழுதிய இரு கடிதங்கள் இத்தொகுப்பில் காணப்படுகின்றன. காந்தி நாள் விழாவில் பாண்டிச்சேரி வந்து உரையாற்ற ம பொ சியை பாவேந்தர் இக்கடிதங்களில் வேண்டியுள்ளதைக் காண்கிறோம். இக்கடிதங்கள் 16-9-1946 மற்றும், 21-9-1946ல் எழுதப்பட்டுள்ளன. புதுவை பாரத சர்க்கா சங்கம் சார்பில் ஒரு கடிதம் எழுதப்பட்டுள்ளது.

ஜனவரி 2, 1948ல் அருச்சுனன் வாழ்க எனத்துவங்கும் கடிதத்தில்

“சென்னையிலிருந்த அச்சகத்தை என் இல்லத்திலேயே போட்டுக்கொண்டதில், பிறர் தங்க வசதி இல்லாது போயிற்று. என் துணைவியார், பிறர்க்கும் உணவு நேர்செய்ய இயலாதவர்” எனத் தெரிவித்துள்ளார்.

தோழர் தனுஷ்கோடிராஜாவிற்கு 31-5-1950ல் தனது மணிவிழா பற்றிய செய்தியை குறிப்பிட்டுவிட்டு பசுமலை ச சோமசுந்தர பாரதியார் இல்லத்தில் முத்தமிழ்ப் பெருமன்றத் திட்ட அமைப்புக்குழுவினர் கூடுவதாக தெரிவித்துள்ளார். “அதற்கு நானும், கா அப்பாத்துரை, கோவை செங்கோட்டையார், ஐயாமுத்து, எஸ் ஆர் சுப்பிரமணியம், எட்டயபுரம் ஆர். அமிர்தசாமி பெத்தாம்பாளையம் பழநிசாமி ஆகியோரும் வரக்கூடும். 26 அல்லது 27ல் திருக்குறள் வகுப்பு நடத்த ஏற்பாடு செய்யுங்கள்” என எழுதியுள்ளார்.

ஒரு கடிதம் பாதியாக தரப்பட்டுள்ளது 1950 ஆகஸ்ட்டில் எழுதப்பட்டிருக்கலாம் என தொகுத்தவர்கள் குறிப்பிட்டுள்ளனர். இதில் அண்ணாதுரை என செய்தி வருகிறது. ” நீங்களும் முருகும் கோயில்பட்டியில் அண்ணாத்துரையை மணிவிழா விஷயமாக பார்க்கப் போவதாகக் கேள்விப்படுகிறேன். பயன்படாதென்று எண்ணுகிறேன்...ஓர் ஐயாயிரம் ரூபாயையாவது தண்டிக்கொண்டபின் அண்ணாத்துரை நான் நான் என்று ஓடிவருவார் என்பது திண்ணம். அண்ணாத்துரை எனக்காக முன்வருபவர்களைத் தடுக்கமுடியாது. அவரைக்கொண்டே தொடங்குவதென்று நீங்கள் நினைப்பதில் பெருந்தோல்வி ஏற்படும். இப்போதே அவர் இப்படிப்பட்டவர் என்பதை நாடு அறிந்து கொண்டது. மாலைமணியைக் கொன்றது தன் திராவிட நாட்டைச் சொந்தப்

பொறுப்பில் தினசரியாக நடத்திப் பணம் சம்பாதிப்பதற்குத்தான்.. கழகத்திற்குக் கட்டிடம் வாங்குவதாகச் கூறிச் சொந்தப் பேருக்கு ஆக்கிக்கொள்ள முயன்றதும் பலிக்கவில்லை.” எனக் குறிப்பிட்டுள்ளதைப் பார்க்கிறோம்.

31-1-1951ல் தோழர் தனுஷ்கோடி ராஜாவிற்கு கடுமையான தன் கோபத்தை வெளிப்படுத்தி பாவேந்தர் கடிதம் ஒன்றை எழுதியிருக்கிறார். அவரது மணிவிழாவிற்கு முதல்வரை வரவழைக்க தவறியதை அவர் சுட்டிக்காட்டுகிறார்.

” என் மானத்தைக் காக்க மணிவிழாத் தொடங்கினீர்கள். இடையில் இந்த மணிவிழாவைக்கொண்டே என்னை அவமானப்படுத்தி விட்டீர்கள். என் விருப்பத்திற்கு விரோதமாக திமுககாரர்களை நெருங்கினீர்கள். அவர்கள் என்னைக்

குறைவாகப் பேசியதைக்கேட்டு வந்து என்னிடம் கூறி என் மனத்தைப் புண்படுத்தினீர்கள். முதல்வரை நம்பச்சொன்னீர்கள். நம்பி அவமானத்தை அடைந்துவிட்டோம். நீங்கள் உங்கள் வேலையைப் பார்த்துகொண்டு வீட்டில் இருக்கிறீர்கள். நீங்களும் உங்கள் துணைவியாரும் நேரே முதல்வரிடம் சென்று ஏனையா மறுத்தீர்கள் என்று கேட்கவேண்டாமா?

என் மணிவிழாவில் தலைமை வகிப்பதால் முதல்வருக்குத் தலைபோய்விடுமா? அவன் இப்படி நினைப்பான் இவன் இப்படி நினைப்பான் என்று எண்ணி, அக்ரமத்தைச் செய்வாருண்டா? மந்திரி ராஜனைத் தண்டிக்க வேண்டியதிருக்க அவனைத் தட்டிக் கொடுத்துத்தான் பதவி வகிக்க வேண்டுமா? அதைவிடக் குறைவான

காரியமா என் மணிவிழாவுக்குத் தலைமை வகிப்பது? உடனே பதில் எழுதவும்....” இந்தக் கடிதத்தில் நெருப்பு பொறிகள் விழுவதைக் காண்கிறோம்.

11-10-1956 கடிதம் முக்கிய செய்தி ஒன்றை சொல்கிறது. சென்ற வாரம் என் தலைமையில் நடைபெற்ற குளித்தலைத் தமிழ் ஆட்சிமொழி மாநாட்டில் திரு அ. சிவலிங்கம் தமிழ்த்தந்தி நிகழ்ச்சி நடத்திக் காட்டினார்...அவர் வெளியிட்ட தமிழ்த்தந்தி நூலையும் படித்துப் பார்த்தேன். தமிழ்த் தந்தி கண்டுபிடிப்புக்கு உரியவர் அ. சிவலிங்கம் ஒருவரே என பாவேந்தர் பாராட்டியுள்ளார். சிவலிங்கம் அவர்கள் தபால் தந்தி தலைவர் தோழர் ஞானையா உட்பட பலருடன் நெருக்கமானவராக இருந்தவர்.

ஈரோடு கவிஞர் தமிழன்பன் அவர்களுக்கு பாவேந்தர் கடிதம் எழுதியுள்ளார். “இராசீபுரம்

வரும்போது ஈரோடு வர ஒப்புகின்றேன். அதன் பொருட்டு எனக்கு 50 ரூபாய் முன்னதாக அனுப்பிவைக்கக் கோருகின்றேன். புலவர் ந. இராமநாதனை அங்கு நான் சந்திக்க நேர்ந்தால் மிக மகிழ்ச்சியடைவேன். ஈரோட்டில் என் சொற்பொழிவுக்கு நீங்கள் தலைமை வகிக்க நான் ஒப்புவேன். பிறராயின் முன்னே எனக்குத் தெரிவிக்க.” இக்கடிதம் தமிழன்பன் அவர்களுக்கு ந செகதீசன் என்ற அவர் பெயருக்கு 26-10-1963ல் எழுதப்பட்டுள்ளது.

1964ல் கவிஞர் முருகுசுந்தரம், சேலம் அவர்களுக்கு தனது 75 ஆண்டு பிறந்தநாள் விழா குறித்து கடிதம் எழுதியுள்ளார். நாராண துரைக்கண்ணன் ஏற்பாடு செய்ய முன்வந்ததை சொல்கிறார். முருகரத்தினம் நாராண துரைக்கண்ணரிடம் கலந்து ஏற்பாடு செய்வதாகவும் சொன்னார்.

“நெடுஞ்செழியன் சிற்றரசு முதலியவர்களைப் மத்திய கமிட்டியில் போடலாமல்லவா என்றார் முருக ரத்தினம். கடுமையாக மறுத்தேன். பிறகு வீரமணியைப் போடலாமா என்றார். மறுத்தேன். எஸ். இராமநாதன், மணவாள ராமானுஜம், வி பி இராமன், அகிலன் முதலியவர்களைச் சொன்னேன். அவர் அவர்களை மறுத்தார். இன்று அதாவது பதினைந்து நாட்களுக்குப்பின் ஆர்ட் டைரக்டர் அம்மை அப்பன் வாயிலாகச் சேதி அனுப்பப்பட்டிருக்கிறது. வேறு யாரையாவது கொண்டு விழாவை நடத்திக்கொள்ளச் சொல்லுங்கள் என்று- நான் இவர்களைக் கேட்டதுண்டா விழா நடத்தச் சொல்லி?. இதை உங்களிடம் சொல்லிவைத்தேன்.” என்று தன் வருத்தத்தை பாவேந்தர் பதிவிட்டுள்ளதைக் காண்கிறோம்.

மேலும் 15-4-1964ல் இது குறித்து கவிஞர் செகதீசன் (தமிழன்பன்) அவர்களுக்கு கடிதம் எழுதியுள்ளார்... ” இங்கு நாராண துரைக்கண்ணன் என் பிறந்த நாளைக் கொண்டாடுவதாகக் கூறி கடைசியில் கைவிட்டார் என் எதிரிகளின் வசப்பட்டு...

என் பிறந்த நாள் விழாவில் நான் எடுக்கமுயலும் பாரதி படத்திற்கு நன்கொடை கொடுப்பவர் தேவை. இதை நீங்களே கோவைக்கு ஒருமுறை சென்று காரியத்தை உருவாக்கினால் நலமாயிருக்கும்..

இதுதான் பாரதிதாசன் அவர்கள் எழுதிய இறுதிக் கடிதமாக கருதுகிறார்கள். ஏப்ரல் 21ல் அவர் மறைந்துவிட்டார் என்பதை அறிவோம்.

24-3-2022

# 32. Interpreting The Dravidian Movement

May 2023

எம் எஸ் எஸ் பாண்டியன் அவர்கள் 1990களில் epw, social scientist பத்திரிகைகளில் எழுதிய 4 கட்டுரைகளை தொகுத்து 2018ல் புத்தகமாக டெல்லி கிரிட்டிகல் குவஸ்ட் கொணர்ந்துள்ளது.

புத்தகத்திற்கு தலைப்பாக Interpreting The Dravidian Movement என்று வைத்துள்ளனர். MIDS ஆனந்தி அறிமுகம் எழுதியுள்ளார். அளவில் 96 பக்கங்கள் உள்ள சிறிய புத்தகம்தான்.

Denationalising past Nation in E V Ramasami's political discourse

Notes on Transformation of Dravidian Ideology TN 1900-1940

Beyond Colonial Crumbs Cambridge School, Identity politics and Dravidian Movements

Towards National popular - Notes on Self Respecters’s Tamil

என்கிற நான்கு தலைப்புகளில் இக்கட்டுரைகள் அடுக்கப்பட்டுள்ளன.

சமஸ்கிருதம், தமிழ் , ஆங்கிலம் மொழி குறித்த மோதல் பார்வைகள் அடையாளங்கள் விவாதிக்கப்பட்டுள்ளன.

பிராம்மண மேலாதிக்கம் எதிர்த்த போராட்டத்தில் மொழி, பெரியார்- சுயமரியாதை இயக்கம், சைவ சித்தாந்த தமிழ் அறிஞர்கள் போராட்டங்கள், கேம்ப்ரிட்ஜ் கல்வியாளர்கள் பிராமணர் அல்லாத இயக்கத்தை எப்படிப் பார்த்தனர், பிராமண

குடும்பத்திலிருந்து வந்த தமிழகம் சார்ந்த காங்கிரஸ் தலைவர்கள் சுயமரியாதை இயக்கத்தை எப்படிப்பார்த்தனர் போன்றவை இக்கட்டுரைகளில் பேசுபொருளாகவுள்ளன.

மறைமலையடிகள் குறித்த மதிப்பீடு ஒன்றை பாண்டியன் தருகிறார். அந்த பத்தியைத் தந்துள்ளேன்

Maraimalai Adigal's particular ordering of history and freezing it at valorised present of the Saivite Vellala, and it's deployment through the comparative studies of caste groups, discursively dethroned the Brahmin and replaced him with Vellala elite. Simultaneously the very same order of history denied subject hood and political agency to the Non Brahmin castes below the Vellalas...

சைவ சித்தாந்தம் பேசிய அறிஞர்களுக்கும், சுயமரியாதை

இயக்கத்திற்கும் இடையே உறவும் வேறுபாடுகளும் இருந்தன. சுயமரியாதை இயக்கம் அதன் ஆன்மீக தந்தை அடிகளாரை மறந்து போனால் அதன் செயல்கள் வீணாகும் என பாலசுப்பிரமணிய முதலியார் சொல்வதை பாண்டியன் எழுதுகிறார்.

பெரியாருக்கு சுதந்திரம் என்பது தொடர்ந்து தேடப்படவேண்டிய ஒன்று. பகுத்தறிவு என்பதும் அவருக்கு காலந்தோறும் மாறும் சிந்தனையாகும். பெரியார் ஒரே ஒரு ‘இருமைக்குள்’ நின்று அதன் முரண்பாட்டை மட்டும் உயர்த்திப் பேசியவர் அல்ல என்கிற மிக முக்கிய முடிவிற்கு பாண்டியன் வருவது என் வாசிப்பில் எனக்குத் தெரிவது. இந்த முடிவை வெளிப்படுத்தும் பத்தியையும் தந்துள்ளேன்

His ( EVR) discourse proliferated with innumerable oppressors and oppressed, each changing into the

other contextually and relationally: a Sudra male was oppressed in relation to the Brahmin, but simultaneously he was an oppressor in relation to the women or Adi Dravida. In short, the struggle for freedom through history became multiple, with porous boundaries, shifting identities and numerous agents of change. It's resolution lay beyond any simple binary like Brahmin vs Non Brahmin..

Thus E V Ramasami's concept of politics freed history from any notion of Saivite Utopia, invoked number of inferioritised identities and as a result expanded the realm of politics to include range of oppressed groups, and, above all, invested them with active political agency

வாய்ப்புள்ளவர் வாசித்து பார்க்கலாம்

# 33. சுகுணா திவாகரின் திராவிட அரசியலின் எதிர்காலம்

செப் 2023

திராவிட அரசியலின் எதிர்காலம் என்கிற ஆக்கம் 2020ல் எதிர் வெளியீடாக வந்தது. சுகுணா திவாகரின் 10 கட்டுரைகள் அடங்கிய 80 பக்கங்கள் கொண்ட சிறு வெளியீடு. இதில் இவ்வாசிரியர் வந்தடைந்த சில முக்கிய கருத்தாக்க புள்ளிகளாவன..

பெரியார் அதிகார மய்யங்களிலிருந்து விலகியிருக்கக் காரணம் அதிகார மய்யங்கள் கறைபடிந்ததாக இருந்ததால் மட்டுமல்ல, சமூகத்தில் நிலவும் அதிகாரமே அதிகார மய்யங்களில் நிலவுவதால், அதிகார மய்யங்களை நோக்கி நகர்வதால்- வலுவான

சமூக மாற்றங்களை நிகழ்த்த முடியாது என்று நம்பியதாலும்..

பார்ப்பனர்களுக்கு அடுத்தபடியாகத் தமிழகத்தில் ஆதிக்கச்சக்தியாய் முக்குலத்தோர் சாதி வளர்ந்து வருகிறது.

எம்ஜிஆர் காலம்வரை கருத்தியல் அடிப்படைகளற்ற ஜனரஞ்சக இயக்கமாக இருந்த அதிமுக , ஜெயலலிதா என்கிற பார்ப்பனப் பெண்மணி தலைமை தாங்கிய காலத்திற்குப்பின் படிப்படியான வலதுசாரி இயக்கமாக மாறிப்போனது. பார்ப்பன - தேவர் ஆதிக்கசாதிக்கூட்டே அக்கட்சியின் அரசியல் நிகழ்ச்சி நிரலை கருத்தியல் கட்டுமானங்களை தீர்மானிப்பதாக மாறிப்போனது

தமிழுக்காக பாடாற்றியதிலும், மார்க்சியம் உட்பட முற்போக்கு

கருத்துகளை இம்மண்ணில் விதைத்ததிலும் முன்னோடிகளாகத் திகழ்ந்த பிராமண சமூகத்தைச் சார்ந்த பலரை குறிப்பிட முடியும். அந்த மரபை மீட்டெடுக்க பிராமண சமூக படிப்பாளிகள் முன்வரவேண்டும்.

இப்போது பிராமணர் அல்லாதார் அரசியல் மங்கிப்போய் வெவ்வேறு இடைநிலை சாதிகளின் அரசியல்தான் இருக்கிறது...அய்ம்பதாண்டு காலத் திராவிடக் கட்சிகளின் ஆட்சியில் பார்ப்பனர் ஆதிக்கம் குறைந்திருக்கிறது. அச்சமூட்டும் அளவிற்கு இடைநிலை சாதிகளின் ஆதிக்கம் வளர்ந்திருக்கிறது. அவர்களே நடைமுறையில் தலித் எதிர்ப்பு சக்திகளாகவும் ஆணவக்கொலைகளை நிகழ்த்துபவராகவும் இருக்கிறார்கள்

ஒருவர் ‘பார்ப்பனரல்லாதவர்’ என்பதாலேயே அவர் எவ்வளவு

நேர்மையற்றவராக இருந்தாலும், அதிகாரமய்யமாக இருந்தாலும் , பிற்போக்கு சக்தியாக இருந்தாலும், அவரை ஆதரிப்பது என்பது பகுத்தறிவு ஆகாது

சமகாலச் சூழலுக்கேற்ப பெரியாரியத்தை வளர்த்தெடுப்பதுதான் பெரியாரிஸ்ட்களின் பணியாக இருக்கவேண்டும். பெரியாரியத்தை மதமாக்குவது கூடாது.

கடவுள் இடத்தில் எதை வைப்பது என்ற கேள்வி காலந்தோறும் தொடரக்கூடிய ஒன்று. புத்தரும் பெரியாரும் அறவுணர்வை சமத்துவத்தை கடவுளின் இடத்தில் வைத்தனர். அண்ணாவும் கலைஞரும் கடவுளின் இடத்தில் தமிழை வைத்தனர். தமிழுணர்வு என்பதை கிட்டத்தட்ட மதவுணர்வாக மாற்றினர்.

அண்ணாவும் கலைஞரும் பெரியாரிடமிருந்து மாறுபட்டு கற்பின்

அடையாளமாக கண்ணகியை உயர்த்திப்பிடித்தனர். ..திமுக வினர் மேடைபேச்சுகள் ஆணாதிக்கத்துக்கான அவல உதாரணங்கள்

அண்ணாவும் கலைஞரும் முன்வைத்த இந்தி எதிர்ப்பு மாநில சுயாட்சி கருத்தாக்கங்களை இன்று மமதா முதல் பினராயி வரை உயர்த்திப்பிடிக்கின்றனர்...பன்மைத்துவ இந்தியாவைக் காப்பாற்றவும் உள்ளடக்கும் தேசியத்தை வளர்த்தெடுக்கவும் இந்தியாவுக்கு காந்தியும் நேருவும் மட்டுமல்ல, கலைஞரும் அண்ணாவும் தேவை.

பெரியார் உருவாக்கியது ‘திராவிடர் இயக்கம். திமுக வந்தபோது ’ர்’ போய் திராவிட வந்தது. பெரியார் கூறுகள் கடவுள் மறுப்பு, சாதி ஒழிப்பு, பார்ப்பன எதிர்ப்பு, இந்திய தேசிய எதிர்ப்பு, சமஸ்கிருத எதிர்ப்பு,

இந்தி திணிப்பு எதிர்ப்பு, இந்து மத எதிர்ப்பு, பெண்ணியம். திமுக ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்றது.ஆணாதிக்க கட்சியாகவும் ஆனது. தேர்தல் பாதை ஏற்று இந்திய தேச அமைப்பை ஏற்று ஆட்சிக்கு வந்தது. பார்ப்பனல்லாதார் உரிமைகளை உறுதி செய்தல், இந்தி சமஸ்கிருத எதிர்ப்பு, தமிழ் பற்றை முன்வைத்தல், சிறுபான்மையினர் பக்கம் நிற்றல், வடவர் ஆதிக்க எதிர்ப்பு போன்றவற்றை திமுக உறுதியாக செய்தது

திராவிட அரசியல் ஊழல், வாரிசு அரசியல், குடும்ப அரசியல், தனிநபர் வழிபாடு போன்ற தீங்குகளை செய்திருந்தாலும், பார்ப்பன எதிர்ப்பு- சிறுபான்மை ஆதரவு, இந்துத்துவா எதிர்ப்பு, இந்தி எதிர்ப்பு, மாநில சுயாட்சி போன்றவை அதன் கொடைகள்.

சமகாலச் சூழலில் சமூகநீதி கருத்தாக்கம் மறுவரையறை

செய்யப்படவேண்டும்..தலித்துகளுக்கான அதிகாரத்தை உறுதி செய்வது, இடைநிலை சாதி ஆதிக்க எதிர்ப்பு என்று நகரவேண்டும்...மாநில சுயாட்சி என்பது மாநிலத்தில் ஒற்றைக் கட்சி ஆட்சி என்பதாகச் சுருங்கிவிடக்கூடாது.

சுகுணாவின் நூல் விவாதித்திற்குரிய சில புள்ளிகளை தந்துள்ளது எனலாம்.

# 34. தமிழக அரசியலின் எதிர்காலம்

டிச 2017

தமிழக அரசியல் கடந்த சில பத்தாண்டுகளில் தான் பார்த்து நகர்ந்த ஆளுமைகளை இழந்துள்ளது. புதிய ஆளுமைக்காக காத்துக்கிடக்கிறது. புதிய ஆளுமை யார் என்பதற்கான சோதனை ஓட்டங்கள் துவங்கியுள்ளன.

திரு கருணாநிதி, எம் ஜி ஆர், ஜெயலலிதா என்கிற திராவிட இயக்கம் சார்ந்த ஆளுமைகள் 50 ஆண்டுகளில் அண்ணாவால் துவங்கப்பட்ட தேர்தல்அரசியல்- ஆட்சி அதிகாரம் என்கிற பயணத்தை நிகழ்த்தியுள்ளனர். தனது பெரும் உழைப்பால்

பெரியார்- அண்ணாவிடம் தொண்டாற்றி, மொழி, இனப்பற்று சமூகநீதி மற்றும் திராவிடக் கொள்கைகள் வழியே தன்னை ஆளுமையாக உயர்த்திக் கொண்டவர் கலைஞர் கருணாநிதி அவர்கள். சினிமா சிநேகமும், வசனகர்த்தா தொழிலும் உதவின.

எம் ஜி ஆர் முழுமையாக சினிமா பின்னணியில், அண்ணாவின் அன்பில், கலைஞரின் நட்பில் தீவிர அரசியலுக்கு நுழைந்தவர். கலைஞரின் எதிர்ப்பில் புதிய அரசியல் இயக்கம் கண்டு கோடானுகோடி ஏழைகளின் மனதில் இடம் பிடித்தவர். திராவிட இயக்க கொள்கைகளின் தீவிரத்தை தணித்துக்கொண்டு மத்திய அரசுடன் ஒத்துழைப்பு என்கிற நடைமுறை அரசியலை கையாண்டு பெரும் ஆளுமையாக உருவெடுத்தவர்.

திராவிடஇயக்க பின்னணி என

ஏதுமில்லாமல், சினிமா பின்னணியுடன், எம் ஜி ஆர் ஆசியில் அரசியலுக்கு வந்தவர் ஜெயலலிதா அம்மையார். எதையும் விரைந்து கற்கும் திறனும், சூழலை ஆய்ந்து காய்களை நகர்த்தும் ஆற்றலும் வாய்க்கப்பெற்றவராக அவர் விளங்கினார். எம் ஜி ஆரின் அரசியல்வாரிசு எனும் போட்டியில் திருமதி ஜானகியை நிறுத்தியவர்களுடன் போராடி தன்னை நிறுவிக்கொண்டவர். தேர்தல் வெற்றிகளை தொடர்ந்து கோடானுகோடி மக்களின் அன்பை, ஆதரவை பெற்று ஆளுமையாக உயர்ந்தவர். திராவிட இயக்க பாரம்பரியத்தில் புதிய முன்னெடுப்புகளை நடத்திக்காட்டவேண்டிய நிர்பந்தம் ஏதும் அவருக்கு இருக்கவில்லை. அவ்வப்போது எதிர்ப்படும் நிகழ்வுகளுக்கு முகம் கொடுத்து பெற்றவைகளை தக்கவைத்தால் போதும் என்கிற நிலையை அவர் சாதுர்யமாக

கையாண்டார். இந்த 50 ஆண்டுகளில் இவர்கள் பல முரண்பட்ட நிலைகளை எடுத்தாலும் தங்கள் இயக்கத்தில் ஒப்பற்ற ஒரே தலைவர் என்கிற உயர்நிலையிலிருந்து வீழவில்லை. தேர்தல் தோல்விகள்கூட தலைமை பொறுப்பிற்கு நெருக்கடிகளை தந்துவிடவில்லை.

இந்த ஆளுமைகள் இல்லாத சூழலில் இன்று ஆட்சி பொறுப்பில் உள்ள தலைவர்கள் இயக்கத்தில் அடிமட்ட தொண்டர்களாக இருந்து தங்களின் விசுவாச அரசியல் காரணமாக பல்வேறு மட்டங்களுக்கு தலைமையால் உயர்த்தப்பட்டவர்கள். மாவட்டச் செயலர்களாக, அமைச்சர்களாக, முதலமைச்சராகக்கூட உயர்த்தப்பட்டவர்கள். தங்களுக்கென தனித்திறமையை உணரவேண்டிய, வளர்த்துக்கொள்ள அவசியமற்ற சூழலில் அவர்கள் இருந்தார்கள்.

தாய்க்கோழியின் அரவணைப்பு குஞ்சுகள் போன்ற நிலையில் அவர்கள் வைக்கப்பட்டிருந்தனர். அவர்களின் திறமைகள் விசுவாசம் என்கிற எல்கைக்குள் வெளித்தெரிய வேண்டியவையாக இருந்தன.

இன்று ஆட்சி பொறுப்பை நேரடியாக எடுக்கவேண்டிய சூழலில் கூட்டுத்தலைமை-ஜனநாயக விவாதம்- சரிகட்டல்கள்-முடிவுகள் என்கிற புதிய பாதையில் அவர்கள் செல்லவேண்டியநிலை ஏற்பட்டுள்ளது. அவர்களில் எவரையும் தனித்து பிம்பமாக உயர்த்த யாரும் தயாரில்லை. ஆட்சியை தக்கவைக்க மத்திய அரசின் தலைமைக்கு முன் அளவற்ற பணிவையும், விட்டுக்கொடுத்தல்களையும் செய்யவேண்டியுள்ளது. திராவிட இயக்கத்தின் எந்த முகத்தையும் வெளிப்படுத்திக் கொள்ள இயலாத நிலை

ஏற்பட்டுள்ளது.

திரு தினகரனின் ஆர்.கே நகர் வெற்றி பெரிதும் பேசப்படும் ஒன்றாகியுள்ளது. தமிழகம் ஆர்.கே நகரல்ல என்கிற எதார்த்த குரல்களும் எழாமல் இல்லை. ஜெயலலிதா அம்மையாரின் தோழி, நெருக்கமான துணை என்கிற சசிகலா அம்மையார் பிம்பத்திற்கு இணையாக மன்னார்குடி மாபியா என்கிற எதிர் விமர்சனமும் வலிமையாகவே தமிழகத்தில் உலா வருகிறது.

திரு கமலஹாசன் கல்லூரி போகாமல் இருக்கலாம். சினிமா பின்னணி என்றாலும் படித்தவர், கற்க பெரும் விருப்பமாக இருப்பவர் என்கிற பார்வையை அவர் மத்தியதட்டு மக்களிடம் ஏற்படுத்தியுள்ளார். அவருடன் மத்தியவர்க்க உயர்தட்டு பிம்பம் நிழலாக கூடவே வருகிறது. கவித்துவமாக பேசுவதாக நினைத்துக் கொண்டு வெகுஜன

உரையாடலுக்கான வெளியை அவரே மூடிவிடுகிறார். பெரியாரியம், இனப்பற்று, சமத்துவம் என்கிற கொள்கைகளில் புதிதாக உணர்த்தும் அளவிற்கு அவரது உரையாடல் வலுவாக இல்லை.

நாம் தமிழர் சீமானின் ஆவேசம் இளைஞர்களை கவ்வி பிடிக்கலாம். கவனித்து பொருட்படுத்தவேண்டிய நியாயக்குரல் என்கிற தர்க்க அரசியல் முயற்சியில் அவர் ஓரளவிற்கு வெற்றி பெறத்துவங்கியுள்ளார். ஆனால் நாம் இந்துக்கள், நாம் இஸ்லாமியர், நாம் தமிழர் என்று சொல்லும்போதெல்லாம் ஒன்றுபடுத்தலின் அடையாள வலிமை மட்டுமின்றி, விலக்கி வைத்தலின் உக்கிரமும் தொழிற்படுகிறது. பன்முகத்தன்மை வாய்ந்த நம் சமூகத்தில் இப்படிப்பட்ட குரல்கள் ஜனநாயக வெளியை நாளடைவில் அடைத்துவிடும்.

திரு ரஜினிகாந்திற்கு மக்கள்திரளை ஈர்க்கும் வசீகரம் இருக்கலாம். ஆன்மீகவாதி, அமைதியானவர், நிதானமும் பக்குவமும் வாய்க்கப்பெற்றவர், அளந்து குறைவாக பேசக்கூடியவர், வெற்றி என்று அனுமானித்தால் மட்டுமே செயலில் இறங்கக்கூடியவர் என்கிற ஒளிவட்டம் அவர்மீது சுற்றப்படுகிறது. ஆனால் அவர் தன் பன்ச் டயலாக் மூலம் துணுக்கு அரசியலைத்தான் இதுவரை வெளிப்படுத்தியுள்ளார். குடும்பம் என்கிற நிறுவனத்தை அவர் உயர்த்திப் பிடிப்பது பெண்களின் ஆதரவை பெற உதவலாம். அவரது பின்புலமாக இருந்து யார் இயக்கப்போகிறார்கள் என்பதை பொறுத்திருந்து பார்க்கவேண்டும். மக்கள் எளிதில் நெருங்க முடிந்த ஜனநாயக முகத்தை கொண்டவராக அவர் இருப்பாரா

என்பதும் சோதிக்கப்படக்கூடிய ஒன்றாகவே இருக்கிறது.

தேசிய கட்சிகளாக கருதப்படும் காங்கிரஸ், கம்யூனிஸ்ட்கள், பா ஜ க ஆகியவை தனித்து நின்று தங்கள் பலத்தை சோதிக்கக்கூட முடியாத எதார்த்த நிலைமை நீடிக்கிறது. திமுக தவிர தமிழகத்தில் உள்ள பிற கட்சிகள் பெரும் கட்சி ஒன்றுடன் துணை நிற்கும் அமைப்புகளாகவே தொடரும் சூழல் நிலவுகிறது. திரு ஸ்டாலின் தலைமையிலான தி மு க கலைஞர் ஏற்படுத்திய உச்சங்களை தொடுமா என்பதும் பொறுத்திருந்து பார்க்கவேண்டிய ஒன்றாகவே இருக்கிறது.

மக்கள் அடுத்து யாரை ஆட்சியில் அமரவைத்தாலும் தமிழக அரசியல் பயணிக்கவேண்டிய பாதை குறித்து பரந்த கருத்தொற்றுமை தேவைப்படுகிறது. தனித்தமிழ்நாடு நோக்கிய தமிழ்தேசியம்

என்பது இன்றுள்ள சூழலில் இரத்தக்களறியின்றி பெரும்பான்மை மக்களுக்கு அமைதியை தருமா என்பது சிந்தனைக்குரிய ஒன்றாகும். மத்திய அரசுடன் சரணாகதியோ அல்லது நிரந்தர பகைமையோ தமிழக நலன்களுக்கு உதவாது. மத்திய அரசுடன் அரசியல் அமைப்பு சட்ட எல்கைக்குள் நின்று பிரச்சனைகளின் அடிப்படையில் உடன்படுதல், எதிர்குரல் கொடுத்து தங்கள் நிலையை வலியுறுத்தல் என்பது நடைபெறவேண்டும். மாநில அரசின் அதிகார விரிவுபடுத்தல், மாநில அரசிற்குள் அதிகார பரவல் என்பதற்கான தொடர் வினைகள் நடைபெறவேண்டும்.

தமிழக வரவு செலவு இனங்கள் குறித்து தொடர் விவாதங்கள் மூலம் கருத்தொற்றுமை உருவாக்கப்படவேண்டும். தமிழகத்தின் வருவாய் இனங்களில்

செய்யப்படவேண்டிய மாற்றங்கள்-மாற்றுகள் பொது புத்தியில் உறையும் அளவிற்கு விவாதப்பொருளாக மாறவேண்டும். அதே போல் செலவினங்களில் முன்னுரிமை பட்டியல் என்பதும் வரையறுக்கப்படவேண்டும். குறிப்பாக விவசாயம், கல்வி, மருத்துவம், சுகாதாரம், வேலைவாய்ப்புகள் குறித்து கருத்தொற்றுமையை ஆட்சிக்கு வருபவர்கள் உருவாக்கவேண்டும். மத்திய அரசின் மகாத்மாகாந்தி ஊரக வேலைவாய்ப்புத்திட்டம் போன்ற ஒன்றை தமிழக அடித்தட்டு 20 சத குடும்பங்களுக்கு தனியாக மாநில அரசு உருவாக்கிடவேண்டும். மத்திய அரசின் பணிகள், மாநில அரசின் வேலைத்திட்ட பணிகள் என்பவற்றை வரையறுத்து செய்திடவேண்டும்.

வருவாய் பெருக்கம், ஒதுக்கிய செலவினங்களை ஊழல் இன்றி உரிய

மட்டத்தில் உரிய பயனாளிகளுக்கு செல்வதை கண்காணிக்க மாவட்ட ஆட்சித்தலைவர்- மக்கள் பிரதிநிதி தலைமையில் கண்காணிப்பு குழுக்களை அமைக்கவேண்டும். மாவட்டந்தோறும் இதற்கான காலாண்டு அறிக்கைகளை மக்கள் பார்வைக்கு முன்வைக்கவேண்டும்.

மாநிலத்தின் வளர்ச்சிக்குரிய கண்ணியமான உரையாடல் களமாக சட்டமன்றம், மற்றும் தமிழக அரசியலின் பொதுவெளியை மாற்றக்கூடிய ஆளுமைகளை தமிழகம் பெறட்டும். (dec 31 2017)

# 35. ஆட்சிமொழி குறித்து அண்ணாவின் உரையிலிருந்து

ராஜ்யசபா எனப்படும் மாநிலங்களவையில் அண்ணா அவர்களின் குடியரசுத்தலைவர் உரை மீதான விவாதத்திலிருந்து 4-3-1965

( அண்ணா அவர்களின் உரையை தி மு க ஆட்சிமொழி பிரச்சினை என்ற தனி வெளியீடாக 1965ல் வெளிக்கொணர்ந்தது)

அக்பர் அலிகான் காங் ஆந்திரா: இந்தியாவிற்கு ஒரு பொதுமொழி தேவையா அல்லவா? அப்படித் தேவையென்றால் அது எந்த மொழியாக இருக்கவேண்டும்?

அண்ணா: இந்தியாவிற்கு ஒரு

பொதுமொழி இருக்கலாம்; ஆனால் அது இயற்கையான முறையில்- காலப்போக்கில்- அரசாங்கக் கட்டுப்பாடு இல்லாமல்- மக்கள் தாமாக உணர்ந்து ஏற்றுக்கொள்ளும் வகையில் உருவாக வேண்டும். அரசாங்கம்- அதிலும் இன்றுள்ள அரசாங்கம் கட்டாயப்படுத்தும் எதுவும் மக்களால் ஏற்றுக்கொள்ளப்படாமல் வெறுத்து ஒதுக்கப்பட்டுவிடும்.

.. நான் வெளிப்படையாக சொல்ல விரும்புகிறேன். தனிப்பட்ட முறையில் இந்தியை நாங்கள் ஏன் எதிர்க்கவேண்டும்? இந்தி மீது மட்டுமல்ல- எந்த மொழிமீதும் எங்களுக்கு விரோதம் கிடையாது. நண்பர் வாஜ்பாயி பேசுவதைக் கேட்கும்போது இந்தி ஒரு நல்ல மொழிதான் என்று தோன்றுகிறது. மற்றவர்கள் பேசும்போது வாஜ்பாயி பேசுவது போன்று இது அவ்வளவு நன்றாக இல்லையே

என்று தோன்றும்.

இந்தி ஆட்சிமொழியாவதை ஏற்றுக்கொள்ள நாங்கள் தயாராக இல்லை- ஆட்சிமொழியாக வருவதற்கு இந்தி மொழியே தயாராக இல்லை. அந்த மொழிக்குள்ள குறைபாடுகளை நீங்கள் கவனித்தீர்களா? வளர்ச்சியடையவேண்டிய வளமில்லாத ஒரு மொழியை வைத்து மற்ற வளர்ச்சியடைந்த மொழிகளை நொறுக்கி, அடிமைப்படுத்த உங்களுக்கு என்ன உரிமை இருக்கிறது?

.. ஜவஹர்லால் நேருவிற்கு அடுத்து மதிப்பை உங்கள்( சாஸ்திரி) மீது வைத்திருந்தோம்.. எங்களைக் கைவிட்டுவிட்டீர்கள்- வருந்துகிறேன்.

ஆட்சிமொழியாக இந்தி வருவதற்கு அதற்குள்ள தகுதி -அவசியம் -காரணம் என்ன என்று நான் கேட்கிறேன். அரசியல்

சட்டம் என்றால் தேவைப்பட்டால் அது திருத்தப்படவேண்டியதுதானே?. அரசியல் சட்டம் அசைக்க முடியாத ஒன்று அல்ல.

.. இந்தியாவில் 40 சதம் கூட அல்ல- 20 சதவிகிதம் மக்கள் இந்தியா முழுவதும் பரவலாக இருந்தால் இந்தியைத் தொடர்பு மொழியாகவோ ஆட்சிமொழியாகவோ கொண்டுவருவதில் ஓரளவு அர்த்ததமிருக்க முடியும். ஆனால் இவர்கள் பேசும் 40 சதம் உ.பி, ம.பி, பீகார், ராஜஸ்தான் ஆகிய நான்கு மாநிலங்களுக்குள் அடங்கிவிடுகிறது. ஒரு பகுதி மக்களால் இந்தி பேசப்படுகிறதே தவிர இந்தியா முழுவதும் பரவலாகப் பேசப்படவில்லை. ஆக ஒரு பகுதியில் பெரும்பான்மையினரால் பேசப்படுவது நாடு முழுவதற்கும் ஆட்சிமொழியாகும் தகுதியைப் பெற்றுவிடாது.

..ஆங்கில மொழி மீது எனக்கு

ஒன்றும் தனிப்பட்ட பற்றுக் கிடையாது . ... ஆங்கிலத்தால் கிடைக்கக்கூடிய பலன்களைப் பெரும்பாலாக நாங்கள் எங்கள் தமிழ் மொழியில் பெற்றுவிட்டோம். இன்னும் துணிவுடன் என்னால் கூற முடியும்- ஆங்கிலத்திற்கு அடுத்தபடியாக ஆட்சிமொழியாகும் தகுதி தமிழுக்கு இருக்கிறது என்று.

ஆங்கிலமொழி பற்றி அரசாங்கத்தின் கொள்கை என்ன என்பது திட்டவட்டமாகக் தெரியவில்லை... ஆங்கிலத்தைக் கைவிட தயாராக அரசாங்கம் இல்லை என்பது தெரிகிறது.. உங்களிடம் எதுவும் திட்டவட்டமாக இல்லை..

இந்தியாவிலுள்ள 14 ம் தேசிய மொழிகளாக ஏற்றுக்கொள்ளப்பட்டு ஆட்சி மொழிகளாகும் தகுதி தரப்படவேண்டும்.

.... அரசாங்க கட்டாயமில்லாமல் மக்களே இந்திதான் தொடர்பு மொழியாக வேண்டும் என்று நினைப்பார்களே யானால், அது முதலில் நடைமுறையில் தொடர்புமொழியாகி, பிறகு சட்ட சம்மதம் பெற்றுகொள்ளட்டும்.

பல்மொழிகள் ஆட்சிமொழிகளாக ஆக வேண்டும் என்பது ஒரு குருட்டுத்தனமான கோட்பாடு அல்ல. பல்மொழிகளைக் கொண்ட நாட்டில் அது தவிர எல்லோரையும் திருப்திப்படுத்தவல்ல திட்டம் வேறெதுவும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. .. மொழிப் பிரச்சனையை புனராலோசனை செய்து ஒரு திருப்திகரமான முடிவுகாணும்வரை, ஆங்கிலம் தொடர்ந்து ஆட்சிமொழியாக நீடிக்கட்டும்; எல்லா மொழிகளும் ஆட்சிமொழிகளாகும்வரை ஆங்கிலம் நீடிக்கட்டும். பிறகு இந்திய மொழி ஒன்று வளர்ந்து தகுதி பெற்றுத் தொடர்பு

மொழியாகும் வாய்ப்பை காலப்போக்குக்கு விட்டுவிடலாம்.

# 36. ஜெய்பீம் திரைப்படம்

ஜெய்பீம் பட சர்ச்சைகள் முடிந்தபாடில்லை. சமூகத்தில் ஓரமாக்கப்பட்டவர்களின் வதை குரலை ஓலங்களை பாட்டை உணர்ந்த கருத்தியல்களை தங்கள் வாழ்க்கைபாட்டையாக கொண்டவர்கள் துயர் துடைக்க நியாயம் கேட்க முன்வருவர் என்பது படம் தரும் முக்கிய செய்திகளுள் ஒன்று.

அப்படிப்பட்ட கருத்தியல்களாக அன்று ஓங்கி வளர்ந்து போராடிக்கொண்டிருந்தவைகளாக தமிழகத்தில் திராவிட சாதி ஒழிப்பு இனமான கருத்தியலும், வர்க்கப்போராட்ட கம்யூனிச கருத்தியலுமாக இருந்தன. அவை இன்றும் இருக்கின்றன.

முன்னதாக இங்கு குறிப்பிடப்பட்டுள்ள

திராவிட கருத்தியல் காங்கிரஸ் அரசியலுடன் மற்றும் பிராம்மண மேலாதிக்க சமூக நிலையுடன் மோதி தங்கள் அரசியல் மேலாதிக்கத்தை நிறுவிக்கொண்ட கால சூழல் ஏறத்தாழ 25 ஆண்டுகள் மாநிலத்தை ஆளக்கூடிய வாய்ப்பு பெறப்பட்ட சூழலில் கதைக்களம் நிகழ்வு களம் அமைந்துள்ளது.

இடைநிலை சாதிகள் ஓரளவிற்கு அரசு வேலைகள் அரசியல் அதிகார எல்லைக்குள் தங்களை நிலைநிறுத்தி பலம் பெற்றுவரக்கூடிய காலமது என புரிந்து கொள்ளலாம்.

பெயர் குறீயிடுகளில் இதை மத துவேஷமாக முன்னிறுத்துவது ஆய்வு பிரச்சனையை திசை திருப்பி வாக்கு ஆதாயம் பெற செய்யப்படும் முயற்சியாகவே என்னால் புரிந்துகொள்ளப்படுகிறது.

ஜெய்பீம் வேறு ஒரு கேள்வியையும் மௌனமாக வைப்பதாகவே எனக்கு தோன்றுகிறது. குறிப்பிட்ட கருத்தியலுக்கு ஆட்சி அதிகாரம் கிடைக்கப்பட்டாலும் , ஆட்சிக்கு வந்தபின்னர் தாங்கள் போராளியாக உக்கிரமான வகையில் பேசியது போல் நிர்வாகியாக மந்திரக்கோல் மாற்றங்கள் நடந்துவிடுவதில்லை. முன்பு சாதி சார்ந்து ஆளும் கருத்தியலாக இருந்தவை அதை சாய்ப்போம் எனஆள வந்துள்ளவர்களிடத்தும் ஏதோ ஒருவகையில் பற்றி வேகத்தடையை உருவாக்கிவிடுகின்றன.

இதைப்பற்றி எழுதிக்கொண்டிருக்கும் வேளையில் லோகியா நினைவிற்கு வருகிறார். அவர் நேரு ஆட்சியை விமர்சிக்கும்போது முக்கியமான கருத்தாக்கம் ஒன்றை முன்வைத்தார். காந்தியர்கள் பிரிந்து நிற்கின்றனர். ஒரு பகுதி கவர்மெண்ட்

காந்தியர்களாகவும் மற்றொரு பகுதி தன்னைப் போன்ற சத்தியாகிரக போராளி காந்தியர்களாகவும் என்று லோகியா விளக்கி சென்றார். அதே அளவுகோல் படி கவர்மெண்ட் திராவிடர்களுக்கும் அதை எதிர்த்து இணைந்து போராடும் சாதிய மேலாதிக்க எதிர்ப்பு திராவிட கருத்தியல் மற்றும் கம்யூனிச வர்க்கப் போராட்டவாதிகளுக்குமான மோதலாகவும் ஜெய்பீம் கதைக்களம் இருப்பதாக மறு வாசிப்பில் உணரமுடிகிறது. இந்த அம்சம் விவாதங்களில் பெரும்பாலும் மூடப்பட்டுள்ளதாகவே அவதானிக்கவேண்டியுள்ளது.

ஜெய்பீம் எனும் சிலப்பதிகாரம்- செங்கணி எனும் நவீன கண்ணகி என படம் பேசி முடிகிறது. லாக்கப் சித்ரவதை மரணமில்லா தமிழகம் இந்தியா உலகம் எனும் விழைவை படம் பொதுப்புத்தியில் ஏற்றுகிறது.

மண்ணிலே ஈரமுண்டு முள்மேட்டிலே பூவுமுண்டு

... உள் உறுதி காண்பதுதான் பூமியிலே உன் உயரம்

உண்மைவழி நடந்தே நீ போவதுதான் வாழ்வின் அறம்

தேடல் இல்லா உயிருண்டோ உன்னுள்ளே அதைதேடு...

யுகபாரதியின் வரிகள் என்போன்ற இசை மக்குகளுக்குள்ளும் கசிவை உருவாக்குகின்றன.

காந்தி, நேரு எனப்பெயர் வைக்கிறார்கள்..அம்பேத்கர் என வைக்கிறார்களா? என்கிற கேள்வியின் நியாயத்தை உணரமுடிகிறது. எந்த சாதியில்தான் திருடன் இல்லை மெய்யான தெறிப்பு.

உண்மை அகிம்சை வழியில் கேட்பாரற்றவர்க்கான போராட்டம் என படம் திசைகொள்கிறது. மார்க்ஸ் அம்பேத்கர் பெரியார் என படங்கள் மாட்டப்பட்டுள்ளன. காந்தி ஏன் விலக்கப்பட்டார் என கேள்வி எழாதா?

சாதி ஏற்றத்தாழ்வை நீக்கி சமூகநீதி பாதையில் பயணிக்க உருவான திராவிட இயக்க ஆட்சி ஏற்பட்டு 25 ஆண்டுகள் கடந்த சூழலே படத்தின் கதைக்களம். வாக்குரிமை கூட இல்லாத அவலச்சூழல் பின்னர் எப்போது நீக்கப்பட்டது. முன்னரான 25 ஆண்டுகளில் அதற்கு முன்னரான காங்கிரஸ் ஆட்சியில் பார்க்கப்படாது போனதற்கு எவரைப்பொறுப்பாக்குவது போன்ற கேள்விகள் படத்திற்கு வெளியே தேடவேண்டிய கேள்விகளாகவுள்ளன.

இனி எங்கள் ஆட்சியில் லாக்கப்

மரணம் இருக்காது என்ற உறுதிமொழியை ஆட்சியாளர்கள் தருவார்களா- இனி ஆள நினைப்பவர்கள் தருவார்களா.. அரசமைப்பின் உயிர் உரிமை நிலைநாட்டப்படுமா என ஓயாத கேள்விகளை படம் எழுப்புகிறது.

அரசாங்க நிர்வாகத்தின் கீழ்மட்ட உறுப்பு ஒன்றின் சாதிக்கோணல் துவேஷப்பார்வை என்பது ஒரு குறீயீடுதான்.

தயாரிப்பாளர்கள் ஆட்சியாளர்களிடத்தில் ஒரு கோடி இருளர் நலமேம்பாட்டிற்கான நிதி தந்த செய்தியை பார்க்கமுடிந்தது. கதைக்கான அடிப்படை கருவாக பயன்பட்ட இன்றும் வாழ்ந்துகொண்டிருக்கும் ராஜாக்கண்ணு குடும்பத்திற்கு ஏதாவது இதற்காக ஊதியம் தரப்பட்டுள்ளதா என்ற செய்தி தெரியவில்லை. அதேபோல் வழக்கிற்காக உடன்நின்ற ஊர் மார்க்சிஸ்ட்

கட்சி கிளைக்கு கட்சி வளர்ச்சி நிதி கொடுத்த செய்தியும் வந்திருந்தால் மகிழ்ச்சியாக இருந்திருக்கும்.

நிகழ்ந்தவைகள் கால மறதிக்குப்பின்னால் வேறு ஒரு காலத்தில் புனைவாக கூட்டப்படும்போது நிகழ்ந்தவை எது புனைவு எது என்பதை துல்லியப்படுத்துவது சவாலாகவே இருக்கும்...

(நவம்பர் 27 2021 )

# 37. முகநூல் இடுகைகள் சில

ஏப் 13 2022 இடுகை

பேரறிஞர் அண்ணா அவர்கள் குறித்து இரா கண்ணன் அவர்கள் ஆங்கிலத்தில் புத்தகம் எழுதியிருக்கிறார்கள். அதன் தமிழாக்கத்தை அண்ணா சாதாரண மனிதரின் அசாதாரண வாழ்க்கை என்று விகடன் கொண்டுவந்தது. சாருகேசி மொழிபெயர்ப்பாளர். அதில் இடம் பெற்றுள்ள செய்தி இங்கு சில வரிகளில்.

நாமக்கல் தமிழ் தொண்டர் செல்லப்ப ரெட்டியார் என்பார் பாவேந்தர் பாரதிதாசனுக்கு நிதி தரவேண்டும் எனச் சொன்னதை நல்ல காரியம் என தந்தை பெரியார் பாராட்டி தனது நன்கொடை ரூ 150ம் போட்டு 352 ரூபாய்க்கான

காசோலையை அனுப்பிவைத்தார். புரட்சிக்கவிஞருக்கென நன்கொடை அனுப்புக என குடியரசின் இதழிலும் வெளியிட்டார். 1945 செப்டம்பர் திக மாநாட்டிலும் தீர்மானம் நிறைவேற்றினார். பின்னர் சுணக்கம் காண்பித்து கடுமையாக விமர்சிக்கலானார். அண்ணா கலந்தாலோசிக்கவில்லை என்ற எண்ணம் பெரியாரிடத்தில்.

நிதி சேர "பாரதிதாசனுக்கு என்ன வந்தது? இரண்டு பாட்டுப் பாடிவிட்டால் ஒரு புலவர். பணமுடிப்பு. இதற்கெல்லாம் அண்ணாதுரையின் முயற்சி- எதற்கும் கேட்டுச் செய்ய வேண்டாமா" என்று கண்டித்தார். மது அருந்துபவர்க்கு பணமுடிப்பா என்கிற கோபமும் அவருக்கு. பாரதிதாசனுக்கு நிதி சேர்த்தது என்பதும் அண்ணாவோடு பெரியார்க்கு ஏற்பட்ட வேறுபாடு என நெடுஞ்செழியன் தெரிவித்தார்.

1946ஜூலை 28 அன்று பச்சையப்பன் கல்லூரி வளாகத்தில் பாவேந்தருக்கு ரூ 24399 பணமுடிப்பு அளிக்கப்பட்ட நிகழ்ச்சியை பெரியார் புறக்கணித்தார். பொற்கிழி நிகழ்ச்சிக்குப் பின்னர் குதிரை வண்டியில் அண்ணாவும் கவிஞரும் போய்க்கொண்டிருந்தபோது பாரதிதாசன் இந்தப் பணத்தைக்கொண்டு தமிழர்களுக்கென்று ஓர் அரசியல் கட்சி தொடங்கலாம். இருவரும் நடத்தலாம் என்றார். அண்ணா அவர்கள் தாங்கள் அரசியலுக்கு வரவேண்டாம். இந்தியா முழுதும் சென்று நல்ல கவிதைகளைத் தாருங்கள். உங்கள் கவிதை உயரத்திற்கு அரசியல்வாதிகள் உயரமுடியாதென்றார்.

வேறு ஒரு நிகழ்வும் நடந்தது. ஈ வெ கி சம்பத்- சுலோச்சனா திருமணத்தின்போது பெரியார் பெண்கள் நகை மாட்டும் ஸ்டாண்டா

என பேசியபோது பெரியார் கையில் அணிந்திருந்த பச்சைக்கல் மோதிரத்தைப் பார்த்து சுலோச்சனா நகைத்தார் என்ற செய்தியை திராவிடன் இதழில் அண்ணா எழுதிவிட்டார். இது அண்ணாவிற்கு பெருமை சேர்ப்பதாகாது என திக தொண்டர்கள் கருதினர்.

மேற்கூறிய செய்திகள் பக் 152-153ல் காணப்படுகின்றன.

sep 7 2020 இடுகை

1968 சட்டமன்ற தீர்மானம்

இந்திக்கு இங்கே இடமில்லை என்கிற முதல்வர் அண்ணாவின் சட்டமன்ற தீர்மானம் குறித்தவுரை ( ஜனவரி 23 1968 ) தனி பிரசுரமாக ராயப்பேட்டை தலைவன் பதிப்பகம் சார்பில் 1968ல் வெளியிடப்பட்டது. தமிழகத்தில் இனி எதிலும்

இந்தி இல்லை என்பது தீர்மானகரமாக சொல்லப்பட்டது. இப்பிரசுரம் 42 பக்கங்கள் கொண்டது. ஆங்கில வாசகங்கள் கொண்ட குறிப்பு டெல்லிக்கு சென்றது. அன்று அந்த Motion யை திரு நெடுஞ்செழியன் முன்மொழிந்திருந்தார். தமிழ் உட்பட 14 மொழிகளும் ஆட்சிமொழியாகும்வரை ஆங்கிலம் மட்டுமே ஆட்சிமொழியாக இருக்கவேண்டும் என்றது தீர்மானம். இந்திமொழி திணிப்பை சட்டமன்றம் ஏற்கவில்லை- அதிலிருந்து சில பகுதிகள்..

This House resolves that the Three Language Formula shall be scrapped and that Tamil and English alone shall be taught and Hindi shall be eliminated altogether from the curriculam in all the schools in Tamil nadu

That the NCC the Hindi words of command shall not be used, and if the Union Govt refuses to accept

this, such NCC shall be disbanded.

This House resolves that expeditious steps be taken up to introduce Tamil as medium of instruction in all the colleges and as the language of admn in all the various depts of the State Govt within a period of 5 years

This house urges that the special status given to Hindi in the Constitution shall be removed and all the Articles in the Constitution wherein an inferior status has been given to the other languages shall be so amended as to accord equal status to all the Natioanl languages of India and that

The Union Govt shall accord equal financial assistance for the dev of all the languages specifies in 8th schedule of the Constitution.

ஏப்ரல் 24 2022 இடுகை

அண்ணா மறைந்தபோது பெரியார்

அவர்கள் எழுதியது.. விடுதலை 3-2-1969

பெரியாரின் 58 வயதில்தான் அண்ணா அவரிடம் இளைஞராக வந்து சேர்ந்தார். சில ஆண்டுகளிலேயே பிரிந்து திமுக துவங்கி ஆட்சிக்கு வந்தாலும் ஆட்சியை அவர் பெரியாருக்கு என்றே சமர்பித்தார். பெரியார் தனது தொண்டர் தளபதி தோழர் முதல்வர் அண்ணா மறைவின்போது அவரது ஆட்சி குறித்தும் அவரது குணம் குறித்தும் எவ்வளவு துல்லியமான மதிப்பீட்டை தந்துள்ளார் என்பதை அவரின் வரிகள் புலப்படுத்தும்.

”தமிழ்நாடும், தமிழர் சமுதாயமும் அண்ணா ஆட்சியில் எவ்வளவோ அதிசயமான முன்னேற்றங்கள் அடையக் காத்திருந்தது.

அவர் செய்த அரும்பெரும் காரியங்களில் முக்கியமானது சுயமரியாதை திருமணச்

செல்லுபடி சட்டம் ஆகும். இதில் கடவுளுக்கோ, மதத்துக்கோ, சாஸ்திரத்துக்கோ இடமில்லை. இது தமிழ்நாட்டுக்கு மாத்திரமில்லாமல் உலகத்துக்கே மாபெரும் துணிச்சலான காரியம் என்று கருதப்பட்டது.

மற்றும் இந்தி மொழி தமிழ்நாட்டுக்குட்க் கட்டாயம் என்பது ஒப்புக்கொள்ள முடியாது என்று சட்டசபை மூலமே தீர்மானம் செய்ததானது. தனது பதவி பறிபோனாலும் சரியென்ற துணிவுகொண்ட காரியமாகும். இவைதவிர, உத்தியோகங்களில் பதவிகளில் தமிழர்களின் உரிமையைப் பாதுகாத்ததாகும்..

அண்ணாவின் குணம், மிகமிக தாட்சண்ய சுபாவமுடையது என்றுதான் சொல்ல வேண்டும். யாரையும் கடிந்து பேசமாட்டார். தன்னால் முடியாத காரியமாக இருந்தாலும் முடியாது என்று சொல்ல மிகவும் தயங்குவார். இப்படிப்பட்ட ஒரு நிலையில் ஏற்பட்ட

அண்ணாவின் முடிவு, இந்த நாட்டில் மற்ற எவருக்கும் எளிதில் கிடைக்கமுடியாத உயர்தர முடிவேயாகும்”

ஏப்ரல் 25 2023 இடுகை

அண்ணா குறித்து தாயார்பங்காரு அம்மா நினைவுபடுத்திக் கூறியவை

கோபம் வந்துச்சுனா ஒண்ணும் பேசாது. பெஞ்சுக்கு கீழே பூந்துக்கும். கூப்பிட்டா வராது. அப்படியே தூங்கிப்போயுடும். அவ்வளவுதான் அதோட கோபம்

வீட்டிலே சும்மா இருக்காது. எப்பப் பார்த்தாலும் எதையாச்சும் படிச்சுக்கிட்டே இருக்கும். பகோடா, ஓமப்படி வாங்கி வந்த பேப்பரைக்கூட எடுத்துப் படிக்கும்.

அது மந்திரியானதுக்கப்புறம் ஒரு மாற்றம் தெரிஞ்சுது. தினசரி ஷேக் செய்துகிட்டது, குளிச்சது, இடுப்பு மாத்திகிட்டது...

அக்டோபர் 30 2021 இடுகை

மலர் மன்னன் எழுதிய தி மு க உருவானது ஏன்?

பெரியார் - அண்ணா ‘ஏற்பு -விலகல்- ஏற்பு’ குறித்து தனித்த ஆய்வுகள் போதுமான அளவு இல்லையோ எனத்தோன்றுகிறது. ஏறத்தாழ தமிழக வரலாற்றில் இன்றுவரையிலான 90 ஆண்டுகளுக்கு அவ்வாய்வு சரியான பொருத்தமான அடிப்படைகளை நல்கும் எனக் கருதுகிறேன்.

பெரியாரும் அண்ணாவும் ஒரே இடத்திலிருந்து பணியாற்றிய ஆண்டுகள் 14 மட்டுமே. நீதிக்கட்சியில் இணைந்து செயல்பட்ட காலம் 6 ஆண்டுகள் என்றால் தி க பெயர் மாற்றம் செய்து அதில் பணியாற்றிய காலம் 5 ஆண்டுகள். அதில் 1946- 49 மூன்று ஆண்டுகள் வேறுபாடுகளுடன் சேர்ந்து

பயணித்த காலம்.

1949ல் திமுக உருவாகி அண்ணாவின் ஆட்சி பொறுப்பு 1967ல் துவங்கிய பின்னர் அண்ணா முன்முயற்சியில் இணக்கம் ஏற்படுகிறது. பெரியாரின் ஏற்பு கிட்டுகிறது. பெரியார் பேரூரு கட்டமைப்பு தொடர்ந்த 50 ஆண்டுகளின் ஆட்சியாளர்களாலும் பேணப்பட்டது.

திக பெரியார் மற்றும் தொண்டர்கள் மற்றும் திமுக அண்ணா அவரது தம்பியர்கள் எழுத்துக்கள் பேச்சு, காங்கிரஸ், கம்யூனிஸ்ட் தலைவர்கள் பார்வை, அக்கால பிற அறிஞர்கள் அரசியல் தலைவர்கள் பார்வை எழுத்துக்கள் ஆகிய அனைத்திலிருந்தும் பெரியார்-அண்ணா உறவுகளை காலவாரியாக ஆவணப்படுத்துக்கொள்ளவேண்டிய வரலாற்றுத் தேவையிருப்பதாக

தோன்றுகிறது.

அது வெறும் hagiography அல்லது வெறும் critical என்பதாக இல்லாமல் speaking from the facts ஆக அமைவது நலம் பயக்கும்.

காந்தி நேரு உறவுகள் குறித்து ஆய்வுகள் ஓரளவிற்காவது இருப்பதுபோல் - பெரியார் அண்ணா உறவுகள் குறித்த ஆய்வுகள் தமிழக வரலாற்றில் கூடுதல் வெளிச்சம் பாய்ச்சும்

may 2022 இடுகை

அச்சுதமேனன் குறித்து கவிஞர் கண்ணதாசன்

கண்ணதாசன் அவர்கள் எழுதிய புத்தகங்களில் ஒன்று ‘நான் பார்த்த அரசியல்’. பல பதிப்புகளை கண்ட புத்தகம். அவரின் ‘வனவாசம்’ சுய சரிதை குறிப்புகள் 1960களின் பிற்பகுதியில் பரபரப்பாக பேசப்பட்டது. காந்தியின் சுயசரிதை தாக்கத்தால் தான்

வனவாசம் எழுத துணிந்ததை அதில் கவிஞர் சொல்லியிருப்பார்.

‘நான் பார்த்த அரசியல்’ அவரின் 30 ஆண்டு அரசியல் பழக்கம்- பழகிய தலைவர்கள் பற்றிய அவரது அனுபவம் உணர்வுகளை பேசிய புத்தகம். வாழ்க்கையின் பெரும்பகுதியை தான் வீணாக்கிவிட்ட விசனத்தை அவர் தெரிவித்திருப்பார். விடுதலைக்காலம் முதல் ஜனதா ஆட்சி- மீண்டும் இந்திராவரை மத்திய அரசியல் பற்றியும், தமிழகத்தில் பெரியார், காமராஜர், அண்ணா, கருணாநிதி, எம்ஜிஆர் காலம்வரையிலும் பேசப்படுகிறது. பல தலைவர்கள் குறித்து நல் மதிப்பீடும்- கடும் விமர்சனங்களையும் ஒருசேரக் காணலாம். இந்நூலை தன் புது முயற்சி என கவிஞர் குறிப்பிட்டுள்ளார். இனி அந்நூலில் தோழர் அச்சுதமேனன் பற்றிய அவரின் உயர்

மதிப்பீட்டை அவரது எழுத்துக்களிலேயே பார்க்கலாம்..

”இந்திய முதலமைச்சர்களில் எனக்கு பிடித்தவர் அச்சுதமேனன். பலபடிகள் உயர்ந்தவர். காமராஜரிடம் கூட கோபம் எனும் குணம் உண்டு. அச்சுதமேனனிடம் அதுவும் கிடையாது. நேர்மை நாணயமானவர். நல்ல நிர்வாகி. அவர் கட்சிகொள்கைப்படி நாத்திகர். சுவாமி ஐயப்பன் படத்துக்கு ரஷ்யா போகிறபோக்கில் வரிவிலக்கு கொடுத்துப் போனார். பொதுக்கொள்கைகளில் தான் கம்யூனிஸ்ட் என்று அவர் கருதுவதில்லை. கட்சிக்கு எதிராக நிர்வாகத்தில் நடக்கவேண்டிய கட்டம் வருமானால் அவர் பின்வாங்கியதில்லை. நிர்வாக செம்மை என்பதில் உறுதி.

ஒரு கெட்ட பெயரும் இல்லாமல் நல்ல பெயராகவே பெற்றுக்கொண்டு போன ஒரே

ஒரு முதலமைச்சர். கேரளா சமுதாயம் மீண்டும் அழைத்தும் கூட இனி பதவி வேண்டாம் என்று போனவர். அவர் அப்படி சொன்னபோது நாடு தன் நல்ல நண்பனை இழந்துவிட்டது போல கவலைப்பட்டது. அவர் கேரள அரசியலில் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்தினார். அதிலும் கூட்டணி மந்திரிசபை.

அச்சுதமேனனோடு எனக்கு ஏற்பட்ட பழக்கத்தை மிகப் பெருமையாகக் கருதுகிறேன். தோழர் பாலதண்டாயுதமும், கல்யாணசுந்தரமும் இதில் எனது நன்றிக்குரியவர்கள். தேர்தல் காலத்தில் வசூல் செய்திட அவரை அழைத்து வந்தனர்.. கேரளா விடுத்து இங்கே ஏன் எனக் கருதினேன். ஒரே ஒரு பதில் கிடைத்தது. கேரளாவில் பணம்கொடுத்தவன் தவறான வழியில் உதவி கேட்டு வருவான். அதனால் அங்கு செய்ய விரும்பவில்லை என்றார்.

இங்கு கிடைப்பதை வைத்து பார்க்கலாம் என்றார். எனக்கு கண்ணீர் வந்தது. தேர்தலில் தோற்றாலும் பரவாயில்லை. தவறான வழிக்கு உதவிடக்கூடாது எனக் கருதிஒருவன் தமிழகம் வந்திருக்கிறானே என்று கருதினேன். பல இடங்கள் சென்றோம். எம் ஜி ஆர் கணிசமான தொகையைக் கொடுத்தார்.

இரண்டு இரவுகள் என்னுடன் இருந்தார். சாப்பிட்டது மிகச் சொற்பம். ஒரு ரொட்டி, வெள்ளைக் கரு. நான் பலமணி சாப்பிட்டுக்கொண்டிருந்தபோதும் சேரில் சாய்ந்துகொண்டு பேசிக்கொண்டேயிருந்தார். அவர் இருதய வியாதிக்காரர். போய்ப் படுங்கள் என்றாலும் பரவாயில்லை என கூட உட்கார்ந்திருப்பார். வள்ளுவர் பேசிய நாகரீகத்தை இடைவிடாது அச்சுதமேனன் கடைப்பிடித்தார்.

அவரிடம் ஒரு உதவிக்கு போகநேர்ந்தது.

எனக்காக அல்ல. நண்பர் எஸ்டேட் பிரச்னை. மார்க்சிஸ்ட்கள் கலவரம். அவருக்கு முழு குறிப்பு ஒன்றை அனுப்பினேன். அச்சுதமேனன் அதைப் பார்த்துவிட்டு விசாரணைக்கு உத்தரவிட்டார். தவறு எனத் தெரிந்ததும் நடவடிக்கை எடுத்தார். எஸ்டேட்டை காப்பாற்றினார்.

இப்படி அச்சுதமேனன் போன்ற முதல்வர்கள் இந்தியாபூராவுக்கும் அமைந்திருந்தால், இந்தியாவின் எதிர்காலம் நேற்றும் இன்றும் நாளையும் அற்புதமாக அமைந்திருக்கும்.

நவம்பர் 15 2021 இடுகை

Anita Diehl 40 ஆண்டுகளுக்கு முன்னர் எழுதிய புத்தகம் Periyar EV Ramaswami A study of the influence of a personality in contemporary south India

அதில் பக் 18ல் பெரியார் அண்ணா ஒப்பீடு ஒரு பாராவில் சொல்லப்படுகிறது ( as differences)

” While Periyar gave dictatorial leadership to the D K movement, Annadurai believed in democratisation of the leadership within the DMK. Periyar espoused separatism and anti North Indian attitude and wanted Dravidasthan to replace the name TamilNadu. As for Annadurai , he evinced greater willingness to compromise with Delhi Government, while claiming increased State independence on economic level.

Anti Brahminism in Periyar’s case was directed towards Brahmins as a class, and as an ethnic group. But with Annadurai, it was a religious issue only, nothing to do with the ethnic group. Periyar’s anti Hinduism and anti religion sprang from a national, atheistic materialism, whereas Annadurai’s vague criticism of religion proceeded from a pragmatic, agnostic humanism”

மேற்கண்ட புத்தக ஆய்வு Anita வின் ph.D க்காக எழுதப்பட்டு 1977ல் ஸ்வீடன் Lund University‌ல் டாக்டர் பட்டம் பெற அவருக்கு உதவியது.

ஏப்ரல் 26 2020 இடுகை

இரு தகவல்கள்

1

தமிழ்நாட்டில் இந்தி எதிர்ப்பு மாநாடு ஒன்றை விடுதலை அடைந்த ஓராண்டிற்குள் பல்வேறு ஆளுமைகள் கூடி நடத்தினர். அப்போது ஓமந்தூரரார் ஆட்சி. அவினாசிலிங்கம் அவர்கள் கல்வி அமைச்சர். இந்தி விருப்பப்பாடம் என்பதை கட்டாயப் பாடம் ஆக்கியதால் எதிர்ப்பு பலமாக எழுந்தது. ஜூலை 1948ல் மறைமலையடிகள் தலைமையில் பெரியார், திரு வி க, ம.பொ.சி, அண்ணா, நாராண துரைக்கண்ணன், பாரதிதாசன்,

ரெவரண்ட் அருள், அப்துல் மஜீத், மூவலூர் ராமாமிர்தத்தம்மையார் போன்ற ஆளுமைகள் பங்கேற்று இந்தி எதிர்ப்பு முரசம் கொட்டினர். மாநாட்டிற்கு ஆயிரக்கணக்கான ஆண்களும் பெண்களும் வந்தனர். அவர்களின் உரையை மூன்றாம் பதிப்பாக 1985ல் விடுதலை வெளியீடாக கொணர்ந்தனர். இன்றுவரை பேசப்படும் வாதங்களின் அடிப்படைகளை இவ்வாளுமைகள் அன்று தந்துள்ளனர்.

2

நாமக்கல் கவிஞர் இலக்கியப்பணி குறித்து பலரும் அறிந்திருக்கலாம். அவர் 1953ல் மொழிவழிப்படி தமிழரசு ஒன்று அமையுமானால் எப்படியிருக்கவேண்டும் என்கிற விழைவை தெரிவிக்க சிறு நூல் ஒன்றை எழுதியிருந்தார். நூலின் பெயர் தமிழ் மொழியும் தமிழரசும். தமிழின் பிறப்பு, வளர்ச்சி, தனித்தமிழ் இருந்ததா,

தமிழும் ஆரியமும்,ஆரியரும் திராவிடரும் இவர்களை அறிய முடியுமா, தமிழ்நாடு- அரசு, தமிழ்ப்பண்பு போன்ற தலைப்புக்களில் சிறு கட்டுரைகளை ஆரோக்கிய விவாதங்களுக்கு இடமளிக்கும் வகையில் எழுதியுள்ளார்.

நவம்பர் 2019 இடுகை

கொடுமைகள் குவிக்கப்படும்போது, அதனால் தத்தளிப்பவர்களிடமிருந்து கிளம்பும் சோகம், பெரும் புயலை எழுப்பிவிடும் என்பதனைக் கொடுமைப்படுத்துவோர் உணருவதில்லை. வீழ்த்திவிட்டோம், வீழ்ந்துவிட்டது என்று எண்ணிக்கொண்டு விடுகின்றார்கள்; ஆனால் வீழ்த்தப்படுபவர்கள், எண்ணற்றவர்களை எழுப்பிவிட்டுத்தான் போகிறார்கள்”

- அறிஞர் அண்ணா பக் 43 வெள்ளை மாளிகையில்

” சிக்கலான பிரச்சினைகள், அய்யப்பாடுகள், மனக்குழப்பங்கள், குமுறல்கள் ஏற்படும்போது, எது முறை?

தெளிவும் துணிவும் பொறுப்பும் பொறுமையும் மிகுதியாக இருக்கவேண்டும்.

தன் சொந்தக் கருத்தைத் திணிக்கவேண்டும் என்ற நினைப்பு எழலாகாது.

பிரச்சினையை எந்தவிதமான விருப்பு வெறுப்புகளுடனும் பிணைத்து விடலாகாது.

தவறான கருத்தைத் தந்திரமாகப் புகுத்தும் முயற்சியை மேற்கொள்ளக் கூடாது.

என் யோசனைதான் - என் திட்டம்தான் என்ற எக்களிப்பைக் கொட்டிக் காட்டக்கூடாது.

கேட்பவர், கருத்தற்றவர்; அறிவுப் பஞ்சத்தால் நம்மை வந்து நாடுகிறார் என்ற

தப்புக் கணக்கும் போடக்கூடாது.

பிரச்சினையை அணுகும்போது, தனது நிலையை அளவுகோலாக்கிக் கொள்ளாமல், பொறுப்பினை மேற்கொண்டுள்ளவரின் நிலையினை அளவுகோலாகக் கொள்ளவேண்டும்.

கேட்பவர் மனம் மகிழவேண்டும் என்பதற்காகத் தித்திப்பு கூட்டக் கூடாது; பிரச்சினையை விட்டுவிடட்டும் என்பதற்காகக் கசப்பினையும் கலக்கக்கூடாது.

இவ்வளவு இலக்கணமும் பொருந்தியுள்ளவர்கள், கிடைத்தால் மட்டுமே, பொறுப்பினை மேற்கொள்பவர்கள், தங்கள் மனதிலே எழும் அய்யப்பாடுகளை நீக்கிக் கொள்ள, சிக்கல்களைப் போக்கிக்கொள்ள, வழி காண்பர்”

-அறிஞர் அண்ணா வெள்ளை

மாளிகையில் பக் 55-56

ஜூலை 2019 இடுகை

“நாட்டின் ஒற்றுமை ஒரு குறிப்பிட்ட மொழியையோ, எல்லாம் ஒரே மாதிரியாகத்தான் இருந்தாக வேண்டும் என்னும் நிலையையோ பொறுத்ததல்ல. உணர்ச்சியைப் பொறுத்ததாகும்… ஒருமைப்பாடு என்பது உளப்பூர்வமாக உருவாக வேண்டும்; மொழியால் அல்ல. இந்த நாட்டை ஒன்றுபடுத்த இந்தி அவசியம் என்று சொல்வது அரசியல் கட்டுக் கதையாகும்… நாட்டிற்குள் பல்வேறு பகுதிகளுக்கிடையே தொடர்பு கொள்வதற்கு ஒரு மொழியும், வெளிநாடுகளுடன் தொடர்பு கொள்வதற்கு வேறொரு மொழியும் வேண்டும் என்பது அரசியல் அதிகப் பிரசங்கித்தனமாகும்.”- அறிஞர் அண்ணா 25-10-1967 ஆங்கிலோ இந்தியர் சங்கத்தில் உரை

டிசம்பர் 11 2017 இடுகை

சர்க்கார் என்பது வேறு, கட்சி என்பது வேறு. நாடு என்பது நிரந்தரமானது. சர்க்கார் என்பதும் நிரந்தரமானது. ஆளுங்கட்சி மாறிக்கொண்டிருக்கலாம். நாம் கட்சி வேலை செய்யவேண்டிய இடம் திமுக தலைமை நிலையங்களான அறிவகம், அன்பகம் ஆகும். சர்க்கார் அலுவலகம் அறிவகமல்ல, அனபகமல்ல. அது அறிவு அகமாகவும் அன்பு அகமாகவும் இருக்கலாம் (அண்ணா முதலமைச்சர் ஆன பின்னர் ஆற்றிய உரைகள் என்பதிலிருந்து)

ஆகஸ்ட் 2023 இடுகை

மார்க்சியம் இன்றும் உலகளாவிய விவாதப் பொருளாக இருப்பதற்கான, பெரும் கட்டுமானத்தை செய்ததில் லெனினுக்கு பிரதான பங்கிருக்கிறது.

ருஷ்ய அரசியலை பல்லாண்டுகள் மார்க்சிய புரிதலில் பார்த்த அவர், அச்சமூகம் புரட்சியின் மாற்றத்தின் தலைவாயிலில் இருப்பதாக உணர்ந்தார். சக தோழர்களை உணரவைத்தார். இதன் விளைவாக அக்டோபர் புரட்சி என்கிற சோதனையை அவர் துணிச்சலாக மேற்கொண்டார். அவரைத்தொடர்ந்த ஸ்டாலின், குருஷேவ் , பிரஷ்னேவ், ஆந்திரபோவ் , கோர்பசேவ் சோதனைகளுடன் லெனின் ஏற்படுத்திய அக்டோபர் கனவுகள் முடிந்தன.

லெனின் சோவியத் சோதனை மாடல் வீழ்ந்தாலும், 21 ஆம் நூற்றாண்டில் சோசலிசம் என்கிற உரையாடல் மார்க்ஸிய விளக்கங்களுடன் பெருகாமல் இல்லை. தொடர்ந்து மார்க்சிய விவாதங்கள் அதன் தேவைகளை சுட்டிக்காட்டியும், அது வழக்கொழிந்த

ஒன்று என்ற விமர்சனங்களுடனுன் பெருகிக்கொண்டுதான் இருக்கின்றன. மார்கஸ் தொடர்ந்து கட்சிப் பொருளாகவும், விவாதப்பொருளாகவும் நீடிப்பதில் லெனினின் அக்டோபர் சோதனை, சோவியத் மாடல் உருவாக்கம் பெரும் பங்காற்றியுள்ளது.

காந்திக்கு இப்படிப்பட்ட அரசியல் நிறுவனம் சார்ந்த , உலகளாவிய தாக்கத்தை உருவாக்கிய ஏற்பாடுகள் மார்க்சிற்கு கிடைத்தது போல் கிடைக்கவில்லை என்றே எனக்குத் தோன்றுகிறது. காந்தி தனது சுயப் போராட்டங்கள் வழியே மட்டுமே தன்னை நிலைநிறுத்திக்கொள்ள வேண்டியிருந்தது. அரசின் வழியாக, கட்சி அரசியல் வழியாக அவர் நெடுக அழைத்துச் செல்லப்படுகிறார் என உணரப்படமுடியவில்லை. காந்தியானா மீது ஆர்வம் உள்ளவர்களின் விரிவான விவாத வெளிகளின் மூலமாகவும், காந்திய

இயக்க நண்பர்களின் ஆங்காங்கேயான செயல்பாடுகளின் மூலமாகவும் காந்தி கைமாற்றித் தரப்பட்டுக்கொண்டிருக்கிறார்.

மார்க்சிற்கும் கட்சிகளுக்கு அப்பாற்பட்ட ஆய்வுவெளி பரப்புண்டு. ஆனாலும் அவர் கம்யூனிஸ்ட் கட்சிகளின் உதடுகளில் நேர்மறையாகவும், வலது கட்சிகளின் உதடுகளில் எதிர்மறையாகவும் வெளிப்பட்டுக்கொண்டிருப்பார். காந்திக்கும் இப்படி ஆதரவான பிரமித்துப் பேசும் உதடுகளும், அவரை பெருமளவு வசைபாடும் உதடுகளும் இருக்கவே செய்கின்றன. காங்கிரஸ் கட்சி என்ற வகையில் காந்தியானா விற்கு போதுமான , காங்கிரசில் தொடர்ந்து காந்தியர்களை வைத்திருந்து அழைத்துச் செல்ல அக்கட்சி பங்களிப்பை செய்யாமல் போனதாகவே எனக்குப்படும்.

அவர்களின் அதிகார வெளியீடுகளில்

காந்தி வருவதோ, அவர்களின் இணையங்களில் காங்கிரசில் காந்தியுடன் பணியாற்றிபோன காந்தியர்களின் ஆக்கங்களுக்கோ முன்னுரிமையிருப்பதில்லை. பாஜக தனது library ல் , அல்லது வெவ்வேறு வழிகளில் தனது சித்தாந்த முன்னோடிகளுக்கு கொடுத்திருக்கும் space அளவுகூட காங்கிரஸ் தனது பெரும்பயணத்தில் செய்யவியலாமல் போனது வருத்தமான ஒன்றே. காங்கிரசில் படேல் பக்கம், கிருபளானி பக்கம், வினோபா பக்கம், குமரப்பா பக்கம் என சில பகுதியாவது, நேருவின் நூல்தொகை அளவிற்கு இல்லாமல் போனாலும் இணைத்து வைத்திருந்தால் அது இன்றும் பயனளித்திருக்கும். தொடர்ந்து காங்கிரசில் பயணித்தவர் பின்னர் வேறுபட்டு போயிருந்தாலும், அவர்கள் இருந்த காலம்வரை அவர்களின் பங்களிப்புகளை

அது தனது archive களில் வைத்திருக்கும் அரசியல் கண்ணியத்தை கொண்டு பயணிக்கவேண்டிய அவசியம் உள்ளது.

தமிழகத்தில் பெரியாருக்கு இந்த 50 ஆண்டுகளில் பெரிய ஏற்றம் உருவானது. இதற்கு அண்ணாவின் பங்களிப்பு அளப்பரியது எனலாம். 1949ல் பிரிவிற்கான காரணங்களையெல்லாம் தள்ளிவைத்துவிட்டு, அவரால் அடையாளம் காட்டப்பட்டவர் என்ற வகையில் , குரு காணிக்கையை அண்ணா அற்புதமாக செய்து அரசியலில் புதிய கண்ணியத்தை உருவாக்கினார். பெரியார் நாணவேண்டியிருந்தது. அடுத்து வந்த கலைஞராக இருந்தாலும், ADMK தொடங்கிய எம்ஜிஆர் ஆனாலும் பெரியார் என்கிற உருவை மேலும் உயர்த்தியே சென்றனர். இதன் பொருள் திக விற்கோ, தன்னளவில்

பெரும் உழைப்பை நல்கிய பெரியாருக்கோ, பின் தொடர்ந்த மணியம்மை, வீரமணி , ஆனைமுத்து இன்னும் பல பெரியாரியத் தோழர்களுக்கோ பெரியாரை எடுத்துச் செல்வதில் பெரும் பங்கில்லை என்பதல்ல. அண்ணாவின் ஆட்சி சோதனை முக்கிய பங்களிப்பை செய்தது என்பதுதான். கட்சிகளைத்தாண்டி பெரியாரும் இன்று விவாத வெளியில் இல்லாமல் இல்லை.

அண்ணல் அம்பேத்கரும் தன் பெரும் உழைப்பால்தான் தன்னை நிலைநாட்டிக்கொண்டு வந்துள்ளார். இன்னும் வருவார். அவருக்கான அவரது கட்சி சோதனையோ, அவரது பெயரை முன் நிறுத்தி இன்றுவரை செய்யப்படும் கட்சி சோதனைகளோ ஓரளவிற்கு உதவியிருக்கலாம். அவரின் மேதாவிலாசத்தால்கட்சிகளை தாண்டி அவர்

விவாதப்பொருளாகியிருக்கிறார்.

எவர் ஒருவர் தனது சிந்தனை செயல் முறைகளால் அடிப்படை கட்டுமானங்களை செய்கிறார்களோ அவர்கள் ஏதோவொரு வழியில் பெரும் சிந்தனை கட்டிடங்களாக எழுந்துகொண்டே செல்வர். அப்படிப்பட்ட வாய்ப்பை இந்தத் தலைவர்கள் உலகோர் மத்தியில் பெற்றுள்ளனர்.

மார்ச் 31 2022 இடுகை

இலங்கையின் தமிழ் பேரறிஞர் ந. சி கந்தையா அவர்களின் ஆரிய திராவிட கலப்பு நூலை படித்துகொண்டிருந்தபோது கண்ணில் பட்ட சில வரிகள்

ஆரியப் பிராமணருக்கு ஞானம் போதித்த இராசானுசர், பகவத்கீதையின் ஆசிரியராகிய கண்ணன், கீழ்த்திசையில் ஞானத்தை உதிப்பித்த புத்தர் ஆதியோர் தமிழ்

மரபினரே. உபநிடதங்கள் எழுதப்படுகின்ற காலத்தில், தத்துவ ஞானங்களை விசாரித்தறிவதற்காகப் பிராமணர் தெற்கே வந்தார்கள். உபநிடதங்களுக்குப் பின் எழுதப்பட்ட சூத்திரங்களுக்கு உரை எழுதிய போதாயனரும், அபத்தம்பரும் முறையே கிமு 5- 6 ஆம் நூற்றாண்டுகளில் ஆந்திரதேசக் கலை ஞானக் கொள்கைகளைப் பின்பற்றிய தமிழர். இவ்வாறு தமிழரே பெரிதும் வடமொழி நூல்களின் ஆசிரியர்களாவார்.

மேற்கூறிய நூல் பக் 17

ந.சி.க அவர்களும் மறைமலையடிகள் போல மநு திராவிட மன்னர் என்றே இந்நூலில் பேசுகிறார்

பக் 32ல்

உபநிடதங்கள், தரிசனங்கள், பிராமணங்கள் தத்துவ நூல்கள் புத்தர்

காலத்துக்கு முன்னேயே உள்ளன. திராவிடரே இந்தியாவில் கிமு 3000 முதல்- 2000 வரையில் ஆட்சி புரிந்தார்கள் என்பதற்குரிய ஆதாரங்கள் கிடைக்கின்றன. திராவிட பண்டிதர்களே சில பிராமணங்களையும் உபநிடதங்களையும் இயற்றினார்கள்..திராவிட பண்டிதராகிய கபிலரின் தத்துவக்கொள்கைகளை நோக்குமிடத்து, வேத பாடங்களைச் செய்தல் அவர்களுக்கு எளிதாக இருந்திருக்கலாம். எந்த ஆரியனாவது வேதங்களை ஒழுங்குபடுத்தித் தொகுக்கவில்லை. வேதபாடல்களை ஒழுங்குபடுத்திய வியாசர் திராவிட வகுப்பினரே..

மார்ச் 27 2021 இடுகை

தமிழக வரலாறு குறித்த முக்கிய ஆக்கங்களில் ஒன்றாக கே கே பிள்ளை அவர்கள் எழுதிய ‘தமிழக வரலாறு மக்களும் பண்பாடும்’ கருதப்படுகிறது. இப்புத்தகத்தில்

மூன்றாவது இயல் ‘வரலாற்றுக் காலத்துக்கு முந்திய தமிழகம்’ பற்றிய ஆய்வாக இருக்கிறது. இவ்வியலில் கே கே பிள்ளை கீழ்கண்ட கருத்தை முன்வைக்கிறார்.

புதிய கற்காலம் நிகழ்ந்தபோதே தமிழகத்துடன் தொடர்புகொண்ட மற்றுமோர் இனத்தினர் திராவிடர்கள். இவர்கள் தமிழக்த்திலேயே பிறந்து வளர்ந்த ஆதிகுடிகள் என்று சிலர் கருதுகின்றனர்... திராவிடர்கள் மத்தியதரைக்கடல் வாழ்க்கையைக் கைவிட்டு வெளியேறி, இமயமலையின் வடமேற்குக் கணவாய்களின் வழியாக இந்தியாவுக்குள் நுழைந்தனர் என்று சிலர் கருதுவர்..... மேக்ரான் பலூசிஸ்தானம், சிந்து ஆகிய தரைப்பகுதிகளைக் கடந்தும், கடல் வழியாகவும் தென்னிந்தியாவுக்கு வந்து குடியேறியவர்கள் திராவிட இனத்தவர் என்று சில ஆய்வாளர்கள்

கருதுகின்றனர். மேற்காசிய மக்களுக்கும் திராவிடருக்குமிடையே காணப்படும் பழக்க வழக்கங்களிலும் ஈரான், மெசபடோமியா ஆகிய நாட்டு ஊர்ப் பெயர்களிலும் திராவிடரின் ஊர்ப் பெயர்களிலும் பல ஒற்றுமைகள் அமைந்திருப்பது இதற்கு சான்றாக காட்டப்படுகிறது.

மேற்காசியப் பகுதிகளில் கிடைத்துள்ள பெருங்கற் புதைவுகளின் காலம் கி மு 2500-2000. எனவே லெமூரியாவிலிருந்து முற்காலத்தில் சென்று இக்கால அளவில் அவ்விடங்களில் வாழ்ந்திருந்த பண்டைய மக்கள், குடிபெயர்ந்து இந்தியாவுக்குள் புகுந்து தென்னிந்தியாவுக்கு வந்து வாழ்க்கையைத் தொடங்கித் திராவிட இனத்தைத் தோற்றுவித்தனர் என்று கொள்ளுவது வரலாற்றுக்கு உடன்பாடாகும். இக்குடியேற்றம் கி மு 2500 ஆண்டளவிலேயே

தொடங்கியிருக்கவேண்டும்.

பக் 33-34

This is about the Nuggets of History TN , a column in today’s Hindu(may 17th 2024). One vertical of that columns speaks about the news of ’ C Natesa Mudaliar opened a hostel for non- Brahmin students viz Dravidian Home’

எவராவது அறிந்தால் சொல்ல வேண்டுகிறேன். அந்த திராவிட இல்லம் எவ்வளவு ஆண்டுகள் நடத்தப்பட்டது. எவ்வளவு மாணவர்கள், எந்த சாதி மாணவர்கள்- எவ்வளவு, தலித் என ஒடுக்கப்பட்ட மாணவர்கள் அனுமதிக்கப்பட்டனரா- அப்படி சேர்க்கப்பட்டிருந்தால் அவர்கள் கண்ணியமாக அங்கு நடத்தப்பட்டனரா என்ற விவரம் கூடுதலான புரிதலுக்கு உதவலாம்.

இந்துவில் இந்த செய்தியை தொகுத்தவர் R.Saivenkatesh .

மேற்கண்ட கேள்வியே எழக்கூடாது என நினைப்பவர்களிடம் விவாதிக்க ஏதுமில்லை. திரு நடேச முதலியார் நடத்திய திராவிட இல்லம் குறித்து கூடுதல் விவரத்தை #thehindu வெளியிட்டால், அல்லது நீதி கட்சி, திராவிட இயக்க ஆய்வாளர்கள் வெளியிட்டாலோ, அப்படி ஏதாவது வெளியிட்டிருந்தால் அது குறித்து அறிய தந்தாலோ உதவிகரமாக இருக்கும்.

ஆகஸ்ட் 12 2022 இடுகை

1956 state Reform commission மொழிவாரி மாநிலங்கள் என அறிக்கை வந்தபோது unitary state ஏகாத்ம அரசு வேண்டும் என திரு கோல்வால்கர் கட்டுரை ஒன்றை எழுதினார். அவரின் ஞானகங்கை தொகுப்பில் பக் 318-327

வரை இது இடம் பெற்றுள்ளது.

அதிலிருந்து...

இது நாடு அல்லவா கண்டமாம்..மொழி இனம் பண்பாடு போன்றவைகளில் பல்வேறு நாடுகள் கொண்ட பெரும் நிலப்பரப்பாம் என பிரச்சாரம் செய்கிறார்கள். மக்கள் வெறும் கதம்பமமாம்.வெவ்வேறு இனம்-வரலாற்று ரீதியில் எங்கிருந்தோ வந்து குடியேறியவர்களாம். ஒவ்வொரு மொழியும் இதர மொழிக்கு அந்நியதாம். சமயம் ஒன்றால் ஒருவர் கழுத்தை ஒருவர் நெறிப்பவராம். இதை பிரிட்டிஷ் பிரச்சாரம் செய்தனர். திராவிட ஆர்ய, பிராமணர் -அல்லாதவர், இந்து முஸ்லிம் என வேற்றுமைகளை தூண்டிவிட்டனர்.

ஆங்கிலேயர்களை அனுப்பியது இறைவன் அருள் என்றனர். பிளவுசக்திகளை

அவர்களால்தான் கட்டுப்படுத்த முடிந்ததாம். உட்பகை யுத்தங்களை அவர்களால்தான் நிறுத்த முடிந்ததாம். நாங்கள் வெளியேறினால் உட்பூசல் மலிந்து விடும். இப்படி தொடர்ந்து துஷ்பிரச்சாரம் செய்தனர்.

கன்சர்வேடிவ் உறுப்பினர் ஒருவர் இப்படி பேசினார்

மாநிலத்தில் தனித்தனி சட்டமன்றங்கள் அமைத்ததால், பிரிட்டிஷ் வெளியேறும்போது, இந்த நாடு மொழிவாரி மாநிலங்களாக பிளவுபடும்..மோதிக்கொள்பவைகளாக இருக்கும்..

இப்பொழுது புரிகிறதா ..மொழிவாரி கூட்டாட்சி யோசனைகளுக்கு தூண்டுதல்,எங்கிருந்து கிடைத்தது என்று..

நம் நாட்டின் அரசியல் சாசனம் நாட்டை பல்வேறு யூனிட் ஸ்டேட்களாக பிரிக்கிறது.

இவை அனைத்தும் ஓர் ஒன்றியத்தின் யூனியன் கூட்டாட்சியாக பெடெரேஷனாக இருக்கும்.

அந்த சூழ்நிலை ஓர் ஏகாத்ம அரசை அதாவது ஒரே நாடு, ஒரே சட்டமன்றம், ஒரே நிர்வாக மய்யம் உருவாவதற்கு ஏற்றதாக இருந்ததை உணரமுடியும். ஒரே சீரான ராஷ்ட்ரத்தை நன்றாக அடையாளம் காட்டியிருக்கமுடியும். ஆனால் அன்றைய தலைவர்களின் அறிவு பெடெரல் ஸ்டேட் என்ற பிடிவாதத்தில் ஊறித் தோய்ந்திருந்தது

இப்போது மாநில புனரமைப்புக் குழு பரிந்துரைகள்..உண்மையில் நாட்டின் சூழ்நிலையில் பரஸ்பர அவநம்பிக்கை. ..சோகமய சித்திரம் காணப்படுகிறது...

இதற்கு நிவாரணம் உண்டு..பிரிவினைக் கருத்துக்களை எல்லாம்

வேரறுத்துவிடவேண்டும்..தாய்நாட்டின் ஒருமைத்தன்மை மீது உறுதியான நம்பிக்கையை ஏற்படுத்த விடாமல் தடுக்கும் உணர்ச்சிகளை துடைத்தெறியவேண்டும்...ஒரே தேசம், ஒரே அரசு, ஒரே சட்டமன்றம், ஒரே நிர்வாகம் என பிரகடனம் செய்யவேண்டும்..

அரசியல் சாசனத்தை பரிசீலித்து ஏகாத்ம அரசு ஒருமுக ஆட்சியை நிறுவும் வண்ணம் திருத்தி எழுதவேண்டும்...

நவம்பர் 2022 இடுகை

கே எம் பணிக்கர் (1895- 1963) இந்தியாவின் சிறந்த சிந்தனையாளர்களில் ஒருவர். வரலாற்றாளர். இலக்கியகர்த்தா. ஐநா அனுபவம் தூதரக அனுபவம் வாய்ந்தவர். பாட்டியாலா, பிகானீர் சமஸ்தான வெளியுறவுத்துறை அமைச்சராக இருந்தவர்.

அலிகார் பல்கலை பேராசிரியர், இந்துஸ்தான் டைம்ஸ் ஆசிரியர், நேருவால் சீனத்தூதராக அமர்த்தப்பட்டவர்.

பணிக்கர் எழுதிய A Survey of Indian History இந்திய விடுதலை தினமான ஆகஸ்ட் 15, 1947ல் வெளியிடப்பட்டது. சிக்கல்களும் சர்ச்சைகளும் முடிச்சுகளும் கொண்ட இந்திய வரலாற்றை மிகச் சுருக்கமாக பேச பணிக்கர் இதில் முயற்சி செய்துள்ளார். வரலாற்றை எழுதுதல் என்பது குறித்த அவரது விமர்சனப்பார்வை இதில் நன்கு தெரியும். அவரின் சில வரிகளை இங்கு தந்துள்ளேன்.

The orthodox think of India in terms of Vedic age and emphasise the Aryan character of our life. The Hindu nationalists recreated an India of their imagination, based on the glories of the Gupta period, while the Muslim vision of India hardly went beyond the days of Mahmud of Ghazni and equated Indian culture with the

achievements of Moghuls.

To read most of the earlier Indian histories one would think that India south of Vindhyas did not exist, and if it did, only as an appendage to the empires of the North.

ஏன் தென்னிந்தியாவை இந்திய வரலாற்றில் சரியான இடத்தில் வைத்து பேசவில்லை என்ற மிக முக்கிய குரலை பணிக்கர் வெளிப்படுத்தியதைக் காண்கிறோம். தனது புத்தகத்தில் அவர் இந்தக்குறையை களைய முற்படுவதையும் வாசிப்போர் உணரமுடியும்.

அடுத்து முகலாயர் ஆட்சி அந்நியர் ஆட்சியா என்ற கேள்விக்கு பதிலைத் தேடுகிறார் பணிக்கர்.

The Moghul might have been a foreign dynasty but with their capital in India and with but little connec-

tion with their homelands, they became truly Indian and their Govt national. The history of great Moghuls is therefore, a part of Indian history.

The position is different in the case of British என்ற வேறுபாட்டு தன்மையையும் அவர் விளக்குவார்.

பிரிட்டிஷ் ஆட்சி வரலாற்றை எப்படி பார்க்கவேண்டும் என்ற கேள்விக்கும் பணிக்கர் பதில் தேடுகிறார்

It is connected with India, as it happened in the soil of India, but it is hardly a part of Indian history. The true history of India during British period does not consist of activities of the East India company or of its successor the Crown, but the upheaval which led to the transformation of Indian society, through the activities of India's own sons.

சரி .இவை அனைத்திற்கும் முன்பான

ஆர்ய திராவிட சர்ச்சை குறித்து அவர் The Making Of India துவக்க அத்தியாயத்திலேயே பேசுகிறார்.

Indus Valley civilisation is pre Aryan. The doctrine of Aryan origin of Indian Civilisation finds no support.

Indian civilisation is pre Vedic but the essential features of the Hindu Religion as we know it today were perhaps present in Mohenjo Daro.

மேற்கூறிய மிக முக்கிய கண்டடைதலுக்கு சர் ஜான் மார்ஷல் கூற்றை பணிக்கர் காட்டுகிறார். ஜான் மார்ஷல் இப்படி சொல்லியுள்ளாராம்.

..this religion of the Indus people was the lineal progenitor of Hinduism.

பணிக்கர் மேலும் சொல்லும்போது சிவா, காளி, லிங்க வழிபாடுகள் ஆரியருக்கு முந்திய காலத்தவை எனச் சொல்கிறார்.

பின் ஈரானிலிருந்து கொஞ்சம் கொஞ்சமாக நுழைந்த ஆர்யர்கள் இங்கிருந்த நாகரீகம், இந்துயிசத்தை உள்வாங்கிக்கொண்டனர். பஞ்சாபில் வேதங்கள் உருப்பெற்றன. ஆர்யர்கள் பல இடங்களில் peaceful migrants ஆக வந்ததாகவும் பணிக்கர் சொல்கிறார்.

அடுத்து பணிக்கர் இதையும் குறிப்பிட்டு சொல்கிறார்.

India as a concept comes into existence only with the development of Hindu civilisation...The unity of India is a conscious achievement of Hinduism after the great Argo Dravidian synthesis had taken place. The creation of one civilisation and social structure out of the varied elements of India's population and its establishment over the whole land was the supreme achievement of the early Hindus

ஆர்யர்கள்தான் வர்ணங்களை

உருவாக்கியவர்கள். சதுர்வர்ணம் இதனால் உருவானது. அதேநேரத்தில் relegation of dark skinned inferior was never wholly effective என்பதையும் உதாரணங்கள் மூலம் சொல்கிறார்.

There is ample evidence to establish the fact that before the caste system took shape much intermixture of blood had already taken place என்கிறார்.

சுவையான வரலாற்று பார்வையுடன் ஒருவர் இந்த புத்தகத்தில் பயணிக்கலாம்.

ஏப்ரல் 15 2020

பெரியார் குறித்து படிக்கும்போது ஒரு செய்தி கிடைத்தது. பொதுவாக பெரியார் ஆட்சி அதிகார பொறுப்புகளை ஏற்காதவராக வாழ்ந்து மறைந்தவர். 1937-39 காங்கிரஸ் மந்திரிசபைகள் விலகுவது என முடிவையடுத்து சென்னை மாகாண

பிரதமர் ராஜாஜி அக்டோபர் 27 1939ல் விலகுகிறார். இந்நேரத்தில் சென்னை மாகாண கவர்னர் சர் ஆர்தர் ஹோப் நீதிக்கட்சி அரசு அமைக்கலாம் எனக்கருதி பெரியாருக்கு தாக்கீது அனுப்பினார். ராஜாஜி பெரியாரிடம் வந்து, சண்டை சமயத்தில் அட்வைசரி ஆட்சி நடக்கவிடுவது ஆபத்து. தயவு செய்து நீங்கள் பிரதமர் பொறுப்பை ஏற்றுக்கொண்டால் நானும் மந்திரியாக இருந்து, மேலும் 2,3 பேரை இருக்க செய்து உதவுகிறேன் எனக் கூறினார். ஆனால் பெரியார் அக்டோபர் 29 அன்று தம்மைநாடி வந்த மாகாணப் பிரதமர் பதவியை ஒதுக்கினார்.

( இச்செய்தி கவிஞர் கருணானந்தம் எழுதிய பெரியார் முழு வாழ்க்கை வரலாற்றில் பக் 140ல் இருக்கிறது- கருணானந்தம் அவர்கள் அஞ்சல் ஆர் எம் எஸ் துறை ஊழியராக இருந்தவர் என்பது

குறிப்பிடத்தகுந்தது)

மார்ச் 2022 இடுகை

பெரியார் B& C மில் தொழிலாளர் வேலைநிறுத்த பொதுக்கூட்டம் ஒன்றில் 30-6-1946ல் நீண்டதோர் உரையாற்றியிருந்தார். அது குடியரசில் வெளியானது. தொழிலாளர் இயக்கந்தான் திராவிடர் கழகம் என்பதைச் சொல்லிவரும் போது பாரதி வள்ளுவர் பற்றி குறிப்பிடுகிறார் பெரியார். இனி பெரியார் மொழியில் அதைக் காணலாம்.

” உழைப்பாளிகளின் விடுதலைக்குப் பார்ப்பனர்கள் விரோதிகள் என்று எண்ணுங்கள். உதாரணமாக இன்று பார்ப்பனக் கம்யூனிஸ்ட்களும் அவர்கள் வால்களும் பொதுவுடமைக்கு ஒரு பாட்டுச் சொல்லுவார்கள். அதாவது தனி ஒருவனுக்கு உணவில்லை எனில்

ஜகத்தினை அழித்திடுவோம் என்ற பாட்டைப்பாடி இது பாரதியார் என்ற பார்ப்பனர் பாடிய பொதுவுடைமைப் பாட்டு என்பார்கள். இந்தப் பாட்டு பித்தலாட்டப் பாட்டாகும். பாட்டாளி மக்களை ஏழைகளை வேறுபக்கம் திருப்பிவிட்டு ஏய்க்கும் பாட்டாகும். பட்டினிக்கும் உலகத்திற்கும் என்ன சம்பந்தம்? உலகில் என்ன இல்லை? இப்படிப்பட்ட உலகத்தை ஒழிப்பது எதற்கு ஆக? ஒழித்தால் வருவது என்ன? என்றெல்லாம் பார்த்தால் இது அர்த்தம் அற்ற, அறிவு அற்ற அல்லாவிட்டால் வஞ்சகப் பேச்சு என்றுதான் சொல்லவேண்டும்...

நம்மவர் சொன்னதைக் கேளுங்கள். வள்ளுவர் என்ன சொன்னார். அட மடையா உலகத்தை அழிக்க வேண்டாமடா. உலகை உண்டாக்கினவனை அழியடா என்றார். அதாவது

இரந்தும் உயிர்வாழ வேண்டின் பரந்து

கெடுக இவ் உலகியற்றியான் என்று சொல்லியிருக்கிறார்.

அந்தப்பாட்டு பாடியவன் பார்ப்பனன் பிராமணன். இந்தப் பாட்டுப் பாடினவன் பாட்டாளி பறையன்.அவன் இனம் பிழைக்க அவன் பாடினான். இவன் இனம் பிழைக்க இவன் பாடினான்..

ஜனவரி 14 2023 இடுகை

வரலாற்றின் பக்கங்கள்...

நேதாஜி விடுதலையைப் பற்றி பெரியார்

குடிஅரசு 29-5-1927ல் எஸ்.சி. போசின் விடுதலை நமது நாட்டிற்கு ஒரு வெட்கக்கேடு என்ற தலைப்பில் பெரியார் எழுதியதிலிருந்து..

” சுய சாதி போஸ் விடுதலையானது

பற்றி ஏறக்குறைய எல்லோரும் கொண்டாடுகிறார்கள். இதிலிருந்து இந்திய மக்களின் சுரணை மானம் கெட்ட தன்மை நன்றாய் வெளியாகிறது.

சுபாச் சந்திரபோஸ் சர்க்காரால் காரணம் சொல்லாமல் விசாரணை செய்யாமல் சுமார் 2 1/2 வருஷ காலம் ஜெயிலில் அடைத்து வைக்கப்பட்டிருந்தார். மகாத்மா காந்தியும் இந்த அக்கிரமத்தை அறிந்து ஸ்ரீமான் தாசும் அடைபட்டு விடுவாரோ என பயந்து ஒத்துழையாமையையும் அதனால் மக்கள் பட்ட கஷ்ட நஷ்டங்களையும் பலிகொடுத்து ஸ்ரீதாசுக்கு ஏதோ பெரிய ராஜி செய்து கொண்டதாய் பாவனை காட்டி சர்க்கார் ஸ்ரீமான் தாசைப் பிடித்தடைக்காமல் செய்தார். இதன் பலனாக தேசம் குட்டிச்சுவர் ஆகி அயோக்கியர்கக்ல் முன்னுக்கு வந்தார்கள். பதவிக்கு போட்டி

போட்டார்கள். பதவி பெற்றார்கள்..பதவி வேட்டைக்கு சுபாச் சந்திரபோஸ் பெயரை சொல்லிக்கொண்டார்கள்.. அவரை விடுதலை செய்ய மேடைப்பேச்சும் காகிதத்தீர்மானமும் செய்தார்களே அல்லாமல் காரியத்தில் ஒரு வேலையும் செய்தவர்கள் அல்ல...”

“..கடைசியாக ஸ்ரீமான் போஸ் செத்துவிடுவாரோ என்னமோ என்கிறதாகப் பயந்து சர்க்காரார் அந்தப் பழியில் இருந்து தப்பித்துக்கொள்ள.. வெளியில் கொண்டுவந்து விட்டால் இதற்காக சந்தோஷம் . வாழ்த்து. சர்க்கார் புத்திசாலித்தனத்திற்கு நற்சாட்சிப்பத்திரம். நன்றியறிதல்...இதில் சந்தோஷப்படக்கூடிய விஷயம் இருக்கிறதா வெட்கப்படக்கூடிய விஷயம் இருக்கிறதா?..”

“.. தமிழ்நாட்டு அரசியல் வாழ்வு பார்ப்பனர்களைவிட மிகவும் சுயநலக்காரர்

வெட்கங்கெட்டவர் என்பதற்கு ஸ்ரீமான் போசின் 2 வருஷம் சிறைவாசம் அவர் சிறையில் இருக்கும் போது சுயராஜ்யக் கட்சிமுதலிய அரசியல் கட்சி பேரால் சட்டசபை மந்திரி, பிரசிடெண்ட், மேயர், கார்ப்பரேஷன் மெம்பர், காங்கிரஸ் கமிட்டி தேர்தல் முதலியவைகளில் நடந்த போட்டியும் சூழ்ச்சிகளுமே போருமே சாட்சியாகும். தானாக விடுதலை செய்யப்பட்ட ஸ்ரீமான் போசின் விடுதலையைப் பற்றி இவ்வளவு தூரம் சந்தோஷப்பட ஒன்றும் காரணமில்லை என்பதைத் தெரிவிக்கிறோம்.”

அக்டோபர் 7 2019 இடுகை

பெரியார் ஈ வெ ரா சிந்தனைகள் 2200 பக்கங்களுக்கும் மேற்பட்டது. மரியாதைக்குரிய வே ஆனைமுத்து அவர்களால் பதிப்பிக்கப்பட்ட தொகுப்பு. 1970களின் துவக்கத்தில் வேலைகள்

துவங்கப்பட்டு 1974ல் வெளியானவை. பெரியாரிடம் இம்முயற்சி பற்றி தெரிவித்தபோது அவர் இரு எச்சரிக்கைகளை தந்தார்.

” என்னால் ஒரு தடவை பேசப்பட்டவை, எழுதப்பட்டவை திரும்பத் திரும்ப வந்திருக்கும் இடங்களைக் கவனமாகப் பார்த்து Repetitionனதைத் தவிர்க்கவேண்டும்.

கருத்து முரண்பாடுகள் உள்ளதுபோல் தோன்றும் இடங்களைக் கண்டு, அவற்றுக்குத் தெளிவான விளக்கம் அமையும்படி தொகுப்பு அமையவேண்டும்.”

தொகுப்புப் பணியில் 3222 இரட்டை முழுத்தாட்களில் கையெழுத்துப்படி தயாரிக்கப்பட்டது. படித்துக்காட்டி பெரியாரிடம் கையொப்பம் பெறப்பட்டது. நாளொன்றுக்கு சுமார் 100 பக்கங்களைப் படிக்கக்கேட்டும்-

படித்துப் பார்த்தும் பெரியார் ஒப்புதல் தந்தார்கள்

ஜனவரி 30 2019 இடுகை

ஒரு சிந்தனையாளர் கருத்துக்களை அவர் எதிரிகளைவிட சீடர்கள் சிதைத்து விடுகின்ற கொடுமை, வரலாறு நெடுகக் காணப்படுகிறது. புத்தர், காந்தி, பெரியார் மூவரும் இவ்வாறே தோற்கடிக்கப்பட்டவர்கள்- மறுக்கப்பட்டவர்கள்- மறைக்கப்பட்டவர்கள்

பக் 19 பெரியார் என்னும் பேரொளி உலகத் தமிழாராய்ச்சி நிறுவன வெளியீடு 2014

மார்ச் 5 2020 இடுகை

புரட்சி’ வார ஏடு ஏன் தோன்றியுள்ளது என்பது குறித்தும் அதை ஆதரிக்க வேண்டியும் அப்பத்திரிகையில் 26-11-1933ல் தலையங்கம் எழுதினார் பெரியார். அதில் சாரமாக அவர் குறிப்பிட்டிருந்தது..

“வெள்ளைமுதலாளிகளை ஒழித்து கருப்பு முதலாளிகளைக் காக்கும் வேலைக்கு இன்று ‘புரட்சி’ வரவில்லை. வெள்ளை ஆட்சியை ஒழித்து கருப்பு ஆட்சியை ஏற்படுத்த ‘புரட்சி’ தோன்றவில்லை. இந்துமதத்தை ஒழித்து, இஸ்லாம், கிறிஸ்து மதத்தைப் பரப்ப ‘புரட்சி’ தோன்றியதல்ல. அதுபோலவே இஸ்லாம், கிறிஸ்து மதத்தை ஒழித்து இந்து மதத்தை நிலை நிறுத்தப் ‘புரட்சி’ வெளிவரவில்லை. சர்வ முதலாளி வர்க்கமும், சர்வ சமயங்களும் அடியோடு அழிந்து, மக்கள் யாவரும் சுயமரியாதையுடன் ஆண் பெண் அடங்கலும், சர்வ சமத்துவமாய் வாழச் செய்ய வேண்டும் என்பதற்காகப் புரட்சி செய்யவே ‘புரட்சி’ தோன்றியிருக்கிறது”

அக்டோபர் 2022 இடுகை

“ஈ.வெ.ரா. விளக்கம்” எனும் தலைப்பில் பெரியார் தன்னைப் பற்றி எழுதிய

“இந்த இயக்கம் தோழர் ஈ.வெ.ரா. வுக்கு ஒரு ஜீவன மார்க்கமோ, சுயநல லாபமோ, புகழுக்கோ என்று இல்லாமல் வெறும் பொதுநல காரியத்துக்காகவே அவர் நடத்துகிறார். அதுவும் அவரது ஜீவன் உள்ள வரை ஒரு நேர்மையும், பொதுநலப் பயனும் உள்ள ஏதாவது ஒரு வேலை செய்ய வேண்டுமே என்பதற்காகவே செய்கிறாரே ஒழிய மற்றப்படி இன்ன காரியத்தை சாதிப்பதற்காக கடவுளால் அனுப்பப்பட்டவர் என்பதற்கோ அல்லது அதைச் செய்துதான் முடிக்க வேண்டும் என்கின்ற அவதாரத் தன்மைக்கோ, வீரத் தன்மைக்கோ அவர் அவ்வேலைகளைச் செய்யவில்லை. அன்றியும் அவர் காரிய”வீரரே” தவிர கொள்கை வீரரல்ல.

கொள்கை சொல்பவர்கள் வண்டி

வண்டியாக இருக்கிறார்கள். கொள்கை களைக் கொண்ட புத்தகங்களும் ஏராளமாய் இருக்கின்றன. சிறிது காரியமாவது செய்ய சௌகரியமாயிருந்தால் செய்துவிட்டுப் போவதுதான் மேலே ஒழிய கொள்கைகளை மாத்திரம் சொல்லிவிட்டு ஜெயிலுக்குப் போவது மேலானதாக ஆகிவிடாது என்கின்ற கருத்தும் கொண்டவர். ஆகையால்தான் காரியத்தில் சாத்தியமானதையே எவ்வளவோ எதிர்ப்புக்கும், தொல்லைக்கும் இடையில் செய்ய முயற்சிக்கிறார். இதற்கு பெயர் கோழை யென்றாலும், துரோகம் என்றாலும் அவருக்குக் கவலை இல்லை. கோழை என்பது செய்வதற்கு சவுகரியமுள்ள காரியங்களை விட்டு விட்டு ஓடுவதேயாகும். துரோகம் என்பது மக்களுக்குத் தொல்லை கொடுத்து விட்டு சுயநலத்துக்காகப் பின் வாங்குவதாகும். இன்று அவருக்கு

செய்வதற்கு சவுகரியமுள்ள காரியம் எதையும் விட்டு விட்டு அவர் ஓடவில்லை. இரண்டாவதாக யாரிடத்திலும் எவ்வித வாக்குறுதி கொடுத்தோ கடுகளவாவது தன் சுயநலத்துக்கு பிரதி பிரயோஜனமடைந்தோ வேறு எந்தவித சுயநல காரியத்துக்கோ ஆசைப்பட்டு பின் வாங்கி விடவில்லை". - குடி அரசு தலையங்கம் 29.03.1936

feb 15 2020 இடுகை

"ஒரு மனிதன் சமதர்மக் கொள்கைக்காரனாக இருப்பானானால் அவன் தனது உள்ளத்தில் மற்றொரு மனிதனை தனக்கு சமமாகவும் மற்றொரு மனிதனுக்கு தான் சமமானவனென்றும் கருதும்படியான ஒரு உணர்ச்சியைக் கொள்ளவில்லையெனில் அல்லது கொள்ளும்படி செய்யவில்லையெனில் சமதர்மத்தைப் பற்றிய பேசும் பேச்சு- அதற்காக

பாடுபடுவதும் எதற்கு?”

பெரியார் சுயமரியாதை சமதர்மம் பக் 314

nov 28 2021 இடுகை

டாக்டர் பி வரதராஜூலு நாயுடு குறித்து தேடிக்கொண்டிருந்தபோது தமிழிணையம் மின்னூலகத்தில் என் தேடுபொறிக்கு ஏதும் கிட்டாமல் போனது. அவர் குறித்து பழ அதியமான் புத்த்கம் எழுதியுள்ளார் என்பது சிறப்புக்குரியது. அதில் சில பகுதிகளை இணையத்தில் வாசிக்கமுடிந்தது. நூலை வாங்கி இன்னும் முழுமையாக வாசிக்கவில்லை. விடுதலைக்கால தமிழக அரசியலின் முக்கிய ஆளுமை குறித்த அதியமான் தொண்டு அவரின் பிற ஆய்வுகள் போலவே அரிய தொண்டாகவே எனக்குப்படுகிறது. வாழ்க !

திலகருடன் காந்தியுடன் இன்னும் இந்து

மகாசபா தலைவர்களுடன், பிராம்மணர்-பிராம்மணர் அல்லாதார் இணக்கம் அதே நேரத்தில் பிராம்மண மேலாதிக்கம் எதிர்த்து கடுமையான போராட்டம், தேசிய இயக்கங்களுக்கு முன்னுரிமை , தொழிலாளர் இயக்கங்கள் என பன்முகமாக செயல்பட்டவர் டாக்டர் நாயுடு அவர்கள். தமிழ்நாடு என்ற பெயரில் வார பின்னர் நாளிதழ் நடத்தியவர். சுதேசமித்ரன் இருந்தபோது இணையாக பிரபஞ்சமித்ரன் கொணர்ந்தவர். இந்தியன் எக்ஸ்பிரஸ் உருவாக காரணமாக இருந்தவர். தினமணி சொக்கலிங்கம் மட்டுமில்லாமல் காமராஜ் போன்றவர்கள் இவரின் உருவாக்கம் என அறியமுடிகிறது. தமிழகத்தில் வ.உ.சி, ராஜாஜி, பெரியார், சண்முகம் செட்டியார் போன்ற பல ஆளுமைகளுடன் உறவும் உரசலும் கொண்டிருந்தவர். சரி என மனதில் தோன்றியதை பேசியும் எழுதியும் வந்தவராக

வாழ்ந்துள்ளார் டாக்டர் நாயுடு.

அவரைப்பற்றி டாக்டர் பட்ட பல்கலை ஆய்வுகள் இருக்கின்றன. அதியமான் நூல் இருக்கிறது. ஆரம்பத்தில் டாக்டர் நாயுடு பற்றி வ.உ.சி எழுதிய நூலோ அதை ஆங்கிலத்தில் நீலகண்ட பிரம்மச்சாரி மொழிபெயர்த்த நூலோ, சி.பி சிற்றரசு எழுதிய நூலோ என் தேடு பொறிக்குள் அகப்படவில்லை. தமிழ்நாடு என்ற பெயரில் 1920களிலேயே நாளிதழ் நடத்திய ஆளுமை ஒருவர் குறித்து இப்படி தேடுதல் கஷ்டம் இன்றைய தமிழ்நாட்டில் இருப்பது பெரிய முரண்.

தமிழிணையம் கவனம் குவித்து இவர் போன்ற பலவிடுபட்ட தமிழக ஆளுமைகளை கொண்டுவந்து சேர்க்கவேண்டும் என்கிற என் வேண்டுகோளை வைக்கிறேன். ஏற்கனவே 14000 நூல்களுக்கு மேல் சேர்த்து

பெரும் சுரங்கமாக இருப்பதற்கு எனது வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

# 38. பிராமணர் அல்லாதார் பிரதிநிதித்துவம் குறித்து பிரிட்டன் நாடாளுமன்றம்

1919 GOI Draft Rulesகுறித்த விவாதம் ஜூலை 15, 1920ல் பிரிட்டன் நாடாளுமன்றத்தில் நடந்தது. அதில் பிராமணர் அல்லாதவர்க்கு மெஸ்டன் அவார்டு கொடுக்கப்பட்ட எண்ணிக்கை மிகக்குறைவு என்பதை சுட்டிக்காட்டி அம்ப்தில் பிரபு மற்றும் சைதன் ஹெம் பிரபு போன்றவர்கள் கடுமையான வாதங்களை பிராமணர் அல்லாதவர் பிரதிநிதி எண்ணிக்கைகாக முன்வைத்தனர். கூட்டுக்கமிட்டிக்கு தலைமைதாங்கி சட்டவிதிகளை இறுதிப்படுத்தியவர்கள் பதிலும் தந்தனர். அந்த விவாதங்களிலிருந்து

சில பகுதிகளை வரலாற்று புரிதலுக்காக இங்கு கொடுத்துள்ளேன். ஆங்கில வரிகள்தான். சிலராவது படித்து கூடுதல் புரிதல் எனும் பயனைப்பெறமுடியும். இச்சட்டம் மூலம்தான் நீதி கட்சியின் ஆட்சி மதராஸ் மாகாணத்தில் ஏற்பட்டது.

Lord Ampthill

I am principally concerned with the complaints of the non-Brahmins of the Presidency of Madras—that is to say, the vast majority of the people of that great Presidency, with a population and an area equal to those of the United Kingdom. The Brahmins are only 3 per cent. of that population; the remainder are non-Brahmins. The first result of rousing the people of India from their apathetic contentment, which was the avowed and principal object of the Secretary of State and the Viceroy, has been to divide Brahmins and non-Brahmins into bitterly hostile parties, to revive century-old animosities,

and to awake apprehensions which British rule has hitherto prevented from being felt. The British Bureaucracy have been impartial arbitrators between the different races and classes and castes and sects in India. That impartial arbitration is in danger of being weakened.

The Brahmins (and it is as well to know this) are not only of a different caste, but of a different race, from the non-Brahmins of Madras. The Brahmins claims to be of Aryan descent, the remainder are of a totally different race. The Brahmins are securely established in the impregnable fortress of a privileged class—privileged in a way in which no class of men in any other country has ever been privileged. They are armed with the powers of a dominant priesthood over a superstitious people—with greater power than any priesthood has had in any other country—a people whose religion is their social code, whose every act of every-day life is governed by religious ordinance. These Brahmins are a class who

are in possession at the present time of overwhelming official and social power. As I have said, the Brahmins are only 3 per cent. of the population, but they hold 80 per cent. of the positions in the public service and in the Councils. They contribute practically nothing in the way of revenue to the State. Their land is “agraharam” or “inam,” and they have even contrived not to pay the irrigation cess which is imposed through- 195out the Presidency. The effect of these reforms will be to increase the overwhelming powers of this privileged class, and to render the British bureaucracy powerless to continue their rule as impartial and benevolent arbitrators.

I want to tell you what the attitude of the non-Brahmins is, and to put it into popular and homely language. The non-Brahmins say, “We would a hundred times rather have British rule than Brahmin rule. We have played the game by you. We have contributed an overwhelmingly large share to the Revenues which

have enabled you to keep up your Government. We have stood by you and supported you in all you wanted to do, particularly during the war when we were the people who prevented agitation. We did all we could to assist you and to support the British cause. We do not want these political reforms, but, since it is your wish that we should be governed in a different way, we will do our very best to work this reform scheme. But give us a fair chance."

Remember that Madras is different from the rest of India. The men of Madras are as different from other races in India—the Punjabis or the Bengalis, or the Sikhs—as the British are from the Portuguese; and remember that the people of Madras have had personal acquaintance with both of those European nations. The Madras Presidency has been untouched by successive waves of invasion in the past, and it remains the home of Hinduism and of the caste system.

So long as caste exists, and there is no sign that it will be abolished—they say that the Government is powerless. The only hope is to put every community on a level of political equality. Therefore they say, “If you want to give us a fair chance give us communal representation through communal electorates which will enable us to act as a community. That is the only way in which we can act with the slightest hope of success. It is thus that you will give us a chance of organising, of becoming politically minded, and of fitting ourselves to compete with the Brahmins whom we fully admit have all the education and ability and power at the present time. We do not want communal representation for ever, but only until we can train enough people to be politically-minded in the sense which you now desire.”

... Therefore, it was ordained by the Secretary of State, through this Joint Select Committee, that the grievance of the non-Brahmins in Madras—

the grievance of practically the entire population of Madras—should be met by separate representation and by reservation of seats. That is not at all the same thing. Brahmins and non-Brahmins were told to confer together and to arrive at an agreement. A pretty hopeless suggestion! That was the suggestion of the Joint Committee, and it would not have been made by anyone acquainted with the people of the Madras Presidency. But in all good faith they met and attempted it. The Conference broke down.

There were ugly rumours that the Secretary of State had forbidden the Governor to allow even discussion on communal representation. There were the usual denials. The Conference was a failure, and Lord Meston (whom I saw here a minute ago) was sent out to arbitrate. He gave his award, and the result of it has been the bitter and continued discontent voiced every week from India in the papers and communications I

have received. The award is described as “cruel and unjust.” The effect of that award is that only twenty-eight seats are reserved out of sixty-five. The Brahmins themselves were prepared to concede 50 per cent. Lord Willingdon, the Governor, said 50 per cent. would not be unreasonable. The non-Brahmins asked for forty-two, but Lord Meston has cut them down to twenty-eight. The non-Brahmins say, “We could get twenty-eight seats without representation. What we want is a sufficient number of seats reserved to make this concession of any use to us at all.”

....In the Madras Presidency, with its 41,000,000 of population, and with its area as great as that of the United Kingdom, this is not merely a matter of political enfranchisement, of new civic duty, it is an even more vital matter—it is a question of civil and religious liberty. And the greater part of the fear entertained by the non Brahmins of Madras is that their religious liberty, their

religious institutions, will be interfered with in a manner in which the British Raj has never interfered with them, by those who will now be given the power; that is to say, by the Brahmin oligarchy.

But, lest your Lordships should think that I am merely giving you my own views, allow me to quote to your Lordships what has been said by the leaders of the new organisations which have sprung up in the Madras Presidency in order to defend their rights and their civil and religious liberty. Here is some of the evidence which was given before the Joint Select Committee. It refers to Madras only, and I confine myself to extracts— In the public services of the country Brahmins preponderate. A small minority is dominating over a large majority. All non-Brahmins want communal electorates. Even the non-Brahmins of the Madras Presidency Association, a minority party, want communal representation. Almost all the Brahmin organ-

isations conceded the need for communal representation. The All-India Conference of Moderates at Bombay agreed to give communal representation. The Government of Madras has shown that communal electorates are necessary. The Indian Government would concede communal representations, and whatever comes from that source favourable to the non-Brahmins should be given special weight. There is no force in the objection raised in the Report of the Joint Committee against communal representation. The other objections—such as non-Brahmins being in the majority in population and amongst the voters– aised elsewhere do not stand the test of criticism, and numbers do not count. That is a very important point. And here is the summing up of the attitude of the non-Brahmins as given by the President of the non-Brahmin Conference at Tinnevelly in December, 1917— We non-Brahmins are to remain and multiply in order that the chosen few

may have subjects to rule, and the British are to remain to keep off external danger by their Military and Naval Forces and to suppress us if we should dare to oppose the orders of a Brahmin oligarchy. Great Britain has the right to demand from us obedience and, if necessary, to secure it by force, provided she rules well and is willing to give us a share in ruling as we become fitter and fitter to bear the 198responsibilities. But I say emphatically that Great Britain has no right to say, 'I will put over you an oligarchy in which you have no share, which you distrust, which is socially contemptuous of you. I will let that oligarchy shape its policy as it pleases, and if you dare to dispute its authority, then I, even if I disapprove of its policy, will use the British Army to enforce non-British policy. We are not cattle to be sold by one master to another, with the further humiliation of the first master standing by with a bludgeon in case we object to be sold. That is strong language, but it is

confirmed by many similar utterances and resolutions, and it expresses what is felt by the non-Brahmins of Madras. The Select Joint Committee have not understood the case at all

Lord Sydenham

The Joint Committee last year would not accept (wrongly as I venture to think) the principle of communal representation; yet only by communal representation can you secure a just system of election for the people of India. They did, however, adopt communal representation in certain eases of which we know. They seemed to be particularly sympathetic to the Marathas of the Bombay Presidency. Now they have cut down to seven the seats which were originally intended to be eight, which is far too low to represent that great community adequately. The reason for that reduction is that they accept a definition of "Marathas" which is not historically accurate, which excludes some very closely

allied castes altogether. The result of that is that the Hindu non-Brahmin classes of Bombay, large numbers of which are really Marathas, come very badly off in the matter of representation in the Council. The seven members who now remain may have to represent the interests of something like 14,000,000 non-Brahmin Hindus in the Province of Bombay, whilst the Mahometians, who number only 3,500,000, have twenty-seven seats given them. Whatever that may be it is certainly not democracy, and I greatly regret that the backward classes generally have been deprived of their rights under the electoral arrangements now proposed. How the dominant Congress faction regard these poor people can well be understood by the number of violent attacks they have been making on the Maharaja of Kolhapur, who is a stout champion of the working classes in India.

In Madras the non-Brahmins, comprising the vast

majority of the population, will be nowhere in the Council of the future. The Government of India gave them originally thirty seats out of sixty-one, and the Joint Committee considered that the final proportion ought to be settled by a Conference in India itself. There was a Conference at which some of the Brahmins were prepared to give thirty-six out of the sixty-five seats, but the Governor ruled that no more than half could be given to the non-Brahmins, and the conference broke up. Then came Lord Meston as arbitrator, and he went to Madras without any know- 204ledge of Southern India. He cut down the non-Brahmins to twenty-eight out of sixty-five seats and gave a number of reasons for doing so, with which I totally dissent. We had the old story that the non-Brahmins, who are there in a large majority, can perfectly well take care of themselves, but it is impossible in the present conditions of Madras for them to take care of themselves unless they have adequate repre-

sentation of their own.

Then a most misleading deduction was drawn from the Madras municipality where the non-Brahmins are in a majority. I am told that the noble Lord refused to hear the whole case of the non-Brahmins. I may be quite wrong and perhaps he will wish to explain. In Madras the Brahmins dominate all the public services and they will be able to exercise immense influence at the Elections by methods which everybody who has served in India well knows. The result must be bitter resentment among the loyal people who are the real workers of the Presidency and whose interests it is our duty to safeguard.

Last year the non-Brahmins were at a very great disadvantage before the Joint Committee. They lost their great leader Dr. Nair, who died before his evidence could be taken. They were a small body, and insufficiently provided with funds. They found

the Congress Party amply financed and in possession of the field. The Congress delegates had captured the Labour Party in this country and had induced the Labour Party to believe that Brahmins, lawyers, and capitalists, were the only people who represented the working classes in India. Their proceedings were extraordinarily well stage-managed. We had to deal with three Home Rule organisations, all holding exactly similar views, but each requiring a separate deputation to represent those views. In effect it was a procession of town**red persons whose interests and objects were diametrically opposed to the agriculturists who form the backbone and vast majority of the people of India.

The Election Rules proceed on the assumption that conditions in India are the same as those in Western countries. There are to be bribery laws, and candidates are to make accurate returns of their Election expenses. The Joint Committee has included "employ-

ment of paid canvassers in excess of the maximum, which they trust will be rigidly limited” among 205corrupt practices. This is most right and proper, but it will be absolutely ineffectual when the Elections come on. There can be no proper supervision whatever of the Elections to be held this autumn. A large number of the electors will be totally illiterate and will not know what it is about. There will be corruption and intimidation on a large scale and the first principles of democracy will be flagrantly violated.

THE EARL OF CRAWFORD

My Lords, Lord Sydenham and Lord Ampthill are recognised as frank and very direct critics of the whole scheme of reform, and both noble Lords have revived all kinds of attacks on the main principles of the Act which were very frequently heard last year and which, on most occasions, were adequately answered by Lord Sinha and by the noble Earl the Leader of the House.

I am sorry that Lord Ampthill should have brought so many charges of bad faith, about adroit man�uvring, taking advantage of the war, which I confess seemed to me to be very much over-stated and overdrawn. I submit that, rightly or wrongly, fortunately or the reverse, the time has gone by when the Act and its main principles can be profitably attacked. The Act is now a Statute of the Realm. The Rules are an honest interpretation of that Act. That is all that the Draft Rules represent.

The Earl of Selborne

As I was Chairman of the Joint Select Committee I think your Lordships will expect me to say something on this subject. My noble friends, 209Lord Ampthill and Lord Sydenham, hold very strong views, to which, I think, they are wholly entitled, against the policy of the Government, which is embodied in the Government of India Act. I have no responsibility whatever for that pol-


icy, but I must endorse what my noble friend who has just sat down has said—namely, that that is not the issue before us to-night. For good or for evil the Government of India Act passed into law. It received the King's Assent, last December, but it cannot be brought into operation until the Rules, which are now laid before your Lordships, have effect, and they cannot be brought into operation until the judgment of this House and of the other House has been passed upon them. Therefore, really the only question before your Lordships to-day, is whether you should pass judgment now upon these Rules, as proposed by the noble Lord, the Under-Secretary of State for India.

Last year the Joint Select Committee sat for an endless series of weeks. We heard an enormous number of witnesses representing every shade of opinion, and I have no hesitation in saying that most of those witnesses simply repeated what another witness had said

before them. Nevertheless, we thought it our duty to show the greatest patience and courtesy, and to make it impossible for any Party in India to say that it had not had ample opportunity of stating its case. Having done that once, there is no conceivable reason why we should do it twice. Therefore, the first thing that the Joint Select Committee decided when it was appointed the other day was that it would hear no more evidence on this subject. We heard that a certain 210deputation, without any communication with us or with the Government of India, had started from India in order to give evidence before us. We had never said or done anything that could lead anyone to suppose that we were disposed to re-open the case or to hear further evidence. We all received an extraordinary number of communications in the form of telegram, memoranda and letters. These have all been received be the Committee and have had the attention due to them.

The question really has been—Were we, the Joint Select Committee, composed of members of the two Houses of Parliament (some of whom had Indian experience, most of whom had not), to attempt to do over again the work so admirably done by the Government of India, and by the local Governments in India. We made no such attempt. We studied the result of their work carefully, and we have made a few changes, but very very few.

# ஆசிரியரின் பிற நூல்கள்



1. மார்க்சியத் தடங்கள்
2. ரோசாலக்ஸம்பர்க்
3. போராளிகளின் குரல்

4. பகவத்கீதை பன்முகக் குரல்கள்
5. Trade Justice in Telecom
6. Selected Ideas of O.P Gupta
7. ஹெகல் துவங்கி..
8. கார்க்கியின் அரசியல்வெளி
9. நவீன சிந்தனையின் இந்தியப் பன்முகங்கள்
10. காந்தியைக் கண்டுணர்தல்
11. நேருவின் மரபு
12. பெரியாரின் பொதுவுடைமை புரிதல்
13. அம்பேத்கரும் கம்யூனிசமும்
14. தோழர் காந்தி மகாத்மாவின் சோசலிச உரையாடல்
15. பாபாசாகேப் டாக்டர் அம்பேத்கர் (என் எளிய வாசிப்பில்)

16. லெனின் நான்கு கட்டுரைகள்

17. என் வாசிப்பில்...

18. சாதி எனும் பிசாசு

# சிறு வெளியீடுகள்

1. ஷியாம்ஜி கிருஷ்ண வர்மா
2. சிகாகோ மேதின தியாகிகள்
3. பகுனின் போராட்ட வாழ்வும் அனார்க்கிசமும்
4. விடுதலைக்கு முன்னர் எம் என் ராய்
5. பிரடரிக் எங்கெல்ஸ் நட்பின் சிகரம்
6. நேதாஜி சுபாஷ் – கம்யூனிஸ்ட்கள் உறவும் உரசலும்
7. காந்தியும் கம்யூனிசமும்
8. வட்டமேஜை மாநாட்டில் அம்பேத்கர்
9. வரலாற்றில் சௌரி சௌரா (நூற்றாண்டின் நினைவாக)
10. தோழர் டிராட்ஸ்கி சில இடுகைகள்

11. ஆச்சார்யா கிருபளானி
12. மினு மசானி
13. ஹிந்த் ஸ்வராஜ் தோற்றுவாயும் உள்ளடக்கக்கூறுகளும்

www.pattabiwrites.in

## தொலை நோக்கு – Vision

தமிழ் மொழி மற்றும் இனக்குழுக்கள் சார்ந்த மெய்நிகர்வளங்கள், கருவிகள் மற்றும் அறிவுத்தொகுதிகள், அனைவருக்கும் கட்டற்ற அணுக்கத்தில் கிடைக்கும் சூழலை உருவாக்குதல்.

## பணி இலக்கு – Mission

அறிவியல் மற்றும் சமூகப் பொருளாதார வளர்ச்சிக்கு ஒப்ப, தமிழ் மொழியின் பயன்பாடு வளர்வதை உறுதிப்படுத்துவதும்,

அனைத்து அறிவுத் தொகுதிகளும், வளங்களும் கட்டற்ற அணுக்கத்தில் அனைவருக்கும் கிடைக்கச்செய்தலும்.

**எமது பணிகள்**

- **கணியம் மின்னிதழ்** kaniyam.com
- கணிப்பொறி சார்ந்த கட்டுரைகள், காணொளிகள், மின்னூல்களை இங்கு வெளியிடுகிறோம்.
- **கட்டற்ற தமிழ் நூல்கள்** FreeTamilEbooks.com
- இங்கு யாவரும் எங்கும் பகிரும் வகையில், கிரியேட்டிவ் காமன்ஸ் உரிமையில், தமிழ் மின்னூல்களை இலவசமாக, அனைத்துக் கருவிகளிலும் படிக்கும் வகையில் epub, mobi, A4 PDF, 6 inch PDF வடிவங்களில் வெளியிடுகிறோம்.

- தமிழுக்கான கட்டற்ற மென்பொருட்கள் உருவாக்கம்
- தமிழ் ஒலியோடைகள் உருவாக்கி வெளியிடுதல்
- விக்கி மூலத்தில் உள்ள மின்னூல்களை பகுதிநேர/முழு நேரப் பணியாளர்கள் மூலம் விரைந்து பிழை திருத்துதல்
- OpenStreetMap.org ல் உள்ள இடம், தெரு, ஊர் பெயர்களை தமிழாக்கம் செய்தல்.

மேற்கண்ட திட்டங்கள், மென்பொருட்களை உருவாக்கி செயல்படுத்த உங்கள் அனைவரின் ஆதரவும் தேவை. உங்களால் எவ்வாறேனும் பங்களிக்க இயலும் எனில் உங்கள் விவரங்களை kaniyamfoundation@gmail.com க்கு மின்னஞ்சல் அனுப்புங்கள்.

## வெளிப்படைத்தன்மை

கணியம் அறக்கட்டளையின் செயல்கள், திட்டங்கள், மென்பொருட்கள் யாவும் அனைவருக்கும் பொதுவானதாகவும், முழுமையான வெளிப்படைத்தன்மையுடனும் இருக்கும். https://github.com/KaniyamFoundation/Organization/issues இந்த இணைப்பில் செயல்களையும், https://github.com/KaniyamFoundation/Organization/wiki இந்த இணைப்பில் மாத அறிக்கை, வரவு செலவு விவரங்களுடனும் காணலாம்.

கணியம் அறக்கட்டளையில் உருவாக்கப்படும் மென்பொருட்கள் யாவும் கட்டற்ற மென்பொருட்களாக மூல நிரலுடன், GNU GPL, Apache, BSD, MIT, Mozilla ஆகிய உரிமைகளில் ஒன்றாக வெளியிடப்படும். உருவாக்கப்படும் பிற வளங்கள், புகைப்படங்கள், ஒலிக்கோப்புகள், காணொளிகள், மின்னூல்கள், கட்டுரைகள்

யாவும் யாவரும் பகிரும், பயன்படுத்தும் வகையில் கிரியேட்டிவ் காமன்சு உரிமையில் இருக்கும்.

## நன்கொடை

உங்கள் நன்கொடைகள் தமிழுக்கான கட்டற்ற வளங்களை உருவாக்கும் செயல்களை சிறந்த வகையில் விரைந்து செய்ய ஊக்குவிக்கும்.

பின்வரும் வங்கிக் கணக்கில் உங்கள் நன்கொடைகளை அனுப்பி, உடனே விவரங்களை kaniyamfoundation@gmail.com க்கு மின்னஞ்சல் அனுப்புங்கள்.

**Kaniyam Foundation**

**Account Number : 606 1010 100 502 79**

**Union Bank Of India**

**West Tambaram, Chennai**

IFSC – UBIN0560618

Account Type : Current Account